

# விடுதலை

தந்தை பெரியார் 91ம் ஆண்டு பிறந்தநாள் விழா மலர்

# காணிக்கை

'நில உலகத்திலிருந்து நிலா உலகத்திற்குச் சென்று வென்று திரும்பும் அளவுக்கு மனிதனின் அறிவாற்றல் ஓங்கி வளர்ந்துள்ள இந்நாளில் கூட நம்மக்கள் அறிவின் வழியில் நிற்காது அழிவின் வழி சாய்வதுபோல் வெறும் நம்பிக்கைப் பிண்டங்களாக வாழ்வதா?' என்ற கேள்விக் குறியை எழுப்பி, உறங்கிய தமிழகத்தை தமது தனித்த-ஆனால் உரத்த-குரலால் எழுப்பிய உத்தமத் தந்தை 90 ஆண்டுகளைத் தாண்டி, இன்று 91ம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறார்!

அவர் பிறந்தபோது இருந்த "சமுதாயம்", இன்றைய இளைஞர்களுக்கு அவர் சொல்லித் தெரிய வேண்டிய இறந்த சமுதாய மாக்கப்பட்டதற்குக் காரணம் அவரது அறிவும் உழைப்பும் ஆகும்.

நம் மக்களின் அறிவுத் தளைகளை அறுத்தெறிந்து அவர்களுக்குஅறிவுச் சுதந்தரத்தை அள்ளித் தந்த வள்ளலாம் நம் அய்யாவின் தொண்டும் அதனால் தொடர்ந்த பயனும் என்றென்றும் வளரும் 'ஆயிரங்காலத்துப் பயிராகும்.'

பரந்து விரிந்த அந்த ஆலமரத்தின் கீழ் எழுந்த விழுதுகளோ ஆயிரம்! ஆயிரம்!!

கடவுள் கிறுக்கோ, சாதிச் செருக்கோ, பழமை முறுக்கோ அவரது கொள்கையின் வளர்ச்சி முன்னே நிற்க இயலாது நாள் தோறும் தோற்றோடி மறையும் வண்ணம் உள்ளன.

அறிஞரின் தலைமையில் துவங்கி கலைஞரின் தலைமையில் தொடரும், தந்தைக்குக் காணிக்கையாக்கிய தனயர்களின் பகுத்தறிவு அமைச்சரவை, தம்கொள்கை வழிக் கோலோச்சுவதைக் கண்டு குதூகலிக்கும் தந்தை, மற்ற எவரும் வியந்து பாராட்டும் வண்ணம், வயது வளர்ந்தாலும் வலிமை பெற்று சீரிளமைத் திறத்தோடு பணியாற்றிய வண்ணம் இருக்கிறார். அவரது ஆயுள் காப்பின் ரகசியம் அதுதான்!

உலக வரலாற்றில் வேறு எந்தப் புரட்சியாளரும் பெறாத தனி இடத்தை அதனால்தான் அய்யா அவர்கள் பெற்றுத் திகழ்கிறார். பேருவகை பொங்க தமிழகம் அவரது 91-வது பிறந்த நாள் விழா கொண்டாடிடும் இவ்வேளையில் நாமும் அதில் பங்கேற்று நமது நன்றியின் சிறு அடையாளமாக இந்த எளிய அன்பு மலரினை அடக்கத்துடன் காணிக்கை யாக்குகிறோம்.

வாழ்க தந்தை!
வளர்க அவரது வெற்றிப் பட்டியல்!

ஆசிரியர்
'விடுதலை'

சென்னை
17-9-69

# பொருளடக்கம்


1. எனது நிலை-தந்தை பெரியார் ... 13
2. விதை விதைத்தவரே விழி திறந்தவரே, வாழ்க !—முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி ... 17
3. பகுத்தறிவுப் பகலவர்—நாவலர் இரா. நெடுஞ்செழியன் ... 19
4. 'இதோ பெரியாரில் பெரியார்'—அமைச்சர் ப. உ. சண்முகம் ... 21
5. தனயன் போற்றும் தந்தை— அமைச்சர் மாதவன் ... 23
6. என்றும் இளைஞர், அமைச்சர் திரு. என். வி. நடராசன் ... 25
7. நீங்காத நினைவு—அமைச்சர் திரு. கே. வி. சுப்பையா ... 29
8. வளர்ச்சிக்கு வழி—தந்தை பெரியார் ... 31
9. பெரியாரின் சொர்க்கம்—தவத்திரு குன்றக்குடி அடிகளார் ... 33
10. நான் அறிந்த அய்யா—அமைச்சர் திரு. முத்துசாமி ... 35
11. அந்த நாட்களில் அய்யாவுடன்—திரு. க. ராஜாராம் எம்.பி. ... 37
12. தனி வரலாறு படைத்தவர்—அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து ... 41
13. புரட்சித் தலைவர் பெரியார்—திரு. நெ. து. சுந்தரவடிவேலு ... 43
14. கதிரவனே !—கவிஞர் ஆனந்தம் ... 47
15. Periyar and History,—A. N. Sattanathan ... 57
16. Lion Hearted Fighter —S. Mohan. ... 60
17. 'Periyar' The Grand Old Moral Rebel—S. V. Chittibabu ... 61
18. Anna's call to youths ... 63
19. கடவுள் பற்றிய காந்தியாரின் குழப்பம்—தந்தை பெரியார் ... 67
20. அஞ்ஞானத்தில் சந்திரன் ... 73
21. விஞ்ஞானத்தில் சந்திரன் ... 75
22. கலைகள்-தந்தை பெரியார் ... 81
23. சுயமரியாதை இயக்கத்தின் நீதி வாக்கியங்கள் ... 83
24. 90க்கும் 91க்கும் இடையில்-தந்தை பெரியார் சுற்றுப்பயணம் ... 89
25. அண்ணாவின் எழுத்தோவியம் அந்த வசந்தம் ... 97
26. நல்லவர் பெரியார்— சீர்காழி பெ. எதிராஜ் ... 113
27. கொள்கை உழவன் வாழ்க ! சாலை—இளந்திரையன் ... 117
28. தந்தை பெரியார் பற்றி—" சங்கர்ஸ் வீக்லி " ... 121
29. கடவுள் என்பது கற்பனை—ராகுல சாங்கிருத்தியாயன் ... 129
30. ,, ,, பேராசிரியர் ஜோட் ... 132
31. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்—தந்தை பெரியார் ... 145
32. காலக்குரல்—கவிஞர் பூங்குன்றன் ... 151
33. கடந்த ஆண்டில் கழக டைரி ... 153
34. தென்னிந்தியாவில் அரசியல் சமுதாயப் போராட்டம்—கி. வீரமணி ... 161
35. இந்தியில் பெரியாரின் இராமாயணப் பாத்திரங்கள் ... 167
36. அய்யா வாழ்விலே—புலவர் கோ. இமயவரம்பன் ... 169
37. எல்லாம் எவன் செயல் ? ... 174
38. கம்பசித்திரம்—திருவாரூர் கே. தங்கராசு. ... 177


---


முகப்பு வண்ணப் படம்—ஏ. சுந்தரம், புகைப்படம் V. V. பத்மநாபன்

ஓவியர்கள்—ஆர். டி. அரசு, 'சிபி'

# வாழ்த்துக்கள்

கு. காமராஜ்

போன் : 441373
8 திருமலை பிள்ளை ரோட்,
தி. நகர், சென்னை-17

3-9-69

அன்புள்ள நண்பருக்கு,

தங்கள் கடிதம் கிடைத்தது. பெரியார் அவர்களின் 91-வது பிறந்த நாளை யொட்டி "விடுதலை" சிறப்பு மலர் வெளியிடுவது அறிந்து மகிழ்ச்சி.

பெரியார் அவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து தேசத்திற்கும் சமூகத்திற்கும் தொண்டு செய்து வர என் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்களன்புள்ள,

காமராஜ்

கே. ஏ. மதியழகன்
நிதியமைச்சர்

சென்னை
13-8-69

அன்புள்ள நண்பருக்கு,

வணக்கம், தந்தை பெரியார் அவர்களது 91-ஆம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு 'விடுதலை' ஒரு சிறப்பு மலர் வெளியிடுவது அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

தந்தை பெரியார் அவர்களது அறிவு பிரசாரத்தினால்தான் இன்று தமிழகம் இந்தியாவிலேயே மற்ற மாநிலங்கட்கெல்லாம் வழி காட்டும் மாநிலம் - சிறப்பாக சமுதாய சீர்திருத்தத்தில் என்று எவரும் பெருமைப்படும் வண்ணம் வளர்ந்தோங்கியுள்ளது. நம்மை எல்லாம் ஆளாக்கிய நமது அண்ணன் அவர்கள் குறிப்பிட்டது போல் " அவர் ஒரு சகாப்தம் - ஒரு கால கட்டம் - ஒரு திருப்பம் " ஆவார். முழுமையான புது சமுதாயம் காண அவர் மேலும் பல்லாண்டுகள் வாழ வேண்டுமென ஆசைப்படுகிறேன்.

தங்கள்

கே. ஏ. மதியழகன்

**ஹிரேன் முக்கர்ஜி**
பாராளுமன்ற உறுப்பினர்

புதுடெல்லி
27-8-69

அன்புள்ள திரு. வீரமணி,

தங்களுடைய கடிதம் கண்டேன். மிக்க நன்றி. பெரியார் அவர்கள் 90 ஆண்டுகள் நிறைவு செய்துகிறார் என்பதை அறிய மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

சிறப்புக்குரிய இப்பெருந்தகையார் நூற்றாண்டும் கண்டு அதற்கு மேலும் காண வேண்டுமென நாம் அனைவரும் விரும்பு கிறோம்.

விவாதத்திற்குரியவர் என்ற போதிலும்கூட நமது நாட்டின் பொக்கிஷம் ஆவார் அவர் !

தங்கள் உண்மையுள்ள
ஹிரேன் முக்கர்ஜி

(இங்கிலீஷ் கடிதத்தின் தமிழாக்கம்)

**ஜி. டி. நாயுடு**

கோயம்புத்தூர்
8-9-69

அன்புடையீர் !

பெருமதிப்பிற்குரிய பெரியார் ஈ. வெ. ரா அவரது 91-வது பிறந்த நாள் கொண்டாடும் வகையில் விசேட மலர் ஒன்று வெளி யிட முற்படும் உமது முயற்சி பாராட்டற்குரியதேயாம்.

தனது 91வது வயதிலும் கூட நல்ல இளைஞரைப்போல இருந்து வரும் அவரது வாழ்க்கை நம் இளைஞர் சமூகத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். தூய எண்ணத்துடன் பாமரமக்களுடைய நலன்களுக்காகப் பாடுபடும் பெரியாரவர்கள் இன்னும் பல்லாண்டு திடகாத்திரராக வாழ்ந்து நல்ல சேவை செய்து வரவேண்டும் என்பதே எனது விருப்பம். வாழ்க பெரியார்.

தங்கள் அன்புள்ள
ஜி. டி. நாயுடு

குருட்டு நம்பிக்கையையும் மூடபக்தியையும் சீர்திருத்த வேலைகளால் ஒழித்துவிட முடியாது. அவற்றை அழிவு வேலைகளின் மூலம் தான் ஒழிக்க முடியும். இந்த அழிவு வேலைமைச் செய்பவர்களுக்கு மகத்தான உறுதியும், சிறிதும் சந்தேகமற்ற தெளிவும், பழிப்புக்கும் சாவிற்கும் கவலையற்ற துணிவும் இருக்க வேண்டும்.

—தந்தை பெரியார்

# எனது நிலை



எனது 90 வது ஆண்டு "பிறந்த நாள் விழா" மலரில் 'எனது நிலை' என்கின்ற கட்டுரை எழுதும் போது, 91 வது ஆண்டு "பிறந்த நாள் விழா" மலருக்கு எனது நிலை என்பது பற்றி எழுத வேண்டிய வாய்ப்பு இருக்குமா என்ற சந்தேகத்தில் எழுதினேன். என்றாலும் எப்படியோ 91 வது ஆண்டு "பிறந்த நாள் விழா" மலருக்கும் எனது நிலை என்பது பற்றி எழுதும் படியான வாய்ப்பு எனக்கு ஏற்பட்டு விட்டது. அதாவது 90 வது ஆண்டு "பிறந்த நாள் விழா" மலரில் 'எனது நிலை' என்ற கட்டுரையில்

"எனக்கு வயது 90.

உடல் நிலை மிகவும் மோசம்.

கைகால் நடுக்கம் அதிகம்.

சிறு நீர் கழிக்கும் போது சப்தம் போட்டுக் கொண்டுதான் கழிக்கிறேன். அதாவது அவ்வளவு வலி.

தூக்கம் சரியாய் வருவது இல்லை.

நினைத்தபோது உடலில் ஏதாவது ஒரு பாகத்தில் வலியேற்பட்டு சில ஏப்பமோ, காற்றுப்பிரிவோ ஏற்பட்ட பிறகு நோய் விலகுகிறது.

உண்ட உணவு சரியானபடி ஜீரணமாவதில்லை.

முன் போல் உணவும் சரியாய் உட் கொள்ளமுடியவில்லை.

எந்தக் காரியம் பற்றியும் மனத்திற்கு உற்சாகம் ஏற்படுவதில்லை. களைப்பு அடிக்கடி ஏற்படுகிறது.

நெஞ்சில் வலி திடீரென்று ஏற்படுவதும் ஏப்பம் வந்த பிறகு குறைவதுமாக இருக்கிறது.

எதைப்பற்றியும் சலிப்பும், வெறுப்பும் ஏற்பட்டு விடுகிறது.

சுருக்கமாக சொல்வதானால், வாழ்வே வெறுப்பாக இருக்கிறது.

என்றாலும் தற்கொலை செய்து கொள்ள மாட்டேன்.

நினைத்தபடி நினைத்த ஊருக்குகெல்லாம் என்னை அழைக்காதீர்கள்.

அந்தப்படி என்னை மக்கள் அழைக்காமல் இருப்பதற்காகவே எனது வழிச் செலவுத் தொகையை ரூ. 100ல் இருந்து ரூ. 150/-ஆக ஏற்படுத்தி விட்டேன்.

ரூ. 100 எனக்கு வண்டிச் செலவு, ரிப்பேர் செலவு, வைத்தியச் செலவு முதலியவைகளுக்கு அனேகமாக சரியாய்ப் போய் விடும். சில சமயங்களில் போதாமல் போகும். ஒரு தடவையில் 2, 3 பயணம் ஏற்பட்டால் ஒரு அளவு மீதியாகி பிரசாரத்திற்குப் பயன்படும்.

எனக்கு இனி பிரசாரத்தில் ஆசை இல்லை.

ஒரு வாரப்பத்திரிகைத் துவக்கி, அதற்கு ஆசிரியனாக இருந்து எழுதிக் கொண்டு இருக்க வேண்டும் என்பதில்தான் ஆசை அதிகமாக இருக்கிறது. மற்றும் வெளியாக்கப்பட வேண்டிய விஷயம் அதிகம் இருக்கிறது.

இதற்காக எளிதில் காணமுடியாத ஒரு தனி இடத்திற்கு போகலாமா அல்லது ஈரோட்டிற்கே போய்விடலாமா என்று கூட எண்ணுகிறேன்.

இனி என் ஆயுள் எவ்வளவு இருக்க முடியும் என்பதில் எனக்கு கவலை இல்லை.

இருந்த வரைத் தொண்டு செய்யலாம் என்றுதான் திட்டம் போடுகிறேன். ஆனால் எதிர்பாராத சம்பவங்கள் நடப்பதும், ஏற்படுவதும் இயற்கையேயாகும். அதுபோல் என் முடிவும் இருக்கலாம்.

பொதுவாக என்மனம் குழப்பமாக இருக்கிறது. துறவி ஆகி விடுவேனோ என்னமோ !''

இந்தப்படி எழுதி இருக்கிறேன். அதை ஊன்றிப் படித்தாலே நான் எழுதியதின் தன்மை விளங்கும்.

இப்போது எனக்கு 90 ஆண்டு முடிந்து 91 வது ஆண்டு நடக்கிறது என்றாலும், 90 வது ஆண்டுக்கும் 91 வது ஆண்டுக்கும் இடையில் ஏற்பட்ட எனது உடல் நிலையின் தன்மை 91 வது ஆண்டு போல் இல்லாமல் 94, 95 வது ஆண்டு என்று கருதும்படி அவ்வளவு கிழத்தன்மை ஏற்பட்டு விட்டது என்று ஆகி விட்டது.

இது உடல் நிலை மாத்திரமல்லாமல் பஞ்சேந்திரியங்களோடு புத்தி, மனது, சிந்தனா சக்தி முதலிய தன்மைகளும் மிக்கக் குறைந்து பலவீனப் பட்டு விட்டன.

என்றாலும் இவ்வோராண்டு நாட்டு நிகழ்ச்சிகளைப் பார்த்தால் எனக்கு மற்ற கருவி காரணாதிகளின் பலக் குறைவு எப்படி இருந்தாலும் மனம் உற்சாகம் அடையும் படியான பல நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன.

முதலாவது நிகழ்ச்சி, நமது தி.மு.க. ஆட்சியில் 13 மந்திரிகளில் 13 பேரும் தமிழர்கள் என்பதோடு, 18 அய்க்கோர்ட் ஜட்ஜுகளில் 14 பேர்கள் தமிழர்கள் (பார்ப்பனரல்லாதவர்கள்). டெல்லி ஆதிக்க மில்லாத அதிகாரங்களில் 100 க்கு 50 க்கு மேல் 75 வரை பார்ப்பனரல்லாதவர் இருக்கும்படி ஆகி விட்டது.

அரசியலில் ஆளும் கட்சியிலும், எதிர்க்கட்சியிலும் தலைவர்கள், பணி யாளர்கள் யாவருமே 100 க்கு 100ம் தமிழர்களே யாவார்கள். இதை அனுசரித்தே மற்ற நிலைகளும் மாற்ற மடைந்து வருகின்றன. இவ்வளவுக்கும் காரணம் திமுக ஆட்சி என்றே சொல்லுவேன்.

காங்கிரஸ் மத்திய ஆட்சி ஆதிக்கத்திலும் பச்சையாகப் பார்ப்பனர்— பார்ப்பனரல்லாதார் பிளவும், வடநாடு—தென்னாடு என்கின்ற உணர்ச்சியும் காணப்படும் தன்மை உருவாகிவிட்டது. இவை யெல்லாம் நம் தமிழர் சமுதாய விடுதலைக்கும், சுயமரியாதைக்கும் நல்ல வெற்றி வாய்ப்பு என்றே சொல்லத் தக்கவையாகும்.

மற்றும் 90 வது 'பிறந்த நாள் விழா' மலரின் 'எனது நிலை' கட்டுரை யில் நான் குறிப்பிட்ட சலிப்புகள் இப்போது எனக்கு குறைவென்றே சொல்லலாம்.

உதாரணமாக, 90 வது "பிறந்த நாள் விழா" மலரில் 'எனது நிலை' என்ற கட்டுரை முடிவில் 'துறவி' யாய்ப் போய் விடலாமா? என்று எழுதி இருக்கின்றேன்.

இன்று எனக்கு அப்படி இல்லை. அந்த எழுத்தைப் பார்த்து உயர் காமராஜரும், அறிஞர் அண்ணாவும் எனக்குத் தெரிவித்தது போல், அதாவது "இப்போது உங்களுக்கு எதற்காகக் கவலை? நீங்கள் நினைத்த காரியம் எது நடவாமல் இருக்கிறது? கவலையை விட்டு விடுங்கள்" என்று சொன்ன சொற்கள் எனக்கு உற்சாகத்தைக் கொடுக்கின்றன.

இன்று எனக்குள்ள குறையெல்லாம் தமிழர் சமுதாயத்தில் "வீபீஷணப் பரம்பரை" வளர்ந்து வருவதுதான். இது தமிழரில் சில "ஜாதிக்கு" (வகுப்புக்கு) இயற்கை என்றாலும் இது வருந்தத்தக்கதே யாகும்.

ஆகவே எனது 90 வது வயதை விட 91 வது வயது திருப்தியையும் மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது என்பது எனது கருத்து.

விபீஷணர்கள் திருந்துவார்களாக.

திமுக ஆட்சி இனியும் குறைந்தது 10 ஆண்டுகளுக்காவது இருக்கும்படி மக்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். எனக்குஇதற்கு மேல் கருத்தும் ஓட வில்லை எழுதவும் முடியவில்லை.

# BOB & JAASKO



★ Shock Proof
★ Water Proof/Damp Proof
★ Free from Chemical Action
★ Does not Burn
★ Smooth Inner Surface
★ Easy to Work
★ Economical to Work
★ Immune to Corrosions

**Made in Accordance with I-S-2509-1963 for Wiring both low (220V) & Medium (440V) Voltage Circuits**

**wavin** **HARD P. V. C. PIPES FOR WATER**
from 15mm to 150 (½" to 6")

★ Do not rust. Immune to Corrosion and not attacked by a wide range of chemicals.
★ Combine Strength with light weight being approximately 1/7th the weight of steelpipes manufactured to the same working pressure Specifications.
★ Are easily jointed, laid or installed.
★ Maintain a smooth inner surface throughout their life.
★ Frictional iosses are at a minimum.
★ No sediment or scale formation.

# BOB & JAASKO

**20, Anderson Street, MADRAS-1.**

Phone : 24685

*Distributors*

WAVIN HARD P. V. C. PIPES & FITTINGS
MADRAS AND PONDICHERRY STATES

# விதை விதைத்தவரே விழி திறந்தவரே, வாழ்க!



## முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி

செப்டம்பர் 17—நமக்கு இரட்டை மகிழ்ச்சி தரும் நாள்—

ஆம்; தந்தை பெரியார் அவர்கள் பிறந்த நாள் செப்டம்பர் 17. திராவிட முன்னேற்றக்கழகம் பிறந்த நாளும் செப்டம்பர் 17—தான்!

பெரியார் அவர்கள் கொடுமைகளை எதிர்த்துப்போரிடும் துணிவை நமக்குத்தந்தார். அந்தப் போரில் வெற்றிவாகை சூட வழிவகுத்தது கழகம்!

நேற்றும்—இன்றும் பெரியார் புரட்சிக் கருத்துகள் மலரும் பூங்காவாக இருக்கிறார். வெறும் மணம் மட்டும் தரும் மலர் அவரிடம் மலர்வதில்லை; மருத்துவத்திற்குப் பயன்படும் மலர்களே அவரிடம் மலரும்!

சமுதாயத்தைப் படம் பிடித்துக் காட்டுவார்; இல்லாத ஒப்பனைகள் செய்யப்படும் படமல்ல அவர்படம்; உள்ளூறுப்புகளை எடுத்துக் காட்டும் 'எக்ஸ்ரே' படம் அது!

ஆயிரம் ஆண்டுகளாய் அழுத்தப்பட்ட இனத்திற்காக அவர் குரல் கொடுத்தார். அதில் வேகமும்—தாக்குதலும் நிறைய இருப்பது தவிர்க்க முடியாதது.

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பிருந்த தமிழ்ச் சமுதாயத்தின் இழி நிலையை ஒரு கணம் எண்ணிப்பார்த்தால் போதும். அவர் ஏன் இன்றும் கனலாக—காட்டுத்தீயாகக் கருத்துக்களைக் கொட்டுகிறார் என்பது விளங்கும்.

"ஆயிரக்கணக்கான வருடங்களாக அழுத்தப்பட்ட ஒரு இனத்தின் விரக்தியில் வெளிப்பட்ட ஆவேசத்தின் உருவமாக பெரியார் விளங்குகிறார்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கூறினார்.

விழி மூடிக்கிடந்த சமுதாயத்தின் விழியைத் திறந்தவர் பெரியார்; வழி நடக்கத்தெரியாமல் வீழ்ந்துவிட்ட சமுதாயத்தைக்கை தூக்கி விட்டவர் அவர்; சரிந்துவிட்ட தெற்கு நாகரிகக் கூடாரத்தை எடுத்துக்கட்ட வந்தவர் அவர்; இறங்கிவிட்ட தமிழினக் கொடியை மீண்டும் பறக்கவிட வந்தவர் பெரியார்.

அவர்தம் கருத்துகளை அனைவரும் அப்படியே ஏற்க வேண்டும் என்று கூற அவரே விரும்பமாட்டார். நான் கூறியதில் எது பிடித்தமோ—அதை எடுத்துக் கொள்ளுங்கள்—என்று கூறி வழிவழி வந்த வள்ளுவத்தின் குரலை எதிரொலிப்பவர் பெரியார்.

அவர் சொன்னார்; இவர் சொன்னார்—என்று கூறாதே; உனக்குப் பட்டதைக் கூறு!—என்பார் பெரியார்.

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்—அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு—எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு—என்பார் வள்ளுவர்.

பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லை—என முழங்குவார் பெரியார்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்—என்றார் வள்ளுவர்.

பெண்ணினத்தை அடிமைப் படுத்தக்கூடாது என்பார் பெரியார்.

பெண்ணின் பெருந்தக்க யாவுள?—எனக் கேட்டவர் வள்ளுவர்.

பழமையைக் கழித்து புதுமையைக் கொள்ள வேண்டும் என்பார் பெரியார்.

பழையன கழிதலும் புதியன புகுதலுமான உலகத்தோடு ஒட்ட ஒழுக வேண்டுமென்று கூறியவர் வள்ளுவர்.

போலித்துறவுகளை வெறுத்தவர் பெரியார்.

மழித்தலும் நீட்டலும் வேண்டா—எனக் கூறியவர் வள்ளுவர்.

அன்பும் காதலும் தான் இல்வாழ்க்கைக்குப் போதுமானது—எனக் கூறியவர் பெரியார்.

அன்பும் அறனும் உடைத்த இல்வாழ்க்கையையும்—தெய்வம் தொழாத கற்புக்கரசிகளையும் பாராட்டியவர் வள்ளுவர்.

ஆகவே, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் ஓதப்பட்ட வள்ளுவத்தை—அதன் கருத்தை இன்றைய சமுதாயத்திற்கேற்ப செழுமைப்படுத்தி—புதுமைப் படுத்தி கூறுபவர்களில் தலைசிறந்தவர் பெரியார்.

அவர்தம் பிறந்த நாளில்—இந்த நாடும் உலகமும் வழங்கும் வாழ்த்துகளில் எனது இதயம் கனிந்த வாழ்த்துகளையும் இணைக்கிறேன்.

# பகுத்தறிவுப் பகலவர்



**கல்வி அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்**

சுடரொளி பரப்பி, இருட் கற்றைகளை அகற்றிப், பொருள்களைப் புலப்படுத்தி, உறங்குவோரை எழுப்பி, இருப்பவரை இயக்குவிக்கும் பகலவன் போல, பகுத்தறிவொளி பரப்பி, அறியாமை இருட்கற்றைகளை அகற்றி, உண்மைப் பொருள்களைப் புலப்படுத்தி, உறங்கிக்கிடந்தோரை எழுப்பி விட்டுச் சோம்பிக்கிடந்தவர்களைச் செயல்படவைத்தவர் பெரியார் இராமசாமி ஆவார்கள்.

அறிவை அடகு வைத்து, மூடநம்பிக்கைகளுக்கும், குருட்டுப் பழக்க வழக்கத்திற்கும் அடிமையாகி, வாழும் வகை காணாது அல்லற்பட்டு உழன்று கொண்டிருக்கும் தமிழ்மக்களைத் தட்டியெழுப்பி, ஏன்? எதற்கு? எப்படி? என்று கேள் என்று சொல்லிக் கொடுத்து, உலகையும்—ஊரையும்—உடலையும்—உயிரையும்—உள்ளத்தையும் தெள்ளத் தெளிவாகப் புரிந்து கொள்ள வைத்த பெரியார் அவர்கள் 90 ஆவது ஆண்டைத்தாண்டி 91 ஆவது ஆண்டில் அடியெடுத்து வைப்பது நமக்கெல்லாம் வியப்பையும், பெருமித உணர்வையும் அளிக்கும் நிகழ்ச்சியாகும்.

பகுத்தறிவு நெறியறிந்து நடக்கத் தெரியாத காரணத்தால் கோடானு கோடி மக்களின் நேரம்—நினைப்பு—உடமை—உழைப்பு—அறிவு—ஆற்றல் எல்லாம் குருட்டுநம்பிக்கைக்கும், மூடப்பழக்க வழக்கத்திற்கும் இரையாகிப் பாழாகிக் கொண்டிருக்கின்றன. மக்கள் வாழ்வதற்குரியவகையான நெறி பகுத்தறிவு நெறிதான் என்பதைப் பெரியார் அவர்கள் தமிழகத்தில் நிலைநாட்டிக் காட்டிவிட்டார்கள்.

பகுத்தறிவுவாதி அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும், உண்மைக்கும் பொருந்தி வராத எதனையும் ஏற்றுக் கொள்ளமாட்டான்; அற வாழ்வுக்குப் பயன் ஊட்டும் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளவே செய்வான். பகுத்தறிவுவாதி மனம்—மொழி—மெய் ஆகியவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டதாகச் சொல்லப்படும் கடவுளைப் பற்றிக் கவலைப்படவுமாட்டான், நம்பிக்கை வைக்கவும் மாட்டான். பகுத்தறிவு வாதி அன்பு—அறம்—பண்பு—பரிவு—உண்மை—ஒழுக்கம்—நன்மை—அறிவு—ஆற்றல் ஆகியவற்றிற்கு உரிய மதிப்பு அளிக்கத் தவற மாட்டான். மனச்சான்றுக்கு எப்பொழுதும் மதிப்பு அளிப்பான். இப்படிப்பட்ட பகுத்தறிவுவாதிகளை உருவாக்கத்தான் பெரியார் அவர்கள் அல்லும் பகலும் அயராமல் பாடுபட்டுவருகிறார்கள்.

பகலவன் ஒளிபட்டு உலக உயிர்கள் உய்வது போன்று, பெரியாரின் பகுத்தறிவு ஒளிபட்டுத்தன்மதிப்பு உலகம் உய்ந்து வருகிறது.

வாழ்க பெரியார்! வளர்க அவர் புகழ்! வெல்க அவர் தொண்டு!

# The Mylapore Hindu Permanent Fund Ltd.

(Estd. 1872)

*Branch Office :*
**471, Mint Street**
**P. T. Madras.**
Phone : 33588

*Head Office :*
**30–31, South Mada Street**
**Mylapore, Madras-4**
Phone : 71090 & 71099

Accepts (Savings) Recurring DEPOSITS for 48 & 84 Months with guaranted interest at 7.56% per annum

RECEIVES FIXED DEPOSITS

at attractive rates of interest

LOANS are granted

on 22 Carat Gold Jewels at Rs. 64/- per sovereign

And on silver articles at Rs 2/- per 10 grams.

**U. S. Ramaswamy Iyer,** M.L.,
*President*

**G. Janakiram Chettiar,**
*VicePresident*

**K. Vinayakam,** B.A.,B.L.
*Secretary*

# இதோ... பெரியார்!

உணவு அமைச்சர்
திரு ப.உ. சண்முகம்

பட்டுக்கோட்டை மாவீரன் அழகிரி அன்றொரு நாள் திருவண்ணாமலையில் நடைபெற்ற தி. கழகமாநாட்டில் பெரியாரை வைத்துக் கொண்டு உரையாற்றினார்! இந்த நிகழ்ச்சி நடைபெற்றது 1948-ம் ஆண்டு துவக்கத்தில். அப்போது நான் நகராட்சித் தலைவன். இருபத்தோரு ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற நிகழ்ச்சி என்றாலும் என் நினைவை விட்டு நீங்காத அம்மாநாட்டு நிகழ்ச்சிகள் இன்றும் இளமையாகவே உள்ளன!

தந்தை பெரியாரின் தியாகத்தைப் பற்றி பட்டுக்கோட்டையாரின் வாயினின்றும் வரும் வார்த்தைகளைக் கேட்டேன். பட்டை தீட்டியவைரக்கல் போல் பளிச் பளிச்சென்று மின்னிற்று! கூரிய குத்து வாள்போல் மாற்றாரின் கேள்விகளைக் கிழித்தெறிந்தது.

தந்தை பெரியார் ஆண்டவன் அவதாரமல்ல! சாதாரண மனிதர்தான் என்றாலும் அவதார மூர்த்திகளோ அல்லது அறுபத்தி மூன்று நாயன்மார்களோ சாதிக்காததை சாதித்துள்ளார். எந்த ஒரு சமுதாய சீர்திருத்தத் தலைவனும் உலகில்தான் உபதேசித்த கொள்கைகள் தன் ஆயுட் காலத்திற்குள் வெற்றி பெற்றதை அல்லது சமுதாயம் ஏற்றுக் கொண்டதைக் கண்டதில்லை. பொதுவுடைமைத் தத்துவத்தை உலகிற்கு உபதேசித்த கார்ல்மார்க்சானாலும் சரி, அடிமைத் தளையை அறுத்தெறிய துடித்தெழுந்த ஆப்ரகாம் லிங்கன் ஆனாலும் சரி, கிருத்துவமதத்தில் மாற்றங் காண முற்பட்ட மார்டின் லூதரானாலும் சரி, சிந்திக்கத் தூண்டிய சாக்ரடீசானாலும் சரி, உலகத்து உண்மையைக் கண்டறிய மணிமுடியைத் துறந்து மரஉரிதரித்த புத்தர் ஆனாலும் சரி, புரட்சிக்கு வித்திட்டு புதிய சமுதாயம் காணத் துடித்திட்ட வால்டையரானாலும் சரி, சடைதரித்த ஆண்களின் முடிதனை வெட்டிய சன்யாட்சன் ஆனாலும் சரி—இப்படி எந்த நாட்டுப் புரட்சித் தலைவனை எடுத்துக் கொண்டாலும் சரி, தன் ஆயுட் காலத்திலேயே வெற்றி கண்டவர் யாருமில்லை — பெரியாரைத் தவிர!

சலியாத உழைப்பு—தணியாத ஆர்வம்—துணிந்து செய்தல்—வலுவாக வாதாடல்

— சிறையைக் கண்டு அஞ்சாமை — உடலுக்குச் சொந்தம் உயிர் என்றாலும் உடல் சமுதாயத்திற்குச் சொந்தம் — இப்படி தன்னை ஆளாக்கிக் கொண்டு, இயந்திரம் போல் சுற்றிச் சுற்றி அலைந்து, கல்லால் அடித்தவனை மலர்மாலை அணிவிக்கச் செய்து, சொல்லால் அடித்தவனை புகழ் மாலை பாடச் செய்து, வலுவான அதை விட தெளிவான வாதத்தால்வைதீகத்திற்கு வேட்டு வைத்துத் தகர்த்த பெருமை பரியாருக்குத்தான் உண்டு!

பெரியார் மட்டும் இல்லாதிருந்தால் இந்த நாடும் பௌத்த சாமியார்களுக்கு பயந்து வாழும் இலங்கையைவிட, பர்மாவைவிட படுபயங்கரமான நிலையில் வைதீகத்தின் பேரால் தங்களை வேதவிற்பன்னர்கள் என்று கூறிக் கொள்ளும் சாதியினருக்கு அஞ்சி அஞ்சி சாகவேண்டியிருந்திருக்கும்.

தீண்டாமையை அறுப்பதிலும், பெண் அடிமையை மறுப்பதிலும், பார்ப்பனீயத்தை வெறுப்பதிலும், பழமைகளை ஒழிப்பதிலும் பெரியார் ஆற்றியுள்ளசேவை மறக்க முடியாதது! மறுக்க முடியாதது! மறைக்க முடியாதது!

விந்தை மனிதரிவர்
பகுத்தறிவுக்குத் தந்தை!
சிந்திக்க வைத்த இவர்
சலியாது உழைக்கும் இளைஞர்!
முந்தையோரின் வாதத்தை
முறியடித்த பெரும் சிந்தனையாளர்
அறிவுக்கு வித்திட்ட ஆசான்
அறிவு உலக பெரியாரில் பெரியார்!

அவரை வாழ்த்த தகுதி எனக்கில்லை! ஆனால் வணங்க தகுதி உள்ளதென்று நினைக்கின்றேன் வணங்குகின்றேன்.




தந்தி : கூஜா தொலைபேசி எண் : 490

எங்கள் தந்தை பெரியார்
பல்லாண்டு வாழ்க!

உத்திரவாதமுள்ள

**K. R. S. பிராண்ட்**

**எவர்சில்வர்**

ஆஸ்பத்திரி சாமான்கள் கூஜா, குடம், தவலை பானை, குத்துவிளக்கு, மற்றும் பலரக வீட்டு உபயோக சாமான்களும் தயார் செய்து, தமிழ்நாடு, இதர பல ராஜ்பங்களுக்கும் வியாபாரிகளுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் சப்ளை செய்து வருகிறோம்.

தேவையுள்ள இதர சாமான்களும் ஆர்டருக்கு செய்து கொடுக்கப்படும்.

கேட்லாக் விலைபட்டியலுக்கு எழுதுங்கள் உற்பத்தியாளர்கள் :

39 வருடமாக தந்தை பெரியார் அவர்களின் கொள்கை வழி நின்று முன்னேறிய

**R. சிங்காரவேலர் & சன்ஸ்**

சவுத் இந்தியன் காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ்

46, மல்லுக செட்டித்தெரு,
கும்பகோணம் — தமிழ்நாடு

எங்கள் தயாரிப்பான கூஜா மார்க் சலவை சோப் உபயோகியுங்கள்
ஏஜெண்டுகள் தேவை



# தனயன் போற்றும் தந்தை

சட்ட அமைச்சர்
திரு மாதவன்

**“ உலக வரலாற்றில் வேறு எந்த ஒரு சமூக சீர்திருத்தவாதியும் இத்தகைய மகத்தான வெற்றிகளைக் கண்டதில்லை—அதுவும் தமது வாழ்நாளிலேயே.’’**

சென்ற ஆண்டு அமெரிக்காவில் இருந்த அறிவுலக மேதை அண்ணா அவர்கள் தந்தை பெரியாருக்கு எழுதிய கடிதத்தில் உள்ள பொன்மொழி இது. ஏதோ அன்பு மேலிட்டால் ஆர்வத்தில் எழுதிய புகழ்மொழியாக இது தோன்றலாம். ஆனால், சிறிது ஆழ்ந்து சிந்திப்போர்க்கு இது மிகைப்படக் கூறிய புகழ்ச்சி அன்று, உள்ளதைக் கூறும் வெள்ளிடை உண்மை என்பது நன்கு விளங்கும்.

சமுதாய வாழ்வில் நிகழும் அறியாமையையும், அறியாமையால் எழும் அநீதிகளையும் அக்கிரமங்களையும், ஏற்றத்தாழ்வுகளையும் இடர்ப்பாடுகளையும் கண்டு உள்ளங் கொதித்தவர்கள்தாம் ரூசோ, லெனின், போன்ற புரட்சி வீரர்கள். சமயத் தலைவர்களாக, தெய்வத் தூதுவர்களாகப் போற்றப்பெறும் சிந்தனைச் செல்வர் பலரும் சமுதாய அறியாமையைச்சாடியவர்கள் தாம்.

மேலை நாடுகளில் நிலவிய மூடக் கொள்கைகளாலும், குருட்டு நம்பிக்கைகளாலும் பயன்பெற்றோர் சமுதாயத்தின் மேல்தளத்தில் இருந்த ஒரு சாரார்மட்டுமே. ஆனால், நம் நாட்டிலோ, சமுதாயப் படிக்கட்டுகளில் ஒவ்வோர் நிலையில் உள்ளவர்களும் குருட்டுக் கொள்கைகளால் நலம் பெறுவதாக எண்ணுகின்றனர். சாதிப் பிரிவினை தோற்றுவித்த சமுதாயப் படிகளில், மேலேயுள்ளவர்கள் கீழ்ப்படியில் உள்ளவர்களோடு தங்களை ஒப்பிட்டுத் திருப்தியடைகின்றனர்! சமுதாயப் படிக்கட்டுகளைத் தாங்கும் தூண்களாக அமையும் சமயக் கொள்கைகளையும் சடங்குகளையும் பேணுகின்றனர். எனவே, சமயத்தின் பெயரால் எழுந்த சாதிக் கொடுமைகளை, சமுதாயத்திலுள்ள பல நிலையினரும் ஆதரிக்கும் அவலநிலை நம் நாட்டில் இருந்தது. இந்நிலையில் சாதிக் கொடுமைகளையும் சமயச் சடங்குகளையும் எதிர்ப்பதற்கு மகத்தான துணிவு வேண்டும்.

இடர்ப்படும் பெருபான்மையோரோடு சேர்ந்து கொண்டு இடர்ப்படுத்தும் சிறுபான்மையோரை எதிர்ப்பதும், எதிர்த்து வெற்றி காண்பதும் எளிது. இத்தகைய வெற்றியைத் தான் மேலைநாட்டுப் புரட்சித் தலைவர்கள் பெற்றார்கள். ஆனால், நம் நாட்டிலோ நிலைவேறு. இடர்ப்படுத்தப் படுவோர்கள், பிறருக்குத் தாங்கள் இழைக்கும் இடர்ப்பாட்டினால் தாங்கள் படும் இடர்ப்பாட்டினை உணருவதில்லை. உயரத்தில், இரண்டாவது படியில் உள்ளவர்கள் கீழே மூன்றாவது, நான்காவது

படிகளில் உள்ளவர்களைக் கண்டு திருப்தியடைகின்றனர். மூன்றாவது படியில் உள்ளவர்களுக்கு நான்காவது, ஐந்தாவது படிகளில் உள்ளவர்களைக் கண்டு திருப்தி! நான்காவது படியில் உள்ளவர்களுக்கோ, தமக்குக் கீழே அய்ந்தாவது, ஆறாவது படியில் உள்ளவர்களைக் கண்டு திருப்தி! இவ்வாறு அறியாமையால் அவரவர்கள் திருப்தியடையும் படியான ஒரு அநீதியைச் சாதிப்பிரிவினை என்ற தீமை தோற்றுவித்திருந்தது! இச்சூழ்நிலையில், சாதிக் கொடுமையை எதிர்ப்பது என்றால் அது சமுதாயத்தையே எதிர்ப்பது என்பதாகியது. இவ்வாறான குருட்டுக் கொள்கை என்ற இருட்டுக் கடலிலே தன்மானம் மறந்து தாழ்ந்து கிடந்த சமுதாயத்தைத் தட்டி எழுப்பிய தனிப்பெருமை தந்தை பெரியாரையே சேரும்.

தீமையால் பீடிக்கப்பட்டிருப்பதை உணராத சமுகத்தினரிடம் அத்தீமையைப் பற்றிக் கூறுவதற்கு மகத்தான துணிவு வேண்டும், அஞ்சாத நெஞ்சம் வேண்டும் விதியை நம்பி, மதியை மறந்து, வீணரின் கொடுமையை வேதத்தின் கட்டளையாக ஏற்று நலிந்து கிடக்கும் மக்களின் மன நோயைத் தீர்க்க முற்படுவதற்கு நெஞ்சுறுதியும் நேர்மையும் எவ்வளவோ வேண்டும். நோயாளியின் எதிர்ப்பையும் சமாளித்துக் கொண்டு நோயைக் குணப்படுத்தும் மருத்துவராகப் பெரியார் தொண்டாற்றினார்!

மேலை நாட்டுப் புரட்சிகளில் எல்லாம் கத்தியும் இரத்தமும் கலந்தன. பெரியார் நடத்திய புரட்சியிலோ அறிவும் ஆற்றலும் கலந்தன. படைகொண்டு நடத்திய புரட்சிகளில் பல்லாயிரவர் மாண்டனர், ஆனால், பகுத்தறிவுப் புரட்சியிலே பண்பாடு வளர்ந்தது; மதி விதியை வென்றது; ஒளி இருளை வென்றது; அறிவு அறியாமையை வென்றது; வாய்மை பொய்ம்மையை வென்றது.

அந்நியரின் ஆட்சியை அகற்றுவது எளிது, ஆனால் அறியாமையின் ஆட்சியை அகற்றுவது அரிது. நம் உடலை ஒடுக்கி அந்நியர் ஆண்டனர், நம் உள்ளத்தை மயக்கி அறியாமை ஆண்டது. உள்ளத்தை இழந்தோர்க்கு உய்வு ஏது? எனவேதான், அந்நியராட்சியைக் காட்டிலும் அறியாமையின் ஆட்சி கொடுமை நிறைந்தது என்பதைப் பெரியார் காட்டினார். அறியாமையின் ஆட்சியை அகற்றுவதற்கு பெரியாரின் பகுத்தறிவுப் பாசறையிலே படைக்கலன்கள் உருவெடுத்தன. அஞ்சாமை, ஆன்ற சொல்வன்மை, ஊக்கம், உறுதிப்பாடு, மானம், மடியின்மை என்ற படைக்கலன்கள் அண்ணாவின் உருவிலே ஆர்ப்பரித்து எழுந்தன. அறியாமை இருள் அகன்றது. அரசியல் வாழ்வில் விடுதலை பெற்ற நாம் சமுதாய வாழ்விலும் விடுதலை பெற்றோம்! சமுதாய விடுதலையின் சின்னமாக இன்றைய தமிழக அரசு விளங்குகிறது.

சமுதாயச் சீர்திருத்த இயக்கம் அரசியல் ஆற்றலாக உருவெடுத்து மக்களாட்சியாக மலர்ந்த மகத்தான நிகழ்ச்சி உலக வரலாற்றில் இதுவரை நடைபெறாத ஒன்றாகும். இந்த இயக்கத்தைத் தோற்றுவித்த பெரியார் அவர்களைப் போற்றும் அண்ணா கூறிய சொற்களை மீண்டும் நினைவிற் கொள்வோம்.

"உலக வரலாற்றில் வேறு எந்த ஒரு சமூகச் சீர்திருத்தவாதியும் இத்தகைய மகத்தான வெற்றிகளைக் கண்டதில்லை—அதுவும் தமது வாழ்நாளிலேயே!" இது வெறும் புகழ்ச்சி அன்று, வெள்ளிடை உண்மை.


ஜாதி மத பேதத்தை உடைத்த தந்தை பெரியார் அவர்களுக்கு
எங்கள் இதய நல்வாழ்த்துக்கள்

VGP

V. G. பன்னீர் தாஸ் & கோ.

சைதாப்பேட்டை — தி. நகர்
சென்னை-15. சென்னை-17

# என்றும்  இளைஞர்

*பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சர்*

## திரு என்.வி. நடராசன்

**1966-ம்** ஆண்டு செப்டம்பர் திங்கள்—சென்னையில் பேரறிஞர் அண்ணா அவர்களை காணவந்த வெளி மாநிலத் தலைவர்கள் சிலர் கலந்துரையாடினர். அவர்களில் ஒருவர் தி.மு.கழகத்திற்கு என்ன வயது என்று சிரித்துக் கொண்டே கேட்டார். உடனே அண்ணா அவர்கள் நாற்பத்தெட்டு என்று கூறினார்.

நாற்பத்தெட்டா? மீண்டும் மீண்டும் அதே கேள்வியை ஆச்சரியத்துடன் கேட்டார் அத்தலைவர்!

ஆம் நாற்பத்தெட்டுதான்! திராவிட முன்னேற்றக் கழகம் இன்று கட்டுக்கோப்பாக வளர்ச்சியடைந்து மக்கள் இயக்கமாக மலர்ந்திருக்கிறதென்றால், இந்த இயக்கத்திற்கு வித்திடப்பட்டது 1918-ம் ஆண்டு என்பதைப் பலர் மறந்து விட்டனர். அன்று நீதிக்கட்சியாக உருவாகி, சுயமரியாதை இயக்கமாக வளர்ந்து திராவிட கழகமாக பரவி, நிதானத்தன்மையுடனும் ஆனால் உறுதியடைந்த மனவளத்துடன் இன்று திராவிட முன்னேற்றக் கழகமாக வளர்ச்சியடைந்திருக்கிறது என்று அண்ணா அவர்கள் தட்டுத் தடங்கலின்றி, ஏன் சற்றுப் பெருமையோடும் கூறினார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகம் கண்ட மாபெருந்தலைவர் அண்ணா அவர்கள். நமது பயணம் எங்கிருந்து துவக்கப்பட்டது என்பதையும் கடந்த காலங்களில் இன்றைய நமது சமுதாயத்தின் வாழ்வுக்காக போராடிய, போராடி மறைந்த தலைவர்கள், தொண்டர்கள் ஆகியோருக்கு நாம் எவ்வளவு கட்டுப்பட்டவர்கள் என்பதையும் வலியுறுத்தி வந்திருக்கிறார்கள்.

மதிப்பிற்குரிய அய்யா அவர்களுக்கும் அண்ணா அவர்களுக்கும் அபிப்ராய பேதம் ஏற்பட்டிருந்த கட்டம்- நாம் அனைவரும் திராவிட கழகமாகப் பணியாற்றி வந்த அந்நாட்களில், அய்யா அவர்கள் கழகத்தை மேலும் விரிவு படுத்தி கட்டுக்கோப்பாக நடத்தமாட்டேன் என்கிறாரே என்று அண்ணா அவர்கள் மனச் சோர்வுடன் கழகத் தோழர்களுடன் பேசிக் கொண்டிருந்த போது, கழகத்தின் நீண்டகால, முக்கியத் தோழர் ஒருவர் "அய்யா நாள் தவறாமல் ஊருக்கு ஊர் பறந்து கொண்டு பேசிவருகிறாரே, அது போதாதா-திராவிடநாடு கிடைத்துவிடும்-மற்றவர்கள் எதற்காக"-என்று கேலியாகச் சொன்னார்.

"ஏய் என்ன சொன்னாய்-கட்சிக்குக் கொஞ்சமாவது ஒழுங்காக வேலை செய்துவிட்டு அய்யாவைப் பற்றி குறை சொல், மாதத்தில் நான்கு நாட்கள் ஒழுங்காக கூட்டங்களுக்குப் போய்வர முடியாத நீ அய்யாவின் சுற்றுப்பயணத்தைப் பற்றி கேலி செய்கிறாயா? இப்படிப் பேசினுல் என் மனம் குளிர்ந்துவிடும் என்று எண்ணுகிறாயா-ஜாககிறதை!" என்று அண்ணா கடுமையாகப் பேசினுர்.

ஆம்! அய்யா அவர்கள் கட்சியை நடத்தும் முறையே அலாதியானதுதான். சட்டதிட்டம், விதிமுறைகள், சனநாயகம் ஆகியவைகளைத் துணைக்கு வைத்துக் கொண்டு கட்சியை நடத்த வேண்டும் என்பதில் அய்யா அவர்களுக்குச் சிறிது கூட நம்பிக்கை கிடையாது. அவைகளை மதித்து நடக்கும் மனவளம் சிறிதுகூட பெறாத மக்களிடம் அவைகளைக் கூறி கட்சியை நடத்துவது வீண்வேலை-என்பது அய்யா அவர்களின் எண்ணமாயிருக்கலாம். அவரது இக்கருத்தில் நமக்கு மாறுபட்ட கருத்து உண்டு. எனினும் அய்யா அவர்கள் மேற் கொண்டிருந்த முறையால்தான் இந்தியத் துணைக்கண்டத்தில் வேறு எங்கும் காண முடியாத வெற்றியினை நம் தமிழ் நாட்டில் காணமுடிந்தது. மக்களும் பயனடைந்து வருகின்றனர்.

இந்தியாவின் மற்ற மாநிலங்களில் சீர்த்திருத்தத் தலைவர்கள் தோன்றி பணியாற்றியிருக்கிறார்கள். நாம் அதை மறுக்கவில்லை. ஆனால் அங்கெல்லாம் சீர்த்திருத்தக் கருத்துக்கள் இங்கும் அங்குமாக அள்ளி தெளிக்கப் பட்டிருக்கிறதேயன்றி பேறியக்கமாக வளர்ந்து பயன் தரவில்லை.

நம் தமிழ் நாட்டில்தான் பகுத்தறிவுக் கொள்கைகள் ஆழமாகப் பதியப்பட்டு, வாழ்க்கையில் மிக மிக அடிமைப்படுத்தப் பட்டும், பிற்படுத்தப்பட்டும் வைக்கப் பட்டிருந்த ஏழை-எளிய-நடுத்தர மக்களைத் தட்டி எழுப்பித் தன்மானத்தையூட்டி மனித உரிமைகளுக்கான அறிவுப்போராட்டங்களையும் நடத்தி வெற்றிகள் பல காணும் பேற்றினைப் பெற்றிருக்கிறோம்.

இத்தகு உரிமைகளைப் பெறுவதற்கு சுயமரியாதைக் கட்சி என்ற அளவையுந் தாண்டி ஓர் பேரியக்கமாக நாட்டில்-வேரூன்றி போதுவாக மனித சமுதாயத்திற்கு ஏற்றம் தந்திருக்கிறது என்பதை அழுத்தந்திருத்தமாகக் கூறலாம். இன்று இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் நிலையான ஆட்சி நடைபெறுவதற்கு இயலாத நிலையும், அதே சமயத்தில் நம் தமிழ் நாடடில் மட்டும் நிலையான ஆட்சி, நடைபெற்றது-நடைபெற்று வருகிறது என்றால் மக்களின் அறியாமையைப் போக்கி, பொது அறிவை ஓரளவு வளர்க்கும் ஆக்கப்பணியில் ஏறத்தாழ 40-ஆண்டுகளாக மதிப்பிற்குரிய பெரியார் அவர்களும் அவர்களது தலைமையில் இயங்கிவரும் சுயமரியாதை இயக்கமும் எவ்வளவோ எதிர்ப்புகளை, அநீதிகளை, கொடுமைகளையெல்லாம் சகித்துக்கொண்டு, மக்களிடையே மலந்திருந்த மூடப்பழக்க வழக்கங்களையும் கண்மூடித் தனமான போக்கினையும் தகர்த்தெறிந்தால்தான் தமிழ்நாட்டில் நிலையான அரசு செயல்பட முடிகிறது என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

அய்யா அவர்களின் அரசியல் கொள்கைகளில் சிலவற்றில் சிலருக்கு மாறுபாடு இருக்கலாம், தீவிரமான அரசிய..லப் பேச மாட்டேன் என்கிறாரே என்று வருத்தம் இருக்கலாம். பிற நாடுகளின் விவகாரங்களைப்பற்றிக் கவலைப்படமாட்டேன் என்கிறாரேஎன்ற கோபம் இருக்கலாம், எப்போது பார்த்தாலும் சமுதாயப் பணிக்கான பழைய பேச்சுத்தானா என்ற சலிப்பு கூட இருக்கலாம்! ஆனால், அய்யா அவர்கள் இவ்வளவு தீவிரமாக மக்கள் சமுதாயத்தைத் தட்டி எழுப்பவில்லையென்றால் தமிழ் நாட்டிற்கு இன்று பிற நாடுகளில் ஏற்பட்டுள்ள ஓரளவு மரியாதையும் மதிப்பும் கூட கிட்டாது போயிருக்கும்.

சமுதாயப்பணி ஒரு கண் என்றால்-அரசியல் பணி மற்றொரு கண் ஆகும். இன்று தமிழ் நாட்டின் அரசியல் துறை ஓரளவு ஒளிவீசக் கூடியதாயிருக்கிறதென்றால், அதற்குக் காரணம் சுயமரியாதை இயக்கம் கடந்த 40 ஆண்டுகளாகச் செய்து வந்துள்ள சிறந்த பணிகளே யாகும். அதற்காகத் தமிழ்நாடு மட்டுமல்ல, தமிழ்நாட்டில் துணைகொண்டு தனது எதிர்கால வாழ்வை நிர்ணயித்துக் கொள்ளக் கூடிய நிலையிலுள்ள இந்தியாவின் பல்வேறு மாநிலங்களும், பெரியார் அவர்களுக்கு நன்றி செலுத்த என்றும் கடமைப் பட்டவர்களாவார்கள்-என்று அண்ணா அவர்கள் பெரியார் அவர்களைப் பற்றிப் பாராட்டியும் போற்றியும் வழங்கிய கருத்துக்களை நான் இது சமயம் நினைவுட்ட ஆசைப் படுகின்றேன்.

இராமாயணமா-அது தெய்வ காதை-அதைக் குறை கூறுபவர்களை நாடு சும்மா விடாது—அழிந்தே போவார்கள் என்று நாடெங்கும் பேசிய புலவர் பெருமக்கள் இன்று இராமாயணமா அது தெய்வ

காதையோ இல்லையோ சர்ச்சை வேண்டாம். இராமாயணத்திலுள்ள தமிழ் நடையை-அதன் சுவையைக் கூடவா புறக்கணிக்கவேண்டும் என்று கூறும் மாற்றத்தை உண்டாக்கிய பெருமை சுயமரியாதை இயக்கத்திற்கு அல்லவா?

மற்ற மதங்களைப் பின்பற்றும் மக்களுக்கெல்லாம் ஒரு கடவுள் ஒரு நெறி என்றிருக்க—இந்து மதக்காரர்களுக்கு மட்டும் ஆயிரக்கணக்கான கடவுள்கள் ஏன்-கதை-புராணங்கள் ஏன் என்று சுயமரியாதை இயக்கமும், இயக்கங்கண்ட அய்யா அவர்களும்—அண்ணா அவர்களும் மிகப்பணிலாகக் கேட்டபோது அட நாத்திகர்களே உங்களை ஒழித்து விடுவோம் அழித்து விடுவோம் என்று அன்றைய அரசாங்கத்தின் துணையையும் கொண்டு மிரட்டிய—கொடுமைகளை விளைவித்த ஆத்திகப் பெரியவர்கள் இன்று ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற அளவுக்காகிலும் மனவளம் பெற்றது எந்த இயக்கத்தால்—சுயமரியாதை இயக்கப் பணியினால் அல்லவா?

அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு என்று விதண்டாவாதம் புரிந்து வந்த கூட்டத்தினரின் அறியாமையை அகற்றி இன்று நாட்டில் பெண்களும் ஓரளவு கல்வி அறிவு பெறவும் பிற உரிமைகளைப் பெறவும் பாடுபட்டது சுயமரியாதை இயக்கமல்லவா?

இவ்வாறு சுயமரியாதை இயக்கத்தாலும்—இயக்கங் கண்ட மதிப்பிற்குரிய அய்யா அவர்களாலும் பொதுவாக மனித சமுதாயமும் குறிப்பாக வாழ்க்கையில் பின்தங்கியுள்ள—தாழ்த்தப்பட்டுள்ள மிகப் பெரும்பான்மையான மக்களும், சமுதாய நிலையில்மட்டுமல்லாமல், உத்தியோகத் துறை உள்ளிட்ட உரிமைகளிலும் ஓரளவு வெற்றி கண்டு வருகிறார்கள் என்று கூறின் மிகையாகாது. இத்தகு செயற்கரிய பணிக்குப் பெரியாருக்குத் துணையாயிருந்து வருவது அவருக்குமட்டுமே உரித்தாகிவிட்ட சிக்கனமுறைதான். அந்தச் சிக்கன முறைதான் அய்யா அவர்களை இளைஞர்போல இடைவிடாது பணியாற்றுவதற்கு, "டானிக்" போல பயன்பட்டு வருகிறது என்றும் கூறலாம்.

அய்யா அவர்களைச் சிலர் கருமி என்று கூறுவார்கள். அதாவது—கருமிக்கும் சிக்கன முறைக்கும் எவ்வளவோ வேறுபாடுயிருக்கிறது. கருமி என்றால், அய்யா அவர்கள் கல்வித்துறைக்கும் மருத்துவத்துறைக்கும், திக்கற்ற பிள்ளைகளைக் கண்காணித்து ஆளாக்கிவிடும் அனாதை இல்லங்களை நடத்தும் துறைக்கும் அறிவுடைமையை மக்களின் பொதுவுடமையாக ஆக்குவதற்குரிய பணிகளுக்கும் தமது பொருளை ஏராளமாகச் செலவிட்டு வருவார்களா?

சுயமரியாதைக் கொள்கைகளை நாட்டில்-மனித சமுதாயத்தில் அழிக்க முடியாத செல்வமாக வளர்ப்பதற்குப் பெரியார் அவர்களுக்குக் கேடயமாக இருந்து வருவது அவரது சிக்கனமுறைதான்! அவரிடம் எந்த அளவுக்குச் சிக்கன முறையிருக்கிறதோ அந்த அளவுக்கு அவரது செல்வம் நாட்டின் பொதுப்பணிகளுக்குப் பயன்படுகிறது என்பதாகும்.

எனவே அய்யா அவர்களை சிக்கன முறையுடன் தொடர்ந்து இன்னும் பல்லாண்டுகள் நலமுடன் வாழ்ந்து என்றும் இளைஞர்போல தமது தொண்டினை நாட்டிற்கு வழங்க வேண்டுமென்று மிகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்வதுடன் அவர்கள் நீடூழி வாழ வேண்டுமென்று எல்லோருடனும் சேர்ந்து நானும் எனது இதயபூர்வமான ஆசையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இடைவிடாத பொதுத்தொண்டில்**
**இளைஞர் வரிசையில் முன்னிற்கும்**
**அய்யா அவர்கள் வாழ்க! வாழ்க!**
**அவரது தொண்டு வெல்க! வெல்க!**

## நீடித்த உழைப்பிற்கு

சிறந்தவை

# ஸ்டார் லயன் பனியன்கள்

*

★ STAR-LION ★

*

தயாரிப்பாளர் :

**ஸ்டார் நிட்டிங் கம்பெனி**

1/203/4, பழனியப்ப கவுண்டர் தெரு,

கரூர்.

வாழ்க பெரியார் ! வளர்க தமிழ்க்கலை!

**எதிர்பாருங்கள் !**

இசைவல்லுநர்

**நற்குணம்**

நடத்தும்

## "அறிஞர் பெருமான்"

என்னும்

கதாக்காலட்சேபம்

BY

(பாவலர் பாலசுந்தரம்)

விவரங்கட்கு :

**S. T. நற்குணம்**

**லக்ஷ்மி ஜுவல்ரி**

96/1, லாயிட்ஸ் ரோட்,

சென்னை-6.

# பெரியார் ஜவுளி ஸ்டோர்

கண்ணைக் கவரும்

பலவண்ணக் கலர்களில்

ஜவுளிகள் வாங்க சிறந்த இடம்

உரிமையாளர்:

**ஆ. செ. தங்கவேலு**

53, பெரிய கடைத் தெரு,

அரியலூர்.

# நீங்காத நினைவு

★ அறநிலைய அமைச்சர் ★

## திரு கே. வி. சுப்பையா

**1942-ம்** ஆண்டு திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் நான் பி. ஏ. வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். ஒரு நாள் தந்தை பெரியார் அவர்கள் டவுன் ஹால் மைதானத்தில் பேசுவதாக விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. செயின்ட்ஜோசப் கல்லூரி மற்ற கல்லூரிகளைப் போல் அல்ல. மாலை 6 மணி முதல் 7 மணி வரை படிக்கும் நேரம். யாரும் வெளியே போக முடியாது. ஆனால் அன்று எப்படியாவது பெரியார் அவர்களின் சொற்பொழிவைக் கேட்க ஆசை. அரசியல் கூட்டங்களுக்குச் செல்ல அனுமதி கிடைக்காது. ஆஸ்டல் வார்டனிடம் உறவினர் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்று அனுமதி கேட்டேன். அவரும் எனக்கு அனுமதி கொடுத்தார். நான் நேராக டவுன் ஹால் மைதானம் சென்று எனது வாழ்வில் முதன் முதலாக அய்யா அவர்களைக் கண்டேன். அவரது சொற்பொழிவைக் கேட்டேன்.

அது என் வாழ்வில் மறக்க முடியாத அனுபவம்.

அவரது பேச்சிலே ஒரு காந்தக் கவர்ச்சி இருந்தது. சிக்கலான பிரச்னைகளை எளிமையாகக் கையாண்டார். தெள்ளத் தெளிவான வார்த்தைகள் மூலம் தனது கருத்துக்களை சிறப்பாக வெளிப் படுத்தினார். ஒவ்வொரு வார்த்தையிலும் அவருக்கே உரிய முத்திரைகளைப் பதித்துக் காட்டினார். அவர் பேச்சில் எதுவும் குறைவாகவோ மிகையாகவோ இல்லை.

அன்று பெரியார் அவர்கள் பேசியது சாதி சமய வேறுபாடுகளை எதிர்க்கும் பகுத்தறிவுப் பிரசாரம்தான். அதில் ஒன்று மட்டும் நீங்காத நினைவாக மனதில் நிற்கிறது.

"எதையும் சிந்தித்து ஏற்றுக் கொள். நீண்ட காலமாக வந்த பழக்கம் என்பதற்காகவோ மத நூல்களும், பெரியவர்களும் கூறியுள்ளார்கள் என்பதற்காகவே எதையும் ஏற்றுக் கொள்ளாதே. ஆராய்ந்து உன் பகுத்தறிவுக்கு எது பொருத்தம் என்று தோன்றுகிறதோ, அதை ஏற்றுக் கொள். அதன்படி நட."

ஏறக்குறைய இதுதான் அவர் அன்று கூறியதன் சாரம்.

கூட்டம் முடிந்து விடுதிக்குச் சென்ற பின் நீண்ட நேரம் அவரது எண்ணம்

மனதைவிட்டு அகலவில்லை. அவர் சொற் பொழிவை கேட்கும் ஒவ்வொருவருக்கும் ஏற்படக்கூடிய அனுபவம்தான். ஆனால் என் மனதிலே என்னென்றும் நிலைத்து நிற்கும் அனுபவங்களில் அது சிறப்பான தொன்றாகும். 'அய்யா' அவர்களை நினைக்கும்போது எனக்கு அந்த முதல் அனுபவம் என் மனத்திரையில் தோன்றாமல் இருந்ததில்லை.

தந்தை பெரியார் அவர்கள் ஒரு தனித் தன்மை வாய்ந்த சித்தர்.

வாழ்விலும் சாதனையிலும் அவர், கதைகள் காப்பியங்களில் வரும் முனிவர் களைக் காட்டிலும் சக்தி வாய்ந்தவர்; ஞானம் வாய்ந்தவர்.

பெரியாருக்கு வயது இன்று 91 ஆரம்ப மாகிறது. அரசியல் வாழ்வில் அவர் மூன்று தலைமுறைகளைப்பார்த்தாகிவிட்டது. நீதிக் கட்சியின் ஆட்சி; காங்கிரசின் ஆட்சி; இப்போது தி.மு.க. வின் ஆட்சி ஆகிய மூன்றின் விஷயத்திலும் பெரியார் இடிக்க வேண்டிய நேரத்தில் இடித்தும், போற்ற வேண்டிய நேரத்தில் போற்றியும் தமது பங்கினை முழுமையாகச் செய்திருக்கிறார்.

மூன்று வகையான ஆட்சிகளிலும்
பெரியாரின் பெரும்பணிதான்
அவற்றுக்கு உரமாக அமைந்தது.
அவர் மூட்டிவிட்ட எழுச்சியும்,
அவர் கிளறிவிட்ட கிளர்ச்சியும்,
இந்த அரசாங்கங்களை திசை
மாறாத வழியில்இயங்க வைத்தன.

தம்முடைய தனித்தன்மை கெடாமல், தமக்கே உரிய சக்தி சாதனங்களை முழுமை யாக வளர்த்துக் கொண்டு, அதே நேரத் தில், எல்லோரும் போற்றி மதிக்கத் தக்க தலைவராக பெரியார் விளங்குகிறார்.

தீண்டாமை ஒழிப்பு, ஏழைப் பிள்ளை களுக்கு இலவச உடை-உணவு, தாழ்த்தப் பட்டோருக்கும், பிற்போக்கு வகுப் பினருக்கும் உத்யோக உரிமை, குடும்பக் கட்டுப்பாடு, கலப்பு மணம், பெண்கள் கல்வி ஆகியவை பற்றி பெரியார் அவர்கள் முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் கூறிய அனைத்தும் இன்று நாம் நடைமுறையில் காண்கிறோம்:

இந்தப் புதிய வரலாற்றுக்கு வித்திட்ட வரான 'அய்யா' அவர்களுக்கு தமிழகம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளது.

வளர்கின்ற அவரது ஒவ்வொரு வயதிலும் ஒவ்வொரு வெற்றியைக் காண் கிறார். வயதுடன் அவரது உழைப்பும் போட்டி போடுகிறது. அவரது உழைப்பின் வெற்றி தமிழகத்தின் வெற்றியாகும்.

இந்தியத் தலைவர்களில் எத்தனையோ பேர்களுக்கு மாறுபட்ட விதத்தில் பெரியார் அவர்கள் சுத்த சுயம்பிரகாசமான அறிவு வழிக்கு மக்களை இழுத்திருக்கிறார். "உன் அறிவு என்ன சொல்லுகிறதோ அதன்படி நட" என்று கூறி பாமர உள்ளங்களில் பகுத்தறிவின் விதை விதைத்தவர் தந்தை பெரியார். படித்த, பெரிய மனுஷத்தனம் வாய்ந்த மேல்மட்ட மக்களை பெரியார் நாட வில்லை. ஒதுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட பின்னுக்குத் தள்ளப்பட்ட மக்களுக்கு அறிவும் உணர்ச்சியும் ஊட்டி அவர்களைச் சிந்திக்க வைத்தது பெரியாரின் தனித் திறமை ஆகும். சமய நம்பிக்கையிலும் மௌடீகத்திலும் ஊறிக் கிடந்த மக்களை கௌதம புத்தனின் பகுத்தறிவுப் பாதைக் கும், சாக்ரடீசின் தர்க்க வாதச் சிறப்பை எண்ணுவதற்கும் இழுத்து வந்தது சாமான்ய சாதனை அல்ல.

பொது நல வாழ்வில் அவரால் போற்றப்படாதவர்களும் இல்லை; தூற்றப் படாதவர்களும் இல்லை; பகைவர்களோ, நண்பர்களோ யாராயினும் போற்றத் தக்க வேலை செய்தபோது போற்றினார்; கண்டிக்க வேண்டிய சமயத்தில் கண்டித் தார்.

தமிழகத்தில் இன்று சாதிச் செருக்கு ஒழிந்துவிட்டது. சமூக நீதி தழைத்து வளர்கிறது. அறிவின் வழியில் வாழ வேண்டும் என்ற எண்ணம் உறுதிப்பட்டு, புதிய தமிழ்ச் சமுதாயம் உருப் பெற்று வருகின்றது. இவை அனைத்துக்கும் காரணமானவர் பெரியார்.

91 வயதடையும் பெரியார், தாம் வளர் கின்ற ஒவ்வொரு ஆண்டிலும் ஒரு புதிய வெற்றியை ஈட்டி வருகிறார். வயது வளர அவர் சிந்தனை, செயல், உழைப்பு அனைத்துமே வளர்கின்றன. பெரி யாருடைய வாழ்க்கையின் வெற்றி, புதிய தமிழகத்தின் வெற்றியாக மலர்ந்து வரு கின்றது. வாழ்க பெரியார்!

# வளர்ச்சிக்கு வழி

## தந்தை பெரியார்

மனிதன் பகுத்தறிவும், சிந்தனா சக்தியும் உடையவனாக இருந்தும் வளர்ச்சியடையாமலிருப்பதற்குக் காரணம் கடவுள் மதம் என்பவைகளே யாகும்.

இவை உள்ளவரை வளர்ச்சி என்பதைக் காணமுடியாது.

அறிவைக் கெடுத்ததுதான் கடவுள். வளர்ச்சியை கெடுத்ததுதான் மதம். "உலக அமைப்புக்கும், நடப்புக்கும் கடவுள் காரண"மென்றால், மனிதனால் அமைப்பிலும், நடப்பிலும் எப்படி மாறுதலைக் காண முடியும்?

அமைப்பு என்பவையெல்லாம் மனிதன் காணக் கூடியவைகளே யாகும். அவை யாவும் மனிதனால் மாற்றக் கூடியவைகளாகும். அதற்கு மனிதனது முயற்சி அவசியமாகும். அமைப்பெல்லாம் கடவுளால் ஏற்பட்டது என்று கருதப்படுமானால் மனிதனுடைய முயற்சிக்கு இடம் எப்படி ஏற்பட முடியும்?

அமைப்புக்கும், நடப்புக்கும் கடவுள் சக்தி எவ்வளவு மனித சக்தி எவ்வளவு என்பது இன்னமும் எந்த மனிதனிடமும் முடிவு பெறாத காரியமாகவே இருந்து வருகிறது. நிற்க.

மனிதன் காட்டுமிராண்டி பருவத்தவனாயிருந்த காலத்தில் ஏற்படுத்தப்பட்டவைகள் கடவுள், மதம், வேதங்கள் முதலியன. அவை இன்றும் மனிதனை ஆட்சி செய்வதால் மனிதன் வளர்ச்சியடையாமல் காட்டுமிராண்டி பருவத்தவனாகவே இருக்கிறான்.

இன்று மனிதனுக்கு எதற்காகக் கடவுளும், மதமும், வேதமும் வேண்டியிருக்கின்றன?

ஒரு மனிதன் இன்று கடவுளையோ மதத்தையோ, வேதத்தையோ பார்க்கிறான் கவனிக்கிறான் என்றால் ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு மனிதன் நிலை என்ன என்பதைப் பற்றி சிந்திக்கிறான் என்பதும் அங்கு செல்ல ஆசைப்படுகிறான் என்பதும் தானே அதன் கருத்தாகும்.

இந்து மதம் என்பதை எடுத்துக் கொண்டால் அதற்கு காலம், கர்த்தா, கொள்கை என்ன என்று யாரால் சொல்ல முடியும். இது ஒன்றே போதுமே இந்து சமுதாயம் என்கின்ற மனித சமுதாயம் காட்டுமிராண்டி, மட சமுதாயம் என்பதற்கு. 1969ம் ஆண்டில் ஒரு மனிதன் இந்துவாக இருக்கிறான் என்றால் இதைக் காட்டுமிராண்டி சமுதாயம், காட்டுமிராண்டி பருவம் என்று தானே சொல்ல வேண்டும். இந்த ஆண்டில் ஒரு மனிதன் பூமியில் இருந்து மணிக்கு 5000 மைல் வீதம் பறந்து 2,35,000 மைல்களைக் கடந்து சந்திர மண்டலத்தை அடைந்து அங்கிருந்து

அடையாள சாமான்களுடன் இறங்கி வந்து விட்டான் என்பதை தெளிவாக உணர்ந்தோம். ஆனால் இந்து மதக் காரன் என்பவனுக்கு எத்தனை பேருக்கு சந்திரன் என்றால் என்ன என்று தெரியும்? இந்துக்கள் என்பவர் களுடைய சந்திரன் சம்பந்தமானக் கதைகளும், கற்பனை நடப்புகளும் இன்றும் அவைகளைப் பின்பற்றி நடந்து வரும் முறைகளும் இந்துக்கள் என்பவர்கள் காட்டுமிராண்டிகள் அடி முட்டாள்கள் என்பதற்கு பெரும் எடுத்துக் காட்டாக இல்லையா? இந் துக்களில் புலவர்கள், வித்வான்கள், மேதாவிகள், பி.ஏ. (B.A.), எம்.ஏ. (M A.), டாக்டர்கள் (Doctors) இருக்கிறார்கள் என்றால் இவர்கள் எல்லோரும்தானே அந்த இனத்தில் சேர்ந்தவர்கள் ஆகி றார்கள்? இந்த நிலையில் உள்ள மனிதனைப் பகுத்தறிவு வாதியாக ஆக்க வேண்டுமானால் வாயினால் சொல்லி எந்த காரியத்தைக் கருத்தைத் திருத்த முடியும்?

பலாத்காரச் செயல்களில் இறங்கா விட்டாலும், நாச வேலையிலாவது இறங்காவிட்டால் எப்படி மாறுதலைக் காண முடியும்? இம்மாதிரி மாறு தலுக்கு மனிதன் காரியத்தில் பிர வேசிப்பது என்றால் முதலாவதாக ஒவ்வொரு "புரட்சி வேலைக்காரரும்" தனக்கு எதிர்ப்படுகிறவர்களுடைய நெற்றியில் அணிந்திருக்கும் நெற்றிக் குறியை அழிக்க வேண்டும் தெருவில் இருக்கும் "கடவுள் உருவம்" என் கின்ற எதனையும் எடுத்து கிணற்றில் குட்டையில் போடவேண்டும்.

"கடவுள்" என்பது தவிர மற்ற யானைக் குதிரை, பூதம் முதலிய உருவங்களை இடித்துத் தள்ள வேண்டும். இப்படிச் செய்வதானது ஒரு பிரசாரத் தன்மைக்கு உதவியாக இருக்கும் என்கின்ற கருத்தின் மீது கூறுகிறேனே யல்லாமல் இது யார் மனத்தையும் புண்படுத்துவதற்காக அல்ல என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.



காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பா—டி.டி.கே.—பெரியார்

# பெரியாரின் சொர்க்கம்!

## தவத்திரு குன்றக்குடி அடிகளார் எம்.எல்.சி.

இருபதாம் நூற்றாண்டின் தமிழின வரலாறு சென்ற நூற்றாண்டின் வரலாற்றைவிட வலிவும், வனப்பும், பொலிவும், புகழும் உடையதாகவே அமைந்து விளங்குகின்றது. தமிழ் இனத்தின் கடந்த கால வரலாற்றின் சுவடுகள் முற்றிலும் முழுநலம் பயப்பனவாக அமையாதது குறையேயாம். சங்ககால வரலாறு பல துறைகளில் புகழ்பூத்த வரலாறேயாம். ஆயினும் இனவழிப்பட்ட ஒருமைப் பாட்டையும், தன்மான உணர்வையும் இன-மானத்தையும் போற்றிப் பேணி வளர்க்கின்ற பண்பில் சங்க காலத் தமிழர்கள்—தமிழ் மன்னர்கள்—தமிழ்ப்புலவர்கள் சிறந்து விளங்கியதாகக் கூறமுடியாது. தமிழ் இனத்திற்குள் பல்குழுவும், பாழ் செய்யும் உட்பகையும் மலிந்து கிடந்தன. இந்த இழிநிலையை பயன் படுத்திக் கொண்டு பிறமொழியும், பிற இன ஆதிக்கமும் தமிழ் இனத்தின்மேல் கால் கொண்டு ஆதிக்கம் செய்யத் தொடங்கின. தமிழ் இனத்தின் தன் மானத்திற்கு எதிரான பல கருத்துக்களை—பல செயல் முறைகளைத் தமிழர்கள் நச்சி வாழும் அற்ப வாழ்வின் காரணமாக ஏற்றுக் கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்த இழி தகைமையை அவ்வப்பொழுது சில தன் மானம் பேணும் தமிழறிஞர்கள், சமயச் சான்றோர்கள் கடிந்து ஒதுக்கி வந்தாலும் தமிழ் இனத்தைவிட்டு இழிதகைமை முற்றிலும் அகன்றபாடில்லை. தமிழ் மொழியின் தனித்தன்மையைக் காப்பாற்றவும், தமிழ் இனத்தின் ஒருமைப்பாட்டையும், தன் மானத்தையும் காப்பாற்றவும், தமிழர் நாகரிக மரபுகளை பிற இன நாகரிகத் தாக்குதலினின்று காப்பாற்றிப் பேணி வளர்க்கவும் திருவள்ளுவர் முயன்றார் — அப்பர் அடிகள் முயன்றார் — வள்ளல் இராமலிங்க அடிகள் முயன்றார். ஆயினும் அவர்களுடைய முயற்சி அவர்கள் வாழ்ந்த காலத்தில் ஓர் அளவு பயனைத்தந்திருந்தாலும் தொடர்ந்து பயன் தரவில்லை. இருபதாம் நூற்றாண்டில் தமிழ் இனத்தின் உரிமைகளையும் தன் மானத்தையும் காக்கும் தந்தையாக, தலைவராகப் பெரியார் வந்து சேர்ந்தார்.

தந்தை பெரியார் வாழும் இந்தக்காலம் தமிழகத்திற்கு ஒரு பொற்காலமாகும். தமிழக வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தையே தந்தை பெரியார் அவர்கள் தொடங்கி வைத்திருக்கின்றார்கள். பெரியார் வாழும் இந்தக் காலத்தில் வாழும் தமிழ்த்தலைமுறையினர் பேறு பெற்றவர்களாவார்கள். இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளாக "யாவரும் கேளிர்" என்று படித்தும், பாடியும் நமக்குப் பழக்கமே யொழிய நம்மிடையே இருந்த சாதி உணர்ச்சிகள் ஒழிந்த பாடில்லை. ஆனால் தந்தை பெரியார் அவர்களின் அயரா உழைப்பால் தமிழர்களிடையே நிலவிய குறுகிய சாதி உணர்ச்சிகள் மறைந்து தமிழினம் ஓர் இனம் என்ற அறிவும், உணர்ச்சியும் மோலோங்கி வளர்ந்து இருக்கின்றது. அரசியல் கட்சி வேறுபாடுகள், சமய வேறுபாடுகள் ஆகியவைகளைக் கூட இந்த இன உணர்வு வென்று விளங்குகின்றது. தமிழர்கள் இனமான உணர்வோடு பகை பாராட்டாது வாழ

வேண்டும் என்ற புதுநெறி தோன்றி இருக்கின்றது. தமிழ் இனம் என்ற அடிப் படையில் இன ஒருமைப் பாட்டை எப்படிக் கட்டிக்காக்க வேண்டும் என்பதற்கு அமரர் அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முன் உதாரணமாகவே விளங்கினார்கள். வெள் ளம் போல் வாழும் தமிழர் கூட்டம் தந்தை பெரியார் அணியில் ஓர் அணியெனத் திரண்டு நிற்பது உலகிற்கு ஓர் புதுமை. ஒப்பற்ற சாதனை. இந்தச் சாதனையின் சிற்பியாக விளங்கும் தந்தை பெரியாருக்குத் தமிழகம் கடமைப்பட்டிருக்கின்றது. ஏழேழு தலமுறைக்கும் கடமைப்பட்டிருக்கிறது.

உயர்சாதிக்கே கல்வி. அவர்க்குரிய தொழிலே ஓதுதலும் ஓதுவித்தலும் என்ற பழைய பஞ்சாங்கத்தை செல்லாக் காசாக்கி செந்தமிழ் நாட்டவர் அனைவரும் பயில துறையும், முறையும் கண்ட பெரியாரின் பெரும் தொண்டிற்கு ஈடு ஏது! இணை யேது! தமிழன் கொற்றாளாகவும் கூலி ஆளாகவும் வாழவே பிறந்தவன் என்னும் நியதியை மாற்றி தமிழனை எல்லா உயர் பதவிகளிலும் இருக்கச் செய்த தந்தை பெரியாரின் தொண்டுக்கு ஈடு ஏது! இணை யேது! தந்தை பெரியாரின் உயிர் நிலை தங்கி இருப்பது அவர்தம் உடலில் அல்ல. அவர் தம் உடலில் உயிர் தங்கி யிருக்கு மானால் நாள்தோறும் அல்லல்படும் வியாதிகளிலேயே அவர்தம் உயிர்க்குக் கேடு வந்திருக்கும். அவர் தம் வாழ்க்கை-அவர் தம் உயிர் வாழ்க்கை தமிழ் இனத்தின் உயிர்நிலையாக அமைந்து விளங்குகிறது. தமிழ் இனத்தின் நலமே பெரியார் தம் உணவு. தமிழினத்தின் இன்பமே பெரி யார் தம் மூச்சு. தமிழினத்தின் வலிமையே அவர் தம் வலிமை. தமிழினம் மேம் பாடுற்று உயர்ந்து விளங்குவதே பெரி யாருக்குப் பெருமருந்து. தமிழினம் வறுமையொழிந்து வளம் பலபெற்று முகத் தில் மகிழ்ச்சி தேக்கி வாழும் காட்சியே பெரியாருக்குச் சோர்வு அகற்றும் இனிய தென்றல். தமிழ் மகன் இழிசாதிக் காரனாக இரண்டாந்தரக் குடிமகனாக வாழாது உலகத்தில் முதல் தலை மகனாக வாழும் உலகமே பெரியார் அவர்களுக்குச் சொர்க்கம். இங்ஙனம் தமிழ் இனத்தின் வாழ்வே தம் வாழ்வெனக் கருதி முதுமையும் நோக்காது, நலிந்த உடலும் கருதாது நாளெல்லாம் எண்ணி-பேசி-எழுதி-உழைத்து வரும் உத்தமத் தலைவர் தந்தை பெரியார் அவர்கள். அவர்கள் நெறிநின்று வாழ்வதும், தொண்டு செய்வதுமே இந்த நூற்றாண் டின் நாகரிகம்-மரபு. பெரியாரின் பெருந் தொண்டு பேருலகில் நின்று விளங்கிட வகை செய்தல் வேண்டும். இதுவே பெரி யாரின் பிறந்த நாள் பரிசு. இந்தப் பரிசினை வழங்க மனம் படைத்தத் தமிழர் அனை வரும் எழுக!

வாழ்க பெரியார்!

வளர்க அவர்தம் தொண்டு!

★


# "ஸ்டுடியோ பேலஸ்"

பஸ் ஸ்டாண்டு
தருமபுரி.

எங்கள் ஸ்டுடியோவில் சிறந்த முறையில் புகைப்படம் எடுக்கப்படும்.
டெவலப்பிங், பிரிண்டிங், என்லார்ஜிங் ஆகியவைகளும் செய்யப்படும்

உரிமையாளர்,
K. நடராஜகுப்புசாமி.

# நான் அறிந்த அய்யா

உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு எம் முத்துசாமி

தந்தை பெரியார் அவர்கள் தன்மான இயக்கத்தைத் துவக்கியது 1925-ம் ஆண்டில். அதாவது நான் பிறப்பதற்கு சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்னால்! எனக்கு உலகத்தை அறியும் வயது வந்த போது, கல்லடிக்கும் சொல்லடிக்கும் இடையே இயக்கம் துளிர்விட்டு வளர ஆரம்பித்து விட்டது. வளர்ச்சி என்றால் அது சாதாரண வளர்ச்சி அல்ல, வியக்கத் தகுந்த வளர்ச்சி.

பிற்போக்குத் தன்மையை எதிர்த்து வைத்த ஒவ்வொரு அடியிலும் ஆயிரம் ஆயிரம் போராட்டங்கள். சுயமரியாதைத் தொண்டர் ஒருவர் கொள்கை விளக்கம் கூறினால்போதும் எத்தனை எத்தனை கேள்விக் கணைகள் அவரை எதிர்த்துக் கிளம்பும்? தன்மான இயக்கத்தவர் அந்த நாட்களிலே ஒரு கூட்டத்தை சுலபமாக நடத்திவிட முடியுமா? எந்த இடத்தில் இருந்து கல்லெறி கிளம்புமோ, யார் மீது சாணி விழுமோ என்ற நிலையிலும் பெரியார் அவர்கள் தமது கொள்கைகளை ஓய்வு ஒழிவில்லாது பரப்பினார் என்றால் அந்த வல்லமை அவரைத் தவிர வேறு யாருக்கும் கிடையாது என்பதே உண்மையாகும்.

அவர் ஒருவராகத்தான் ஒரு பெரும் புரட்சிக்குப் புறப்பட்டார். ஓயாது உழைத்தார். எதற்கும் அஞ்சாது பணியாற்றி ஒரு சமுதாயத்தை விழிப்பும் எழுச்சியும் கொள்ளச் செய்தார். அதில் மகத்தான வெற்றியும் பெற்றார். அந்த மாபெரும் சாதனை தமிழகத்தில் தவிர இந்திய துணைக் கண்டத்தில் வேறு எங்கும் நடந்தது இல்லை.

'அய்யா' அவர்கள் 1942-ம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை துவக்கிய போது எனக்கு வயது பதின்மூன்று. அவருடைய லட்சோபலட்சம் தொண்டர்களில் நானும் ஒருவனாக சின்னஞ்சிறியவனாக போராட்டத்தில் கலந்து கொண்டேன். மெய்சிலிர்க்க வைக்கும் அந்த போராட்ட நினைவுகள் என்றென்றும் பசுமையானவை. எண்ண எண்ணத் திகட்டாதவை.

உலகில் வேறு எங்கும் காணமுடியாத பல குறைபாடுகள் நமது நாட்டிலே உண்டு. சாதி வேறுபாடுகள், சமயப் பூசல்கள் மூடப் பழக்கங்கள் ஆகிய எத்தனையோ குறைபாடுகள் இங்கு உண்டு. இவை அத்தனையும் மக்களிடத்தில் பல்லாண்டு காலமாக வேரூன்றியவை. அவற்றை மாற்ற வேண்டும் என்று எண்ணக்கூட மக்களில் பலர் ஒப்பவில்லை. ஆனால் சொல்லாலும், செயலாலும் பிற்போக்குத் தன்மை அனைத்தையும் ஓடஓட விரட்டிய பெருமை அய்யா அவர்களுக்கு உண்டு.

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பகுத்தறிவாளர்களில் முதல்வராக புத்தர் அவதரித்தார்.

"எதையும் ஒப்புக்கொள்ளும் முன்பு ஏன்? எதற்காக? என்ற கேள்விகளை எழுப்பு" என்பதே அவர் கூறிய அறிவுரையாகும். அவர் காலத்திலும், அவருக்குப் பின்னர் அசோகப் பேரரசன் காலத்திலும் பகுத்தறிவு இயக்கம் செழித்து வளர்ந்தது. ஆனால் இந்தியத் துணைக் கண்டத்தில் பிற்போக்குத் தன்மை மீண்டும் தலை

தூக்காமல் இல்லை. அத்தன்மையை முதன் முதலில் சாடிய பெருமை தந்தை பெரியார் அவர்களையே சாரும். இங்குதான் தாழ்த்தப்பட்டவர்களும், பிற்போக்கடைந்த இனத்தைச் சேர்ந்தவர்களும் தங்கள் வாழ்வில் மறு மலர்ச்சி பெற்றார்கள். ஒரு குலத்துக்கு ஒரு நீதி என்ற நிலைமை மாறியது.

சீர்திருத்தம் என்பது மக்களுக்கு இருக்கவேண்டிய நியாயமான உணர்ச்சியின் விளைவாகும். காலத்தின் வளர்ச்சி அறிவின் முதிர்ச்சி ஆகியவற்றின் விளைவே சீர்திருத்தம். இந்த விளைவை பகுத்தறிவுக் கண்ணோட்டத்துடன் புதிய கோணத்தில் கண்டவர் பெரியார் அவர்கள். அவரது கொள்கைகளையே வகுப்பு வாதம் என்று கேலி செய்து அதை அழிக்க முயன்றவர்கள் உண்டு. ஆனால், நியாயமான உணர்ச்சியின் விளைவுகள் அழிக்க முடியாதவை என்பது சரித்திரம் கண்ட உண்மை. ஆகவேதான் பெரியாரவர்களின் கொள்கைகள் இன்று மக்கள் மனதிலே நீங்காத இடம்பெற்று விட்டன. அவர் வழிவந்தோர் அரசோச்சும் நிலை பெற்றுள்ளார்கள்.

தமிழ் நாட்டில் இன்று அவர் ஏற்படுத்திய புரட்சி, இந்தியாவில் வேறு எந்தப் பகுதியிலும் ஏற்படாத புரட்சி. சாதி சமயப் பூசல்களை எதிர்த்து பொதுக்கூட்டம் போட்டு பேசப்படுகிறது என்பதும் அதைக் கேட்க லட்சோபலட்சம் மக்கள் கூடுகிறார்கள் என்பதும் மற்ற மாநிலத்தவருக்கு மிக அதிசயமான செய்தியாகும்.

மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்பட்ட வகுப்பினரும் தலைநிமிர்ந்து நடக்கிறார்கள். சாதி வேற்றுமையும் சமயப் பூசல்களும் குறைந்திருக்கின்றன. மூடப் பழக்க வழக்கங்களும், குருட்டு நம்பிக்கைகளும் ஒழிந்து வருகின்றன. தமிழனென்ற வளர்ச்சியும், மொழியுணர்ச்சியும்மக்களிடம் பெருகி வருகின்றன. இவை அத்தனைக்கும் காரணமாக இருந்தவர் பெரியாரவர்களேயாகும்.

அத்தகைய பெருமைக்கு உரிய அய்யா அவர்கள் 91-ம் வயதை எட்டி பிடித்திருக்கிறார்கள். என்பது மனத்திற்கு மகிழ்ச்சியையும், பெருமிதத்தையும் தருகிறது.

வெள்ளித் தாடியும் விரிந்த முகமும் பரந்த நெற்றியும், அறிவொளி வீசும் கண்களும் கொண்டு யாருக்கும் அஞ்சா சிங்கமென வாழும் 'அய்யா' அவர்கள் நீண்ட ஆயுளைப் பெற்று தமிழக மக்களுக்கு மேன்மேலும் சேவை செய்வாராக.


தந்தை பெரியார் வாழ்க !

# மணீஸ் கபே

**காப்பி, டிபன் & சாப்பாடு ஓட்டல்**

**24, பிஷப் ரோடு, புத்தூர், திருச்சி-17.**

அறுசுவை உணவிற்கும், நல்ல சிற்றுண்டிக்கும்
சிறந்த இடம்

டீ பார்டிகள், விருந்துகள் முதலியவை குறித்த நேரத்தில்
ஏற்பாடு செய்வோம்.

எம். பழனிச்சாமி,
உரிமையாளர், மணீஸ் கபே.

# அந்த நாட்களில் அய்யாவுடன்....

க. ராஜாராம் எம்.பி.

திராவிடத் தந்தை பெரியார் அவர்களின் 91வது பிறந்ததின விழாவினை இன்று நாடு களிப்போடு கொண்டாடிக் கொண்டிருக்கிறது. நிறைவாழ்வு நடத்தி வரும் அவருக்கு வாழ்த்துத் தெரிவிக்காத தமிழர்களே இருக்கமாட்டார்கள். அவரை அறியாத கிராமம் நமது நாட்டில் இருக்க முடியாது.

அறியாமையில் மூழ்கிக் கிடந்த தமிழக மக்களைத் தட்டி எழுப்பிய பெருமை அவருக்குத்தான் சாரும். தமிழகம் எவ்வளவு விழிப்போடு இருக்கிறது, எவ்வளவு தெளிவோடு இருக்கிறது என்பதை, இங்கேயே சுற்றிப் பார்த்தால் நமக்குப் புரியாது.

வடக்கே போகவேண்டும். அதுவும் ரயில் மூலம் போகக்கூடாது. தரை மார்க்கமாக காரில் போகவேண்டும். பல பகுதிகளில் வாழும் மக்களது பழக்க வழக்கங்களைக் கவனித்துக் கொண்டே போக வேண்டும். அவர்களிடம் அரசியல் பற்றிப் பேசிப் பார்க்க வேண்டும். சமுதாய இயலைப் பற்றி விசாரிக்க வேண்டும். நாட்டு நடப்புகளில் அவர்களது எண்ணம் எவ்வளவு தூரம் செல்கிறது என்பதைக் கண்டறிய வேண்டும். இதையெல்லாம் ஆராய்ந்து கொண்டே நான் பலமுறை இந்தியந் துணைக் கண்டத்தைக் காரில் சுற்றியுள்ளேன். அப்படிச் சுற்றும்போது தான் நமக்கு, நமது நாட்டில் பெரியார் அவர்கள் எப்படிப்பட்ட அருந்தொண்டினைச் செய்துள்ளார் என்பது புலப்படும்.

வட நாட்டில் சாதியின் பேரால் சச்சரவுகள் மூண்ட நேரம். அறிஞர் அண்ணா அவர்கள் ராஜ்ய சபையிலே உறுப்பினராக இருந்தார்கள். அப்பொழுது, "இங்கெல்லாம் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்ய பெரியார் வந்தால்தான், இந்தப் பகுதியே உருப்படும்", என்றார் அவர். அதே நேரத்தில், நான் காங்கிரசின் தலைவரான திரு. காமராஜரையும் சந்தித்தேன். நடந்த சம்பவங்களைப் பற்றிப் பேசிய அவர், 'இந்தப் பகுதியில் பெரியாரைப்போல் ஒருவரில்லையே' என்று குறைபட்டுக் கொண்டார்கள்.

அரசியலில் இருவேறு துருவங்களான இரண்டு தலைவர்கள், வடநாட்டில் மண்டிக் கிடக்கும் சாதி, சமயப் பூசல்களைக் காணும்போது, ஒருமித்த எண்ணத்தை வெளிவிடுகிறார்களே, அதுவும் பெரியார் இங்கு பிறக்கவில்லையே, இவர்களது அறியாமையையும் சேர்த்துக், களைய என்று எண்ணுகிறார்களே என எண்ணி வியந்தேன். இது நான் அறிந்த உண்மை.

அவருக்குப் பிறந்தநாள் விழா எனில் உள்ளம் மகிழ்ச்சியில் துள்ளாதோ!

பொது வாழ்க்கைத் துறைக்கு வருகிற எவரும் பெரியார் பாசறையில் சிறிது காலம் தங்கி வந்தால்தான் நல்லது. எளிமை, தன்னடக்கம், எவரிடத்தும் மரியாதை செலுத்தும் பாங்கு, வார்த்தைகளை அளந்து பேசும் தன்மை, சிறந்த தொண்டுள்ளம், சிக்கனம், நாணயம், முதலிய வற்றைக் கற்றுக் கொள்ள இயலும்.

மொழிவாரி மாநிலங்களை உருவாக்கு வதற்கு சர்தார், K. M. பணிக்கரைத் தலை வராகக் கொண்ட குழு சென்னை வந்தது. அப்பொழுது சென்னை மாநிலம், கேரளம், ஆந்திரம், தமிழகம் மூன்றும் இணைந்த பகுதியாக இருந்தது.

மொழிவாரி மாநிலத்தைப் பிரிக்கின்ற குழுவினரை, எல்லா கட்சியின் தலைவர் களும் சென்று சந்தித்து உரையாடினார் கள். ஒரு நாள், (எனக்குத்தேதி தற்போது நினைவில் இல்லை) பெரியார் அவர்களை, சர்தார் K. M. பணிக்கர் அவர்கள் நேரில் வந்து சந்திக்க விரும்புகிறார், என்று தொலைபேசி மூலம் சேதி வந்தது. தொலை பேசியில் நான்தான் பேசினேன். அய்யா அவர்களிடம் இதைத் தெரிவித்ததும், மாலையிலேயே வரச்சொல் என்றார்கள்.

மீரான் சாயபுத்தெரு வீடோ, ஒரே அலங்கோலமாக இருந்தது. வருகிறவரோ, மொழிவாரி மாநிலங்களைப் பிரிக்கும் முக்கிய குழுத்தலைவர். மற்ற கட்சிக்காரர் கள், அவர்களைப் போய்ச்சந்திக்கிறார்கள். ஆனால், அதன் தலைவரோ, இவரை வந்து சந்திக்க ஓடி வருகிறார். அய்யா அவர்களோ, வழக்கப்படி அவரையும் தன் வீட்டிற்கே வரச்சொல்லி விட்டாரே என்று நாங்கள் வேதனைப்பட்டோம்.

திருமதி. மணியம்மையார் உடனடியாக மாலை டிபனைத் தயாரிக்கத் தொடங்கு கிறார்கள். மாலை டிபன் என்றால் வருகிற வருக்கு மட்டுமா, எல்லோருக்கும்தானே! அதனால் அவர்களுக்கு அந்த வேலைப் பளு சேர்ந்தது. நாங்கள் நண்பர்கள் பலர் சேர்ந்தோம். வீட்டை ஒளிமயமாக்க வேண்டும் என்று திட்டமிட்டோம். அலங்கோலமாகக் கிடந்த சேர்கள் ஒழுங் காக்கப்பட்டன. நெடுங்காலமாகச் சார்ந் திருந்த ஒட்டடைகள் நீக்கப்பட்டன. தரைகளில் விரிப்புகள் போடப்பட்டன. ஊஞ்சலுக்கு தலையணைகள் அழகூட்டின.

அய்யா அவர்களோ தனது, எழுத்துப் பணியையும், அவ்வப்போது வருகிற நண்பர்களையும், பார்த்துக் கொண்டே இருந்தார்கள். வேலையெல்லாம் முடிந்தது.

சர்தார் K. M. பணிக்கரை, வரவேற் பதுவும், அவர் வந்ததும் அய்யாவுக்கு அறிவிப்பதுவும், அவர் உரையாடும்போது உடனிருந்து உதவுவதுமான வேலைகள், எனக்களிக்கப்பட்டது. சர்தார் அவர்கள் வந்ததும், நான் அவரை வரவேற்றேன். திரு. பணிக்கர் அவர்கள் காரை விட்டிறங் கியதும், பெரியார் எங்கிருக்கிறார், என்றார். அவர் மேலே இருக்கிறார். தாங்கள் வந்ததும் தங்களை வரவேற்று, அழைத்துச் செல்ல கீழே வர இருக்கிறார், என்றேன்.

சர்தார் வந்ததை மேலே அய்யாவிடம் தெரிவிக்கச் சொன்னேன். இதற்குள் சர்தார் மாடிப்படி நோக்கி ஓடினார். அய்யா மாடியிலிருந்து கீழே இறங்கத் தொடங் கினார். அய்யாவை இறங்க வேண்டாம் என்று சத்தம் போட்டுக் கொண்டே, சர்தார் மேலே ஓடினார். “மன்னிக்கவேண் டும் தாங்கள் வந்தவுடனே எனக்குத் தெரிவிக்கச் சொன்னேன். கீழே வந்து வரவேற்க இவர்கள் தவறிழைத்து விட்டார் கள்” என்று கூறிக் கொண்டே அய்யா அவர்கள் இறங்கினார்கள். ‘கூடாது, கூடாது’, என்று ஆங்கிலத்திலே கூறிய வண்ணம் ஓடி, அய்யாவை அணைத்துக் கொண்டே மேலே போனார் சர்தார். நான்கு நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அய்யா அவர்கள், திருமதி. மணியம்மை யாரையும், என்னையும அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.

மொழிவாரி மாநிலங்களைப் பிரிப்பது பற்றி உரையாடல் சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்றது. மாநிலப் பிரிவினைப் பிரச்சினை தீர்ந்த பிறகு, கழகப் பிரச்சினை கள் பற்றிப் பேச்சு எழுந்தது. “கேரள மும், தமிழ்நாடும் மட்டுமாவது எதிர்காலத்

தில் பிரிந்துதான் தீரும், என்று சர்தார் அவர்கள் சரித்திர மேற்கோள்களோடு ஆதாரங்களை எடுத்துக் கூறி, கழகத்தின் எண்ணம் சரியானது,'' என்றார்கள். சர்தார் K. M. பணிக்கர் அவர்கள் இன்று நம்மிடையே இல்லை. பேச்சு வார்த்தைகள் முடிந்த பின்னர், சர்தார் புறப்பட்டுப் போனார்கள். எனக்கு இவர்கள் இருவரும் உரையாடிக் கொண்டபோது, சர்தார் பணிக்கர் காட்டிய மரியாதையை கவனித்து வந்தேன். பின்னர் அய்யா அவர்களிடம் இது பற்றிக் கேட்டேன்.

இவ்வளவு மரியாதையை சர்தார் உங்களிடம் வைத்திருக்கிறாரே, என்ன காரணம் என்றேன்? அய்யா அவர்கள் சிரித்தார்கள்.

காங்கிரஸ் கட்சியில் அய்யா அவர்கள் தலைவராக இருந்தபோது, ஆந்திர கேசரி திரு. பிரகாசம் அவர்கள் ஒரு ஆங்கில நாளிதழை நடத்தி வந்தார்கள். ஆந்திர கேசரிக்கு, ஆசிரியர், பொறுப்புத்தான் அதிலே இருந்தது. பொருளாதார நிர்வாகம் முழுவதும் அய்யாவுடையது. அப்போது, ஒரு கேரளத்து இளைஞர், தான்தேசிய இயக்கத்தில் தொண்டாற்ற வேண்டி, ஏதாவது வேலைகள் இடும்படி அய்யாவிடம் வேண்டினார். வந்த இளைஞனது, கல்வி, ஆங்கில அறிவு, இவற்றை அறிந்த அய்யா அவர்கள், அவரை திரு. பிரகாசத்திற்குக் கீழே உதவி ஆசிரியராக அமர்த்தினார். அவர்தான் சர்தார் பணிக்கர் என்றார் அய்யா.

ஏனய்யா, தங்களால் ஒரு காலத்தில் வேலைபெற்று, தங்கள் நிர்வாகத்தின்கீழ் பணியாற்றியவர் தங்களைக் காணவருவது அறியாமல், இவ்வளவு தூரம் இத்துணைப் பேர் வேலைகள் செய்தார்களே, நீங்களும் ஒன்றும் சொல்லவில்லையே, என்றேன்.

"பணிக்கர் வருகையின் சாக்கிலாவது, வீடு சுத்தமாயிற்றே'', என்றார் அய்யா. அனைவரும் அய்யாவின் நகைச்சுவையினைக் கேட்டு மகிழ்ந்தோம்.

இந்த நிகழ்ச்சி நடந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. இதை ஏன் எழுதுகிறேன் என்றால், அய்யாவின் நகைச்சுவையை வெளிப்படுத்துவதற்கு மட்டுமல்ல. தன்னைக் காண வருகிறவர் அவர் யாராக இருந்தாலும், எப்படிப்பட்ட மரியாதையை அவர்கள் காண்பிக்கிறார்கள் என்பதையும், வருகிறவர்கள் அவரது அன்பைக் கண்டு எப்படி கட்டுண்டு போய் விடுகிறார்கள் என்பதையும் காட்டத்தான். இந்த உள்ளம் எல்லோருக்கும் ஏற்படுவது என்பதும், வளர்த்துக் கொள்வதும் சிரமமானதல்லவா!

இதே போல் அவரது வாழ்நாளில் பல சம்பவங்களைக் காண்பிக்க முடியும். பர்மா நாட்டில் நடைபெற்ற அகில உலக புத்தமத மாநாட்டில், தாழ்த்தப் பட்டோர் தலைவர் டாக்டர் திரு. அம்பேத்காரைச் சந்தித்து பேசியபோதும், அய்யாவின் கருத்துக்கள் பலவற்றை டாக்டர் ஒப்புக் கொண்டார்கள். சமுதாய சீர்திருத்தத்தில், தமிழ் நாட்டில் அய்யா அவர்கள் செய்து வந்த புரட்சிகளை டாக்டர் அம்பேத்கார் அனைவரிடமும் எடுத்துச் சொல்லி மகிழ்ந்தார்கள். அப்போதே திரு. அம்பேத்காரை விட வயதில் பெரியார் அவர்கள் மூத்தவர்கள். அதை டாக்டர் அவர்கள் சுட்டிக்காட்டி, தன்னைவிட அய்யா அவர்கள் திடமாக இருப்பதாகத் தெரிவித்து, அய்யாவைத் துணைக்குப் பிடித்துக்கொண்டே நடந்தார்கள். இந்தக் காட்சிகள் என் முன்னால் இன்னமும் நிழலாடிக் கொண்டே உள்ளது. அய்யா அவர்கள் மேலும் பல ஆண்டுகள் வாழ்ந்து தமிழகத்துப் பெருமையை, புகழை, மேலும், மேலும், உயர்த்த வேண்டும் என்பது என் ஆசை.

## தந்தை பெரியார் வாழ்க



தந்தை பெரியார் அவர்கள் தலைமையில் 21-6-69ல் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொண்ட எங்களின் உளமார்ந்த வாழ்த்துக்கள்

**சுப்பையா**
(முத்துசாமி அவர்களின் மகன்)

**நாகமணி**
(து. மா. பெரியசாமி அவர்களின் மகள்)



தபால் பெட்டி எண் 3 தோற்றம்: 1910 தொலைபேசி எண்: 214

# ஸ்ரீ கமலாம்பிகா கூட்டுறவு அர்பன் பாங்கு லிட்.

**ரெ. 378**

**திருவாரூர், தஞ்சை மாவட்டம்.**

தலைவர் : **திரு. எம். ராமதாஸ் முதலியார், பி.ஏ., பி.எல்.**

(தமிழ் நாட்டில் சிறந்த கூட்டுறவு அர்பன் பாங்கெனப் பாராட்டுதல் தெரிவித்து இப்பாங்குக்குத் தமிழ்நாடு அரசு கேடயம் வழங்கியுள்ளது)

7 சதவிகிதம் வரை பிக்ஸட் டிபாசிட்டுக்களுக்கு வட்டி வழங்கப்படுகிறது.

ரூ. 10, 000-க்கும், அதற்கு மேற்பட்ட தொகைகளுக்கும்
டெப்பாசிட்டர்கள் விரும்பினால் மாதாந்திர வட்டி வழங்கப்படுகிறது.

30-6-1969 உடன் முடிந்த வருஷ நிகர லாபம் ரூ. 1,25,000-க்கு மேல்.

(விவரங்களுக்கு காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும்)

# தனி வரலாறு படைத்த தலைவர்

## வேளாண்மைத் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து

தமிழ் இனம் எத்தனையோ தலைவர்களைப் பெற்றெடுத்திருக்கிறது. எத்தனையோ அறிவாளிகளை உலகுக்கு வழங்கியிருக்கிறது. மாமன்னர்கள், மாவீரர்கள், சீர்திருத்த வாதிகள், ஞானிகள் பலர் தோன்றியிருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேருடைய வழி முறைகளிலிருந்தும் மாறுபட்டு, சமுதாய முன்னேற்றத்திற்கு ஒரு புது வழியை, மாறுபட்ட மார்க்கத்தைக் காட்டி, மக்கள் அதனைப் பின்பற்றுமாறு செய்து, பயனையும் காட்டி வருபவர் தந்தை பெரியார்.

இந்த நாட்டின் வரலாறு தோன்றியதிலிருந்து, வரலாற்றில் இடம் பெற்ற ஞானிகள், சீர்திருத்தவாதிகள், அனைவருடைய வாழ்க்கையையும் தொகுத்துப் பார்த்தால், சமுதாயத்தைச் சீர்திருத்துவதிலே, பெரியார் அவர்களைப்போல் எதிர்நீச்சல் போட்டவர்களும் இல்லை; அவர் அளவுக்கு வெற்றி கண்டவர்களும் இல்லை என்று துணிந்து கூறலாம்.

பொருளாதார நிலையை முன்வைத்து, பணக்காரன்-ஏழை என்ற வேறுபாடு; பிறப்பை வைத்து உயர் சாதி-தாழ்ந்த சாதி என்று பாகுபடுத்தும் கொடுமை; எது அறிவு, எது மூடநம்பிக்கை என்று பாகுபடுத்தத் தெரியாத அறியாமை; இவைகளினால் விளைந்த ரணங்களை ஆற்றுவதை மட்டும் பெரியார் தம் பணியாகக் கொள்ளவில்லை. புரையோடிக் கிடக்கும் புண்ணுக்கு மேல் மருந்து போடுவது அவர் கொள்கை அல்ல. நோயின் மூல காரணத்தை அறிந்து அதைக் களையும் தலைசிறந்த சமுதாய மருத்துவராகச் செயல்படுவதே அவருடைய பணியாக இருந்து வருகிறது.

பெரியாருடைய வழி அறிவு வழி. அறிவின் துணை கொண்டு மக்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் காண வேண்டும் என்பதுதான் அவருடைய கொள்கை. அறிவின் வழியில் இயங்காதது தான் மக்களின் வறுமைக்குக் காரணம் என்பது அவர் கோட்பாடு.

பெரியாரவர்கள் படித்து, பல நூல் கற்று, உயர்ந்தவரல்ல. சுய அறிவு மூலமாக, சுய ஆராய்ச்சி மூலமாக, சுயமான ஆற்றல் காரணமாக உயர்ந்த பிறவித் தலைவர் ஆவர். ஒரு குலத்துக்கு ஒரு நீதி என்ற முறை கூடாது; மக்களை மக்கள் தாழ்த்தி வைப்பது கூடாது; பெண்களைத் தாழ்வாக மதிப்பது கூடாது; அளவுக்கு அதிகமான குழந்தைகளைப் பெறுவது கூடாது என்கின்ற கருத்துக்களை அவர் 50 ஆண்டுகளுக்கும் மேலாகப் பரப்பி வருகின்றார். இந்தக் கருத்துக்களின் மூல

கர்த்தா அவர். சீர்திருத்தக் கருத்துக்களின் நாற்றங்கால் அவர்.

அரசியலிலும் சமுதாயத் துறையிலும் மற்றவர்கள் சொல்லத் தயங்கிய, சொல்ல இயலாத, கருத்துக்களை துணிகரமாகவும் இடைவிடாமலும் சொல்லி வருபவர் பெரியாரே ஆவார். அவருக்கு கட்சியைக் காட்டிலும் கொள்கை பெரிது. அநீதியை ஒழிக்கின்ற நீதி பெரிது. தமிழகத்தில் ராஜாஜி இரண்டாம் முறை முதலமைச்சராக ஆனபோது, அவரது செயலில் நன்மை தெரிந்தபோது, அதைத் தயங்காமல் ஆதரித்தார். காமராஜர் ஆட்சிக் காலத்தில் அவர் மேற்கொண்ட பணிகளில் ஏழை மக்கள் முன்னேற்றம் கருதி அவர் செய்த பணிகளை ஆதரித்தார். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சி ஏற்பட்ட பின், இது முழுக்க முழுக்க சீர் திருத்தவாதிகளின் ஆட்சி, பகுத்தறிவு வாதிகளின் ஆட்சி என்று கூறி பேராதரவு கொடுத்தார். தொடர்ந்து கலைஞர் கருணாநிதி அவர்களின் ஆட்சியின் நற் பணிக்குக்கெல்லாம் முழு ஆதரவு அளித்து வருகிறார். ஒரு ஆட்சியின் பணிகளை சீர் தூக்கிப் பார்க்கும்போது, கட்சி முத்திரையைக் கவனிப்பது அவருக்குப் பழக்கமில்லாத சங்கதி. எது நன்மை. எது தீமை என்று உறைத்துப்பார்க்கும் உறை கல்லை அவர் தமக்குச் சொந்தமாக வைத்துக் கொண்டிருக்கிறார். எதைஎடைப்போடவும் அவருக்கு சொந்தத் தராசு இருக்கிறது.

பெரியாருடைய வாழ்க்கை போற்றத் தக்க வாழ்க்கை. பலவிதங்களில் எடுத்துக் காட்டான வாழ்க்கை. செலவுகளைக் குறைத்து, ஒவ்வொரு காசாகச் சேர்ப்பார். மிகுந்த ஆசையோடு பொருள் திரட்டுவர். கல்வி வளர்ச்சி என்று வரும்போது லட்சக் கணக்கில் பணம் கொடுக்கத் தயங்க மாட்டார்.

கல்லடி, சொல்லடி, வசை, அரசியல் கட்சியாளரின் எதிர்ப்பு, சமய வாதிகள் எதிர்ப்பு, பத்திரிகைகளின் எதிர்ப்பு, அனைத்தையும் சமாளித்து, எல்லாவற்றையும் முறித்துக்கொண்டு, லட்சிய வீரராக, தனி வரலாறு படைத்து நாயகனாக, பல் வேறு துறையினருக்கும் வழிகாட்டியாக நிமிர்ந்து நிற்கிறார் பெரியார். 90 வது வயது முடிந்து 91 வது ஆண்டு தொடக்கத்திலும் முதுமைச் சின்னம், மூப்பின் தளர்ச்சி அனைத்தையும் தகர்த்துக் கொண்டு, இன்னும் ஓடி ஓடி உழைத்தபடி இருக்கிறார் தமிழர் தலைவர். அவருடைய ஆற்றல், குன்றாத ஆற்றல்.

தமது பொதுப்பணியோடு இரண்டறக் கலந்தவர் பெரியார். அவர் தமது பணியிலிருந்து சக்தியைப் பெறுகின்றார். சுயமாக சக்தியை உற்பத்தி செய்து கொள்ளும் ஜெனரேட்டர்போல, அவருக்கு சக்தி முழுவதும் அவர் பணியிலிருந்தே கிடைக்கிறது. அவருடைய சிந்தனையிலும் சக்திலும் தேய்மானம் கிடையாது; வளர்ச்சி தான் உண்டு.

பெரியாரவர்கள் தமிழ் மக்களின் மிகச் சிறந்த செல்வம். தமிழர்களுக்கு அவர் ஒரு சக்தி, அழியாத அறங்களை மக்கள் மனதில் பதியும்படி சொன்னதில் புத்தர், கன்பூசியஸ் முதலிய மகான்களுடன் வைத்து எண்ணத் தக்கவர். தமிழ் மக்கள் அவர் பெருமையை உணரவேண்டும். அவருடைய கருத்துக்களைப் புரிந்துகொண்டு பின்பற்ற வேண்டும்.

தமிழ் இனம் தழைத்து வளர, பெரியார் இன்னும் பல்லாண்டு வாழ்வாராக! அவர் கொள்கைகள் நிலையூன்றி வளருவதாக.


கைத்தறித் துண்டுகளில் சிறந்தது!

**இடைப்பாடி சொஸைட்டி கைத்தறித் துண்டுகளே!**

எங்கள் சங்கத் துண்டுகள் எல்லா கோ - ஆப் - டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும், கைத்தறி மாளிகையிலும் கிடைக்கும்.

**S. 921, இடைப்பாடி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம். (வரையறுக்கப்பட்டது.)**

இடைப்பாடி அஞ்சல் — சேலம் மாவட்டம்,

தலைவர்: திரு. R. கிருஷ்ணகவுண்டர், உபதலைவர்: திரு. M. நாராயணன்

டைரக்டர்கள்: N. சுப்பிரமணி, K. நாராயணன், M. வேலு, நைனாக்கவுண்டர், T. குமரன்

# புரட்சித் தலைவர் பெரியார்

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்

## திரு. நெ. து. சுந்தரவடிவேலு

'பெரியார்' என்று பெருமிதத்தோடும் கனிவோடும் அழைக்கப்படுபவர், பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களே.

செயற்கரிய செய்பவர் பெரியார். தமிழர் தம் அன்பையும் பெருமதிப்பையும் பெற்று விளங்கும் ஈ. வெ. ரா. அவர்கள் செயற்கரிய புரட்சிகளை செய்தவர்; செய்து கொண்டிருப்பவர்.

மக்கள் மனதிற்குகேற்ப, அவர்கள் போகும் போக்கிற்கேற்ப, நடந்தும், பேசியும், எழுதியும் பெயர் பெறுபவர்கள் உண்டு. பெரியார் ஈ. வெ. ரா., இதற்கு நேர்மாறானவர். பொது மக்கள் எதையெல்லாம் புனிதமானது என்று கருதிவந்தார்களோ, அதையெல்லாம் நடுத் தெருவில் கொண்டு வந்து நிறுத்திக் கண்டித்து வருகிறார். அய்ம்பது ஆண்டு காலமாக அவரால் கண்டிக்கப் படாத நம்பிக்கை இல்லை; உடைக்கப்படாத பழங்கொள்கை இல்லை அவரது கண்டனக் கணைக்கு எப்போதாவது ஒருமுறை சிக்காத பெரிய மனிதர் இல்லை.



அய்யாவும் துணைவேந்தரும்

பெரியார் அவர்களது, கண்டனக்குரல் அவர் இருக்குமிட ந்தேடிச் சென்ற சிலருக்கு மட்டும் காதோடு காதாக வீழ்ந்ததல்ல. தமிழ் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் பட்டி தொட்டி யெல்லாம், சென்று, சென்று, கொள்கை முழக்கம் செய்து வருகிறார் பெரியார். இந்தியாவின் பிறமாநிலங்களும் அவரது கொள்கை முழக்கத்தைக் கேட்கும் பேறு பெற்றன. கடல் கடந்து சென்றும் பகுத்தறிவு ஒளி பரப்பிவிட்டுத் திரும்பியவர், தந்தை பெரியார்.

### உலகப்புதுமை

தமிழ் மக்கள் கட்டி அணைத் துக்கொண்டுள்ள கருத்துகள் அத்தனையையும் வழி வழி பெற்றுள்ள நம்பிக்கைகள்

அத்தனையையும் பிய்த்து எறியும் பெரியார் அவர்களை, தமிழ்மக்கள், தங்கள் தலைவர்-ஒரே தலைவர்-என்று போற்றிப் புகழ்ந்து கொண்டாடக் காண்கிறோம். இது உலகப் புதுமைகளில் ஒன்று. இதற்குக் காரணம் என்ன ?

பெரியாரின் ஒரே குறிக்கோள்-ஒரே இலட்சியம்-மனிதன் மனிதனாக வாழ வேண்டும். உரிமையோடு வாழவேண்டும். தன்மானத்தோடு வாழவேண்டும். சமத்துவத்தோடு வாழவேண்டும். கையேந்திப் பிழைக்காதிருக்கவேண்டும். கவலையற்று உலகத்தோடு ஒட்ட வாழவேண்டும். காலத்தோடு ஒட்ட வாழவேண்டும். இந்த இலட்சியம் கைகூட பெரியார் பட்டபாடு கணக்கிலடங்காது. ஏற்ற எதிர்ப்புகள் ஏட்டிலடங்கா. தூற்றல் மழையோ இடையறாது தொடர்வன! பெற்ற சிறைவாசமோ பலமுறை!!

## முன்பு எபபடி இருந்தோம் ?

தந்தை பெரியார் பொதுவாழ்க்கையில் காலெடுத்து வைத்தபோது, நாம் எப்படியிருந்தோம்? பெரியவர்கள் மறந்திருப்பார்கள். இளைஞர்களுக்கோ தெரிவிக்க மறந்தோம்.

அன்று ஆளும் உரிமையும் தகுதியும் ஆங்கிலேயருக்கு. இதையே நாட்டு மக்கள் நம்பினர். தன்னாட்சி, கனவாகப் பிதற்றலாகத் தோன்றியது. அச்சூழ்நிலையில், திருவாளர் ஈ. வெ. இராமசாமி, தேசிய விடுதலை இயக்கத்தில் சேர்ந்தார். பெயர் கொடுத்துவிட்டு, பெரும் நிகழ்ச்சிகளில் மட்டும் தலைகாட்டி விட்டு, பெருமையினை தட்டிக்கொண்டு போகும் தலைவர் இனத்தைச் சேர்ந்தவரல்லர், அவர். எதில் ஈடுபட்டாலும் முழுக்க, முழுக்க ஈடுபடும் இயல்பினர் அவர்.

எனவே, ஈ. வெ. ரா. தமிழ் மக்களிடையே, விடுதலை வேட்கையை வளர்ப்பதில் முழுதும் முனைந்தார். பெரியார், இராஜாஜி, திரு. வி. க. ஆகியோர்க்கே, தமிழ்நாட்டில் இந்திய தன்னாட்சி உரிமை உணர்ச்சியை ஊட்டியதற்கு, முதற்பாக்கு வெற்றிலை உரியனவாம்.

இந்திய தேசிய விடுதலை இயக்கத்திற்குத் துணையாக, சில திட்டங்கள் உருப்பெற்றன. மதுவிலக்கும், கதர் அணிதலும் அவற்றில் இரண்டு. கள்ளுக்கடை மறியலில் அவர் குடும்பமே ஈடுபட்டது. மதுவிலக்கினை ஆதரித்து ஊர் ஊராகப் பிரசாரம் செய்த ஈ. வெ. ரா. கள்ளிறக்கக் குத்தகைக்குவிடப்பட்டிருந்த தம் தென்னந் தோப்பிலுள்ள மரங்களை வெட்டி வீழ்த்தி, குத்தகைப் பணத்தை இழந்தார். தமிழ் நாட்டில் கதரைப் பரப்புவதில் ஈ. வெ. ரா செய்த தொண்டிற்கு இணை எதுவுமில்லை. அக்காலத்தில் அவர் ஊர் ஊராகச் சென்று கதர் துணியை எடுத்துக்கொண்டு சென்று, விற்று, பிரசாரம் செய்து, கதரைப் பரப்பினார். இத்தொண்டிலும் பெரியாருக்கே முதல் இடம்.

## சாதி நோய் முற்றிய நிலை

தீண்டாமை, வெறிநோய், மக்களை மாக்களாக்கும் நோய் மாக்களிலும் கொடியவர்களாக்கும் நோய். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகத் தொடரும் நோய். எதை எதையோ, யார் யாரையோக் காட்டி, மிரட்டி, ஆட்சிபுரிந்து வந்த நோய். கோடானுகோடி மக்களை நாயினும் கடையராக நடத்தும் கல்நெஞ்ச நோய்; வன்னெஞ்ச நோய். பல்லி செல்லுமிடத்திலே, நாய் நடமாடும் இடத்திலே, பாம்பு நகரும் இடத்திலே, பன்றி புரளும் இடத்திலேகூட மனிதன், அறிவுள்ள மனிதன, மானமுள்ள மனிதன், உழைத்து உழைத்து ஊரைப் பேணும் மனிதன், அண்டக்கூடாது என்னும் கொடு நோய். அதன் கோரப் பிடியில் சிக்கி, தப்பும் வகையறியாது, விதி மேல் பழியைப் போட்டுவிட்டு முடங்கிக் கொண்டிருந்தது இந்தியச் சமுதாயம். 'ஒன்றே குலமும்' என்று எங்கோ, எப்போதோ மட்டும் 'மந்திரித்து'விட்டு, உறங்கிக் கிடந்தது தமிழ் இனமும். இக்கொடுமையின் அறிகுறி-தீண்டத்தகாதவர் என்பவர், தெருக்களிலேகூட சிலவற்றில் நடக்கக் கூடாது என்பதாகும்.

இக்கொடுமையினை எதிர்த்து, அன்றைய திருவாங்கூர் இராச்சியத்தைச் சேர்ந்த, வைக்கம், என்ற ஊரில் போர்க் கொடி உயர்த்தப்பட்டது. ஈரோட்டு இராமசாமி, வைக்கத்திற்கு விரைந்தார். சத்தியாக்கிரகம் செய்தார். சிறைக்குச் சென்றார். 'வைக்கம் வீரராக' வெளிவந்தார். அன்று அவர் தொடங்கிய புரட்சி, தொடர்ந்தது. சாதிவெறிக்கோட்டைகள் தகர்ந்தன. முப்பத்தோரு ஆண்டுகளுக்கு முன், ஆதி திராவிடத் தோழர்களுக்கும்

ஆலயப் பிரவேச உரிமை கிடைத்தது. பெரியாரின் 'காதலர்' இராஜாஜியின் நன்கொடை இது. இந்நன்கொடைக்கு, நாட்டையும் மக்களையும் பக்குவப்படுத்தி விட்ட பெருமையில் பெரும் பங்கு, பெரியாருக்கும் அவர் தோற்றுவித்து வளர்த்த சுயமரியாதை இயக்கத்திற்கும் உரியதாம்.

### அக்கால நிலை

அக்காலத்தில் தமிழ் நாட்டில் பல ஊர்களில், தாழ்த்தப்பட்ட சாதியினர் என்று அழைக்கப்பட்டவர்கள், குடை பிடித்துக் கொண்டு செல்ல முடியாது. கடும் கோடையில்கூட காலணி அணிந்து நடக்க முடியாது. இவை கொடுமை. நின்றதா இவற்றோடு? கொடுமைவெறியாகத்தானே மாறும்? 'தாழ்த்தப்பட்ட பெண்கள்' இரவிக்கை அணியக்கூடாது என்ற மரபினைக் கட்டிக்காத்த பழவூர்களும்ஏராளம். சொல்ல வெண்ணா இக கொடுமைகளையெல்லாம் ஒரு தலைமுறையில் உடைத்து நொறுக்கிய பெரியாரையும் சுயமரியாதை இயக்கத்தையும் 'மனித உரிமைக்காவலர்களாகக் கொள்ளவேண்டும். வேறு எங்கு பிறந்திருந்தாலும், வேறு எங்கு இத்தனை தொண்டு புரிந்திருந்தாலும், பெரியார் ராமசாமிக்கு, மனித உரிமைத் தொண்டிற்கான 'நோபல்' பரிசு கிடைத்திருக்கும். பெரியார் அறவிலை வாணிகர் அல்லவே. ஆகவே இத்தனை வயதிலும் தளராது தொடர்கிறது தந்தை பெரியாரது தொண்டு.

### கல்வியின் மீது அக்கரைச் செலுத்தச் செய்தார்

தமிழ் மக்கள் கல்வியின்பால்—குறிப்பாக இக்காலக் கல்வியின்பால் சிறிதும் கருத்துச் செலுத்தாதிருந்து வந்தனர். நிலமும் புலமும் போதும் என்று நினைத்து வந்தனர். படிப்பையும் பதவியையும் மற்றவர்க்கு உரிமையாக்கிவிட்டு, நான்காம் சாதியினராக இருக்க சம்மதித்திருந்தனர். இந்நிலையைக் கண்டு குமுறினர் சில பெரியோர். இக்காலக் கல்வியைப் பெற வேண்டினர் சிலர்.

''எல்லாவற்றிற்கும் மேலாக, உங்கள் பிள்ளைகளை, பெண்களை, பள்ளிகளில், கல்லூரிகளில் படிக்கவையுங்கள். அப்பொழுது தானே வரப்போகும் நம் எதிர்காலசர்க்காரில், கவர்னர், மந்திரி, கலெக்டர் முதலிய அதிகார பதவிகளில் நம்மவர் அமர முடியும்'' இப்படி வேண்டுகோள், விடுத்தார் டாக்டர் டி. எம். நாயர். எப்போது? 1919 ஆம் ஆண்டு, ஆம் அய்ம்பது ஆண்டுகளுக்கு முன்னே! ஆனால் அது அவ்வளவாக எடுபடவில்லை. பின்னர், பெரியாருடைய தொண்டும் பிரசாரமும் தமிழ் மக்களிடையே விழிப்பையும் எழுச்சியையும் சிந்தனையையும் தன்மான உணர்ச்சியையும், அறைகூவலை ஏற்கும் ஆண்மையையும், ஆக்க முயற்சியில் ஈடுபாட்டையும் வளர்த்தன. இவை தமிழர்களிடையே, முன்பின் கண்டறியாத, கல்வி யார்வத்தைக் கிளப்பிற்று. அதை உணர்ந்து, தங்கு தடையின்றி நிதியும் மதியும் உதவி, தமிழர்களது கல்விக் கண்ணைத் திறந்துவிட்டார் பெருமை மிக்க கர்மவீரர், காமராசர். அவ்வழியில், மேலும் விரைந்து, முன்னேறக் கருதிக் கொண்டிருந்தார் அறிஞர் அண்ணா. 'தமிழர்களிடையே தற்குறிகள் இல்லை' என்ற நிலையை விரைவில் உருவாக்க விழைந்தார் அண்ணா. பரவலான, 'எழுத்தறிவு, இயக்கத்தை ஏற்பாடு செய்ய முடிவு செய்தார். அவ்வியக்கத்திற்கு 'அணிலாக' என்னை தில்லியிலிருந்து அழைத்து வந்தார்.

### கலைஞரின் காணிக்கை

இன்றைய முதல் அமைச்சரோ மாண்புமிகு கலைஞர். தமிழ்ப் பற்றுள்ள கலைஞர். தமிழ் வாழத் தாம்வாழும் கலைஞர். 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று', முழங்கும் கலைஞர். தெருவெல்லாம் தமிழ் முழங்கத் துடிக்கும் கலைஞர். 'என்னரும் தமிழ் நாட்டில் எல்லோரும் கல்வி கற்க' விழையும் பாடுபடும், உதவும், கலைஞர். கருணையே நிதியாகக் கொண்டவர். அவரது கருணை மழையால் கல்விப்பயிர் தழைப்பதாக. முதியோர் கல்வி கிளைத்து, தழைத்து பரவுவதாக. தமிழர்கள் அனைவரும் கல்வியறிவு பெற்றவர்களாவார்களாக. பெரியார்பால் பேரன்பு கொண்ட மாண்புமிகு, முதல்வர், கலைஞர், கருணாநிதி அவர்கள், பெரியார் தொடங்கிவைத்த

கல்விப் புரட்சியினை முழுமையாக்கி, அவருக்கு பிறந்தநாள் காணிக்கையாக்கு வார், என்று எதிர்ப்பார்க்கலாம். நம்பலாம்.

அரசியற் புரட்சியையும் சமுதாயப் புரட்சியையும் கல்விப் புரட்சியையும் தோற்றுவித்த பெரியார், பொருளாதாரப் புதுமைக்கும், மாற்றத்திற்கும் வித்திட்டவர் ஆவார்.

### பல்கினைத் தழுவிய தொண்டு

நாட்டுப்புறங்களெல்லாம் நகர்ப்புறங் களின் வசதிகளையும் வாய்ப்புகளையும் பெற வேண்டுமென்று இடித்துரைத்தவர் பெரியார். ஆதியில் தமிழ்நாட்டில், தொழி லாளர் இயக்கத்திலும் அவர்கள் முயற்சியி லும் பெரும் பங்குகொண்டவர் தந்தை பெரியார். தொழிலாளர் உரிமைக்காக தொழிலாளர் நலத்திற்காக அவர் எழுப்பிய குரலைக்கேட்ட மூத்த தலைவர்கள் சிலரே உள்ளனர். நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர், நடந்த, தென்னிந்திய இரயில்வே தொழிலாளர் பொது வேலை நிறுத்தத்தின் போது, பெரியார் ஈடுபாடும் ஆதரவும் பெரிதும் துணை நின்றன.

சமதர்மக் கொள்கை, பொதுவுடமைக் கொள்கை ஆகியவற்றை பொதுமக்களிடம், பாமர மக்களிடம், அறிமுகப்படுத்திய பெருந் தலைவர்கள் சிலரிலே, தந்தை பெரியார் ஒருவராவார். நில உச்சவரம்புக் கொள்கையை, இந்நூற்றாண்டின் முப்ப திலேயே, சுயமரியாதை மாநாட்டு முடிவு களில் ஒன்றாக நிறைவேற்றி, வழிகாட்டி யவர், தந்தை பெரியார்.

குடும்பக் கட்டுப்பாடு முயற்சி தமிழ் நாட்டில் வெற்றி பெற்றிருப்பதற்கு, யார் யாரோ புகழாரம் சூட்டிக்கொள்ளக் காண் கிறோம். நாற்பது ஆண்டுகளாக, இதற் காகப் பிரசாரம் செய்து, மக்களைப் பக்குவப்படுத்திய பெருமை பெரியாருக்கும் சுயமரியாதை இயக்கத்திற்குமே சொந்தம்.

பகுத்தறிவுப் பகலவன், தன்மான இயக்கத்தின் தனிப்பெருந் தலைவர். மக்கள் இனச்சிற்பி, பெரியார் அவர்களது ஊக்கத்தாலும் ஆதரவாலும் நடைபெற்ற கலப்புத் திருமணங்கள் பலப்பல. சீர் திருத்தத் திருமணங்கள் மிகப்பல. பதிவுத் திருமணங்கள் பல.

இத்தனை புரட்சிகளையும், மாபெரும் புரட்சிகளையும், தம் வாழ்நாளில், வெற்றி யுறச் செய்து கண்டு மகிழும் பெரியார் இவற்றிற்காகப் பயன்படுத்தின மொழி— கருவி— என்ன? மக்கள் மொழியாம் தமிழ் மொழியில் பேசியும் எழுதியும் கோடி கோடி மக்களை சிந்திக்க வைத்தவர் பெரியார். புதிய கருத்துகளை, புரட்சிக் கருத்துகளை, அரசியல் கொள்கைகளை, சமூகச் சிந்தனை களை, பொருளாதாரச் சித்தாந்தங்களை தமிழால் சொல்ல முடியும் எழுத முடியு மென்று, சொல்லியும் எழுதியும் காட்டிய மேதை பெரியார் அவர்கள்.

### காவல்காரர் பெரியார்

தமிழர் விழிப்பிற்கும் எழுச்சிக்கும் எவ்வளவு பெருங்காரணமோ, அவ்வளவு பெருங்காரணமாக, தமிழின் வளர்ச்சிக்கும் காவலுக்கும், பெரியார் விளங்குகிறார்கள் தமிழ் அரியணை ஏறுவதற்குப் போர்க் கொடி உயர்த்தியவர் பெரியார். தன்மானப் போரின் ஓர் முனையாக இதைக்கொண்ட அவருக்கும் இன்றைய வெற்றியில் பெரும் பங்கு உண்டு.

நீண்ட நெடுங்காலமாக உறங்கிக் கிடந்த தமிழ் மக்களைத் தட்டி எழுப்பி, அவர்களுக்கு புத்துயிர் ஊட்டி, தன்மானச் சத்தேற்றி, பெருநடை போடச் செய்து, அந்த அணிவகுப்பின் வணக்கத்தை ஏற்றுப் பூரிக்கும் பெரியார்—தந்தை பெரியார்—பல்லாண்டு வாழ்க; வாழ்க! புதுப்புதுக் கருத்துக் கதிர்களைச் சொரிந்துகொண்டே பல்லாண்டு வாழ்க. வாழ்க!

# கதிரவனே

கவிஞர் ஆனந்தம்



பகுத்தறிவுப் பகலவன் நீ யில்லா விட்டால்,
பாரெங்கும் காரிருளில் மூழ்கிப் போகும்!
வகுத்துரைத்த நெறிசென்றோர் வாழ்வு பெற்றார்!
வரலாற்றின் நாயகனே! நீயுங், கண்ணீர்
உகுத்திடவுங் காலமொன்று வந்த தந்தோ!
உன்னொளியின் வெப்பத்தைக் குளிர்ச்சி யாக்கி,
மிகுத்திடுமோர் தண்ணொளியால் நிலவாய் நின்று,
மேதினியை மகிழ்வித்த மேலோன் எங்கே?

வாழ்ந்திருக்கும் ஒரேதலைவ! நின்னைக் கண்டால்
வையகத்தில் தீமைகளே மடிந்து வீழும்!
ஆழ்ந்திருக்கும் மடமையிருள் கலைந்து போகும்;
அறியாமைப் பனித்துளிகள் மறைந்தே போகும்;
சூழ்ந்துவரும் சாதி மதச் சனிய னெல்லாம்
சூரியனைக் குரைக்கின்ற நாயாய் ஓடும்;
தாழ்ந்திருக்கும் கீழ்மனிதச் செடிகள் யாவும்
தலைதூக்கி, இலைபரப்பிக், கிளைசெழிக்கும்!

ஓயாது சுற்றுவதால்; நினையெ திர்ப்போர்
உடன்கருகித் தீய்வதனால்; உதவி வேண்டிச்
சரியாது, நேர்வழியிற் பிறழா மையால்;
சகலருக்கும் தேவையான சத்தா கையால்;
தேயாது, மாறாது, தினமோர் கொள்கை—
திட்டமெனக் குழப்பாத தெளிவால், என்றும்
மாயாத கதிரவனும், நீயும் ஒன்றாம்!
மண்ணுலகு நின்னையெண்ணிப் பெருமை பூணும்!

உள்ளத்திற் சரியென்று தோன்றும் உண்மை
ஒளிக்காமல் உரைப்பவர்கள் நின்போல் யாரே?
கள்ளத்தால் முகம்பார்த்துத், தயவுக் கஞ்சிக்,
கருத்துகளைத் திருத்துவது நின்பால் இல்லை!
பள்ளத்தில் மேட்டைவெட்டிச் சமனாய்ச் செய்தாய்;
பரமனது பெயர் சொல்லிப் பரவும் நச்சு
வெள்ளத்தைத் தடுக்கவந்தாய்; வெற்றி கண்டாய்!
வீரமுடன் நின்புதல்வர் வாழ்த்து கின்றோம்!

நெடுநாளாய்க் கனவுகண்ட தமிழ ராட்சி
நிலைத்ததனால், நின்ஆயுள் வளரும், உண்மை!
கொடுவாளாய் மக்கள்நலம் சிதைத்து வந்த
கொலையாட்சி தொலைந்ததனால் குதூக லித்தாய்!
நடுவானின் விண்மீன்போல் நம்மு தல்வர்,
நடுவணாட்சி அதிகாரக் குவியல் மாற்றி
விடுநாளை விரைவிலெதிர் பார்ப்போம்; எந்தாய்!
வெண்தாடி அசைந்தாட எம்மை வாழ்த்து!

தமிழ்நாட்டின் பகுத்தறிவு அமைச்சரவை



# வேலூர்
# சி.எம்.சி. மருத்துவ மனையில்





















டாக்டர் பட், அய்யா, இடதுகோடியில் டாக்டர் ஜான்சன்





படத்தொகுப்பு:
V.V. பத்மநாபன்,
வேலூர். (வ.ஆ)



# Periyar and History

*by*

*A. N. SATTANATHAN*

His participation in the Vaikam Satyagraha is now but a dim memory even for the few contemporaries who are still alive. His dynamic role in the National Congress of the twenties is forgotton; though the older Congressmen who may remember those hectic days cannot but recall his prophetic vision in the light of subsequent history. His dalliance with the Justice party is but a valued relic of the shambles that organization managed to make of itself. His crusade against idolatry and superstition, is but a part of the curious blend of religion, mysticism and rationalism inherent in India's turbulent past. There were iconoclasts in the past and there will be in the future both in India and outside. Some are conveniently forgotton; a few become icons themselves. Anti-Priesthood with its religious and specially social overtones is also a strand in the age old texture of Hindu social philosophy. What then is Periyar's contribution which History can ill afford to ignore?

History is an extremely fickle and yet exacting mistress. Kings and captains who have held the lives and fortunes of men and women in their hands are by-passed with but a single bye-line. Hitlers who thought that Divine Providence has entrusted them with the task of loading over all humanity, are rendered into dust, and even during the lift span of the generation who know them historians are buzy at work erasing their ugly memory. Even Stalin who like a colossus straddled over the vast expanse of Russia, is in his country now hardly mentioned except in whispers. His deeds and misdeeds do no longer cover small chapters in history's chronicles. What then is the touchstone of history?

Great men who have given hopes of a better life to ordinary men, by preaching an idea, savants who discovered keys to some nature's mysteries, and rediscovered the truths that govern cosmic action—there are the people whom history enshrines on lofty pedestals. The first category will include all the founders of religion; in the second are the great philosophers and scientists. By a strange twist of irony in the first category one should now include a man like Karl Marx. Karl Marx side by side with Jesus-The Christ with the anti-Christ. The ideas of Marx have influenced the politics,

economics, and life of as many millions outside the orthodox Communist world as within it. The old democratic idea of equality has been given a new meaning which includes social justice and economic justice - words which are on every - body's lips now. Ideal Communism is not the totalitarianism of the omnipotent State - but social and economic justice, a world without poverty and exploitation.

Periyar can claim, and history will accord him a place with these great men of history who not only influenced their generations, but fired generations to come with a burning idea. Periyar's contribution to the vocabulory of great ideas is the simple word - Self - Respect. He has given it almost a new dimension, a dimension which will grow with the passage of time. All his iconoclasms have at their root this idea based on the concept of human dignity. In the long history of Indian religion and philosophy, there were great speculations on the greatness and immortality of the soul. The soul as the Jivatma is equated and identified with the Paramatma. Philosophic flight reached its highest peak when of the soul, one can say "Aham Brahmosmi". What use is this lofty conception of the human soul, when the human being within which the soul resides is denied common dignity and equality with fellow human beings. The doctrines of the twice - born and of Adhikarabhedha perpetuated man's iniquity towards his fellow men. A modern Sankaracharya blissfully asserts that to be born a brahman is the highest gift that man can get from his Creator - as if the Creator could be guilty of favouritism. It was left to Periyar to lift this human being from the state of eternal slavery and to restore to him his essential dignity and self respect. There is nothing esoteric about this idea. It is earthy, of the earth, for the human being on this earth appropriating for him his right to equality of existence, with all that it implies.

Marrying without a priest is by itself not the end of the Self-Respect life. It is but a symbol of the life of Self-Respect. That a human association does not acquire special sanctity because an unlettered priest utters some numbo jumbo in an unknown lingo, is the message of Self-Respect. The sanctity given to marriage is that which the devoted couple bestow on themselves. The submission enjoined on the masses of humanity, to the sanctifying grace of the twice-born, has to be repudiated as thoroughly as to make the repudiation a part of the New Dharma of life. Periyar's iconoclasm is directed against this "Sudra" mentality. It is not the "sudra" caste that requires repudiation: it is the sudra mentality and attitude as expressed in thousand subtle ways in all walks of life which should be expunged.

One might cynically ask how many people have turned away willingly and convincingly from rituals and priesthood due to Periyar's influence? How far has the social conformity of the age old Hindu Dharma been changed and remoulded? A seed does not grow into a banyan tree in a day or in a year. The inhibition of the mind brought about by thousands of years of the Sudra spirit, cannot be broken down as by the utterance of a mantra: That there are literally thousands of people who perform self-respect marriages, that there are lakhs of people who have

developed the habit of Self-Respect in various walks of life, are sure indications that the seed has not fallen on sterile soil. There are also ample signs of the spread of these ideas outside Periyar's homeland. The torch when lit will find a succession of torch-bearers.

Having prepared the soil and sown the seeds, Periyar, one hopes, will direct his unbounded energy in formulating measures to break down caste barriers more systematically. These barriers are no longer what they were socially and ritualistically; but political conditions have lead to their perpetuation in other selfish ways. This is a bye-product of the voting system on which our democracy is based. Periyar is not primarily interested in politics; but the new manifestation of castes malignant usefulness requires a few typically Periyar hammer-strokes. If he delivers them Periyar's place as the prophet of a new age and as a seer who has given a new mantra of hope, for a better life in this world, and not in the esoteric other world, is assured.

★


ஜாதி மத பேதத்தை உடைத்த
தந்தை பெரியார் அவர்களுக்கு
எங்கள் இதய நல்வாழ்த்துக்கள்

VGP

V. G. பன்னீர் தாஸ் & கோ.

சைதாப்பேட்டை — தி. நகர்
சென்னை-15. சென்னை-17

# LION HEARTED FIGHTER

*by*

*S. MOHAN*, M.L.

In Nature's rhythm of evolution,
A man becomes a revolution - a revolution
Becomes a man; to shed a trail of glory
That remains ever blazing in history.

Symbolising hope and confidence for the forlorn,
Society's brightest star-ever to adorn;

Unshackling the ignorant from superstition,
Lion hearted fighter aginst regimentation.

Championing with endless zeal, atheism
Undaunted, ageless 'hero of Vaikom';

Uncompromising with evils of religion,
Social reform is his life's mission.

PERIYAR - ever held in grateful veneration,
For, 'out-castes' are ended with this generation.

# 'PERIYAR'
# The Grand Old Moral Rebel

*S. V. CHITTIBABU,* M.A., B.T.
*Director of School Education, Madras.*

When Prof. Whitehead was once asked to define true courage, he is said to have observed: "True courage is not the brutal force of vulgar heroes, but the firm resolve of virtue and reason". Our revered Periyar is verily the glowing example of this true courage. In him courage springs from a sense of duty and purpose. It does not consist in hazarding without fear, but being resolutely minded in a just courage. In Periyar one sees moral courage as a virtue of higher cast and nobler origin than physical. It seems from a consciousness of virtue entrenched in reason. For a virtuous cause Periyar is prepared to go the whole hog of it, in spite of all forces of opposition, reproach and contempt rallying against him. It is common knowledge how he has been a moral rebel against all this smacking of cant and hypocrisy, shoddiness and obscurantism. Tamil Nadu has come to be regenerated now socially and culturally because of his indefatigable efforts to rescue the repressed and the suppressed from the stranglehold of time-worn customs and practices. Is there anyone who can compare with Periyar for the undaunted adroitness and master-strategy with which the ridiculously irrational, superstitions and ceremonials of our society have been attacked mercilessly? It is amazing that in spite of his being aware of the very small following that he had in the incipient years of his reformist movement he pitted himself against his opponents with imperturbable faith in the great cause that he has taken up. He feels that the battle royal is yet on and is not complete. He has no doubt many victories to his credit such as can be seen in the progressive equalisation of educational and job opportunities for the socially and economically backward classes, the recognition of self-respect marriages, the restoration of the rights of the socalled untouchables, the spread of education among the masses etc. Yet Periyar is not going to rest contented with what he has achieved, despite his advanced years of age.

This grand old moral rebel is entering the threshold of 91. And what plans he has! He still writes copiously and talks vibrantly. His wit and wisdom is still as sharp as the

razor's edge. His logic is as irresistible as his observations are refreshingly provocative. His humour can be pungent and at the same time racy. One wonders wherefrom he has gathered the tools of his intellectual armoury, in spite of the fact that he had not the advantage of a solid school education, not to speak of collegiate education. But the truth is the great Periyar has common sense in an uncommon degree which is what the world calls wisdom. That is why he is able to discern the true from the false, the real from the apparent, the beautiful from the ugly, the good from the bad.

Periyar's art of expression is superb. He is proficient in selling himself to others and in communicating his ideas. Coupled with this art is his force of personality. It is said of Napoleon that the sight of "the Little Corporal" revived affection and developed new and mighty resolves on the part of a sometimes dispirited army. At the sight of Webster, men paused. Even Thomas Carlyle said: "One would incline at sight to back him against the world." The same remarks would apply to Periyar.

There have been leaders whose forte was the written word. Mazzim for instance was not writer like Shakespeare but was one who maintained a more or less intimate contact with the public. A leader who can write his views forcibly and clearly, not once but again and again with ever increasing power is in possession of a rare gift. This rare gift Periyar has in abundance. Furthermore he is a close student of the signs of the times. The French have a saying which runs like this: "The great art in politics as well as other spheres consists not in hearing those who speak, but in hearing those who are silent." Everywhere there is a special reward for the man who hears the inaudible or the unspoken. Periyar's prescience of mind and depth of humanism are such that he can 'sense' coming changes long before.

There is so much to say about the beloved Periyar. But suffice it for me to say in conclusion that he is one of those celebrities of our Tamil Nadu whose renown as a moral rebel and social reformer will remain escutcheoned in the pages of our country's history. As a 'multi-faceted' personality in whom will and determination, force and magnetism, courage and resolve, and above all compassion and love have blended themselves admirably the magnificent Periyar is verily the man of destiny whose signal services in the cause of our social and economic rebirth will remain for long enshrined in our memory.

May our noble Periyar, the Grand Old Patriarch of our times live for many, many more years in good health and vibrant cheer and make Tamil Nadu a land of peace and prosperity, joy and happiness.

# Anna's call to Youths

Ours is not a case of starting from scratch—had that been the case the only thing needed would have been the intensity of effort to be put forth. Ours is a case of erosion of the mind—we are not in search of fields, but have to engage in the task of fertilising it, irrigating it. We are not in search of ideals, but are engaged in the more intricate task of classifying, codifying and verifying layers of ideals. We are not wanting in culture – but have to cleanse it from the cob-web of time and de-adulterate it. *In short we have to re-discover ourselves, and re-construct our entire thought.* Once we were the custodians of everything noble, but we have allowed the germs of decay to multiply and thrive. Our task to-day is to allow fresh air and sunshine and regain the original shape and stature—that which made us well-known in distant lands and climes.

Our literature, art and architecture are fine specimens of human intelligence—but they bear the ravages of time and also the effect of currents and cross currents so that to-day we have to listen to the Foreign historian or scholar in order to realise the "Glory and Grandeur" of our own country.

Age commands veneration—but unless it is recuperated, decay sets in. Our culture and civilisation are hoary, but we have allowed scars and wrinkles to disfigure them. *It is our duty therefore to re-discover and re-construct what is ours and enrich it by drawing liberally upon the achievements of other countries.*

Our problem is not want of a system—in any branch of knowledge. We have fine specimens in all spheres. We claim also—and that rightly—immortality for our systems, but we have not succeeded in keeping them fresh and young, effective and energetic, for we have allowed them to decay.

If a system has to endure, says Dr. Radhakrishnan, it must be perpetually young and ready to change. In other words, it must be capable of accepting new ideas, have the resilience of mind which the young have, have the openness, flexibility and spirit of adventure by which they accept what is given to them and transform it out of recognition.

Eos, a Goddess falling in love with a mortal, prayed to God to grant immortality to the lover—'Yes', said God, and the mortal gained immortality. But he grew old, infirm, senile, decayed—and what was a feast once to the eyes of Eos became a sight to shun and grieve over—and he who gained immortality longed for death—for what is life if it becomes a prey to decay? Then Eos sighed and said, "I prayed for immortality for my lover, forgetting to pray for perpetual youth."

We in this country are facing some such situation—and we are in charge of the task of re-juvenating our culture and civilisation—our entire thought. *Instead of attempting that, we have been for too long a period, doting upon the decayed forms attempting to defend them*

*from critics and currents of new thought*. And while other parts of the world, *after persistent and patient search after truth, have* arrived at new conclusions and are *scaling new heights we are content to sit near the shattered rampart and narrate past glory*. Our religion has degenerated into rituals, our society which was once classless and caste-less has degenerated into water-tight compartments of caste and creed, and, all the while, we have kept either silent or have been supplying defence to superstition and orthodoxy by offering liberal interpretations in a scholarly way. Unwittingly we have been allowing this state of affairs to exist, despite condemnation and protest. And, more than that, whenever a doughty warrior comes forth to fight against the evils prevalent, we decry and denounce him as an annihilator of noble values and hoary systems. *Periyar Ramasami represents and symbolises the fury and frustration in a sizable section of society at this state of affairs.* To allow systems to degenerate and at the same time denounce those who champion the cause of Rationalism is but to perpetuate superstition and orthodoxy and allow this society of ours to get decomposed.

Universities offer the proper forum for a free and full discussion of these intricate problems and graduates trained here are to go forth as emissaries of that social reconstruction which is long over due. The country looks to centres of learning like this University to enable the people to pursue the path of progress, braving difficulties and, if need be, courting danger.

Graduates of the Annamalai University, let me call upon you to carry on the crusade against caste which cannot co-exist with democracy, against superstition which cannot co-exist with science and against tyranny of various dimensions which cannot co-exist with liberty, equality and fraternity.

Pursuing vocations for your and your families' well-being, you have to perform your duty towards society. *You are to become torch-bearers of Rationalism—and Rationalism does not mean repudiation of basic and fundamental truths and maxims, but the annihilation of dubious modes of thought and action. You have to* work hard and with daring and dash, for we have to clear cobwebs which are centuries old and *let reason reign supreme.*

---

*—Extract from the Annamalai University Convocation Address by Thiru C. N. Annadurai, M.A., on 18th November, 1967.*

91-வது ஆண்டில் மதிப்பிற்குரிய பெரியார் அவர்கள்
உடல் நலத்துடன் பல்லாண்டு வாழ இறைவனை வேண்டுகிறோம்

செல்வராஜ் பப்ளிஷர்ஸ்

கல்வி நூற்பதிப்பாளர்கள்
321-322, நேதாஜி ரோடு, ஈரோடு-1.

நிறுவனம் 1927 போன்: 308

தந்தை பெரியார் 91-வது ஆண்டு பிறந்த தின வாழ்த்துக்கள்

குழந்தைகளின் நண்பன்

# கிருஷ்ணா பிஸ்கட்ஸ்

மிகச் சிறந்த சத்துள்ள தின்பண்டம்

## கிருஷ்ணா பிஸ்கட் பாக்டரி

மன்னார்குடி

(தஞ்சை மாவட்டம்)



தந்தை பெரியார் அவர்களின் 91வது பிறந்த நாள் விழாவில் எங்களது வாழ்த்துக்கள்.

தந்தி: புள்ளிக்கார்

போன்: ஆபீஸ்: 259, பங்களா: 233

# புள்ளிக்கார் மில்ஸ் லிமிடெட்

திருசெங்கோடு,

சேலம் மாவட்டம் தமிழ் நாடு

இயங்கும் கதிர்கள்: 25000

எங்கள் தயாரிப்பு:

20s, 30s, 31s, 40s, 60s (இந்தியன்)

80s, 100s (வெளிநாட்டுப் பஞ்சு)

ஷை: நூல்கள் கோன்களிலும் கிடைக்கும்.

தென்னிந்தியாவில் உயர்ந்த ரக நூல்கள் தயாரிப்பதில் முன்னணியில் நிற்பவர்கள்.



தந்தை பெரியார் அவர்களது
91-வது பிறந்த பொன்னாளில்
எமது நல்வாழ்த்துக்கள்!

உரிமையாளர் :

K. தியாகராஜன்

# சித்தார்த் எலக்டிரிக்கல்ஸ்

பெரியார் திடல்

2, ரண்டால்ஸ் ரோடு, சென்னை-7.

வைக்கம் வீரர் தந்தை பெரியார் வாழிய வாழியவே!

போன் : 316

# K. P. அருணாசலம் அண்ட் சன்ஸ்

6, நஞ்சப்ப முதலியார் தெரு,

திருச்செங்கோடு (சேலம் மாவட்டம்)

கணபதி சாயத் தொழிற்சாலை, நூல் வியாபாரம்,

உணவு தானிய மொத்த வியாபாரம்.

# கடவுள் பற்றிய காந்தியாரின் குழப்பம்



## தந்தை பெரியார்

திரு. காந்தியவர்கள் 1928 அக்டோபரில் தமது ''யங் இந்தியா''வில் தம்மை ஒரு நண்பர் கடவுளைப் பற்றிக் கேட்ட சில கேள்விகளைப் பிரசுரித்து, அவைகளுக்கு தமது அபிப்பிராயத்தையும் எழுதியுள்ளார்.

**கேள்வியின் சுருக்கம் யாதெனில்:—**

''கடவுளைத் தவிர மற்றதெல்லாம் நிச்சயமற்றதென்றும்,

சத்தியம்தான் கடவுள் என்றும்,

துன்பத்தைச் சகித்துக்கொண்டு பொறுமையாயிருப்பதே கடவுள் என்றும்,

அயோக்கியர்களை எச்சரிக்கை செய்து அவர்கள் தமக்குத்தாமே கேடு விளைவித்துக்கொள்ளும்படி செய்துவிடுகிறார் என்றும் 'யங் இந்தியா'வில் தாங்கள் எழுதியிருக்கிறீர்கள்.

ஆனால் கடவுள் இருக்கின்றார் என்ற உறுதி எனக்கு இல்லை.

ஏனெனில் அப்படிக்கடவுள் என்பதாக ஒன்று இருக்கும் பக்ஷத்தில் உலகத்தில் சத்தியத்தை நிலை நிறுத்துவதே அவரது லக்ஷியமாக வல்லவா இருக்க வேண்டும்?

ஆனால் உலகில் எங்கு பார்த்தாலும் பலவிதமான அயோக்கியர்களாலும், கொடுமைக்காரர்களாலும், நிரப்பப்பட்டிருப்பதுடன் ஒழுக்க நடவடிக்கைகளைப் பற்றி சிறிதும் கவலையே எடுத்துக்கொள்ளாத அயோக்கியர்களான அவர்கள் சௌகரியமாகவும், க்ஷேமமாகவும் வாழ்கின்றார்கள்.

அயோக்கியத்தனம் என்பது ஒருவித தொத்து வியாதிபோல் உலகில் தாராளமாய் பரவிக்கொண்டும் வருகிறது.

இது இப்போதிருக்கும் மனிதவர்க்கத்துடன் மறைந்து போவதாக இல்லாமல் இனி வரப்போகும் பின் சந்ததியர்களும் ஒழுக்கமற்றவர்களாகவும் நாணயமற்றவர்களாவும் நடக்கும்படி செய்கின்றது.

கடவுள் சகலத்தையும் தெரிந்துவரும் சர்வ வல்லமையும் உள்ளவரல்லவா?

அப்படியிருந்தால் தனது சகலத்தையும் அறியும் சக்தியைக் கொண்டு கெடுதியும், கொடுமையும் எங்கெங்கிருக்கின்றது என்பதை அறிந்து, தனது சர்வ வல்லமையைக் கொண்டு அவைகளை ஒழித்து அயோக்கியர்களை வளரவிடாமல் ஏன் செய்யக்கூடாது?

அன்றியும் கடவுள் ஏன் கஷ்டங்களை அனுமதித்துக்கொண்டு பொறுமையாய் இருக்கும்படி செய்யவேண்டும்?

அயோக்கியத்தனத்துடனும், நாணயக் குறைவுடனும், மகா கொடுமையுடனும் உலகம் நடந்து கொண்டே இருப்பதை அனுமதித்துக்கொண்டே இருப்பாரானால் பிறகு கடவுளுக்கு என்னதான் யோக்கியதை இருக்கின்றது?

தாங்கள் சொல்வதுபோல் கொடுமை செய்கின்றவர்கள் தாங்களாகவே கெட்டுப்

போகவும், தங்களுக்குத் தாங்களாகவே குழி வெட்டிக்கொள்ளவும் கடவுள் செய்வது உண்மையானால் அவர் ஏன் அக்கொடிய வர்களைக் கொடுமை செய்வதிலிருந்து விலக்கி, கொடுமைகளை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடக்கூடாது?

அப்படிக் கிள்ளாமல் ஒருவனுக்கு கெட்ட காரியம் செய்யத் தாராளமாய் இடம் கொடுத்துவிட்டு, அக்கெட்ட காரியத்தால் உலகமும், பதினுயிரக்கணக்கான மக்களும் துன்பம் அடையும்படி செய்துவிட்டு, அதன் பிறகு கேடு செய்தவனைத் தானாக கெட்டுப்போகும்படி செய்துகொண்டிருப் பது எதற்காக?

உலகம் நாளுக்குநாள் கெட்டதன்மை யிலேயே போய்க்கொண்டிருக்கிறது. ஆதலால் உலகத்தை யோக்கியமாகவும், அயோக்கியர்களை அழித்து யோக்கியர் களை உண்டாக்கவும் செய்வதற்கு தனது சக்தியை உபயோகிக்காத ஒரு கடவுளிடத் தில் மனிதன் ஏன் நம்பிக்கை வைக்க வேண்டும்?

அயோக்கியர்கள் தங்கள் அயோக்கியத் தனத்துடன் சௌக்கியமாகத் தீர்க்காயுளு டன் வாழ்வது என்பது நன்றாகத் தெரியும். அப்பேர்ப்பட்டவர்களால் துன்பம் இல்லா திருப்பதை முன்னிட்டாவது அவர்கள் ஏன் சீக்கிரம் அழிந்து போகக்கூடாது?

எனக்கு கடவுளை நம்பவேண்டும் என்கின்ற ஆசை உண்டு. ஆனால் நம்பு வதற்குக் கொஞ்சமும் ஆதாரம் இல்லவே இல்லை. தயவு செய்து தங்களுடைய "யங் இந்தியா" பத்திரிகை மூலம் இவற்றிற்குச் சமாதானம் சொல்லி எனக்கு நம்பிக்கை உண்டாக்க வேணுமாய்க் கோருகிறேன்."

### கேள்விகளுக்கு காந்தியார் பதிலும் சமாதானமும்

இக்கேள்விகளுக்குக் காந்தியார் எழுதிய சமாதானமாவது:—

இந்தக் கேள்விகள் மிகப் பழைய கேள்விகள். இந்தக்கேள்விகளுக்கு நான் சொல்லக்கூடிய பதில் ஒன்றும் என்னிடத் தில் இல்லை. ஆனால் நான் ஏன் கடவுளை நம்புகிறேன் என்பதற்கு மாத்திரம் சமா தானம் சொல்லகூடும்.

### ருஜிபித்துக் காட்டமுடியாது

அதாவது:—

விவரித்துச் சொல்ல முடியாத ஒரு மறைவான சக்தி இருக்கிறது என்பதை நான் காணமுடிவதில்லை; ஆனாலும் ஒருவாறு உணருகிறேன். ஆனால் அதை எந்த விதத்திலும் மற்றவர்களுக்கு ருஜிப் பித்துக் காட்டமுடியாததாயிருக்கிறது. ஏனென்றால் அது எனது புலன்களின் சக்திக்கு மீறினதாய் இருக்கின்றது.

வேண்டுமானால் ஒரு அளவுக்குக் கடவுள் இருக்கிறார் என்பதற்கு ஆதாரம் காட்டலாம்.

## சாதனை வீரர்!

பெரியார் தான் பிடித்ததை சாதித்தே தீருவார் என்பதற்கு ஒரு வேடிக்கையான உதாரணம் அய்யாவின் இளமைக்காலத்தில்!

ஒருமுறை இவருக்குத் தெரிந்த ஒரு மாது மைசூருக்கு மகராஜா திருமணத்துக்கு நாட்டியக் கச்சேரிக்காகச் சென்றார். அரச சபையில் கச்சேரி. சபைக்குச் செல்ல வேண்டுமானால் முன் அனுமதி பெற்ற பெரியவர்கள்தான் செல்ல முடியும். மற்றவர்கள் உள்ளே போகமுடியாது. இவரோ முன் அனுமதி பெறவில்லை. அனுமதிச் சீட்டின்றி வாயிலோன் உள்ளேயே நுழைய விடமாட்டான், எப்படியோ உள்ளே போய்த்தீர வேண்டும். இதற்கொரு தந்திரம் செய்தார். தன் கையில் ஒரு தோடி தாளத்தை வாங்கிக் கொண்டார். நாட்டியக்குழுவில் தானும் ஒருவர்போல் நடத்திக் கொண்டு உள்ளே சென்றுவிட்டார். இறுதி வரையிலும் இருந்து நாட்டியம் பார்த்து விட்டு அந்தம்மாளுடன் திரும்பினர்!

### எனக்கும் தெரியாது

அதாவது ஒரு சாதாரண மனிதனுக்குத் தன்னை ஆளுகிற அரசன்யார் என்பது தெரியாதபோதிலும், ஒரு அரசன் இருந்து ஆண்டுகொண்டுதான் இருக்க வேண்டும் என்பது மாத்திரம் அவனுக்குத் தெரியும். எனவே, ஒரு சாதாரண மனிதனுக்குச் சாதாரண சங்கதிகூட தெரியாமலிருக்கின்றதுபோல் நம் போன்றவர்களுக்கு மகா பெரிய சங்கதியான கடவுள் விஷயம் புலப்படுவது என்பது சாத்தியமான காரியமல்ல. ஆனாலும் இந்த பிரமாண்டமான உலகத்தைப் படைத்து ஆட்சி செலுத்தும் சட்டம் ஒன்று இருக்கின்றதாக நான் அறிகிறேன். அந்தச் சட்டம்தான் கடவுள். அதை நான் மறுக்க முடியாது. ஆனால் அந்தச் சட்டத்தைப் பற்றியாவது அச்சட்டத்தை வழங்குபவரைப் பற்றியாவது, எனக்கு ஒன்றுமே தெரியாது.

ஒரு ராஜ்ஜியத்தை ஆளும் அரசனை மறுப்பதால் அந்த ராஜ்யத்தில் உள்ளவன் எப்படி அந்த ஆட்சியில் இருந்து விடுதலை பெற முடியாதோ அதைப்போல் கடவுளை மறுப்பதால் கடவுள் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்று விட முடியாது.

மொத்தத்தில் தெய்வீகமான சட்டம் ஒன்று இருக்கின்றது என்பதை மறுக்காமல் ஏற்றுக்கொண்டு, அதற்குப் பணிந்து நடந்து வந்தால் வாழ்வு சுலபமாக நடைபெறும்.

### ஆதாரமற்ற நம்பிக்கை

கடவுளை உணர விரும்புபவன் உறுதியான நம்பிக்கை கொண்டால்தான் முடியும். அந்நம்பிக்கைக்கு வெளி ஆதாரங்கள் தேடப்புறப்பட்டால் அது முடியாத காரியமாகிவிடும்.

கடைசியாக மேற்கூறிய கேள்விகளுக்கு ஒழுங்குமுறையில் காரணங்கள் காட்டி, மேல்கண்ட கேள்விகள் கேட்டவரை திருப்தி செய்யத் தக்க நியாயங்கள் ஒன்றும் என்னிடம் இல்லை என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன்.

கடவுள் நம்பிக்கை காரண காரிய ஆராய்ச்சிக்கு எட்டாதது, ஆனதினால் நான் இக்கேள்விகள் கேட்பவருக்கு கடைசியாக சொல்லுவதென்னவென்ருல், சாத்தியப் படாத காரியத்தில் பிரவேசிக்கவேண்டாம் என்பதுதான்.

உலகத்தில் உள்ள கெடுதிகளுக்கும், கொடுமைகளுக்கும் அறிவினால் காரணம் காட்டமுடியாது. ஆனால் கெடுதிகள் இருப்பதையும் அதன் தன்மை அறிய முடியாதது என்பதையும் நான் ஒப்புக் கொள்கிறேன்.

### கொடுமைகளை அனுமதிப்பதால் கடவுள் பொறுமைசாலி

கடவுள் பொறுமை உள்ளவர் என்பதற்குக் காரணமே அவர் கொடுமை உலகத்தில் நடக்க அனுமதிக்கிறதினால்தான். கடவுளிடத்தில் கெட்டகுணம் இல்லை என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் உலகில் ஏதாவது கெடுதியிருந்தால் அதற்கு அவரே கர்த்தா. ஆனால் அவருக்கு அதில் சம்மந்தமில்லை. (இதற்கு அவருடைய இங்கிலீஷ் வாசகமாவது)

"I Call God long suffering and patient precisely because he permits evil in the world. I know that he has no evil in him, and yet if there is evil, he is' the author of it and yet untouched by it........."

என்று எழுதியிருக்கின்றார்.

### பழைய கதைகள் அசட்டு பதில்

எனவே அவர் சொன்ன பதில்களிலிருந்தாவது அவர் காட்டியிருக்கும் நியாயங்களிலிருந்தாவது கேள்வி கேட்ட நண்பருக்கு ஏதாவது பதில் இருக்கின்றதா என்பதைக் கவனித்துப் பார்க்கும்படி வாசகர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இக்கேள்விகளை எப்படி திரு. காந்தி பழைய கேள்விகள் என்று சொன்னாரோ அதேபோல் அவருடைய சமாதானங்களும் பழைய கதைகள் என்றுதான் சொல்ல வேண்டும்.

என்னவென்றால், ''கடவுளை அறிவது அசாத்தியம்.''

'' அசாத்தியமான காரியத்தில் பிரவேசிக்காமல் இருப்பது நல்லது.''

''கடவுள் நம்பினால்தான் உண்டு.''

"அதுவும் உறுதியான நம்பிக்கை இருந்தால் தான் முடியும்" என்பன போன்ற சமாதானங்கள்.

ஆனால் ஒரு புதிய உதாரணம் காட்டியிருக்கிறார் அது என்ன வென்றால்:—

சாதாரண மனிதனுக்குத் தங்கள் அரசர் யார் என்பது தெரியாதாம். அதுபோல் தங்களுக்குக் கடவுள் என்பது தெரியவில்லையாம். இது எவ்வளவு அசட்டுத்தனமான சமாதானம் என்பதை வாசகர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும்.

ஏனெனில், அரசன் எல்லோரும் தன்னை அறியும்படி செய்துகொள்ளத் தக்க சக்தி உடையவன் அல்ல. கடவுள் என்பவரோ சர்வசக்தி உள்ளவர் என்பதை கேள்விகேட்ட நண்பர் முதலிலேயே குறிப்பிட்டிருக்கிறார்.

தவிர மற்றொரு புதிய விஷயம் கண்டு பிடித்திருக்கிறார். அதாவது,

கடவுள் இருக்கிறார் என்பது விளங்காமல் போனாலும் இருக்கிறார் என்று வைத்துக்கொண்டால் வாழ்க்கைப் பிரயாணம் எளிதில் முடியுமாம். வாழ்க்கைப் பிரயாணம் எளில் முடிகின்றதற்காக ஒரு விஷயத்தை தனக்கு எட்டாததை-தெரியாததை நம்பவேண்டும் என்று சொல்வதானால், வாழ்க்கைப் பிரயாணம் எளிதில் நடைபெற வேண்டியதற்கு சவுகரியமான வேறு அநேக காரியங்கள் செய்யக்கூடு மானால் அவைகளையும் செய்யச் சொல்லு கிறாரா என்பது விளங்கவில்லை.

## திருடர் புரட்டர்குடியர் சுகவாழ்க்கை ?

ஏனெனில் பலவிதமான புரட்டு, பித்தலாட்டம், திருட்டு முதலிய காரியங்கள் செய்து ஏராளமான பணம் சம்பாதித்தவர்களின் வாழ்க்கை பிரயாணம் சுலபமாக இருப்பதை நாம் பார்க்கிறோம்.

தனக்குத் தெரியாததான கடவுளை நம்பாமல் நிறைய கள்ளையும், சாராயத்தையும் குடித்துப் போதை ஏற்றிக்கொண்டு, வாய்குளறிப் பாடிக்கொண்டு, தள்ளாடி நடந்து போகிறவனுக்கு இதைவிட வாழ்க்கை யாத்திரை சுகமாகவும், சுலபமாகவும் கழிகின்றதை நாம் நேரில் பார்க்கிறோம். வாழ்க்கைப் பிரயாணம் எளிதில் கழிவதே முக்கியமானால் நாம் ஏன் இவனை பின்பற்றக்கூடாது. இந்த மாதிரி போதையில் ஆழ்கியிருக்கும்போது எவ்வித இன்ப துன்பமும் தோன்றாமல் வாழ்க்கை கழிந்துவிடுகிறதா? இல்லையா ? நிற்க,

தீமைகளும் கொடுமைகளும் கடவுளால் அனுமதிக்கப்படுகின்றதென்றும், அதனாலேயே அவர் பொறுமைசாலியாகிறார் என்றும் சொல்லுவதை கவனித்தால் இது எவ்வளவு கவலையற்ற பதில் என்பது விளங்காமல் போகாது.

## கடவுளால் கஷ்டமே விளைவு

ஏனெனில், கடவுள் பொறுமையால் மற்ற ஜீவன்களுக்கு எவ்வளவு கஷ்டம் இருக்கிறது என்பதை உணர்ந்து பார்த்தால் விளங்கும்.

மற்றும் கொடுமைகளும், கெடுதிகளும் கடவுளிடம் இல்லை என்றும், ஆனாலும் அக்கெடுதிகளை கடவுளே உண்டாக்கு கிறார் என்றும், ஆனால் அவைகளில் கடவுளுக்குச் சிறிதும் சம்மந்தமில்லை என்றும் சொல்வது அறியாமையால் சொல்லும் வாக்கியமா அல்லது ஏதாவது ஒரு சமாதானம் சொல்லிக் கேள்வி கேட்டவர்களை ஏமாற்றிவிடலாம் என்பதாகக் கருதிச் சொன்ன வாக்கியமா என்பது நமக்கே விளங்கவில்லை.

உலகில் மிகப் பெரியார் கூட்டத்திலும், மேதாவிகள் கூட்டத்திலும் சேர்ந்த ஒருவரும் சதாசர்வகாலம் கடவுள் பெயரைச் சொல்லிக்கொண்டிருப்பவரும், கடவுள் செயலை அடிக்கடி உணர்ந்து அதன் பயனை அநுபவித்துக்கொண்டே இருப்பதாகச் சொல்லுபவருமான ஒருவரே கடவுளைப் பற்றிச் சொல்லுவது இதுவானால் மற்றவர்களிடம் அதாவது கடவுள் பெயரையும், சமயத்தின் பெயரையும் சொல்லிக்கொண்டு வயிறுவளர்ப்பவர்களிடம் இருந்து வேறு என்ன எதிர் பார்க்க முடியும் ?

## மக்களை மடையராக்குகின்றனர்

அன்றியும் கடவுளைப் பற்றிப் பேசுகின்ற ஒவ்வொருவர்களும் "கடவுள் பெயரற்றவர், ரூபமற்றவர், குணமற்றவர்" என்பதையும், அவர் மனதிற்கெட்டாதவர், இந்திரியங்களுக்கு அகப்படாதவர் என் பதையும் அவருக்கு லக்ஷணமாகச் சொல்

லும்போது அதற்கு மேல் கடவுள் உண்டா இல்லையா என்கின்றதுபோன்ற கேள்விகளே அனாவசியமானதும், பலனற்றதும் என்பது நமது முடிவு.

அல்லாமலும் அப்படிப்பட்ட ஒரு கடவுள் இருந்தாலும் சரி; இல்லாவிட்டாலும் சரி; அதைப் பற்றி நமக்குக் கவலை வேண்டுவதில்லை என்பதும் நமது முடிவு.

ஆனால் கடவுளைப் பற்றிய விஷயங்கள் வரும்போது நாம் கவலைப்படுவது எதைப் பொறுத்தவரையில் என்றால், கடவுள் இருக்கிறார் என்று ஒருவன் ஒப்புக்கொள்ளுவதின் மூலம் அவனுடைய அறிவு வளர்ச்சியும், முயற்சியும் கெட்டு சோம்பேறித்தனம் உண்டாகக்கூடாது என்பதைப் பொறுத்தவரையில்தானே ஒழிய வேறில்லை.

உதாரணமாக பாதாளலோகம் என்று ஒரு லோகம் இருக்கிறது என்றும், அதில் நாகராஜன் என்கிற ஒரு அரசன் இருக்கின்றான் என்றும் ஒருவன் சொல்லிக்கொண்டு திரிவானானால் அந்த லோகம் எங்கே? அந்த அரசன் விடு எங்கே? என்று கேட்டுக்கொண்டு திரியவேண்டியது ஒவ்வொருவனுடைய வேலை அல்ல.

அதுபோலவே இல்லாத பட்டணம் என்று ஒரு பட்டணம் ஆகாயத்தில் இருக்கின்றதுஎன்றும், அதற்கு அருபி என்கின்ற ஒரு அரசன் இருக்கின்றான் என்றும், அவனுக்கு அனங்கள் என்கின்ற பூஜ்ஜியம் (0 சைபர்) பெண்கள் இருக்கின்றார்கள் என்றும் ஒருவன் சொல்லிக்கொண்டு திரிவானானால் அதைக் காட்டு என்று கேட்டுக்கொண்டு திரியவேண்டியதும் ஒவ்வொருவனுடைய வேலையுமல்ல.

மற்றென்ன வென்றால்,

இம்மாதிரி அரசர்களையும், பெண்களையும் பற்றி எல்லா மக்களும் நம்பாவிட்டால் அதற்காக தண்டனையென்று நிபந்தனை ஏற்படுத்தி, "அந்த நாகராஜாவே உனக்குச் சோறு போட்டு விடுவார்; ஆகாய கன்னியே உனக்கு பெண் சாதியாய் இருந்துவிடுவாள்; மற்றபடி நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே" என்று சொல்வதை ஏற்றுக்கொள்ளச்செய்து மக்களது அறிவையும், நேரத்தையும் பொருளையும் பாழாக்கி அவர்களை வெறும் அர்த்தமற்ற அடிமைபடுத்தி, பட்டினிபோட்டு, வதைப் பதில்தான் கவலையே ஒழிய வேறில்லை.

ஒரு மனிதன் கடவுள் இல்லையென்று சொல்லுவானேயானால் அவன் உலமம் முழுவதும் "அதற்கு அப்பாலும், இப்பாலும்" என்பவைகளெல்லாம் அறிந்து நேரில் தேடித்தேடி பார்த்துக் காணாவிட்டால்தான் சொல்ல வேண்டும் என்பதும் முழுதும் தப்பல்ல. ஆதலால் அதைப்பற்றிய முடிவைப் பற்றி நமக்கு இப்பொழுது ஒன்றும் அவசரம் இல்லை. ஆனால் அதற்கும் மனிதன் வாழ்க்கைக்கும் உள்ள சம்பந்தம் எவ்வளவு? அதற்காக மனிதனின் 'அறிவையும் நேரத்தையும் பொருளையும் ஏன் செலவு செய்து கொண்டே இருக்கவேண்டும்? இதுவரையில் அநேகர் அப்படிச் செய்து வந்ததின் மூலம் அடைந்த நன்மைகள் என்ன? அப்படிச் செய்யாததின் மூலம் ஏற்பட்ட அல்லது ஏற்படப்போகும் கெடுதி என்ன? என்பன போன்றவைகளே இந்நிலையில் முக்கியமாக ஆராயத்தகுந்த விஷயமாகும். இந்த சந்தர்ப்பத்தில் வாசகர்கள் தயவு செய்து கடவுளைப் பற்றிய நம்பிக்கையும் கவலையுமில்லாத புத்தர் நடந்து கொண்டதையும் கடவுளிடத்தில் நம்பிக்கை வைத்து அவரது அருள் பெற்றவர் என்பவரான சம்மந்தருடைய நடவடிக்கையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் கடவுளை நம்பினால்தான் யோக்கியனாக இருக்க முடியுமா? என்பதும் நம்பாதவன் எல்லாம் அயோக்கியனா என்பதும் விளங்காமல் போகாது.

இதை ஏன் வலியுறுத்த நேரிடுகிறது என்றால் நம்மைச் சுற்றியுள்ள மக்கள் படும் கஷ்டங்களும் நமக்கு வெளியில் உள்ள நாடுகளில் உள்ள மக்கள் நிலையும் நடவடிக்கையும் அவர் கண்ட அற்புதக் காக்ஷியையும் அறிந்து அந்நிலை பெற்று கஷ்டப்படுகிறவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்கின்ற கருத்துக் கொண்டதே ஒழிய வேறில்லை.

இந்நிலையில் குட்டிச் சமயக்காரர்கள் தங்கள் நிலை என்ன? அவைகளின் அவசியம் என்ன? அதனால் ஏற்பட்ட நன்மை என்ன? என்பவைகளை தாங்களே சற்று தங்களது நிடு நிலைமை அறிவைக் கொண்டு யோசிப்பார்களானால் அவர்களது மடமையும் இதுவரை தங்கள் வாழ்வு வீனானதும் ஒரு சிறிதாவது அவர்களுக்கு புலப்படாமல் போகாது.



வயதில் அறிவில் முதியார்—நாட்டின்
வாய்மைப் போருக்கு என்றும் இளையார் !
பெரியார் வாழியவே !

**அய்யா அவர்களின் 91-ம் பிறந்த நாளில்**
**தந்தைக்கும் தமிழகப் பெருமக்கட்கும்**
**எங்கள் நல்வாழ்த்துக்கள்!**

# கி. எத்திராஜலு செட்டியார் சன்

ஜெனரல் மர்ச்சண்ட்ஸ்

**43-44, பெரிய கடைத் தெரு, மாயூரம்**

சென்ற 60 ஆண்டுகளாக மாயூரத்தில் எல்லாவித ஷாப் சாமான்கள், அலுமினியப் பாத்திரங்கள் கிளாஸ் வேர், எனாமல் வேர், குடைகள், பனியன்கள், பெட்ரோமாக்ஸ் லைட்டுகள், ஸ்டவ்கள், அதற்குரிய தனி பாகங்கள் மற்றும் டாய்லட் சாமான்கள், ஸ்டேஷனரி சாமான்கள் முதலியன மலிவான விலையில் மொத்தமாகவும். சில்லரையாகவும் விற்பனை செய்து வருகிறோம். மக்கள் திருப்தியே எங்கள் குறிக்கோள் !

---

வாழ்க பெரியார் ! வளர்க பகுத்தறிவு ! !

**வணக்கத்திற்குரிய தந்தை பெரியார் அவர்களின்**
**91-வது பிறந்தநாள் விழாவில் நல்வாழ்த்துக்கள் !**

காரைக்காலில்:—இரயில் பஸ் நிலையங்களுக்கு அருகில் சகல நவீன வசதிகளும் கொண்ட தனி, குடும்ப அறைகள் நியாயமான வாடகைக்கு கொடுத்து, வருகிற பிரயாணிகளை "அய்யா" அவர்களின் விருப்பப்படி விருந்தினர்கள் போல் வரவேற்று உபசரித்து அனுப்பப்படுகிறது. வந்து தங்கி நல் ஆதரவு தர விரும்புகிறோம்.

# முருகன் தங்கும் விடுதி

22-சு. பாரதியார் வீதி,

**காரைக்கால்.**

உரிமையாளர் :

**சி. மு. சிவம், காரை வட்ட தி. க. தலைவன்.**




சந்திரன், அத்திரி என்ற முனிவனுக்கு அனுசூயை என்ற பெண்ணிடம் பிறந்த மகன்.

இந்த சந்திரனுக்கு தட்சப்பிரஜாபதி என்ற மன்னன் தனது புத்திரிகளான 27 நட்சத்திரங்களை மணமுடித்துக் கொடுத்தான்,

இந்த 27 பெண்களுடனே சந்திரனின் மோகதாகம் அடங்கவில்லை போலும்.

தனக்கு கல்வி அறிவு போதித்த பிரகஸ்பதியின் மனைவி தாரையை இந்தச் சந்திரன் சோர மார்க்கமாகக் கூடிப் பெற்ற புத்திரன் புதன்.

மற்றொரு காலத்திலே பாற்கடலை தேவர்கள் அசுரர்கள் உதவி கொண்டு கடைந்தனர். அப்போது தோன்றினான் என்பது மற்றொரு புராணக் கதை.

## சந்திரனுக்கு குஷ்ட நோயாம்!

சந்திரன் தனது இருபத்தேழு மனைவிகளில் ரோகினி என்பவளிடம் அதிக ஆசை காட்டினானாம். மற்ற பெண்கள் தங்கள் தகப்பனிடம் முறையிட்டனராம். மாமன் கொதிப்படைந்து மருமகனை சபித்தானாம்; உடற் குறை நோய்—குஷ்ட நோய் அடைய, 14 நாட்களில் உடல் குறைவதும், 14 நாட்களில் உடல் வளர்வதும் கிருஷ்ண பட்சம், சுக்கில பட்சமாம்.

(மதுரைத் தமிழ்ப் பேரகராதி பக்கம் 669)

## ஞானியா? ஞான சூனியரா?

தன் மனைவி சந்திரனுடன் கூடி புத்திரனைப் பெற்றது, தேவ குருவான திரிகால ஞானி பிரகஸ்பதிக்கு அவனுடைய திரிகால ஞானம் அறிவிக்கவில்லையாம். புதன் தன் புத்திரன் என்று பிரகஸ்பதியும், தன் புத்திரன் என்று சந்திரனும் வாதிட்டனராம். பிரம்மனிடம் தீர்ப்புக்குச் சென்றனராம், உண்மையறிந்த பிரம்மன், புதனை சந்திரனிடம் சேர்ப்பித்தானாம்.

(அபிதான சிந்தாமணி பக்கம் 807)

## நிரகணப் புரட்டு

தேவர், அசுரர் கடைந்த பாற்கடலிலிருந்து சாகாமல் உயிர் வாழச் செய்யும் அமுதம் என்ற மருந்து உண்டாயிற்றாம்.

தேவர்களுக்கு தாங்கள் மாத்திரமே சிரஞ்சீவிகளாக இருக்க பேராசை. அதனால் உதவி புரிந்த அசுரர்களுக்கு துரோகம் செய்யச் சதி செய்தனர்.

இதற்கு உடந்தை விஷ்ணு இது அக்கால ஆரிய மரபு போலும்—எதிரிகளைத் தங்கள் பெண்கள் மூலம் மயக்கி வெல்வது.

விஷ்ணு மனமோகினி அதாவது மனம் மயக்கும் அழகுப் பெண் அவதாரம் எடுத்தான்—பெண் வேடம் பூண்டான். கடைந்தெடுத்த அமுத கலசத்தை பெண் உரு கொண்ட விஷ்ணு கையில் வாங்கிக் கொண்டான். தேவர்கள் ஒரு புறமும் அசுரர்கள் ஒரு புறமுமாக வரிசையாக அமர்ந்திருந்தனர்.

மோகினி (விஷ்ணு) நளின, மோகன ஆடல் பாடல் நடத்தினாள் போலும்! அசுரர் மன மயக்க நிலை உற்றனர். அந்தச் சமயத்தில் விஷ்ணுப் பெண் தேவர்களுக்கு அமுதத்தை பரிந்தளித்தாள்.

இராகு, கேது ஆகிய அசுரர்களும் தேவர்கள்-விஷ்ணு ஆகியோரின் கூட்டுச் சதி மோசத்தை அறிந்தனர். பின் அவர்களிருவரும் தேவர் வேடம் பூண்டு தேவர்கள் அமர்ந்திருந்த வரிசையில் சந்திர சூரியர் மத்தியில் அமர்ந்தனர். தேவர்கள் மூவர்கள் தெய்வீக ஞான திருஷ்டியையும் மழுங்கடித்துவிட்டு விஷ்ணுவிடம் அமுதத்தை வாங்கிப் பருகினர்.

அண்மையிலிருந்த சந்திர, சூரியர் இவர்கள் (ராகு, கேது) அசுரர்கள் என்பதை அறிந்து கொண்டனர். அதனை மோகினி விஷ்ணுவிடம் சமிக்ஞையின் மூலம் தெரிவித்தனர். அறிந்து கொண்ட மோகினி (விஷ்ணு) அமுதம் பரிமாறும் சட்டுவத்தால் (கரண்டியால்) இராகு, கேது ஆகியோரின் கழுத்தை வெட்டிவிட்டாளாம். இராகு, கேது வாயில் (தலையில்) அமுதம் இருந்ததால் தலைகள் சாகவில்லையாம், உடல்கள் செத்துவிட்டன என்பது ஒரு கதை. இவர்கள் உடல்கள் நட்சத்திரமாகிவிட்டதாக மற்றொரு கதை.

தங்களைக் காட்டிக் கொடுத்த சந்திர, சூரியரைப் பழிவாங்கவே இவர்கள் ஆண்டுதோறும் அவர்களை விழுங்கி வருகிறார்களாம். அவர்கள் வாயுக்குள் போன சந்திர, சூரியர் அவர்களுக்கு உடல் இல்லாததால் கழுத்து வழியாக வெளியே வந்து விடுகின்றனராம். இதுதான் சந்திரசூரிய கிரகணமாம்.

(மதுரைப் பேரகராதி)

அபிதான சிந்தாமணியில் இராகு, கேது விழுங்கும் கதை இல்லை. மறைக்கும் கதையாக மாறிவிட்டது. அத்துடன் கரும் பாம்புகளாக இருந்த இராகு, கேதுக்கள் செம்பாம்பாகிவிட்டனராம். இந்த இராகுவும், கேதுவும் விப்பிரசித்தி என்றவனுக்கு சிம்மிகை என்னும் பெண்ணிடம் பிறந்தவர்கள் என்பது புராணக் கதை. சந்திர, சூரியருக்கு இராகு, கேதுக்களால் ஏற்படும் பீடைதான் கிரகணம் என்கிறது பேரகராதி!


# ANAR FABRICS

**Trade Mark Registration No. 214818**

டெலிபோன் நெ. 172 தபால் பெட்டி நெ. 77

கைக்குட்டை பெட்ஷீட்டுகள், மேஜை விரிப்புகள், தலையணை உறைகள். காட்டன் அணிகள் முதலியன-

சாயம் உத்திரவாதம், திடம் சரக்குகள் - பலவித டிசைன்களிலும் சைஸ்களிலும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்கள்:

**K. முத்துசாமி கவுண்டர் அண்டு கோ**

நெசவுச் சாலை,

செங்குந்தபுரம், கரூர்.

# விஞ்ஞானத்தில் சந்திரன்



"என்றுமில்லாததுபோல், இன்று, தான் நினைத்ததையெல்லாம் செய்து முடிக்கும் ஆற்றல் மனிதனுக்கு உண்டு. எதைச் செய்ய நினைக்கிறானோ, அதைச் செய்து முடிக்க மனிதனால் முடியும்."

அப்போலோ-8ன் கமாண்டர்-
ப்ராங்க் போர்மேன்.

அமெரிக்காவின் (NASA) நேஷனல் ஏரோநாடிக்ஸ் அண்ட் ஸ்பேஸ் அட்மினிஸ்டிரேஷன் குழு, ஆராய்ந்து மனிதன் சந்திர மண்டலத்துக்குப் போக ஏற்பாடு செய்தது.

இயந்திரங்கள் மற்ற தேவைப் பொருள்களுடன், விஞ்ஞானிகள், தொழிலாளிகள், வானவெளி வீரர்கள், சிக்னல்மென் டெலிவிஷன் இயக்குனர்கள் உள்பட 3,50,000 பேர் இந்த அப்போலோ பயணத்துக்காக இரவும் பகலும் உழைத்திருக்கிறார்கள். (மொத்தம் 8 ஆண்டுகள்)

15-7-69 புதன் கிழமை இரவு 7-02 மணிக்கு அமெரிக்காவின் ப்ளாரிடா மாகாணத்திலுள்ள கென்னடி ராக்கட் முனையிலிருந்து அப்போலோ-11 வானத்தில் செலுத்தப்பட்டது.

சாடர்ன்—5 என்ற ராக்கட் 36 மாடி உயரமும், மொத்தம் 324·2 டன் எடையுள்ளது. கென்னடி முனையில் இதனைக் காண 10 லட்சம் பேருக்குமேல் குழுமியிருந்தனர். தவிர 250 லட்சம் பேர், தத்தம் வீடுகளிலிருந்தபடியே டெலிவிஷனில் கண்டனர். சாடர்ன்—5 வானை நோக்கி கிளம்பும்போது வெண்மை, ஆரஞ்சு நிறம் கலந்த புகை மண்டலம் எழும்பியது. இது பென்சிலைப் போன்ற உருவமுள்ள ராக்கட். இதனுடன், கட்டளைக் கலன் (அப்போலோ-11), சர்வீஸ் கலன் (கொலம்பியா), மற்றும் சந்திரக் கலன் (ஈகிள்) ஆகியவை இணைக்கப்பட்டுள்ளது.

கட்டளைக் கலனில் தான் வானவெளி வீரர்கள் (ஆம்ஸ்டிராங், ஆல்டிரின், காலின்ஸ்) தங்கி வேலை செய்தனர்.

சர்வீஸ் கலனில் மின்விசை சப்ளை, செயற்கை சீதோஷ்ண நிலையுண்டாக்கும் அவசியப் பண்டங்கள் இருந்தன.

சந்திரக் கலன் அல்லது "சந்திர டாக்சி" தான் இரு வீரர்களை சந்திரனுடைய மேல் தளத்துக்கு கொண்டு செல்வது.

ராக்கெட்டின் 5 எஞ்சின்களும் வெடித்து 3,40,000 கிலோ எடையை (ஒளியின் வேகத்தைவிட அதிகம்) வேகமாக உந்தித் தள்ளியது 10 வினாடியில்.

முதல்கட்டம்:—2½ நிமிடத்தில் ராக்கெட் 40 மைல் உயரம் சென்று, அடிப்பாகம் பிரிந்து வானவெளியிலிருந்து அட்லாண்டிக் கடலில் வந்து விழுந்து விடுகிறது.

இரண்டாவது கட்டம்:--அப்போலோ-11. அட்லாண்டிக் கடலுக்கு மேலே ஆப்ரிக்கா உள்ள திசை நோக்கி உந்தப்பட்டு, எலக்ட்ரானிக் முறையில் சரியான நிலைக்கு

கொண்டு வரப்பட்டது. 60 மைல் உயரம் போனதும், ஒரு அறிவிப்பின் மூலம், (லாஞ்ச் எஸ்கேப்டவர்) உந்தும் இயந்திரம் பூமிக்கே திரும்பி வந்து விட்டது.

6 நிமிடங்களில், 40,000 மைல் வேகத்தில் 114·5 மைல் உயரத்துக்குப் போனதும் இரண்டாவது கட்டம் முடிகிறது, (நேரம் இரவு 7-14 மணி)

மூன்றாவது கட்டம்:—சந்திர மண்டலத்துக்குள் நுழைய வேண்டிய வேகத்தைக் கொடுக்க, தானியங்கும் வழி காட்டிக் கருவியொன்று 2 மணி 45 நிமிடங்களில் அப்போலோவை உந்தி தள்ளிவிட்டு, இயந்திரத்தை நிறுத்தி விடுகிறது. மற்ற இரு கட்டங்களில் நிகழுவது போல், பூமியில் விழாமல் சந்திரக் கலன்களுடனேயே ஒட்டிக்கொண்டு தானியங்கிக் கருவி பயணம் செய்கிறது. 12 நிமிடங்களுக்குள் இந்த மூன்றாவது கட்டம் நிகழ்ந்து விடுகிறது.

இதுவரை வானவெளி வீரர்களுக்கு எந்த வேலையுமில்லை. ஹாஸ்டனிலுள்ள கன்ட்ரோல் மிஷன்தான் ராக்கட் பயணத்தின் பாதை முதலிய புள்ளி விவரங்களை தெரிவிக்கிறது. பூமி மண்டலம் சந்திர மண்டலம் இரண்டும் சேர்ந்திருக்கும் இடத்தைக் கடப்பதுதான் ஆபத்தான கட்டம். முதலில் அதிகமான வேகம் தேவை, அடுத்து மிகத் துல்லியமான வளைவுப் பாதையில் குறி தவறாமல் செலுத்த வேண்டும், மூன்றாவதாக இவ்விரண்டு காரியங்களும் கண்ணிமைக்கும் நேரத்தில் நடைபெற வேண்டும். இப்படி சந்திரனின் ஈர்ப்புப் பாதைக்குச் செல்ல மணிக்கு 24,532 மைல் வேகம் தேவை. கட்டளைக்கலனும் சர்வீஸ்கலனும் பிரிந்து, சர்வீஸ் கலன் திரும்பிய நிலையில் மறுபடி இணைந்து விடுகிறது. இரண்டுக்குமிடையே குழாய் பாதை வழியாக ஆம்ஸ்டிராங்கும், ஆல்டிரினும் சர்வீஸ் கலனுக்கு (கொலிம்பியா) வந்து விடுகின்றனர்.

காலின்ஸ் மட்டும் தனியாக கட்டளைக் கலனில் சந்திரனை சுற்றிக் கொண்டிருந்தார். பதினோராவது தடவை சுற்றும்போது கட்டளைக் கலனிலிருந்து இரவு 11-17 மணிக்கு பிரிந்தது கொலம்பியா என்ற சர்வீஸ் கலன். (இனி அது ஈகிள் என்று அழைக்கப்படும்.) இரண்டும் 32 மைல் முதல் 60 மைல் இடைவெளியில் ஒன்றாக சிறிது நேரம் பறக்கின்றன. பிறகு ஆம்ஸ்டிராங் ஈகிளிலுள்ள "இறக்கு எஞ்சினை முடுக்கியதும் அது மெதுவாக பிரேக் போட்ட நிலையில் 11½ நிமிடங்களில் சந்திர மண்ணில் இறங்கி நின்றது. (20—7—69 தேதி நேரம் இரவு 10-49,) விண்வெளி வீரர்கள் நட்சத்திரங்களையும் விண்மீன்களையும் உற்று நோக்கி ஆராய்ந்து அதை ரத்தினச் சுருக்கமாக பூமிக்கு அனுப்பினர். டார்ச்லைட் நழுவி பளு இழந்த நிலையில் மிதந்தது. மற்றும் உணவுப் பண்டங்களின் அலமாரி ஆகியவற்றை காலின்ஸ் டெலிவிஷனில் காட்டினார்.

ஈகிள் திறக்கப்படுவதற்கு 12 தாழ்ப்பாள்கள் இருக்கின்றன. இந்த கட்டத்தில் வெறும் புள்ளி விவரங்களே பரிமாறப்பட்டு கம்ப்யூட்டரில் செலுத்தப்பட்டது. எதிர் பாராத இடையூறுகள் ஏற்பட்டால் அதிலிருந்து மீள கம்ப்யூட்டர் தயாராக வழி வகுத்துவிடும். ஈகிளின் 8 அடி உயரமுள்ள 4 கால்களின் முனைகளிலும் கிண்ணம் போன்ற அமைப்புகள் வீரர்களுக்கு தகவல் கொடுக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

முதலில் ஆர்ம்ஸ்டிராங் 21-7-69 காலை 8-09 மணிக்கு கதவை திறந்தார். 9 படிகள் இறங்கி (17 நிமிடங்களாயிற்று) சரியாக 8 மணி 26 நிமிடம் 20 வினாடிக்கு சந்திரனில் தனது இடது காலை முதன் முதலாக வைத்தார். இதனை அவர், "எனக்கு இது சாதாரண காலடிதான். ஆனல் மனித சமுதாயத்து ஒரு மாபெரும் பாய்ச்சல் ஆகும்" என்று வருணித்தார். 20 நிமிடங்கள் கழித்து ஆல்டிரின் இறங்கி வந்தார்.

ஒருவருடன் ஒருவர் பேச விசேஷ ஒலி பெருக்கிக் கருவிகள் அவர்களுடைய உடைகளில் பொருத்தப்பட்டிருந்தன. வானம் கறுப்பு நிறமாக காட்சியளித்தது. ஏனெனில் பூமியின் காற்று மண்டலத்தில் நிறத்தைக் காட்டும் வாயுக்கள் இங்கில்லை. சந்திரனின் எல்லை வளைவானது சில மைல் தூரத்துக்குள்ளாகவே யிருப்பதாகவே தெரிகிறது.

அங்கிருந்து பார்த்தால் பூமி ஆகாயத்தில் தொங்குவதுபோல் தெரிகிறது. சந்திரனை விட 4 மடங்கு பெரிதாகவும், 80 மடங்கு நீல நிற வெளிச்சத்துடன் பிரகாசமாகவும் பூமி சுழல்வது நன்றாகத் தெரிகிறது. சந்திரனில் நடப்பது விசித்திரமாக தத்தி, தத்தி நடப்பதாக இருந்தது. சந்திரனில் இருந்தபோது வீரர்களின் உடல்நிலை, இருதயத்துடிப்பு பற்றிய விவரங்கள் விசேஷ கருவிகள் மூலம் பூமிக்கு கிடைத்து வந்தது. ஜனாதிபதி நிக்சன் அவர்களுடன் ரேடியோ டெலிபோனில் பேசி பாராட்டினார்.

நினைவுச்சின்னத்தை இறக்கி வைத்தார்கள். அதில் எழுதியிருந்ததாவது. "இங்குதான் பூமியிலிருந்து வந்த மனிர்தகள் முதன் முதலாக நிலாவில் அடி எடுத்து வைத்தார்கள். வந்த காலம் 1969-ம் ஆண்டு ஜூலை மாதம். மனிதவர்க்க சார்பில் சமாதான தூதுவராக வந்தோம்" குண்டூசியின் தலையளவுள்ள சிறிய எழுத்துகள் கொண்ட வாழ்த்துச் செய்திகள் ஒரு சிறு கண்ணாடி குப்பியில் "பூமியிலிருந்து வந்த வாழ்த்து 1969" என்று ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்டு சந்திரனில் வைக்கப்பட்டது. ஆர்ம்ஸ்டிராங்கும ஆல்டிரினும் சந்திர மண், கல்ஆகியவற்றை தோண்டி எடுத்து பைகளில் நிரப்பி ஈகிளில் வைத்தார்கள். பின்னர் மூன்று விஞ்ஞான கருவிகளை சந்திரன்மீது வைத்தனர். ஒன்று சின்னஞ்சிறு நில அதிர்வு



நிலையம். சந்திரனில் ஏற்படும் நில நடுக்கத்தைப்பற்றி பூமிக்கு அறிவிக்கும். இன்னொன்று லேசர் கண்ணாடி இது லேஸி ஒளிக்கற்றைகளை பூமிக்கு திரும்ப பிரதிபலித்து, பூமிக்கும் சந்திரனுக்கும் உள்ள தூரத்தை அங்குலத் துல்லியமாக அளக்க உதவும். மூன்றாவது கருவி காற்று இல்லாத சந்திரன் மீது சூரியன் வீசும் நுண்துல்கனை பிடித்துக் கொள்ளும். இதனை வீரர்கள் பூமிக்கு கொண்டு வந்து விஞ்ஞானிகளிடம் ஆராய்ச்சிக்காக கொடுப்பார்கள். மொத்தம் 2 மணி 47 நிமிடம் 14 வினாடிகள் சந்திரனில் இருவரும் இருந்தனர். (இந்த ஒவ்வொரு நிமிடத்துக்கும் 112·5 கோடி ரூபாய் வீதம் செலவாகியிருக்கிறது.) சந்திரனில் இருக்கும் நேரத்தில் மூச்சு விடுவதற்காக அடைக்கப்பட்டிருந்த பிராணவாயுவில் பாதிதான் செலவாகியிருந்தது. இதேபோல் விண்வெளி உடையில் குளுமை யூட்ட நிறப்பப்பட்ட தண்ணீரும் மிச்சமாகியிருந்தது. சந்திரனில் மண் கரித்தூள் போல் இருக்கிறது. 3 அங்குலத்துக்கு மேல் மண்ணை தோண்ட முடியவில்லை. சிறியதும் பெரியதுமான மலைகளும், பள்ளங்களும், எரிமலை குழம்பு படிந்த மண்ணும் தானிருக்கிறது. 100க்கு 2 முதல் 4 வரை தண்ணீர் இருக்கலாம்.

நான்கு கால்களுடன் கூடிய ஈகிளின் அடிப்பாகம், தொட்டி மற்றும் இறங்கும் விசை எஞ்சின்களை சந்திரனிலே விட்டுவிட்டு, இவைகளையே உந்தி எழும்பும் தளமாகப் பயன்படுத்திக் கொண்டு விண்வெளி வீரர்கள் கொலம்பியாவில் மேலே கிளம்பினார்கள். அடுத்து வெடிக்கும்போது வட்டமாகச் சுற்றும் பாதைக்கு அது வந்து விட்டது. கொஞ்சம் கொஞ்மாக கொலம்பியாவும், அப்பாலோ (கட்டளைக் கலன்)வும் ஒரே உயரத்தில் பறக்கும் நிலை வந்ததும் இரண்டும் இணைந்துவிட்டன. குழாய் வழி மூலமாக ஆல்டிரின் ஆர்ம்ஸ்டிராங் இருவரும் அப்போலோவுக்குள் வந்து காலின்சுடன் சேர்ந்து கொண்டனர். பிறகு "கொலம்பியா"வை சந்திரனை சுற்றும் பாதையிலேயே கழற்றி விட்டு விடுகின்றனர். கடைசியாக அப்போலோ 11 (கட்டளைக் கலன்) பூமியை நோக்கி செலுத்தப்பட்டது. மீண்டும் பூமியின் காற்று மண்டல எல்லையைக் கடக்கும் ஆபத்து உள்ளதல்லவா? இப்போது சிறுசிறு உந்தித் தள்ளும் விசைகள் மட்டுமிருப்பதால் தேவையான வேகம் உண்டாக்கி சந்திரனின் இழுப்புச் சக்தியிலிருந்து விடுபட்டு வருவது முக்கிய நிகழ்ச்சியாகும். (முக்கிய இயந்திரத்தை அதிகமாக இயங்கவிட்டால் ரொம்பவும் தாழ்வாக பறந்து கீழே இறங்காது. ரொம்பவும் குறைவாக இயக்கினால் பூமியை நேரக்கி திரும்பி வந்து காற்று மண்டலத்தில் வேகமாக நுழைந்து எரிந்து போகும். அல்லது திசை தப்பிச் சென்று அண்டத்தில் மாயமாய் மறைந்துவிடும்.) மணிக்கு 24500 மைல் வேகத்தில் பூமியின் காற்று இறுக்கும் சக்தியைக் கடக்க வேண்டும். அப்போது உலைக்களத்தில் 16 நிமிடமிருந்தால் எவ்வளவு சூடு இருக்குமோ அவ்வளவு சூடு உண்டாகும். இதற்குப் பாதுகாப்பாக அப்போலோவின் சுவர்கள் சூட்டைத் தணிக்கும் பொருள்களால் மூடப்பட்டிருந்தது, இந்த ஆபத்தை வீரர்கள் மூவரும் கடந்து வந்து விட்டனர். பிறகு அப்போலோவின் வேகத்தைக் குறைக்க 450 மைல் உயரத்தில் இரண்டு பாராசூட்கள் தானாகவே வெளியே நீட்டிக்கொண்டன.

200 மைல் உயரம் வந்ததும் முக்கியபாராசூட்கள் விரிக்கப்பட்டு அப்போலோ வீரர்கள் பசிபிக் கடலில் ஹாவாய் தீவிலிருந்து 900 மைல் தூரத்தில் 24-7-69 இரவு 10-19 மணிக்கு மெதுவாக வந்து இறங்கினார்கள். திட்டமிட்ட நேரத்துக்கு 45 நிமிடங்கள் முன்னதாகவே திரும்பி வந்துவிட்டார்கள்.

சந்திரனில் ஒரு இரவு என்பது சுமார் 14 நாட்கள், (மைனஸ் 250 டிகிரி பாரன்ஹீட் குளிர் இருக்கும்) ஒரு பகல் என்பதும் 14 நாட்கள் (250 டிகிரி பாரன்ஹீட்) அங்கு பகலுக்கும் இரவுக்கும் சீதோஷ்ணங்களுக்குமிடையே தரத்தில் மாறுதல்கள் கிடையாது. சந்திரன் பூமியைச் சுற்றிவரும் ஒரு விண்வெளிக் கோள். 27½ நாளுக்கொரு முறை அது பூமியை சுற்றுகிறது.

# பெரியார் பிரசாரத்தின் பெரும் பயன்!

## - ஒரு உதாரணம் -

தந்தை பெரியார் அவர்களின் 50 ஆண்டு அறிவுப் பிரசாரம் தமிழகத்தில் எவ்வளவு பெரும் விழிப்புணர்ச்சியை—மாறுதலை— உண்டாக்கி இருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணம்.



பெரியார் தொண்டர் புதுவைத் தோழர் திரு. ப. கனகலிங்கம் அவர்களது தந்தை திரு. பசவலிங்கனார் அவர்கள் வைதீகத் துறையில் ஊறித் திளைத்த முதியவர்— பழுத்தசைவர். பெரிய புராணம் திருவிளையாடல் புராணம், பாரதம், இராமாயணம் முதலியவற்றை 'உபன்னியாசம்' செய்தவராவார்.

இவர் தமது 75 வயதில் அய்யாவின் பேச்சுகளையும், விடுதலை எழுத்துக்களையும் கேட்டும்—படித்தும் வர ஆரம்பித்து அடியோடு தனது வைதிகக் கோலத்தை மாற்றிக் கொண்டு ஒரு பகுத்தறிவாதியாக, நெற்றிப் பூச்சு, மார்புலிங்கம், வெள்ளிக் கவசம்— அனைத்தையும் உதறி எறிந்துவிட்டு கருஞ்சட்டை வீரராகி விட்டார்

தன் வாழ்நாளை மக்களைத் திருத்தப் பயன்படுத்தாமல் போய் விட்டோமே எனச் சிந்தித்து, தனது வாழ்வுக்குப் பிறகு தனது உடல் மருத்துவப் படிப்புத் துறை மாணவர்களுக்கு பரிசோதனைக்குப் பயன்படட்டும்! எரிக்கவோ, புதைக்கவோ வேண்டாம் என்று முடிவெடுத்து தனது மகன் கனகலிங்கத்திற்கு ஆணையிட்டு 'உயில்' எழுதி வைத்தார்.

இவர் 1962 டிசம்பர் முதல்தேதி மறைந்தார். அன்று அவரது விருப்பப்படி, மருத்துவமனை அதிகாரிகள் ஊசிப்போட்டு, சடலத்தைப் பாதுகாத்து எடுத்துச் சென்றனர். தந்தை பெரியார் அவர்களும் வந்திருந்து மறைந்த முதியவருக்கு மரியாதை செலுத்தி அவரது பகுத்தறிவுணர்ச்சியைப் பாராட்டினார்.

தோற்றம் 3-12-1878 மறைவு 1-12-1962


பெரியார் 91-ம் ஆண்டு விழாவிற்கு எமது வாழ்த்துக்கள்!

**திலகா இரும்புத் தொழிற்சாலை & ஸ்டீல் பர்னிச்சர்**

65, A, P. தங்கவேலு செட்டியார் வீதி. ஈரோடு.3.

பிராஞ்சு.— முருகன் மோட்டார் ஒர்க்ஸ், 104, பார்க்ரோடு.

எங்களிடம் ஸ்டீல் பீரோக்கள், டேபிள்கள், சேர்கள், சோபாசெட்டுகள், கட்டில்கள், குழந்தைகளுக்குத் தொட்டில்கள் அலமாரிகள் இன்னும் ஸ்டீல் சம்பந்தமான வேலைகளும் ஆர்டரின்பேரில் செய்துதரப்படும்.

உரிமையாளர்கள் :—P. சுப்பையா & பிரதர்ஸ். ஈரோடு.

Tel : KARTHIKAI

Phone Office : 162
,, Resi 483

பெரியார் பல்லாண்டு வாழ்க!

# ஸ்ரீ கார்த்திகேயன் & கோ.,

இரும்பு, பெயிண்ட் வியாபாரம்
ஈரோடு-1.

எங்களிடம் கட்டிடங்களுக்கு தேவையான கர்டர்கள்,
ஆங்கில்கள் பட்டைகள், சதுரக்கம்பிகள், சேனல்கள்,
திரனைக்கம்பிகளும், ஹார்டுவேர் சாமான்களும், சேனிடரி
சாமான்களும் குறைந்த விலையில் கிடைக்கும்.

ஸ்டாக்கிஸ்ட்:
''எவரஸ்ட்'' அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட்
ஷீட்டுகள் & பைப்புகள்.
A. C. C. சிமெண்ட்.

வாழ்க பெரியார்!
எமது வாடிக்கையாளர்களுக்கும், அன்பர்களுக்கும்
பெரியார் பிறந்த தின நல் வாழ்த்துக்கள்.

# ராஜகுரு மரம் அறுவை மில்
# ராஜகுரு டிம்பர் டிப்போ

மரம், ஓடு, பெயிண்டு & இரும்பு வியாபாரம்
திருத்துறைப்பூண்டி.

எமது இணை ஸ்தாபனங்கள்:

**T. A. L. C. குருசாமி நாடார் & கோ.**
மரம், ஓடு, பெயிண்டு, சிமிண்டு & இரும்பு வியாபாரம்.
அறந்தாங்கி.

**T. A. L. C. குருசாமி நாடார் & கோ.**
மரம், ஓடு, பெயிண்டு, சிமிண்டு & இரும்பு வியாபாரம்.
இராமநாதபுரம்;

# கலைகள்

**தந்தை பெரியார்**

மத சம்பந்தமான நூல்களின் ஆபாசங்களை நாம் எடுத்து வெளிப்படுத்துகின்ற காலத்தில் அதற்குச் சரியான சமாதானம் சொல்ல யோக்கியதை இல்லாத நமது பண்டிதர்கள் தங்கள் பழைய கலைகள் என்னும் சாக்கின் பேரில் அதன் நிழலில் போய் மறைந்து கொண்டு ''சுயமரியாதை இயக்கத்தார் நமது அருமையான பழைய கலைகளை நாசம் செய்கிறார்கள்'' என்று பழி சுமத்தி விஷமப் பிரசாரம் செய்வதன் மூலமே அவற்றைக் காப்பாற்றப் பார்க்கிறவர்கள். ஆகவே இது அவர்களுடைய நியாயமற்ற தன்மையையும், பயங்காளித் தன்மையையும், வேறுவழியில் சமாதானம் சொல்ல சக்தியற்ற தன்மையையுமே காட்டுவதாகின்றது.

கோவில்களை குற்றம் சொல்லி, அதில் உள்ள விக்கிரகங்களின் தத்துவ ஆபாசங்களை எடுத்துக்காட்டி இம்மாதிரியான காட்டுமிராண்டித் தனமான உணர்ச்சிகளை மக்களுக்கு கடவுள் உருவின் பேரால் வளர்க்கலாமா என்றும், இந்த ஆபாச தத்துவத்திற்காக இவ்வளவு பணச்செலவும், நேரச் செலவும் செய்யலாமா? என்றும் கேட்டால், 'விக்கிரக உருவத்தை விட்டு விடுங்கள் அதன் ஓவியத்தைப் பாராட்டுங்கள்'' என்று ஓவிய நிழலில் புகுந்து ''அவைகள் அவசியம் இருக்க வேண்டும்'' என்றும் ''அவைகள் அழிந்தால் இந்திய ஓவியக்கலை அழிந்து விடும்'' என்றும் ''சாமி பக்திக்காக தாங்கள் கோவில்களைக் காப்பாற்றுவதில்லை'' என்றும், ''ஓவியக்கலை அறிவுக்காக கோவில்கள் காப்பாற்றப்பட வேண்டும்'' என்றும் சொல்லுகின்றார்கள். இது போன்றே புராணங்களைப் பற்றிய ஆபாசங்களை எடுத்துச் சொல்லும் போதும் இதே பண்டிதர்கள் ''புராணக்கலைகளை நாங்கள் மதிப்பதில்லை'' என்றும், 'அப்புராணங்களிலுள்ள இலக்கண இலக்கியக் கலைகளையே காப்பாற்ற முயற்சிக்கிறோம்'' என்றும், 'கம்பன் கவிச்சுவையும் சேக்கிழார் தமிழ்ச்சுவையும் இவ்வுலகில் வேறு எங்கும் காணமுடியாது'' என்றும், ''ஆதலால் அவைகள் காப்பற்றப்பட வேண்டும்''என்றும் பேசுகிறார்கள்.

ஆகவே நம்முடைய பண்டிதர்களின் ஓவியக்கலையும், காவியக்கலையும் போகின்ற போக்கைப் பார்த்தால் அவர்களுக்குள்ள பகுத்தறிவுக்கலை எவ்வளவில் இருக்கிறது என்பது ஒருவாறு தானாகவே விளங்கும். மக்களுக்கு ஓவியம் வேண்டுமானால் இந்திய கோவில் ஓவியமும, இந்துக் கடவுள்கள் ஓவியமும். கடுகளவு அறிவுடைய மனிதனும் ஒப்ப முடியாத மதிக்க முடியாத ஓவியங்கள் என்பதோடு, அவை மனிதத்தன்மையும், பகுத்தறிவும் உடைய நாகரிக மக்களால் உண்டாக்கப்பட்ட ஓவியம்'' என்று சொல்ல முடியாததான நிலையில் அவை இருப்பதையும்

காணலாம். எப்படியெனில், இந்திய ஓவியம் என்பது இந்து சம்பந்தமான கடவுள் புராணம் ஆகியவைகளைப் பற்றியதைத் தவிர, தனிப்பட்ட இயற்கை அறிவைப் பற்றியது மிக மிக அருமை என்று சொல்ல வேண்டும். அது மாத்திரமல்லாமல் அவைகளில் இயற்கைக்கு முரண்பட்டதே 100க்கு 99 ஓவியங்கள் என்று சொல்ல வேண்டும்.

சாதாரணமாக மனிதனும் மிருகமும் புணர்வதும், மிருக முகத்துடன் மனிதன் இருப்பதும், மிருகங்கள் பறப்பதும் மிருகங்கள் மீது அளவுக்கு மீறின மக்கள் இருப்பதும், பட்சிகள் மீது மக்கள் இருப்பதும், மக்கள் பறப்பதும், நாலு கைகளும், ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, அய்ந்து, ஆறு முகங்களும், சிறிய உருவத்தின் மீது பெரிய உருவங்கள் இருப்பதும். தாமரை புஷ்பத்தின் மீது ஒரு பெண் நிற்பதும், இந்த மாதிரியாகவும், இன்னமும் இதைவிட எத்தனையோ பொருத்தமற்ற, சாத்தியமற்றதான உருவங்களே இன்று ஓவியமாகக் கருதப்படுகின்றன. அவைகளை அறிவதால் மூடநம்பிக்கைகள் தான் வளரும். சாதாரணமாக மேல்நாட்டு ஓவியங்களைப் பார்த்தால் "இது ஓவியமா? உண்மைத் தோற்றமா?" என்று மருளும்படியாகவும் அவைகளுடைய சாயல் முதலியவைகளிலிருந்தே குணம், காலம், இடம், நடவடிக்கைகள் முதலியவைகள் தெரிந்துகொள்ளும்படியாகவும் அவைகள் பிரத்தியட்சமாக இயங்கிக் கொண்டிருப்பது போலவும் இயற்கைக்கும் அறிவுக்கும் ஏற்றபடி எவ்வளவோ அருமையான காரியங்கள் வெகு எளிதில் மிகச் சாதாரணத் தன்மையில் அறியும்படியாகவும் நாமே பார்த்த மாத்திரத்தில் சுலபத்தில் பழகிக் கொள்ளும்படியாகவும், இருப்பதைக் காணலாம். இவற்றிற்காக ஒரு தம்பிடியாவது செலவில்லாமலும் பூஜை, நைவேத்தியங்கள் செய்வதன் மூலம் நேரத்தையும், அறிவையும் பறிகொடுக்காமலும் அனுபவிக்கலாம்.

ஆகவே அப்படிப்பட்ட அருமையான ஓவியங்களையும் சிற்பங்களையும், பதுமைகளையும் விட்டுவிட்டு அநாகரிகமும், காட்டுமிராண்டித்தனமான, மிருகப்பிராயமும் கொண்டதான உருவங்களை வைத்துக்கொண்டு அவைகளுக்கு பணம், காசு, நேரம் ஆகியவைகளைச் செலவு செய்து, பூஜை முதலியது செய்து கீழே விழுந்து அவைகளிடம் பக்தியையும் காட்டிக்கொண்டு அவைகளை ஓவியக் கலையைக் காப்பாற்றுவதற்காக இப்படிச் செய்கிறோம் என்றால் பகுத்தறிவும், யாக்கிய குணமும் படைத்த மனிதர்களின் செய்கையாகுமா? பேச்சாகுமா? என்று கேட்கிறேன்.

இதுபோலவே காவியங்கள் என்பவைகளை எடுத்துகொண்டோமேயானால் அதன் ஆபாசக் களஞ்சியங்களை அளவிட்டுச் சொல்ல முடியாது. நமது மக்களில் 100-க்கு 90 பேரே எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள். அவர்களில் 1000க்கு ½ பேரே காவிய இலக்கண இலக்கியங்களை அறியக்கூடியவர்கள். அவர்களில் எத்தனையோ ஆயிரத்துக்கு ஒருவரே புராணங்களை வெறும் இலக்கியமாக மாத்திரம் எண்ணுபவர்கள் அல்லது அனுபவிப்பவர்கள், என்பதாகக் கணக்கெடுக்கலாம்

ஆகவே இவர்களைத் தவிர மற்ற கோடிக் கணக்கான மக்கள் அவற்றை என்னவாக கருதுகின்றார்கள்? அதைப் பார்த்தபின் கேட்டபின் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்கிற விஷயம் இந்தப் பண்டிதர்களுக்கு தெரிகிறதா என்று கேட்கிறோம்.

கம்ப ராமாயணத்தில் கவியழகையும், சேக்கிழார் புராணத்தின் தமிழ் அழகையும் பண்டிதர்கள் எடுத்துச் சொல்லும் பொழுதே புத்தகத்தின் முன் பழம், தேங்காய் உடைத்து, கற்பூரம் பற்றவைத்து பூஜை செய்து கீழே விழுந்து கும்பிட்டபிறகு, 'ஸ்ரீமதே ராமாநுஜாய நமஹ' என்றும் 'நமப் பார்வதிபதே-அர கர சங்கர மகாதேவா' என்றும் சொல்லிவிட்டுப் பிறகு கண்மூடி கைகூப்பி, காப்புச் சொல்லி, அருள் உண்டாக்கிக் கொண்டு பிறகு தான் கவி படித்து பொருள் சொல்ல ஆரம்பிக்கிறார்கள். அதையும் ''சில கடவுள் கதை நாம் காதில் கேட்டால் மோட்சம்; அதை நம்பாவிட்டால் நரகம்'' என்று சொல்லி ஆரம்பிக்கிறார்கள். அதுவும் யார் முன்னிலையில் எப்படிப்பட்ட ஆண், பெண் முன்னிலையில் என்பதைப் பற்றி நாம் விவரிக்க வேண்டியதில்லை.

பெரிதும் பேராசைபிடித்த ஒழுக்கங்களைப் பற்றி கவலையில்லாத காமாந்தகார மக்கள் முன்னால்.

ஆகவே இந்நிலையில் புராணங்கள், காவியங்கள் ஆகியவைகள் இலக்கியத்திற்கும், இலக்கணத்திற்கும் பயன்படுகின்றனவா — பயன்படுத்தப்படுகின்றனவா? அல்லது மக்களை இலக்கண, இலக்கிய அறிவற்ற மக்களாக்கப் பயன்படுத்தப்படுகின்றனவா?

இந்த இடத்தில் நான் முக்கியமாக குறிப்பிடுவது என்னவென்றால், நமது பண்டிதர்கள் என்பவர்களின் வயிற்றுப் பிழைப்புக்கும் பெரிதும் புஸ்தக வியாபாரத்திற்கும் வாழ்க்கை நிலைமைக்கும் இம்மாதிரி காட்டுமிராண்டித்தனமான, அநாகரீகமான காவியங்களும் ஓவியங்களுமல்லாமல் வேறுவகை ஒன்றில்லாமல் போனதால் அவர்களின் இத்தகைய மோசமான பொய்யையும், புரட்டையும் வஞ்சத்தையும் சொல்லிக் கொண்டு இவைகளைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் வந்துவிட்டது.

ஆகவே, இம்மாதிரி ஆபாசமும், அநாகரீகமானதுமான காவியமும், ஓவியமும் அழிக்கப்பட வேண்டுமானால் நமது புராணப் பண்டிதர்கள் என்பவர்களுடைய வயிற்றுப் பிழைப்புக்கு, வாழ்க்கைச் சவுகரியத்திற்கு ஏதாவது ஒரு வழி கண்டு பிடித்துக் கொடுக்க வேண்டியது பகுத்தறிவையும், நாகரீகத்தையும் விரும்பும் பொது ஜனங்களின் கடமையாக இருக்கின்றது.

மேல் நாட்டுப் பண்டிதர்களுக்கு அவர்களுடைய கல்வியானது பகுத்தறிவை உண்டாக்கக் கூடியதாக இருப்பதால் அவர்கள் அநாரீகப் பழங் காவியங்களுடையவும் ஓவியங்களுடையவும் உதவி சிறிதும் இல்லாமலேயே உயிர் வாழ சவுகரியமடைந்திருக்கிறார்கள்.

ஆனால் நம்முடைய பண்டிதர்கள் பரிதாபகரமான நிலையில் இருப்பதால் அவர்களைக் குற்றம் சொல்வதிலும் பயனில்லை.

---

## அய்யா அரிச்சுவடி

1. அடுத்த ஜென்மம் என்பது—முடிச்சுமாறிகள் பேச்சு.
2. ஆரியர் சூழ்ச்சி—அறிவு வீழ்ச்சி.
3. இதிகாசமென்பது—மதிமோச விளக்கம்.
4. உண்மையைச் சொல்ல— ஒரு போதும் தயங்காதே!
5. ஊழ்வினை என்பது—ஊக்கத்தைக் கெடுப்பது.
6. கருமாந்திரம் என்பது— காசு பறிக்கும் தந்திரம்.
7. கல்லைத் தெய்வமென்று—கற்பிக்க வேண்டாம்.
8. கோத்திரமென்பது—குலத்தைப் பிரிப்பது.
9. சனாதன தர்மம் என்பது—சண்டாள அதர்மம்.
10. சாமி சாமி என்பது—காமிகளின் உளரல்.
11. சூத்திரன் என்றால்—எட்டி உதை.
12. திதி கொடுப்பது—நீதியைக் கெடுப்பது.
13. தெய்வ வழிபாடு— தேசமக்களுக்குக் கேடு.
14. பல தெய்வ வணக்கம்—பட்டு வீழ்க.
15. பார்ப்பனர்கள் என்பவர்கள்—பகற்கொள்ளைக் காரர்கள்.
16. புராணங்கள்—பொய்க்களஞ்சியங்கள்.
17. பேதகமென்பது—வேதியருக்கணிகலம்.
18. மகாபாரதம்—பஞ்சமா பாதகம்.
19. மடத்தலைவர்கள்—மடைத்தலைவர்கள்.
20. மதக்குறி என்பது—மடையர்க் கறிகுறி.
21. முத்தி முத்தி என்று—புத்தியைக் கெடுக்காதே.
22. விதி விதி என்பது—மதியைக் கெடுப்பது.
23. வேதம் என்பது—சூதாய்ச் சொன்னது.
24. ஜாதி வேறுபாடு—ஜன சமூகத்திற்குக் கேடு.
25. க்ஷேத்திரமென்பது—சாத்திரப் புரட்டு.

# சுயமரியாதை இயக்கத்தின் நீதி வாக்கியங்கள்!

(1) அறிவைக் கெடுப்பது ஆத்திக மதமே.

ஆலயம் தன்னை அப்புறப் படுத்து.

இந்துமதத்தால் இடுக்கண் விளையும்.

ஈசன் என்பது மோசம் செய்வது.

உண்மைத் தெய்வம் உலகுயிராகும்.

ஊக்கம் என்பது உயிரினும் பெரிது.

என்றும் மக்களை ஒன்றாய்க் கருது.

ஏழை மக்களை ஏறிட்டு நோக்கு.

அய்யம் தெளிந்து செய்வன செய்க.

ஒற்றுமை இருப்பின் உலகு செழிக்கும்.

ஓதியுணர்ந்து நீதியைக் கைக்கொள்.

அவ்வை வாக்கிலும் ஆராய்ந்து செய்க.

(2) கல்லுத் தெய்வம் பொல்லாங்கு செய்யும்.

காசை வீணாய்க் கரியாக்காதே.

கிழிந்த பஞ்சாங்கம் ஒழிந்தால் நன்று.

கீழ்மைக் குணத்தை வாழ்விலகற்று.

குற்றம் களைவர் கற்றுணர்ந்தவர்கள்.

கூற்றுவர் நமக்குக் கொடும் பார்ப்பனரே.

கெதியிழந்தாலும் மதியிழக்காதே.

கேள்வி ஞானம் வாழ்வில் நல்லது.

கைம் பெண் துயரம் கடிதிலகற்று.

கொள்வன கொண்டு தள்ளுவன தள்ளு.

கோவில் நாட்டைக் கேவல மாக்கும்.

(3) சமத்துவம் நிறைந்தால் சமூகம் முன்னேறும்.

சிக்கன வாழ்க்கை கைக்கொள்வாயே

சீற்றம் ஒழிந்தால் ஏற்ற முறலாம்.

சுயமரியாதையே சுதந்திர வாழ்வு.

சூது நிறைந்தது வேதமென்றறிந்து -கொள்

செத்தவருக்குத் திதி கொடுக்காதே.

சேத்திரமென்று செலவு செய்யாதே.

சொர்க்கம் என்பது துட்டுப் பறிப்பதே,

சோதிடமகற்றின் நீதிடம் பெறலாம்.

(4) தண்ணீர் யார்க்கும் தரணில் சொந்தம்.

தாழ்ந்தவரென்று ஜாதியிலில்லை.

திருவிழா, மனிதரைத்தெருவில் விடுவதே

தீர்த்தமென்று நீ திரிந் தலையாதே.

துக்கமென்பதை இக்கணம் அகற்று.

தூய மனத்தால் தீயவை அகற்று.

தெய்வத்தை நினைத்து உய்வது கெடுதி.

(30-3-1930—குடியரசு)

# காந்தி நூற்றாண்டுவிழா கொண்டாடுவோர் கவனத்திற்கு!



இப்பொழுது காந்தி ஜெயந்தி கொண்டாடுபவர்கள் அத்தனை பேரும் யோக்கியர்களென்று சொல்லப்படக் கூடியவர்களா?

காந்தி கருத்தை ஏற்பவர்கள் அதில் எத்தனை பேர் இருப்பார்கள்?

காந்தியார் காங்கிரசாருக்கு (கொண்டாடுபவர்களுக்கு) மூன்று கட்டளைகள் இட்டார். அவையாவன :—

1. ''கோயில்கள் குச்சுக்காரி விடுதிகள்; யாரும்-போகாதீர்; அவைகளை மூடுங்கள்!'' என்பதாகச் சொன்னார்.

2. காங்கிரசில் அயோக்கியர்கள் மலிந்து விட்டார்கள்; ''காங்கிரசைக் கலைத்து விடுங்கள்; ''காங்கிரசைக் கலைத்து விடுங்கள்!'' என்று கூறினார்.

3. ''காங்கிரசு அரசாங்கம் மதசார்பற்ற அரசாங்கமாகும்; மத சம்பந்தம் இருக்கக் கூடாது!'' என்று சொன்னார்.

இவற்றை இன்று ''காந்தி ஜெயந்தி'' கொண்டாடுபவர்களில் எத்தனை பேர் பின்பற்றுகிறார்கள்? எத்தனை பேர் ஏற்றுக் கொள்கிறார்கள்?

இன்று காந்தி ஜெயந்தி கொண்டாடுபவர்களில் பெரும்பாலோர் தானே காந்தியைக் கொன்ற கூட்டத்தில் சேர்ந்தவர்களாவார்கள்.

இந்த நிலையில் காந்தி ஜெயந்தி காந்தி நூற்றாண்டு விழா கொண்டாடுவது புரட்டா? அல்லது யோக்கியமா? என்று கேட்கிறேன்.



தொலைபேசி எண்: 123

# மகாலிங்கம் அச்சகம்

தெற்கலங்கம், தஞ்சை.

எல்லா வகையான அச்சு வேலைகளும், நூற்பதிப்புகளும், வண்ண அச்சு வேலைகளும், சுவரொட்டிகளும், கணக்கு நோட்டு புத்தகம் முதலிய கட்டு வேலைகளும் குறித்த காலத்தில் அழகாக வும், சிறப்பாகவும் செய்து தரப்படும்.

எங்களிடம்

அலுவலகத் தொடர்பான கருவிப் பொருள்கள், பள்ளிக்கூட நோட்டுப் புத்தகங்கள், விண்ணப்பத் தாள்கள் குத்தகைப் பத்திரங்கள் முதலியன மொத்தமாகவும். சில்லரையாகவும் கிடைக்கும்.

# நேஷனல் லாட்ஜ்

கோயமுத்தூர் ரோடு, கரூர்.

டெலிபோன் நெ. 115

சுவைமிக்க சிற்றுண்டி, பிரியாணி உணவு வகைகளுக்கும் தூய்மைக்கும், உளங்கனிந்த உபசரிப்புக்கும் சிறந்த இடம்

கே. எஸ். ராமசாமி,
உரிமையாளர்.

IND. No. 163

எடப்பாடி எண்ணெய்த் தொழிலாளர்
கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம்
லிமிடெட்.

எடப்பாடி P. O. சேலம் Dt.

∴ கலப்படமற்றது
∴ சத்துக்கள் நிறைந்தது.
∴ சுகாதாரத்திற்கேற்றது.

நாட்டுச் செக்கில் குளிர்ந்த நிலையில் தயாரிக்கப்படும் எடப்பாடி எண்ணெய்த் தொழிலாளர் கூட்டுறவு சங்க "நாட்டுச் செக்கு" எண்ணெய்களையே உபயோகியுங்கள்.

S. உத்தண்டி
தலைவர் & நிர்வாகக் குழுவினர்

# சூர்யா ஸ்வீட் ஸ்டால்

மணிக்கூண்டு, தஞ்சாவூர்.

அன்புடையீர்!

தங்கள் குடும்ப விசேடங்களுக்குத் தேவையான ஸ்வீட், காரங்களுக்கு முன்னதாகவே ஆர்டர் கொடுத்து ஆதரிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

வணக்கம்.

உரிமையாளர்:
சாமி. நாகராஜன்

# கிருஷ்ணா பிஸ்கட் பாக்டரி

2. காமராஜ் ரோடு, கும்பகோணம்.

(S. INDIA.)

மேனாட்டு பிஸ்கட்களைப் போல் மிஷின்மூலம் தயார்செய்யப்படும்
சிறந்த பிஸ்கட்கள்.

# கிருட்டா & குளுகோஸ்

பிஸ்கட்கள்.

கவர்ச்சிகரமான பலவித பாக்கெட்களிலும்
5-கிலோ பேரியடின் பாக்கிங்களிலும்
சப்ளை செய்யப்படுகிறது.

முக்கிய நகரங்களில் ஸ்டாக்கிஸ்டுகள், ஏஜெண்டுகள் தேவை.

விவரங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

# SAITEX

G 1049

உத்திரவாதமுள்ள வண்ணங்களுடன், சொந்த சாயசாலையில் சாயம்தீர்த்த கூட்டுறவு கைத்தறி துணிகள் கிடைக்குமிடம்

Phone: 442995

## சைதாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்க லிமிடெட்

நெ. G. 1049

31, தேரடி தெரு, சென்னை-15

உற்பத்தி ரகங்கள்:

அழுத்தமான நெசவு கொண்ட, கவர்ச்சிகரமான லுங்கிகள், ஷர்டிங், கைகுட்டை, மற்றும் படுக்கை விரிப்புகள்.

நிர்வாகம்:-

ப. அழகேஸ்வரன், B. A; H. D. C

கூட்டுறவு உபபதிவாளர்-தனி அதிகாரி



தந்தை பெரியார் வாழ்க!

ஃ

## D. லாசர் நாடார்

மளிகை வியாபாரம்,

நெ. 83, பிஷப் ரோடு,

புத்தூர், திருச்சி-17.

எங்களிடம் எல்லாவிதமான மளிகை சாமான்கள், பள்ளி மாணவர்களுக்கான நோட் புத்தகங்கள், ஸ்டேஷனரி சாமான்கள் நயமாகக் கிடைக்கும்.

D. லாசர் நாடார்.

# 90க்கும்  91க்கும்... இடையில்

## தந்தை பெரியார் அவர்களது சுற்றுப்பயண விவரம்

## 1968 செப்டம்பர் 17 முதல் 1969 செப்டம்பர் வரை

| செப்டம்பர் 1968 | ஊர்கள் |
|---|---|
| 17 ம் நாள் | திருச்சி பிறந்த நாள் விழா<br>புத்தூர் சுயமரியாதைப் பிரசார ஸ்தாபனக் கல்வி நிலையங்களின் நிறுவனர் நாள் விழா |
| 19 ,, ... | வாலாஜாபாத் அய்யா பிறந்த நாள் விழா |
| 20 ,, ... | வேலூர் (வ. ஆ.) அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாவும் எம். ஜி. ஆர். 100-வது திரைப்பட விழாவும் |
| 21 ,, ... | போளூர் (வ. ஆ.) அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா |
| 22 ,, .. | திருச்சி தமிழக அரசு அதிகாரிகள் சார்பில் விருந்தும் பாராட்டும் |
| 23 ,, ... | திருவப்பூர் (புதுக்கோட்டை) அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா |
| 24 ,, .. | மோகனூர் (சேலம் மாவட்டம்) அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா |
| 25 ,, . | கீரனூர் (திருச்சி மாவட்டம்) தந்தை பெரியார் பிறந்த நாள் விழாவும், அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாவும் |
| 26 ,, ... | ஜெயங்கொண்டம் அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா |
| 27 ,, ... | அரியலூர் அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா |

28 ,, ... கள்ளக்குறிச்சி

29 ,, ... இடைப்பாடி (சேலம் மாவட்டம்) தந்தை பெரியார் பிறந்த நாள் விழாவும், அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாவும்

30 ,, ... ஈரோடு பொன்னாடை போர்த்தும் விழா

## அக்டோபர்

1 ம் நாள் ... கோயமபுத்தூர் அய்யா 90-வது ஆண்டு பிறந்த தினவிழாவும் அறிஞர் அண்ணா 60-வது ஆண்டு பிறந்ததின விழாவும்

2 ,, ... கோயம்புத்தூர் அறிஞர் அண்ணா பிறந்த தினவிழா

3 ,, ... மதுக்கரை (கோவை மாவட்டம்) அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா

4 ,, ... காரைக்குடி எழுச்சிமன்ற ஆண்டு விழாவும், அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாவும்

6 ,, ... கரூர் பிறந்த நாள் விழா புதிய வான் (கார்) அன்பளிப்பு

27 ,, ... குனியமுத்தூர் (கோவை) திரு. சதாசிவம் அவர்களின் முதலாண்டு நினைவுநாள் விழா
மாலை காந்திபுரம் பொதுக்கூட்டம்

## நவம்பர்

3 ம் நாள் ... சீரங்கம் திருமணம்

4 ,, ... அன்பில் கால்நடை கருத்தரிப்பு விளக்க விழா

8 ,, ... சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர் பொதுப்பேரவைக் கூட்டம்

9 ,, ... ஆரணி (வ. ஆ.) நகரசபை வரவேற்பு, மாலை-அறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா

10 ,, ... ஆதம்பாக்கம் (சென்னை)
காலை—திருமணம்
மாலை—திருவள்ளுவர் உயர்துவக்கப்பள்ளி ஆண்டு விழா

11 ,, ... மயிலாப்பூர் விவேகாநந்தபுரம் மாநகரசபை தேர்தலில் வெற்றி பெற்றவர்கட்குப் பாராட்டும், வாக்காளர்களுக்கு நன்றி கூறலும்

| | | | |
|---|---|---|---|
| 12 | ,, | ... | ராயபுரம் (வட சென்னை) அய்யா பிறந்த நாள் விழா |
| 13 | ,, | ... | மீர்சாகிப்பேட்டை (சென்னை) மாநகரசபை வெற்றி பெற்றோர்க்கு பாராட்டும், வாக்காளர்களுக்கு நன்றி கூறலும் |
| 14 | ,, | ... | சேத்தியாதோப்பு (தெ. ஆ.) பொதுக்கூட்டம் |
| 15 | ,, | ... | திருச்சி திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களின் 70-ம் ஆண்டு பிறந்த நாள் விழா |
| 24 | ,, | ... | சென்னை |

## டிசம்பர்

| | | | |
|---|---|---|---|
| 1 ம் நாள் | | ... | வடுகப்பட்டி (நாமக்கல் வட்டம்) காலை—திருமணம் மாலை—திட்டக்குடி (தெ. ஆ.) அய்யா பிறந்த நாள் விழாவும் தமிழ் நாடு பெயர் சூட்டு விழாவும் |
| 6 | ,, | ... | திருச்சி அய்யா பிறந்த நாள் விழா |
| 8 | ,, | ... | திருச்சி திருமணம். அய்யா பிறந்தநாள் விழா |
| 11 | ,, | ... | சென்னை காலை—திருமணம்<br>அயன்புரம் மாலை—மேயர் வேலூர் நாராயணன் அவர்களின் பாராட்டு விழா |
| 12 | ,, | ... | பரங்கிப்பேட்டை (தெ. ஆ.) அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி இலக்கியமன்ற சிறப்புரை |
| 28 | ,, | ... | குமாரபாளையம் (சேலம் மாவட்டம்) அய்யா பிறந்தநாள் விழா |
| 31 | ,, | ... | கூத்தங்கோயில் (சிதம்பரம் மாவட்டம்) ஊராட்சி மன்ற நிகழ்ச்சிகள்: பள்ளிக் கட்டடத் திறப்பு விழா |

## ஜனவரி-1969

| | | | |
|---|---|---|---|
| 12 ம் நாள் | | ... | திருவிளையாட்டம் (மாயவரம்) சௌரிராஜன் உயர்நிலைப் பள்ளி ஆண்டு விழா; செம்பனார்கோயில் அய்யா பிறந்தநாள் விழாவும் பொங்கல் விழாவும் |
| 16 | ,, | ... | உரந்தராயன் குடிகாடு (ஓரத்தநாடு) ஊர்நல வளர்ச்சிக் கழக ஆண்டு விழாவும், வள்ளுவர் 20-ம் நூற்றாண்டு விழாவும், காந்தி நூற்றாண்டு விழாவும் |
| 19 | ,, | ... | திருச்சி காலை—திருமணம்: இடையாற்று மங்கலம் மாலை—பிறந்தநாள் விழாவும் தமிழர் விழாவும் |
| 21 | ,, | ... | துளையாநத்தம் (முசிறிவட்டம்) |

| | | |
|---|---|---|
| 22 ,, | ... | ஆத்தூர் அய்யா பிறந்த நாள் விழா |
| 23 ,, | ... | காலை : ஜோலார்பேட்டை (வ.ஆ) திருமணம்<br>மாலை : சேலம் திருமணம் தாரமங்கலம் (சேலம்) பொன்னாடை போர்த்த விழா |
| 29 ,, | ... | (திருச்சி) சுப்பிரமணியபுரம் திருமணம் |

## ஃபிப்ரவரி

| | | |
|---|---|---|
| 8 ம் நாள் | ... | சென்னை (கடற்கரை) முதல்வர் அண்ணா மறைவுக் கான மாபெரும் இரங்கற்கூட்டம் |
| 9 ,, | ... | காலை — நாகப்பட்டினம் திருமணம்<br>மாலை — அறிஞர் அண்ணா மறைவுக்கு இரங்கற் பொதுக்கூட்டம் |
| 16 ,, | ... | மேலக்கற்கண்டார் கோட்டை (பொன்மலை) அண்ணா மறைவுக்கு இரங்கற் கூட்டம். |
| 17 ,, | ... | செவ்வந்திபாளையம் கழகக் கட்டிட அன்பளிப்பு |
| 18 ,, | ... | காலை — கோம்புப்பாளையம் முத்தனூர் வானொலிப் பெட்டி திறப்பு விழா<br>மாலை— நொய்யால் (கரூர்) உயர்நிலைப்பள்ளி கட்டிட அடிக்கல் நாட்டுவிழா, அறிஞர் அண்ணா மறைவுக்கு இரங்கற் கூட்டம் |
| 20 ,, | ... | சென்னை திரு. ஏகாம்பரம் அவர்களின் திருமணப் பாராட்டு விழா. |
| 21 ,, | ... | சென்னை (பெரியமெட்டு) பொதுக்கூட்டம் |
| 23 ,, | ... | திருச்சி |
| 25 ,, | ... | மணப்பாறை உயர்நிலைப்பள்ளி இலக்கிய மன்ற சிறப்புக் கூட்டம் (அண்ணா படத் திறப்பு)<br>மாலை— அண்ணா மறைவுக்கு இரங்கற் பொதுக் கூட்டம் |

## மார்ச்

| | | |
|---|---|---|
| 2 ம் நாள் | ... | காலை— சேலம் திருமணம்<br>மாலை— அண்ணா மறைவுக்கு இரங்கற் பொதுக் கூட்டம் |
| 3 ,, | ... | திருவத்திப்புரம் (வ.ஆ.) சட்டமன்ற பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்களின் பாராட்டுக்கூட்டம் |
| 5 ,, | ... | அன்னவாசல் (புதுக்கோட்டை) பிற்பகல் அரசினர் உயர் நிலைப்பள்ளி ஆண்டு விழா; மாலை— பொதுக்கூட்டம் |

| | | | |
|---|---|---|---|
| 6 | ,, | ... | வடமட்டம் உயர்நிலைப்பள்ளி இலக்கிய மன்ற சிறப்புரை கோனேரி ராஜபுரம் (மாயவரம் வட்டம்) திராவிடர்கழக துவக்கவிழாவும்) அண்ணா இரங்கற் கூட்டமும் |
| 7 | ,, | ... | ஆலத்தம்பாடி (திருத்துறைப் பூண்டி வட்டம்) பொதுக் கூட்டம் |
| 8 | ,, | ... | அகரக்கடம்பனூர் ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளி கட்டிடத் திறப்பு விழா |
| | | | கீழ்வேளூர் (நாகை தாலூக்கா) மதியம் தந்தை பெரியார் தன்மானப் பேரவையினரின் விருந்தும், பாராட்டும்: மாலை அய்யா பிறந்தநாள் விழா |
| 9 | ,, | ... | சீரங்கம் சமுதாய சீர்திருத்த மாநாடும் திருமணமும் |
| 10 | ,, | ... | வில்வராயன்பட்டி (பூதலூர் ரயிலடி) திருமணம் |
| 13 | ,, | ... | காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரி அண்ணா படத்திறப்பு விழா: இரவு—பொதுக்கூட்டம் |
| 15 | ,, | ... | சென்னை சட்டக்கல்லூரி விடுதி விழாவும், அண்ணா படத் திறப்பு விழாவும் |
| 16 | ,, | ... | கரூர் அண்ணா மறைவுக்கு இரங்கற் கூட்டம் |
| 17 | ,, | ... | திட்டக்குடி பேரூராட்சி மன்ற புதிய கட்டிடத் திறப்பு விழாவும், அண்ணா சிலை திறப்பு விழாவும் |
| 23 | ,, | ... | மதுரை திராவிடர்கழகப் பொதுக்கூட்டம் |
| 24 | ,, | ... | மதுரை அண்ணா நினைவுநாள் பொதுக்கூட்டம் |
| 25 | ,, | ... | திருச்சி நீத்தார் நினைவுநாள் |
| 27 | ;, | ... | காலை—கீழ்ப்பூந்துருத்தி-திருமணம் மாலை—களத்தூர் (பெரம்பலூர் வட்டம்) இலக்கிய மன்ற விழா |
| 28 | ,. | ... | காலை—சு. ஆடுதுறை உயர்நிலைப் பள்ளி இலக்கிய மன்ற ஆண்டு விழா: மாலை-லப்பைக் குடிக்காடு (பெரம்பலூர் வட்டம்) |
| 29 | ,, | ... | வாரியங்காவல் உயர்நிலைப்பள்ளி இலக்கியமன்ற விழாவும், உடல்திறப் போட்டி விழாவும் |
| 30 | ,, | ... | பாண்டிச்சேரி புதுவை மாநில அமைச்சர்கட்குப் பாராட்டுக் கூட்டம் |
| 31 | ,, | ... | பெரம்பூர் செம்பியம் (சென்னை) தி. க. பொதுக்கூட்டம் |

## ஏப்ரல்

| | | | |
|---|---|---|---|
| 1ம் நாள் | | ... | ஆலந்தூர் சென்னை |
| 5 | ,, | ... | காலை—நாமகிரிப்பேட்டை திருமணம்: மாலை-முத்துகாப்பட்டி அரசினர் உயர்நிலைப்பள்ளி இலக்கியமன்ற ஆண்டு நிறைவு விழா |
| 6 | ,, | ... | காலை—உள்ளிக்கோட்டை ஊராட்சி மன்றம்—கலைஞர் கருணாநிதி படத்திறப்பு விழா: மாலை—மன்னார்குடி மன்னை வட்ட கமிட்டிக் கூட்டம்; பொதுக்கூட்டம் |
| 7 | ,, | ... | பொன்பரப்பி (ஜெயம் கொண்டம்) அரசினர் உயர்நிலைப் பள்ளி இலக்கிய மன்ற விழா |
| 9 | ,, | ... | திருநெல்வேலி பொதுக்கூட்டம் |
| 10 | ,, | ... | வள்ளியூர் அண்ணா நினைவுநாள் பொதுக்கூட்டம் |
| 11 | ,, | ... | நாகர்கோவில் பொதுக்கூட்டம் |

| | | | |
|---|---|---|---|
| 12 | ,, | ... | ஏரல் |
| 13 | ,, | ... | தூத்துக்குடி அறிஞர் அண்ணா நினைவுநாள் பொதுக் கூட்டம் |
| 14 | ,, | ... | சாத்தான்குளம் பொதுக்கூட்டம் |
| 15 | ,, | ... | மேலபாளையம் பொதுக்கூட்டம் |
| 16 | ,, | ... | திருநெல்வேலி |
| 17 | ,, | ... | திருக்குவளை (தஞ்சை மாவட்டம்) பொதுக்கூட்டம் |
| 18 | ,, | ... | பழையவலம் (தஞ்சை மாவட்டம்) தி-வி-தொ-சங்க பொதுக் கூட்டம் |
| 20 | ,, | ... | சென்னை மாவட்ட சமுதாய சீர்திருத்த மாநாடு |
| 23 | ,, | ... | காலை—தஞ்சை திருமணம்: மாலை—திருமங்கலக் கோட்டை (குடந்தை வட்டம்) அய்யா பிறந்தநாள் விழா |
| 24 | ,, | ... | காலை—பொத்தனூர் (சேலம்) திருமணம்: மாலை—தாதக் கவுண்டன்பட்டி கட்டிடத் திறப்பு விழா |

## மே

| | | | |
|---|---|---|---|
| 1ம் நாள் | | ... | சென்னை (திருவல்லிக்கேணி) பொதுக்கூட்டம் |
| 2 | ,, | ... | காலை—திருத்தணி திருமணம்: மாலை—அரக்கோணம் பாராட்டுக் கூட்டம் |
| 3 | ,, | ... | திருப்பத்தூர் (வ. ஆ.) பாராட்டுக் கூட்டம் |
| 7 | ,, | ... | காவாலக்குடி (தஞ்சை மாவட்டம்) காலை—திருமணம் மாலை—பொதுக்கூட்டம் |
| 14 | ,, | ... | திருச்சி திருமணம் |
| 17 | ,, | ... | அரியலூர் அய்யா பிறந்தநாள் விழா |
| 18 | ,, | ... | காலை—இரும்புலிக்குரிச்சி-திருமணம்: |
| 19 | ,, | ... | திருச்செங்கோடு நகரசபை வரவேற்பு, தி.மு.க. உறுப்பினர் கட்குப் பாராட்டுக் கூட்டம் |
| 22 | ,, | ... | ஈரோடு காலை—திருமணம்: மாலை—பொதுக்கூட்டம் |
| 24 | ,, | ... | தர்மபுரி நகராட்சி மன்றம் வரவேற்பு அய்யா முழு உருவச் சிலை திறப்பு விழா |
| 25 | ,, | ... | மன்னார்குடி சமுதாய சீர்திருத்த மாநாடு |
| 26 | ,, | ... | காலை—கண்ணுக்குடி-திருமணம்: தென்னவநாடு (ஒரத்த நாடு வட்டம்) திருமணம்: மாலை—நரசிங்கமங்கலம் (நாகை வட்டம்) பொதுக்கூட்டம் |
| 27 | ,, | ... | சேதுராயன் குடிகாடு கழகக் கட்டிடம், அண்ணா படம் திறப்பு விழா |
| 28 | ,, | ... | திருச்சி திருமணம் |
| 29 | ,, | ... | காலை—மேலமருதாந்தநல்லூர—திருமணம் மாலை—திரு வெண்காடு—திரு. அமைச்சர் கோவிந்தசாமி மறை வுக்கு இரங்கற் பொதுக்கூட்டம் |
| 30 | ,, | ... | திருச்சி திருமணம் |

## ஜூன்

| | | | |
|---|---|---|---|
| 1ம் நாள் | | ... | சென்னை அடையாறு திரு. அமைச்சர் கோவிந்தசாமி படத் திறப்பு, சென்னை ஒற்றைவாடை தியேட்டர் ''அண்ணா ஒரு காவியம்'' நாடகத்துக்குத் தலைமை |

| | | |
|---|---|---|
| 4 ,, | ... | திட்டக்குடி திருமணம் |
| 7 ,, | ... | தஞ்சாவூர் நகரமன்ற வரவேற்பும் பொதுக்கூட்டமும் |
| 8 ,, | ... | காலை—ராமகிருஷ்ணராஜு பேட்டை (திருத்தணி வட்டம்) திருமணம்: மாலை—அரக்கோணம் நகரமன்ற வரவேற்பும் பொதுகூட்டமும் |
| 15 ,, | ... | சென்னை திருமணம் |
| 19 ,, | ... | புத்தூர் (திருச்சி) திருமணம் |
| 51 ,, | ... | திருச்சி திருமணம் |
| 22 ,, | ... | காலை—திட்டக்குடி (தெ, ஆ.) திருமணம்: மதியம்—லால்குடி அரசு அலுவலர் விருந்தும் பாராட்டும் மாலை—பொதுக்கூட்டம் |
| 23 ,, | ... | காலை—இரூர் (பெரம்பலூர் வட்டம்) திருமணம்: மாலை—செட்டிகுளம் பொதுக்கூட்டம் |
| 24 ,, | ... | எடமேலையூர் (மன்னார்குடி வட்டம்) |
| 25 ,, | ... | வேலூர் (வ. ஆ.) திருமணம் |
| 27 ,, | ... | மங்கலம் (பள்ளிகொண்டா) திருமணம் |
| 29 ,, | ... | புவனகிரி (தெ. ஆ.) திருமணம் |
| 30 ,, | ... | மாலை—உட்கோட்டை மின் விளக்கு இயக்குவிழா: இரவு—ஜெயங்கொண்டம் பொதுக்கூட்டம் |

## ஜூலை

| | | |
|---|---|---|
| 1 ம் நாள் | ... | திருச்சி கலப்புமணம் செய்துகொண்ட தம்பதிகளுக்கு பரிசளிப்பு விழா |
| 2 ,, | ... | காலை—புதுக்கோட்டை (திருச்சி மாவட்டம்) திருமணம் மாலை—கலைஞர் பட.ததிறப்பும் பொதுக்கூட்டமும் |
| 3 ,, | ... | மண்ணச்சநல்லூர் பொதுக்கூட்டம் |
| 4 ,, | ... | பிற்பகல்—சங்ககிரி எடப்பாடி கமிட்டிக் கூட்டம்: மாலை—திருச்செங்கோடு நகராட்சி வரவேற்பும் அண்ணா படத்திறப்பும் |
| 5 ,, | ... | துவாக்குடி திருமணம் |
| 6 ,, | ... | காலை— எசனை (பெரம்பலூர் வட்டம்) திருமணம்: மாலை—பொதுக்கூட்டம் |
| 11 ,, | ... | திருச்சி திருமணம் |
| 12 ,, | ... | இரும்புலிக்குரிச்சி (அரியலூர் வட்டம்) திருமணம் |
| 20 ,, | ... | காலை—திருவண்ணாமலை திருமணம்: மாலை—கீழானத்தூர் பொதுக்கூட்டம் |
| 25 ,, | ... | கூடலூர் (பெரம்பலூர் வட்டம்) அறிஞர் அண்ணா மன்ற திறப்புவிழா. அய்யா 90-வது பிறந்தநாள் விழா |
| 26 ,, | ... | சிதம்பரம் திராவிடர்கழக மாநாடு |
| 27 ,, | ... | சிதம்பரம் பகுத்தறிவு மாநாடு |
| 28 ,, | ... | சிதம்பரம் திரு. எஸ் வி. ராமசாமி அவர்கள் மணிவிழா |

29-ம் தேதி முதல் ஆகஸ்டு 19-ம் தேதி வரை சி. எம். சி. மருத்துவமனையில் சிகிச்சை

## ஆகஸ்டு

| | | |
|---|---|---|
| 20 ம் நாள் | ... | நாகரசம்பட்டி திருமணம் |
| 21 ,, | ... | ஆம்பூர் திருமணம் |
| 31 ,, | ... | பெங்களூர் திருமணம் |

## செப்டம்பர்

| | | |
|---|---|---|
| 3 ,, | ... | சென்னை திருமணம் |
| 5 ,, | ... | ,, |
| 8 ,, | ... | ,, |
| 15 ,, | ... | **அண்ணா பிறந்தநாள் விழா** |



# அண்ணாவின் எழுத்தோவியம்!



## திருச்சியில் அண்ணா பேருரை

பெரியார் அவர்கள் குடும்பத்தின் நிலை எப்படிப்பட்டது? எந்தப் பக்கம் திரும்பினாலும் குடும்பச் செல்வாக்கு; எந்தப் பக்கத்திலே திரும்பிப் பார்த்தாலும் வாணிபத்தில் ஆதாயம். நிலபுலன்கள், வீடு வாசல்கள்-இவைகள் எல்லாவற்றையும்பார்த்து இவைகள் எனக்கு தேவையில்லை என்றார். என் நாட்டு மக்களுக்கு அறியாமையில் மூழ்கிக்கிடக்கும் நாட்டு மக்களுக்கு நல்லது கெட்டது ஆராய்ந்து பார்க்கும் பக்குவம் அற்றுப்போயிருக்கும் மக்களுக்கு வேறு ஒரு செல்வத்தைத் தருவேன். அறிவுச செல்வத்தைத் தரப்போகிறேன், சிந்தனைச் செல்வத்தைத் தரப்போகிறேன். பகுத்தறிவுச் செல்வத்தைத் தரப்போகிறேன். அவற்றை ஏற்று நடக்கத்தக்க துணிவைத் தரப்போகிறேன் அதைத் தடுப்பார் எவரேனும் குறுக்கிடுவார்களால் அவர்களுடைய ஆற்றலை முறியடிப்பேன். இதுதான் என்னுடைய வாழ்க்கையின் குறிக்கோள் என்று அவர்கள் கிளம்பினார்கள். அதுதான் வாழ்க்கையின் முதல் போராட்டத்தில் அவர் பெற்ற வெற்றி!

அதற்குப் பிறகு அவர் சந்தித்த ஒவ்வொரு களத்திலேயும் வெற்றிதான் கிடைத்திருக்கிறது. அந்த

அவருக்கு நன்கு தெரியுமாதலால் சொல்வோம். பெரியாரின் பேனா நிகழ்த்தப்படும். வர்த்தகர்களில், உலோட்டுமிட்டி காரம் எளியவர் திரிப்பேன், அவ்வத்தட்டத்துக்கு அவர் உயர்த்தாக 'மார்' வாங்கிக் கொண்டுதான் வருவார்; அத்தகைய தெளிவும், வாதத் திறமையும் பேச்சில் கிடைக்கும்.

அத்தகைய தெளிவைப் பெற்று, தமிழினமக்கள், பண்பை, திறனை என்பது மட்டுமல்ல, தமிழகத்திலேயே பெரிய திருப்பம் ஏற்பட்டு விட்டிருக்கிறது.

பெரும்புரட்சி, இயக்க உழைத்து உன்னதத்திராத்துவத்,

ஏற்கும் அந்தப் பணியாற்றி, பெரிய அரசுகளை, வியப்பும் எச்சரிக்கையும் கொண்டாக செயற்பட்டு வெற்றி பெற்ற வரலாறு, இவைகளில் வேறெங்கும் கிடைத்ததில்லை.

அந்த 'வரலாறு' துவக்கப்பட்ட போது நான் சிறுவன்.

அந்த வரலாற்றிலே புதுப் பொலிவு புதிது புதிதாக இணைக்கப்பட்ட நாட்களிலே, பெரியாரிடம், நான் அவரோடு சேர்ந்து பணியாற்றியிருக்கிறேன். அந்த நாட்களைத் தான் என் 'வசந்தம்' என்று குறிப்பிடுகிறேன்.

பெரியாரோடு இணைந்து பணி

வெற்றிகள் எல்லாம் நாம் எடுத்துக் கொண்டிருக்கிற காரியங்களுக்கு போதுமானதாக அமையவில்லை என்று செட்டிநாட்டரசர் அவர்கள் சொன்னார்கள். ஒப்புக்கொள்கிறேன். அந்தப் போராட்டத்துக்கான இன்றைய தினம் சூழ்நிலை என்ன? எந்தநிலைமையில் மொழிப் பிரச்சனை வந்திருக்கிறது என்று பார்க்க வேண்டும். 1934, 35, 36-ம் ஆண்டுகளில் இந்தியை அவர்கள் ஆட்சிமொழி என்று அல்ல, தேசிய மொழி என்று அழைத்தார்கள். இந்த தேசத்திற்கென்று ஒரு மொழி உண்டு. அதுதான் இந்தி; இந்த தேசத்திற்கு இருக்கத் தக்க தேசிய மொழி இந்திதான் என்று 1935-ல் அவர்கள் சொன்னார்கள். பெரியார் அவர்களின் போர் முறையின் தன்மை உங்களிலே பலருக்கு நன்றாக தெரிந்திருக்கும் என்று கருதுகிறேன்; அவர்கள் எதிரில் உள்ள படையை மட்டுமல்ல, முதலிலே அப்படைக்கு எங்கே மூலபலம் இருக்கிறது என்று கண்டுபிடித்து அந்த மூல பலத்தைத் தாக்குவதுதான் அவருடைய போர் முறையாகும்.

ஆகையினால் இந்தியாவின் தேசிய மொழி இந்திதான் என்று சொன்னவுடன் தேசியம் என்பது மகா புரட்டு இந்தியா என்கிறீர்களே இந்தியா என்பது மிகப் பெரிய கற்பனை என்று கூறி அவை இரண்டையும் உடைத்து எறிவதுதான் என்னுடைய வேலை என்று கிளம்பினார்கள். அப்படி இந்தியைக் கொண்டு வந்தவர்கள் இந்தி

யைக் காப்பாற்றிக் கொள்ளக் கருதி தேசியத்தையும் இந்தியாவையும் உடைத்துவிடக் கூடாது என்று தேசியம் என்று சொல்லியதை மாற்றிக் கொண்டு இந்தியாவில் தேசிய மொழிகள் பதினான்கு இருக்கின்றன ; அதில் ஒன்று தான் இந்தி. ஆனால் இந்தி பெரும்பாலனவர்கள் பேசுவதால் இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். அப்போது பெரியார் ஆட்சி மொழி என்பது பின்னால் இருக்கட்டும். உங்களுடைய ஆட்சியின் லட்சணம் என்ன? யார், யாரை ஆளவேண்டும். எதற்காக ஆளவேண்டும் என்று ஆட்சிமுறையைப்பற்றி அவர்கள் தாக்க ஆரம்பித்தார்கள். உடனே இந்தியை ஆதரிக்கிறவர்கள் ஆட்சி மொழி இந்தி என்பதை விட்டு விட்டு ஒரு இணைப்பு மொழியாக இருக்கட்டும் என்று நேசம் கொண்டாடுகிறார்கள் பாசம் காட்டுகிறார்கள். சொந்தம் கொண்டாடுகிறார்கள். நாம் இணைந்திருக்க வேண்டாமா அதற்கு இணைப்பு மொழி தேவையில்லையா என்று வலியவலிய கேட்கிறார்கள். தேசியத்திலிருந்து நழுவி இன்று இந்தி வந்ததற்கு மிகப்பெரிய காரணம் பெரியார் அவர்கள் நடத்திய அறப்போராட்டம் தான்.

மொழிப்பிரச்சினை அவர்களைப் பொறுத்தவரையில் மிகச்சாதாரண பிரச்சினை. அவர்கள் முக்கியமாகக் கருதுவது தமிழ்நாட்டு மக்களிடையே — மனிதத்தன்மை வரவேண்டும் அவர்கள் நம்பி

அதற்கு முன்பு முப்பது ஆண்டுகள்
அவர் பணியாற்றி வந்திருக்கிறார்.
இந்த ஆண்டுகள், தமிழரின்
வரலாற்றில் மிக முக்கியமான ஆண்டுகள்;
சிந்திக்க வைக்கிறார்! நினைப்பதை
பேசுகிறார்! எழுதுகிறார்! எதையோ
சொல்லுகிறார்! — என்று கூறியும், விட்டு
வைக்கக்கூடாது! ஒழித்துக் கட்டியாக வேண்
டும்! நானே தீர்த்துக் கட்டுகிறேன்! — என்று
மிரட்டியும், — தமிழகத்தின் காலிப்பசங்கள்
ஏசினர்; சீறினர்; பகைத்தனர்; எதிர்த்தனர்;
கலகம் செய்தனர்; மறுப்பு உரைத்தனர்;
ஆனால் அவர் பேச்சைக் கேட்டவர்களும்
விழித்தனர்; மெய்யுணர்ந்தும்; மனந்
திருந்தினார்கள்! அவர் பேச்சு என்பது
ஆண்டுக்கு மேலாக நடந்தபடி இருந்தது;
எதிர்த்தவர்கள், கலகம் புரிந்தவர்கள், ஏனோ
தானோ என்று இருந்தவர்கள், எத்தனையோ பேர்
அன்றுமுதல் மாறிவிட்டார்கள்; தொடர்ந்தவர்கள்
அடங்கினர், மிரட்டியோர் பணிந்தனர்,
அட்டூழியம் செய்தோர் அக்கறை காட்டினர்;
~~அவனுடைய~~ அவருடைய பேச்சோ! அது
ஆற்று நடையினிலே, வேகம் குறையாமல்,
பாய்ந்தோடி வந்தது; மக்கள் நெஞ்சத்தைத்
தொட்டு, ஆழ்கடல் உடைத்துக் கொண்டு,
சாதனைகள் பல பேசிச் செய்து
கொண்டு, நேர்மையுடன், வெற்றி
நடையுடன்! அங்கே பேசுகிறார், இங்கே பேசு
கிறார்

கொண்டிருக்கிற காட்டு மிராண்டித்தனமான கொள்கைகள், நாட்டை காடாக்கத் தக்க கொள்கைகள் மனிதனை மிருகமாக்கத் தகக் கொள்கைகள், வெளியுலகத் தாராலே இரண்டு, மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பே உதறித் தள்ளப்பட்ட உருப்படியற்ற கொள்கைகள் மறைய வேண்டும். இவைகள் நீக்கப்பட்டு தமிழக மக்கள் துல்லியமான மனதுடன் தூய்மையான எண்ணத்தில், செயல் திறனில் பகுத்தறிவாளர்களாகத் திகழ வேண்டும் அதற்குஒருஅறிவுப் புரட்சி தேவை என்பதிலே அவர்கள் நாட்டம் அமைந் திருக்கிறது. அந்த நாட்டத் தின் உருவகம்தான் பெரியார் அவர்கள் என்றால் அது மிகையாகாது.

எந்த நாட்டிலும் இரண்டு நூற்றாண்டுகளில் செய்து முடிக்கக் கூடிய காரியங்களை இருபது ஆண்டுகளில் அவர்கள் செய்து முடித்திருக்கிறார்கள். அய்ரோப்பா கண்டத்தை எடுத்துக்கொண்டால் நாட்டினுடைய விழிப்பிற்கு 50 ஆண்டுகள், அமைந்த அரசியல் ஆட்சியை மாற்றுவதற்கு 50ஆண்டுகள் என்ற அளவில் ஒரு பகுத்தறிவு மனப்பான்மையைத் தோற்றுவிப்பதற்காக ஒரு வால்டேர், ரூஸோ இப்படி தொடர்ச்சியாகப் பலர் வந்து வந்து இரண்டு, மூன்று நூற்றாண்டுகள் பாடுபட்டு பாடுபட்டுத்தான் பகுத்தறிவுப் பாதையில் அந்த நாடுகள் செல்ல முடிந்தது. இப்படி இரண்டு நூற்றாண்டுகளில் செய்யவேண்டிய காரியங்களை பெரியார் அவர்கள்



இருபதே ஆண்டுகளில் செய்து முடிக்க வேண்டுமென அவர்கள் கிளம்பினார்கள். திட்டமிட்டார்கள் அந்தத் திட்டத்தின் அடிப்படையில் பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். ஆங்கிலத்தில் சொல்லுவார்கள் "Putting centuries into Capsules" என்று, சில மருந்துகளை உள்ளடக்கி சில மாத்திரைகளிலே தருவது போல பல நூற்றாண்டுகளை இருபது ஆண்டுகளில் அடைத்து அவர்கள் தன்னுடைய வாழ் நாளிலேயே சாதித்துத் தீர வேண்டும் என்று வெற்றி பெற்றே தீரவேண்டும் என்ற அறிவோடும், உணர்ச்சியோடும் நெஞ்சு ஊக்கத்தோடும் யார் வருகிறார்கள் யார் போகிறார்கள் என்பதைக்கூட இரண்டாந் தரமாக வைத்துக்கொண்டு எந்த அளவு முன்னேறுகிறோம் என்பதைக் காண்பதிலேயே அவர்கள் வாழ்க்கை முழுவதும் போராட்டக் களத்தில் நின்றிருக்கிறார்கள்.

அவர்களால் ஏற்படுத்தப்பட்ட அறிவுப் புரட்சி சுலபத்தில் நிற்கப்போவதில்லை அது போக வேண்டிய சக்தியை, இலக்கைத்தொட்டு தான் நிற்கும். எப்படி வில்லை விட்டு கிளம்பிய கணை, பாய வேண்டிய இடத்தில் பாய்ந்தால்தான் அதன் வேகம் நிற்குமோ அதேபோல் அவர்களிடமிருந்து பிறந்த அறிவுக் கணை எந்த இலட்சியத்தை அடைய வேண்டுமோ அதை அடைந்தே தீரும் அதில் அய்யம் யாருக்கும் இல்லை. அதில் கால அட்டவணையை கூட நாம் கருதத் தேவையில்லை. அந்தப் பாதையில்

சாரன்பூர், காசி, நாகூர், ~~அவர~~
வேளாங்கண்ணி, அமிர்தசரஸ், — ~~இப்படி~~
மேலும் இது போன்ற பல நகரங்களில், என்னையும்
~~அழைத்து~~ உடன் அழைத்துக் கொண்டு பெரியார்
சுற்றுப்பயணம் செய்தபோது, ஒரு நாள் என்னிடம்
இது போலக் கேட்டார். யார்? அந்த
ஊர்களிலே உள்ள பக்தகோடிகள்!
அந்த இடத்துப் பக்தகோடிகள் [illegible] என்று
படிப்பார்கள் — பெரிய பெரிய [illegible]! [illegible]
[illegible], அழகழகான [illegible]! [illegible]
பேசுவார்கள், [illegible]; [illegible]
[illegible] பெற்றுக் கொண்டு! இன்று?
இல்லை! அவர் பேசாத நாள் உண்டா?

இன்று கேட்காத ஊர் உண்டா? அவரிடம்
சிக்கித் திணறாத 'பழமை' உண்டா? என்று
கேட்டு அவர் சிரித்தார்! எதற்கு அவர்
பணிந்தார்? அந்தப் பயணம் அவரிடம்
[illegible] பெற்றது! ஓ! அப்பா! ஒரே
[illegible], அவர் நம்மை அச்சுறுத்த [illegible]
[illegible] என்று [illegible], என்று
[illegible] [illegible] விட்டுப் போவதில்
[illegible] [illegible] [illegible]
என்று [illegible] [illegible]
'பழமை' [illegible]! புதுப் புது
[illegible] [illegible]; [illegible]
[illegible], இன்று பழமையின் [illegible]
[illegible] [illegible] [illegible]

நாம் நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னாலே தமிழகத்திலே பேசுவதற்குக் கூச்சப்பட்ட விஷயங்களை இன்று நம்முடைய எட்டு வயது சிறுவன் வெகு தாராளமாகப் பேசுகிறான். இருபது வருடங்களுக்கு முன்னாலே நம்முடைய மனதில் பயந்துக் கொண்டிருந்த தத்துவங்கள் இன்றைய தினம் கேலிக்கு உரியதாகுமென்று நாடே சொல்கிறது. இரண்டு நூற்றாண்டுகள் பாடுபட்டு உண்டாக்க வேண்டிய அறிவு புரட்சியை இருபது வருஷங்களில் அவர்கள் சாதித்துக் கொடுத்தால் நமக்கு எல்லாம் எளிதாக இருக்கிறது எல்லாம் சுலபமாக இருக்கிறது.

ஆனால் இது எளிதாகும் அளவுக்கு அவர்கள் பட்ட கஷ்டங்கள் எத்தனை! நன்றாக நினைவிக்கு வருகிறது. நானும் அவரும் ஒரு முறை சிவகங்கை மாநாட்டுக்கு போன நேரத்தில் அந்த ஊர் முழுவதும் பழைய செருப்புக்களை அங்கே தோரணமாகக்கட்டி தொங்க விட்டார்கள். இன்று நடந்த ஊர்வலத்தில் மாலை போட்டார்கள் கம்பீரமாகச் செல்கிறோம். ஆங்காங்கே கொடிகளும் அசைந்து வாழ்க வாழ்க என்று வாழ்த்துகின்றன. ஆனால் அப்பாது சிவகங்கையிலே தொங்கியது தோரணங்கள் அல்ல அறுந்து போன பழைய செருப்புகள். அப்படி அறுந்து போன செருப்பை எடுத்து தோரணமாகக் கட்டியவர்களின் பிள்ளைகளிலே சிலர் இந்த மண்டபத்தில் வந்திருக்கலாம் என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட மாறுதல் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறது. அவரை முதலிலே புரிந்து கொள்ள மறுத்தார்கள். புரிந்து கொள்ள மறுத்தவர்களே புரிந்த பிறகு ஏற்றுக் கொணடனர். ஏற்றவரும் விரல்விட்டு எண்ணக்கூடிய

வலிமை என்றாலும், விழுந்து அடி
யார், அடித்தாலும் ~~[illegible]~~ தொய்ந்துவிட-
போய் விட்டது என்பதை அறியாதார்
இல்லை.

எனவேதான், பெரியாருடைய
பெருமையை, நான் [illegible]
[illegible], ஒரு சகாப்தம் - ஒரு
காலகட்டம் - ஒரு திருப்பம் - என்று
கூறுவது வழக்கம்.

சமுதாயம் என்னும் போது,
மக்களுக்கு அது [illegible]
[illegible] வேண்டும் என்றல்லவும்,
[illegible] கொள்வோம் ~~[illegible]~~ என்று
பாதுகாப்பு உணர்ச்சியுடன் தொண்டும்
செய்திருக்க வேண்டும் என்னும்
எண்ணம் வருகிறது.

பெரியார், சமூகம் எனும்
[illegible], [illegible]
[illegible], அதனைத் [illegible]
[illegible].

அவர்கண்ட சமுதாயம், பெற்ற
பெரும் மாற்றம்! அவர் [illegible]
[illegible]! அவர்

வர்கள் தான் அப்போதிருந்தார்கள். இப்போது அவர் பேசுவது எல்லோருக்கும் புரிந்து விட்டது. பெரும்பாலோருக்கு அது பிடித்து விட்டது. அதிலே மிகப்பெரும்பாலோர் அவற்றை தங்களுடைய வாழ்கைக்கு வழிகாட்டியாகக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி ஒரு சமூகத்தை ஒரு நாட்டு மக்களை ஆளாக்கி விட்ட பெருமை உலகத்தில் பலதலைவர்களுக்கு கிடைத்ததில்லை. நம்முடைய தமிழகத்தில் பெரியார் அவர்களுக்குத்தான் அந்தத் தனிப் பெருமை சேர்ந்திருக்கிறது. அந்த பெருமைக்குரியவர்களாக நாம் நம்மை ஆக்கிக் கொள்ளவேண்டும். அவர் அளித்துள்ள செல்வம் அவர் நமக்கு காட்டியுள்ள லட்சியப் பாதையில் நடந்து செல்வதற்கேற்ப ஆற்றல் நமக்கு வர வேண்டுமென்று அவர் இன்றைய தினம் நமக்கெல்லாம் வாழ்த்துச்சொல்லவேண்டும். அந்த வாழ்த்து நமக்கு புதிய வல்லமையை புதிய உற்சாகத்தைத் தரும் என்பதில் அய்யமில்லை.

"என்னுடைய வாழ்த்துகளை கேட்டுக் கொண்டவர்களே! என்னுடைய வழியைப் பின்பற்றியவர்களே! நான் செல்லுகின்ற பயணம் மிக நீண்ட பயணம்; அதிலே நடந்து வருவதற்கான செல்வதற்கான வல்லமை, வலிவு தாங்கும் சக்தி உங்களுக்கெல்லாம் வேண்டும் அவைகள் எல்லாம் உங்களுக்கு வர வேண்டும் என்று வாழ்த்துகிறேன்" என்று அவர் நமக்கு வாழ்த்துக் கூற வேண்டும். இந்த விழா நாளில் நாம் அவரிடம் வாழ்த்துப் பெறவே வந்திருக்கிறோம்.

அப்படிப்பட்ட வாழ்த்தை நமக்குக் கொடுத்து வழிகாட்டி அழைத்துச் செல்ல அவர்களைப் பார்த்துக் கேட்




கும் போது அவரே பார்த்து யார் யாரை எந்தெந்த வேலைக்கு அனுப்பி, தமிழகத்திற்கு மொத்தத்தில் நன்மை கிடைக்கும் ஒரு சந்தர்ப்பத்தை அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்து இன்னும் பன்னெடுங்காலம் நம்மோடு வாழ்ந்திருந்து, நம்முடைய தமிழகம் யாருக்கும் தாழ்ந்து விடாமல் யாரையும் தாழ்த்தாமல் எவராலும் சுரண்டப்படாமல் எவரையும் சுரண்டாமல் எந்தப் புரட்டுகளுக்கும் ஆளாகாமல் எந்தப் புரட்டையும் மூட்டிவிடாமல் தன்னிகரற்ற காலத்தை உருவாக்கித் தந்துவிட்டு அதை அவர் கண்டு களிக்கவேண்டும். அதிலே தான் அவர் கவலை லட்சியத்தில் வெளிப்படையாகத் தெரிகிற பொன் ஓவியத்தை அவர் காண இயலும்.

திருச்சியில் பெரியார் 89-ம்
பிறந்த நாள் விழாவில்
பேரறிஞர் அண்ணா
பேசிய பேச்சின் ஒருபகுதி.
(17—9—1967)

[பேரறிஞர் அண்ணா தந்தை பெரியார் 89வது ஆண்டு 'விடுதலை மலருக்கு' தந்த சிறப்புக் கட்டுரை]

# இவர்தான் பெரியார் !

கல்லூரி காணாத கிழவர்! காளைப் பருவமுதல் கட்டுக்கடங்காத முரடர்! அரசியல் நோக்கத்துக்கான முறையிலே கட்சி அமைப்பு இருக்க வேண்டுமென்று அறியாத கிளர்ச்சிக்காரர்! பொதுமக்கள் மனம் புண்படுமே, புண்பட்ட மக்கள் கோபத்தால் தாறுமாறாகப் பேசுவரே, ஏன் வீணாக அவர்களின் ஆத்திரத்தைக் கிளப்ப வேண்டும் என்று யூகமாக நடந்து கொள்ள மறுப்பவர்! யார் யாரைத் தூக்கி விடுகிறாரோ, அவர்களாலேயே தாக்கப்படுபவர்! அவர் யாரைக் காணவேண்டுமே, அதற்கேற்ற கோலம் வேண்டாமோ என்ற யோசனை அற்றவர்! தமிழ் ஆங்கில தினசரிகளின் ஆதரவு இல்லாதவர்! ஆரிய மதம்; கடவுள் எனும் மூடு மந்திரங்களைச் சாடுவதன் மூலம் கேடுவரும் என்று எச்சரிக்கும் போக்கினரின் இசைக்குக் கட்டுப்பட மறுப்பவர்.

பேரறிஞர் அண்ணா 'விடுதலை வரலாறு'



தர்மபுரியில் தந்தை பெரியார் முழு உருவ
வெண்கலச் சிலை திறப்புவிழா (24—5—69)



தர்மபுரி சிலை திறப்பு விழாவில் தந்தை பெரியார், முதலமைச்சர் கலைஞர், நிதியமைச்சர், கூட்டுறவு அமைச்சர் ஆகியோர்.



தர்மபுரி விழா மேடையில் தந்தையும் தமையனும்!



கரூரில் 'நகரும் குடில்' (கார்) பரிசளிப்பு விழாவில் உணவு அமைச்சர் பொன்னாடை போர்த்தி பணமுடிப்பு வழங்குகிருர், கார் சாவியை பொதுப்பணி அமைச்சர் கலைஞர் தருகிறார் (6-10-68)





அமெரிக்கா சென்று திரும்பிய முதல்வர் அண்ணாவைக் கண்டு அய்யா நலம் விசாரித்தார்



தந்தை பெரியார் தம் 90வது பிறந்தநாள் அன்று திருச்சி பெரியார் மாளிகையில் கலைஞரும், நாவலரும் நேரில் வாழ்த்து கூறினர் (17-9-68)



வடநாட்டில் லக்னோ மாநாட்டில் பெரியார்.




உ. பி. மாநில பிற்படுத்தப்பட்டோர் மாநாட்டில் (12, 13—10—68ல்)




மலேசியத் தலைநகரில் தந்தை பெரியார் பிறந்தநாள் விழா
கோலாலம்பூரில் —பிரதமரின் அரசியல் செயலாளர் பேசுகிறார்.




மேடையில் அகில மலாயா தி. க. கோலாலம்பூர் தோழர்கள்.



கரூர் வட்ட நொய்யல் உயர்நிலைப் பள்ளி அடிக்கல்நாட்டு விழா.



மறைந்த அமைச்சர் திரு. கோவிந்தசாமியுடன் அய்யா.





(25, 26-7-69) தென்னார்காடு மாவட்ட தி. க. மாநாட்டு ஊர்வலத்தில்

# நல்லவர் பெரியார்

சீர்காழி பெ. எதிராஜ்

"பொல்லாத மனிதர் இந்த பெரியார்" என்று பலர் பேசுவதைப் பார்க்கிறோம். இவ்வாறு பேசுகிறவர்கள் யாரை "நல்லவர்கள்" என்று கூறுகின்றனர் என்று புரியவில்லை. "துஷ்டரைக் கண்டால் தூர விலகு" என்று சொல்லுகிறவர்கள்தான் நல்லவர்கள் என்று கருதப்படுகிறது. அக்கிரமங்களைக் கண்டிக்காமல்; அக்கிரமங்களை எதிர்க்காமல் இருப்பது நல்லவர்களுக்கு அழகல்ல. அவ்வாறு ஒதுங்கியிருப்பவர்கள் நல்லவர்களும் அல்லர்.

மனித சமுதாயத்துக்கு நன்மை ஏற்படச் செய்கிறவர்களை மட்டுமேதான் நல்லவர்கள் என்று கூறவேண்டும். இந்த நல்லவர்கள் மனித சமுதாயத்துக்கு தீங்கு ஏற்படுவதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கமாட்டார்கள். மனிதர்கள் இழிவு படுத்தப்படுவதையும், ஏமாற்றப்படுவதையும், மடமையிலாழ்த்தப்படுவதையும் நல்லவர்கள் சகித்துக்கொள்ளமாட்டார்கள் இத்தகைய நல்லவர்கள் ஊருக்கு ஒருவர் அல்லது இருவர்தான் இருப்பார்கள். தந்தை பெரியார் அவர்களும் இத்தகைய நல்லவர்களில் ஒருவராவர். இவர்களின் ஆரம்பகாலம் இருள் சூழ்ந்ததுபோல் தோன்றும். ஏனெனில் இத்தகைய நல்லவர்கள் எப்போதும் உண்மையை மட்டுமேதான் கூறுவார்கள். நியாயத்தை மட்டுமேதான் போதிப்பார்கள். ஒழுக்கக்குறைவான செயல்களையும், ஒழுங்கீன நடைமுறைகளையும் கண்டிப்பார்கள். மற்றவர்களுக்கு போதிப்பதுபோல் சொந்த வாழ்க்கையை நடத்துவார்கள். இவர்களின் ஒழுக்கமே மற்றவர்களுக்கு உபதேசமாக விளங்கும். இத்தகைய நல்லவர்களை மற்றவர்கள் வாழ விடுவது இல்லை. ஏனெனில் எல்லோரையும் மனிதர்களாக வாழுங்கள்—மனித உண்மையை உணர்ந்து வாழுங்கள். மனிதத்தன்மையுடன் வாழுங்கள். மனிதாபிமானத்துடன்வாழுங்கள். மடமையிலிருந்து மீண்டு வாருங்கள். மூடப் பழக்க வழக்கங்களைக் கைவிடுங்கள். மூட நம்பிக்கையையும் விட்டுவிடுங்கள். சிந்தியுங்கள்; சிந்தித்து உண்மையை உணருங்கள். உணர்ந்த பிறகு அறிவுத் தெளிவு பெறுங்கள். அறிவுத் தெளிவு பெற்றபிறகு ஆண்மையுடன் துணிந்து உணர்ந்த உண்மையைக் கூறுங்கள். உணர்ந்த உண்மை வழியில் வாழ்க்கையை நடத்துங்கள் என்று போதித்தார். போதிக்கின்றார். இந்த மனிதாபிமான போதனைகளின் அடிப்படை உண்மைகளை மனிதர்களில் பலர் உணராதிருக்கிறார்கள். ஏன், அவகர்ள் உண்மையை உணர முடியவில்லை? கடவுளும் மதமும் இதற்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றன.

ஒரு காலத்தில் மதம் மனிதர்களை வாழ் வாங்கு வாழவைப்பதற்கென உண்டாக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. ஆனால் அனுபவம் இதற்கு நேர்மாறாகவே இருக்கிறது. மதம் மனிதர்களை வாழவிடாமல் தடுத்துவிட்டது. மதம் உண்மையை மறைத்து

விட்டது. மதம் மனிதர்களை சிந்திக்க முடியாமற் செய்துவிட்டது. மதவாதிகளின் போதனைகளை நம்பும்படிச் செய்துவிட்டது. எனவே மதவாதிகள் கடவுள், தருமம் என்ற பெயரால் மனிதர்களை மடமையிலாழ்த்தி மூடர்களாக-மனிதத்தன்மையற்றவர்களாகச் செய்துவிட்டது.

இவ்வாறு பலவகைகளிலும் மனித சமுதாயத்தில் பெரும்பாலோரை பிறவியிலேயே ஏற்றத்தாழ்வு உள்ளவர்கள் எனக் கூறி மனிதகுல ஒத்துமையைக் குலைத்து அறிவாலும் ஆற்றலாலும் அதிகமாக உழைப்பவர்களை பாவம்பண்ணியவர்கள், அடிமைகளாக வாழவேண்டியவர்கள், தீண்டப்படக்கூடாதவர்கள் என்றெல்லாம் கொடுமைப்படுத்துகிற மனித சமுதாயப் புல்லுருவிகளை வீரத்துணிவுடன் எதிர்த்து நம்மைமட்டுமன்றி மனித சமுதாயத்தையே பகுத்தறிவுப் பாதையில் அழைத்துச் செல்லும் மாமனிதர் ஒருவர் நம்முடன் இருக்கிறார் என்றால் அவரை பொல்லாதவர் என்று யாராவது கூறமுடியுமா? எல்லோரும் மனிதர்களாக வாழவேண்டும் என்பதற்காகவே தொண்ணூறு வயதையும் தாண்டி ஓயாமல் உழைத்துக்கொண்டிருக்கும் தந்தை பெரியார் அவர்களைப் ''பொல்லாத பெரியார்'' என்று பேசுவது மனிதத் தன்மையாகுமா? மனிதாபிமானமில்லாத மதவாதிகளும், இந்த மதவாதிகளின் பொய்ப் பிரச்சாரங்களினால் தங்களின் கொடுமைகளை மூடிமறைத்து வரும் பணவாதிகளும் சுயநல தீய சக்திகளுந்தான் தந்தை பெரியார் அவர்களைப் பொல்லாத பெரியார் என்று கூறுவார்கள்.

தந்தை பெரியார் அவர்களின் சமுதாய இழிவு ஒழிப்பு இயக்கம் நாட்டில் மகத்தான சமூக மாறுதலை உண்டாக்கிவிட்டிருக்கிறது என்பதை பார்ப்பன சமூகமே உணர்ந்து ஒப்புக்கொண்டிருக்கிறது. கற்சிலை வணக்கத்திலிருந்த நம்பிக்கை மிகவும் குறைந்திருக்கிறது. கடவுள் நம்பிக்கையும் குறைந்திருக்கிறது. கடவுளுக்கு உருவம் கற்பிப்பதும், உருவ வழிபாடும் மடமை என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. பிறவியிலேயே ஏற்றத்தாழ்வு உண்டு என்கிற எண்ணம் அகன்று வருகிறது. ஒவ்வொருவரும் சிந்திக்கத் தொடங்கிவிட்டனர். தந்தை பெரியார் அவர்கள் விரும்பியதெல்லாம் மனிதர்கள் ஒவ்வொருவரும் சுயமாக சிந்திக்கவேண்டும் என்பதுதான். அந்த நிலை ஏற்பட்டுவிட்டது. கடவுள் பெயரை எதற்கும் பயன்படுத்தி ஏமாற்றுவது தடுக்கப்படவேண்டும் என்றார். தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தமிழ்நாடு மேல் சபை உறுப்பினராகப் பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டபோது ''கடவுள் பெயரால்'' என்று சொல்லாமல் ''உளமாற'' என்று கூறியிருப்பது சாதாரண விஷயமல்ல. தந்தை பெரியார் அவர்களின் நற்றொண்டு மதவாதிகளிடையேகூட மகத்தான மாறுதலை உண்டாக்கிவிட்டிருக்கிறது என்பதற்கு உதாரணமாகும். பொல்லாத பெரியாரின் போதனைகாரணமாக சமுதாயத்தில் மகத்தான மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை எவருமே மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. இத்தகைய நல்ல காரியங்களை செய்து கொண்டிருக்கும் நல்லவரை யாரும் பொல்லாதவர் என்று சொல்லாதீர்கள். சமுதாயத்துக்கு பொல்லாங்கு புரிகிறவர்களுக்கு தந்தை பெரியார் உள்ளபடியே பொல்லாதவராகத்தான் தோன்றுவார். நன்மையே நாடும் நல்லவர் பெரியார் நீடூழி வாழ்ந்து நமக்கு நல்வழி காட்டட்டும்.

★

## நாம் மனஉறுதியுடன் உடல் உறுதியும் பெற்று வாழ்வோம்!



"சிறந்த மருந்துகளைத் தயாரித்துக் கொடிய நோய்களைச் சுகப்படுத்திய இம்மருத்துவ நிலையத் தலைவரின் மதிநுட்பத்தை மெச்சுகிறேன்."

ஈ. வெ. ராமசாமி (8-11-56)

மூலம், பவுத்திரம், இருமல், இழைப்பு, (ஆஸ்த்மா) நீரழிவு, ஊரல், அரிப்பு, பத்துகள், இரத்தசோகை, உடல்மெலிவு கணைச்சூடு போன்ற நோய்களுக்கு உயர்தரமான சித்த, ஆயுர்வேத மருந்துகள் கிடைக்கும்.

40 ஆண்டுகள் அனுபவம் பெற்ற தலைமை வைத்தியர் ச. ராசகோபால் அவர்களின் சிறந்த ஆலோசனை இலவசம்.

தமிழ்நாட்டின் சிறிய, பெரிய ஊர்களிலும், சிங்கப்பூர், பினாங்கு, இலங்கை ஆகிய நாடுகளிலும் ஏஜண்டுகள் மூலம் எமது மருந்துகள் விற்பனையாகி வருகின்றன.

### தண்டபாணி வைத்தியசாலை

தபால் பெட்டி எண்; 1 – தொலைபேசி எண்: 250
இரயில்வே நிலைய ரோடு, பழனி (மதுரை மாவட்டம்)
கிளை: 2/63, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.
தொலைபேசி எண்: 85843



வாழ்க பெரியார் வளர்க பொது நலம்

## அறிவியக்கத் தந்தை பெரியார் அவர்களின் 91ம் ஆண்டு விழாவின்போது

நாம் நமது இனம் எல்லா நலமும் பெற்று வாழ, நமது மனம், பணம், செயல் வகையில் உதவ உறுதி எடுத்துக் கொள்வோம்.

படிப்புடன் பகுத்தறிவும் வளரப்பாடுபடுவோம்.

### ம. பெ. முத்துக் கருப்பையா,

மோட்டார் சாமான்கள் வியாபாரம், பெரியார் நெடுஞ்சாலை, பெரியகுளம்.
(தொலைபேசி எண் 75)

பொறுப்புகள்:
தலைவர்: திராவிடர் கழகம், பெரியகுளம்
செயலாளர்: நகர் நலச் சங்கம் ,,
செயலாளர்: சோத்துப்பாறை & குப்பான் பாறை ஆயக்கட்டுதாரர் சங்கம்
நிர்வாகி, பெரியசாமி பூரணத்தம்மாள் தரும ஸ்தாபனம், பெரிய குளம்
நிர்வாகி: ஆனந்த் அற நிறுவனம்

கிளை: ஆனந்த் ஆட்டோ ஸ்டோர்ஸ், தேனி
ஆனந்த் ஹார்டுவேர்ஸ், பெரியகுளம்
ஆனந்த் ஆட்டோ ஸ்டோர்ஸ், போடி

ஆனந்த் டாக்சி, பெரியகுளம்

பெரியகுளம் நகரில் அவசர நிமித்தம் மருத்துவமனை செல்ல ஆனந்த் டாக்சி (செட்டில் இருக்கும் சமயம்) இலவச உதவி கிடைக்கும்.

தந்தை பெரியார் 91வது பிறந்த நாள் வாழ்த்துக்கள் !

# A. D. GOPAL

Mfrs. of Hospital Equipments, Surgical Instruments, Household Utensils, Steel Trunks, Agricultural Implements, Commercial and Utility Articles.

SSI REGD. NO. SSI/PR/504/005/07

*Works :*
32, Ragavamudali Street,
TIRUPATTUR

*Phone No.* 138

*Office :*
19, Big Bazaar Street,
TIRUPATTUR (N. A. Dt.)

Telegrams: "LOCKS" Telephone: 94 PBX

# K. Kaliappa Nadar & Sons

Post Box No. 22
DINDIGUL-I

*Dealers & Stockists of :*

Asian Paints, Bombay.
National Paints, Bombay,
GKW Bolts & Nuts, Madras.
Carborundum Universal Ltd., Madras (Ajax Sand Paper)
Hindustan Steel Files, Calcutta
Charminar Asbestos Cement Ltd, Hyderabad.
Dindigul Locks, Hardware, Iron & Steel, etc.

# Madukkur Javuli Store

Market Street

Prop: V. CHIDAMBARAM & SONS

Cloth Merchant,

ARIYALUR.

மதுக்கூர் ஜவுளி ஸ்டோர்ஸ்
மார்க்கெட் தெரு,
அரியலூர்.

# கொள்கை உழவன் வாழ்க!

சாலை இளந்திரையன்

அன்பு நண்பனே, அருமைப் பெரியார்
அறுபதின் மேலே முப்பது தாண்டிய
தெம்பை நினைத்தேன், சிலிர்த்தது நெஞ்சம் ;—
" தீரன் நீ வாழ்க " என்று சிலம்பிற்று கொஞ்சம் !

'இதுவரை வந்த வரலாற் றுள்ளே
இவர்தனி விதம்'என எழுந்தநம் பெரியார்
பொதுநலம் மட்டுமோ புதுமையாய்ச் செய்தார் ?-
முதுமைக்கு மன்றோ இளமையைத் தந்தார் !

'அறுபது தாண்டின் கிறுகிறுப்பு' என்னும்
ஆண்டிகள் தத்துவம் கிழிபட் டுதிர,–
அறுபதோடு அதனரை ஆனபின், தெளிவின்
அணியாய் விளங்குவது பார்அறி வுக்கனல் !

ஒவ்வொரு முச்சும் பகுத்தறி வுப்பயிர்
உயர ஊற்றிய ஒருதுளி யாக
இவ்வொரு மனிதர் இருப்பதா லன்றோ,
இத்தமிழ்ப் பண்ணை இருக்கிறது இன்னும் !

ஆன சாமிகள் அனைத்தும் ஒழித்த
அறிஞர்கள் கூட மொழிஎனும் ஒன்றை
வானத் தெய்வமாய் வணங்குமிந் நாளில்,
வளையா ஒருமுடி, பெரியார் தனிமுடி !

ஒருவெறி தள்ளி, ஓடிவந் தணுகிய
ஒருவெறி அள்ளி உவப்பது மடமை;
பெருநெறி யாகிய பகுத்தறி வுக்தள்
வெறிஎனும் இருட்டு விளைவதே இல்லை!

வெற்றுணர்ச் சிக்கும் வெறியுணர்ச் சிக்கும்
வீசமும் வளையா வித்தகப் பெரியார்,
கற்றது சொல்லும் கிளிப்பிள்ளை கட்கே
கசப்பு; அறிவோர்க்கோ, கற்கண்டுத் துண்டு!

"நாடென மொழிஎன நமரெனப் பிறரென
நாட்டிய எல்லாம் ஞானச் சுடரை
மூடவே விளைத்த புதருகள்" எனவே
மொழிந்தவர்,—வாழ்பவர் பெரியார் ஒருவரே...

பெரியார் வாழ்கிறார் வீசிடும் தென்றலில்;—
பெரியார் இன்றேல் அதுவெறும் காற்று!
பெரியார் வாழ்கிறார் பேசுவோர் அறிவில்;—
பெரியார் இன்றேல் அதுவெறும் பேச்சு!

ஒருபெரி யார்நினைவு ஓடி வருகையில்
உள்ளத் தெழுவது உவ்கைப் பொறாமை!
இருபது பலநூற் றாண்டிடை வெளியில்
யாவர் பெற்றார் இவர்போல் வாழ்புகழ்?

எண்ணிய முடியும், யாவர்க் கென்றால்,
எல்லாம் உயர்வே எண்ணும் அவர்க்கு!
திண்ணிய இவர்போல் செவ்வையே எண்ணிய
தீரர்கள் என்றும் திளைப்பது வெற்றியே...

வெற்றிப் பெருமித மிகுமகிழ் வுடனே
பெரியார் வாழ்க, பெருமைகள் வாழவே...
குற்றிக் கலப்பையால் கொடுமைகள் புரட்டிய
கொள்கை உழவன் பெரியார் வாழ்க!...

# ஸ்டூடன்ஸ் டியூடோரியல் சென்டர்

**கோட்டை - பிரெட்ஸ் ரோடு (கிளை) - சேலம்-1**

| | |
|---|---|
| **B. A., B. Sc.** | ஆங்கிலம், பொருளாதாரம், வரலாறு |
| **P. U. C.** | எல்லாப் பிரிவுகளும், பாடங்களும் (சென்னை - மதுரை) |
| **S. S. L. C.** | அகடெமிக் பிரிவு |
| **Matric** | மதுரை - தமிழில் |

**காலை, மாலை வகுப்புகள் :** கல்லூரி, பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், ஏனையோருக்கும் திறமையான ஆசிரியர்கள், சிறந்த ஆய்வுக்கூடம், அச்சிட்ட பாடக் குறிப்புக்கள், திங்கள்தோறும் தேர்வுகள், குறைந்த கட்டணம், உயர்ந்த கல்வி.

A. மஹபூப்ஜான், B. A.
இயக்குநர்.

T. V. சொக்கப்பா, M. A., L. T.
முதல்வர்.

# T. N. T. C.

## தமிழ் நாடு தனிப்பயிற்சிக் கல்லூரி

**தெப்பக் குளம், திருச்சி-2**

**S.S.L.C.**

**P.U.C. (All Parts)**

**மதுரை மெட்ரிகுலேஷன் (தமிழில்)**

**திறமையான பயிற்சி! வசதி மிக்க விடுதி**

வே. ஆனைமுத்து, தாளாளர்
வித்துவான் து. தயாளசாமி
செயலாளர்
E. S. சாமிநாதன், M.A, L.T., முதல்வர்.

## சுப்பிரமணியம் ஸ்டோர்ஸ்

**கடை வீதி, தருமபுரி-2**

எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் கைத்தறி, மில், சில்க், நைலான், நைலக்ஸ், டெரிலின் மற்றும் திருமண விழாக்களுக்குத் தேவையான பட்டுப் புடவைகளும், சரிகை வேட்டிகளும் விலை மலிவாகக் கிடைக்கும்.

சு. தங்கவேல்,
உரிமையாளர்.

வாழ்க பெரியார் பெரியார் ஆண்டு 91

தொலைபேசி எண் : 406



எமது வாடிக்கையாளர்களுக்கும், அன்பர்களுக்கும் தந்தை பெரியார் அவர்களின் 91-ம் ஆண்டு நன்னாள் வாழ்த்துக்கள்.

எங்களிடம் நயம் அலுமினிய பாத்திரங்களும், நவீன எவர்சில்வர் பாத்திரங்களும், மொத்தமாகவும், சில்லரையாகவும் உத்திரவாதத்துடன் கிடைக்கும்.

# எம். சிதம்பரம் அண்டு ஏ. பால்சாமி

அலுமினியம், எவர்சில் வர் பாத்திரம் உற்பத்தி அண்டு விற்பனையாளர்கள்

**178, மெயின்ரோடு, திண்டுக்கல்**

பாக்டரி :—

**1006, நெட்டுத்தெரு, திண்டுக்கல்**

தந்தை பெரியார் அவர்களின் 91-வது ஆண்டு பிறந்த நாள் விழாவில் எங்கள் வாழ்த்துக்கள்

தோற்றம் : 1934 வளர்க விவசாயம் தொலை பேசி : 48

35 வருடங்களாக எங்கள் பர்மில், வீடிகட்டுமானங்களுக்கு தேவையான மரம், இருப்பு, வர்ணம், சிமிண்டு, சிமிண்டுதகடு, கொல்லம் ஓடுகள், மின்ஒளி சாதனங்கள் உத்திரவாதத்துடன் சகாயமான விலையில் சப்ளை செய்து வருகிறோம்.

மேலும் விவசாயத்திற்குத் தேவையானதும் உழைப்பில் சிறந்ததும், தரத்தில் உயர்ந்ததுமான "பிரிமியர்" எலக்ட்ரிக் மோட்டார், பம்பு, ஸ்டாட்டர், சுவிட்சு மற்றும் உபகரங்களும் "டெக்ஸ்டுல்" ஆயில் இன்ஜின்கள் நேரடியாகவும், நில அடமான பேங்குலோன் மூலமாகவும் உத்திரவாதத்துடன் விநியோகம்செய்கிறோம்.

தங்கள் மேலான ஆதரவை என்றும் விரும்பும்

**K. C. P. சிதம்பரம்,**
மானேஜிங் பார்ட்னர்.

## K. C. P. சங்கரலிங்க நாடார் & பிரதர்,

இரும்பு, மரம் வியாபாரம் அண் எலக்டிரிக் டீலர்ஸ்.
ஸ்ரீ வில்லிபுத்தூர்

# தந்தை பெரியார்தம் தொண்டு பற்றி

## "சங்கர்ஸ் வீக்லி"

மத மவுடீகம், மூடநம்பிக்கை ஆகிய இவற்றின்முன் மண்டியிட்டுக் கிடந்த தமிழக மக்களுக்குப் பகுத்தறிவு ஒளியூட்டி, தாழ்த்தப் பட்ட மக்களை உயர்த்தி, உயர்சாதிக்காரர்கள் சாதிக்கொட்டத்தை அடக்கிய உன்னத மாபெரும் மேதை தந்தை பெரியார் அவர்கள்.

அவர் பணி காந்தியாரின் சீர்திருத்தத்தையும் மிஞ்சியது. காலத்தை வென்று உயர்ந்து நிற்கும் அவருக்குத் தமிழ்நாடெங்கிலும் சிலைகள் அமைக்கப்படுகின்றன!

கடவுள் பற்றிய அவரது தேர்ந்த கருத்துக்கள் அவரது சிலையின் பீடத்திலேயே பொறிக்கப்படும் வகையில் அவரது தொண்டு பலன் தந்துள்ளது என்று பல அரிய கருத்துக்களைப் புது டில்லியிலிருந்து வெளிவரும் பிரபல இங்கிலீஷ் கார்ட்டூன் வார ஏடான 'சங்கர்ஸ் வீக்லி' (8-6-69 இதழில்) 'இவ்வாரத்திற்குரிய மனிதர்' என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையின் தமிழாக்கம் 122ஆம் பக்கத்தில் தரப்படுகிறது.

## The Man of the Week



PEN PORTRAIT

மிகுந்த முனைப்பும் கவர்ச்சியும் நிறைந்த சுய சிந்தனைக்கும் துணிச்சலுக்குப் பேர்போன தேசத் தலைவர்களில் ஒருவரது 90-வது பிறந்த நாள் ஆண்டு விழா மிகப் பெரிய அளவில் கொண்டாடப்படாதது இந்த நாட்டுக்கே உரிய விசித்திரங்களில் ஒன்றாகும்!

### காந்தியைவிட பெரியார்

மகாத்மா காந்தியைவிட திரு. ஈ. வெ. ராமசாமிநாயக்கரே தமிழ் நாட்டில் கொடிய சாதிமுறையை முறிப்பதில் சிறப்பான சாதனை செய்துள்ளவர். தாழ்த்தப்பட்ட மக்களை -அரிஜனங்களை சமுதாயக் கொடுமைகளிலிருந்து விடுதலை செய்தவராக சொந்தம் கொண்டாடுபவர்கள் பலர் இருக்கின்றனர்.

மதப்பற்றும் மூடநம்பிக்கைகளும் பெரும் அளவில் விரவிக்கிடக்கும் நிலையில் மக்கள் மதிமயங்கிக்கிடக்கும் ஒரு நாட்டில், ஈ. வெ. ரா அவர்கள் அம்மத நம்பிக்கை முழுவதையும் முழு மூச்சாக எதிர்த்துவருவது மகத்தான துணிச்சல் மிக்க சாதனையாகும்.

### இங்கர்சால் சார்வாகர் போன்றவர்

கர்னல் இங்கர்சால் தனது நாத்திகக்கொள்கைக் கோட்பாடுகளைக் கைவிடுவதற்கு இணங்காது, அமெரிக்க குடியரசுத் தலைவர் பதவியையே உதறித் தள்ளியவர். நாத்திகத்தில் கர்னல் இங்கர்சால் கொண்டிருந்த தீவிர ஆர்வமும், சார்வாகர் கொண்டிருந்த நாத்திக கோட்பாடு அறிவொளியும் போன்றது இவரது நாத்திக கோட்பாடும். இவ்வகைப் பகுத்தறிவொளி விளக்க நல்லுரைகளும். மூடநம்பிக்கை மூடக்கொள்கைகள் என்றும் மிகக்கடும் இருட்டுப் படலமே மற்ற பகுதிகளைவிட அதிகமாகக்கப்பி, அறிவுக் கண்ணை மறைத்துக்கொண்டிருந்த தமிழ்நாட்டிலே பகுத்தறிவு ஒளிக்கதிர்களை இவர் பாய்ச்சினார்.

### மூடநம்பிக்கை இருட்டை நீக்கிய ஒளி

இவரது திராவிடர் கழகமானது தமிழ் சமுதாயத்திலே மிகக் கீழ்மட்ட அந்தஸ்திலேயே வைக்கப்பட்டிருந்த மக்களுக்கு சுய மரியாதை ஏற்படச் செய்ததுடன் மாத்திரமல்லாமல் உயர் சாதிக்காரர்கள் தகுதியையும் எதிர்த்தது.

திரு. நாயக்கர் அவர்கள் ஒரு சிறிய சமுதாய சீர்திருத்தவாதியாகத்தான் தமது பொதுவாழ்க்கையைத் துவக்கினார்.

தமது நோக்கமான சமுதாய அமைப்பை அடியோடு மாற்றியமைப்பதற்கு காங்கிரசுக்கட்சி ஒரு சாதனமாகலாம் என்று திரு. நாயக்கர் முதலில் நினைத்தார். பார்ப்பனர் ஆதிக்கம் வலுத்திருந்த அக்கால தமிழ்நாடு காங்கிரசில் இவர் ஒரு கேலிக்குரிய நபராகவும் வெறுப்புக்குரியவராகவும் ஆகநேரிட்டுவிட்டது.

இவர் மாஸ்கோ சென்று லெனினை சந்தித்தார். இவ்விதம் லெனினை சந்தித்தவர்களில் உயிருடன் உள்ள மனிதர் இவரே யாகும். பொதுவுடைமைக் கோட்பாடு இவரைக் கவர்ந்தது. ஆனால் அது அப்போது கொண்டிருந்த முறைகளும் வழி வகைகளும் தமிழ்நாட்டு மக்களைக் கவராது என்பதை ஆய்ந்தறிந்தார்.

எனவே சிந்தித்துப் பார்த்து பின்னர் தமது வழியை அமைத்துக் கொண்டுவிட்டார்.

இப்போது அமெரிக்காவிலுள்ள கறுப்பர் நீக்ரோவர் ஆதிபத்திய இயக்கம் போன்றே இவரும்; தமிழகத்தில் சமுதாயத்திலே கீழ்மட்டத்திலே கீழ்ச் சாதியாராக வைக்கப்பட்டிருந்தவர்களை-தமிழ்நாட்டின் ஆதிகுடிகளானவர்களைத் தட்டி எழுப்பி, அவர்களுடைய திராவிட பரம்பரையிலே பெருமை கொள்ளும்படி கேட்டுக் கொண்டார். இப்போது இவர் காலம் கடந்து வாழும் தமிழ் மேதைகளில் ஒருவராக விளங்குகிறார். இவரது மதிப்பு இப்போது தமிழ்நாட்டிலே மிக உச்சத்துக்கு உயர்ந்துவிட்டது. இங்கிலாந்து பெட்ரண்ட்ரசல்-மெக்சிகோ ஆல்ஃபரோ சிக்யூரோஸ் ஆகியவர்கள் போன்று கடவுள் மறுப்புக் கொள்கையுடைய இவரது தீவிரக்கருத்தை இவரது சிலையின் பீடம் தாங்கி நிற்கிறது என்பது இவரது சிறப்புக் கோட்பாடும் பண்புமாகும்.

நிலையான கொள்கைதான் சிறப்புப்பண்பு என்றால்-இந்த முதுபெரும் மனிதரைப்போல நிலையான தீவிர கொள்கைப்பற்றாளர், மிக மிக உயர்ந்த மனிதர்கள் என்பவர்களிலும் கூட கிடையவே கிடையாது.

மற்ற இந்தியாவின் பெருமைமிக்க தனிப்பெரும் மகனும் இவரே யாகும்.

SHANKAR'S WEEKLY

## The Man of the Week

*IT is characteristic of this country that the ninetieth birth anniversary of one of the most colourful, original and courageous leaders of this country went largely unobserved More than Mahatma Gandhi it was E V Ramaswamy Naicker who broke the wicked caste system in Tamilnadu. There are many who can claim to be liberators of the Harijans But EVR questioned the entire religious ethos of the country, a magnificent feat of courage in a country ridden with religiosity and superstition. Such atheism has the brilliance of Charvaka and the passion of Col Ingersoll who gave up his chances of being elected as American President rather than give up his atheistic views.*

*In darkest Madras, EVR flashed the light of rationalism His Dravida Kazhagam not only provided self-respect to the lowest strata of Tamil society but questioned the values of the upper crust. Naicker started life as a minor social reformer. At first he thought the Congress would be the instrument for social change. In the Brahmin-dominated Tamil Nad Congress he was a figure of mockery and scorn. He met Lenin in Moscow, about the only living Indian to do that. He was stirred by Communism but realised that their ways could not go down the people of Madras.*

*Ultimately, he found his own way. Like the present Black Power movement in the United States he told the native Tamils of the lower caste to take pride in their Dravidian ancestry. Today he is almost one of the all-time Tamil greats and his statue has gone up in Tamilnadu. It is characteristic of the man that, like Bertrand Russell in England, and Alfaro Sequieros in Mexico he insisted his views on God go on the pedestal of the statue. If consistency is a virtue there is no one, not barring the highest, who are as consistent as this grand old man, a noble son of the other India*

**Shankar's Weekly**

# பெரியார் சிலையும் பார்ப்பனர் கிலியும் !

பிரபல இங்கிலீஷ் வாரஏடான "சங்கர்ஸ் வீக்லி" 1-6-69 அன்று "நாடு எங்கே செல்கிறது?" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள கேலிச்சித்திரம்.

தர்மபுரியில் 24-5-69 அன்று திறக்கப் பெற்ற தந்தை பெரியார் முழு உருவ வெண்கலச்சிலை பீடத்தின் கீழ் பொறிக்கப்பட்டுள்ள கடவுள் மறுப்பு வாசகங்கள் அகில இந்தியாவின் கவனத்தையும் ஈர்த்திருக்கின்றன என்பதற்கு இக்கேலிச் சித்திரமே சரியான எடுத்துக் காட்டாகும்.

1. பார்ப்பனத் தலைவரான ஆச்சாரியார் சிலை பீடத்தினை உற்றுப் பார்க்கிறார். "கடவுள் இல்லவே இல்லை" என்ற வாசகம் தென்படுகிறது.-அதிர்ச்சி அடைகிறார்.
2. மற்றொருபுறம் போய் பார்க்கிறார், கடவுளை உண்டாக்கியவன் முட்டாள் —மேலும் திடுக்கிடுகிறார்.
3. இன்னொருபுறம் பார்க்கிறார். "கடவுளைப் பரப்பினவன் அயோக்கியன்." —பீதியடைகிறார் !
4. வேறுபுறம் பார்க்கிறார். "கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி"—கைத் தடியைக்கூட போட்டுவிட்டு அவ்விடத்தைவிட்டு ஓடியே விடுகிறார். !!

தந்தை பெரியார் சிலை பீடத்தில் பொறிக்கப்பட்டுள்ள வாசகங்களின் கடவுள் மறுப்புக் கொள்கை எவ்வளவு பார்ப்பனர் உள்ளத்தில் கிலியை மூட்டியிருக்கிறது என்பதற்கான சிறப்பு படப்பிடிப்பாகும் இது.

# Quo Vadis?




'he pedestal of a life-size statue of E. V. Ramaswamy Naicker, recently unveiled by Mr. Karunanidhi at Salem, bears inscriptions denying the existence of God.–Report.

" ஆலயத்தில் ஆரியம்,
அலுவலகத்தில் ஆங்கிலம்,
அரசியலில் இந்தி, —இந்நிலையில்
உன் தமிழ் ஓர் காட்டுமிராண்டி மொழி" — என
இடித்துரைத்து இருள் விலக்கிய சுடர் மணி விளக்கு!
"நமது தமிழகத்தின் முதல் பேராசிரியர்"!!

தந்தை பெரியார் 91-வது பிறந்தநாளில்

**எமது அன்பு வாழ்த்துக்கள்!**

# அம்சவல்லி பவான்,

சிறந்த புலால் உணவகம்,
**கீழவெளி வீதி, மதுரை-1**

நிர்வாகி:
**சா. கோபால் பிள்ளை**

குறிப்பு: பலரும் பாராட்டி பயன் பெறும் சுவையான உணவு வகைகள், குளிர் பானங்கள், மாடிப்பூங்கா...... ஆகியவை எமது சிறப்புக்கள்

**என்றும்**

# கோபால் பல்பொடி

**உபயோகியுங்கள்**

தயாரிப்பவர்கள்: எஸ். பி. எஸ். ஜெயம் அண் கோ., மதுரை 1.
போன்: 4653

Telegram : VASANTA

Telephone : 25522, 25523

# The Vasanta Mills Limited.

*Registered Office* :

SINGANALLUR, COIMBATORE-5

Authorised Capital : Rs. 55,00,000

Paid up Capital : Rs. 36,00,000

**Spindles : 48,124** **Loom : 266**

*Managing Agents* :

**R. K. Shanmukham Chetty & Bros.,**

SPINNING

Ring yarn of all counts ranging from 20s to 100s.

**Single, Double, Stable Fibre**

**Cheeses, Cones, Gassed & Mercerised**

MANUFACTURING :

**GADA, MULLS, DHOTIES, LONGCLOTH**

வாழ்க பெரியார் ! வளர்க கழகம் !! ஓங்குக தமிழகம் !!!

## Greetings To The Immortal Dravidian

"வெள்ளத் தனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு."
"சிதைவிடத் தொல்கார் உரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டூன்றுங் களிறு"

அன்பின் அணிகலன், கருணைக்கடல், கொடைவள்ளல் தந்தை பெரியார் அவர்களின் நன்கொடையும், உள்ளூர் வெளியூர்ப் பெருமக்களின் அன்பளிப்புக்களுங்கொண்டு நிறுவப்பெற்றிருக்கும், திருச்சி பெரியார் சுயமரியாதைப் பிரச்சார கலையத்தின் நகர திராவிடர் கழகக் கட்டிடத்தில் இயங்கும் நூல் நிலையம் & படிப்பகத்திற்குப் புத்தகங்கள் பத்திரிகைகள் நன்கொடை வழங்கும் கபரியோர் பெருமக்கட்கு இந் நன்னாளில் எங்கள் உளங்களிந்த நன்றியையும் வணக்கத்தையும் செலுத்திக் கொள்ளுகின்றோம்.

நகர திராவிடர் கழகம்,
அருப்புக்கோட்டை.

பெரியார் 91-ம் ஆண்டுக்கு எங்களது வாழ்த்துக்கள் !

## தி திருப்பூர் கிளாத் பிரிண்டிங் மில்

ஈரோடு.

Phone : 1059

## ARKAY PRINTS SAREES,

எங்களிடம் மிசின் பிரிண்ட் நவீன டிசைன்களில் கண்ணைக்கவரும்
வண்ணங்களில் சீட்டிகள், பார்டர்கள் சேலைகள் கிடைக்கும்.
ஆர்டரின் பேரில் சீட்டிகள், பார்டர் ரகங்கள் நல்ல முறையில்
தயாரித்துக் கொடுக்கப்படும்.
ஆர்டர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

மில் :— தி திருப்பூர் கிளாத் பிரிண்டிங் மில்

65, G I ; A.P. தங்கவேலு செட்டியார் ரோடு, ஈரோடு-3.

ஆபீஸ் :—1-A, கிழக்கு அனுமந்தராயன் கோவில் வீதி, ஈரோடு-1.

தந்தை பெரியார் 91ம் ஆண்டு
பிறந்த நாள்
வாழ்க பெரியார் !

போட்டோ & பினிஷிங்
என்லார்ஜ்மெண்ட்
செய்வதற்கு சிறந்த இடம்

## சந்தர்
## போட்டோ நிலையம்

144, (மாடியில்) முதல் அக்ரகாரம்,

சேலம்—1.

(Specialist in Colour Enlargements)

அச்சு, பைண்டிங் வேலைகளில் 38
ஆண்டுகள் எங்கள் தொண்டு
வளருகிறது.

எங்கள் ஆதரவாளர் அனைவருக்கும்
நன்றி

## முகுந்தன் அச்சகம்

83, மேலவீதி

சிதம்பரம்

# கடவுள் என்பது...?

கடவுள் என்பது கற்பனையே என்பதையும் அக்கற்பனையினால் ஆதிக்கம் பெறவே அர்ச்சகர்கள் கூட்டம் உலகமெங்கும் முயற்சித்தது என்பதையும் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள் தமது வழமையான கடவுள் மறுப்பு வாசகங்களான—

''கடவுள் இல்லை, கடவுள் இல்லை,
கடவுள் இல்லவே இல்லை.
கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்,
கடவுளை பரப்பியவன் அயோக்கியன்,
கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி''

என்பவைகளில் உள்ளடக்கியுள்ளார். உலகமெங்கும் உள்ள சுதந்திர சிந்தனையாளர்களின் கருத்தும் அதுவே என்பதை இக்கருத்துக்கோவை தெளிவுபடுத்தும்.

—ஆசிரியர்

## பேராசிரியர் ராகுல சாங்கிருத்தியாயன்

மதத்திற்கும்—கடவுளுக்கும் பிரிக்க முடியாத சம்பந்தமிருக்கிறது- கடவுளில்லாத மதம் ஒருவிதமான நாஸ்திகமே. அதை நாம் இங்கு மதமென்றேசொல்லமுடியாது. அப்படிச் சொல்ல வேண்டுமானால் மதத்தினுடைய வஞ்சனை, மோசம் அதில் எவ்வளவு இருக்கிறதோ அதைக் கொண்டுதான் சொல்ல வேண்டும். நல்லது. கடவுள் என்பதுதான் என்ன? மனித ஜாதியின் குழந்தைப் பருவத்தினுடைய பயம் நிறைந்த இதயத்தால் தோற்றுவிக்கப் பட்ட ஒரு உருவத்தின் மலர்ச்சி. மனிதர்கள் காட்டுமிராண்டி நிலையில் இருந்த காலத்தில், அதாவது அவர்களுடைய அறிவு வளர்ச்சி தற்கால அய்ந்து வயதுக் குழந்தையினுடையதைப் போன்றிருந்த காலத்தில், அவர்கள் இருட்டு, தெரியாத இடம், அறிமுகமில்லாதபொருள் இவைகளைக் கண்டு பயமடைந்தார்கள். மின்னல், நெருப்பு போன்ற சக்தி வாய்ந்த பொருள்கள் அவர்களுக்கு மிகுந்த பயத்திற்குக் காரணமாயிருந்தன. அதிலிருந்து அவர்கள் தேவதைகளைக் கற்பனை செய்யத் துவங்கினார்கள். மெதுமெதுவாக இறந்துபோன வீரர்களும், பலசாலிகளும் இந்தத் தேவக்கூட்டத்தில் இடம் பெற்றார்கள். ஒவ்வொருஜாதியிலும் இவ்விதம் அநேக தேவதைகளிருந்தன. அவைகளின் சக்தி, மேன்மை, பெருமை இவைகளுக்காக மனித ஜாதிகளுக்குள் போட்டி இருந்து கொண்டேயிருந்தது. தங்கள் ஜாதித் தேவதைகளுக்குள்ளும் கூட சிறிது, பெரிது என்ற தகராறு இருந்தது. ''யார் பெரியவர், யார் பெரியவர்'' என்று தேடியதன் பலனாய் ''உலகத்தைத் தோற்றுவித்த ஒரே கடவுள்'' சிருஷ்டிக்கப்பட்டார். மனிதர்களின் மனோவளர்ச்சியோடுகூடவே அவரிடத்திலும் அநேக நல்ல குணங்கள் சேர்க்கப்பட்டன. இவ்விதம்தான் கடவுளின் உற்பத்தி ஏற்பட்டது. உண்மையில், கடவுள் மனிதனுடைய மானசீக புத்திரன்.

''இவ்விதம் கடவுளின் அடிப்படை,

கற்பனை உலகிலிருந்தாலும் இறந்த காலத்தில் இந்த நினைவால் எத்தனையோ மனிதர்கள் மகிழ்ச்சியும், உதவியும் பெற்றிருக்கிறார்கள்'' என்று சொல்வதை நாம் மறுக்கவில்லை. ஆனால் இதன் காரணமாக மனித சமுதாயம் லக்ஷக்கணக்கான வேதனைகளையும் அனுபவித்திருக்கிறது. ஒரு கடவுளை வணங்கும் மதத்தைவிட, பல கடவுளை வணங்கும் மதம் எத்தனையோ மடங்கு தாராளமுள்ளது. ஏனெனில் அவர்களின் கடவுள் எண்ணிக்கை அதிகமாயிருப்பதால், அங்கு மற்ற கடவுளர்களையும் அனுமதிப்பது சுலபமாயிருக்கிறது.

''ஒரு கடவுள் வாதி''களோ, அப்படிச் செய்து தங்கள் ஒரே கடவுள் அடிப்படையை அசையவிடமாட்டார்கள். நீங்கள், ஒரு கடவுள்வாதி மதங்களின் கடந்த 2000 வருட சரித்திரத்தைப் பார்த்தால், அது நாகரிகம், கலை, கல்வி, எண்ணச் சுதந்திரம் இவற்றோடு மனிதனின் உயிருக்கும் கூட பெரிய விரோதியாயிருந்திருக்கிறது என்பது தெரியவரும். அவர்கள் ஆயிரக்கணக்கான பெரிய புத்தகாலயங்களையும், கோடிக்கணக்கான புத்தகங்களையும் நெருப்பிலிட்டு விட்டார்கள். உருவம் பெற்ற அழகையும்-கோமள உணர்ச்சியையும் எத்தனையோ கலை நிபுணர்களின் அழகிய சிற்பங்களையும் ஓவியம் நிறைந்த மாளிகைகளையும் நாசமாக்கிவிட்டார்கள். ஆயிரக்கணக்கான கல்வி ஆசையுடையவர்களையும், அறிஞர்களையும் கொன்று, எண்ணச் சுதந்திரத்தின் கழுத்தை முறித்துவிட்டார்கள். மனிதர்களின் மனோவளர்ச்சியைக் குறைந்தபக்ஷம் ஓராயிர வருடத்திற்குத் தடுத்ததோடல்லாமல், முன்னால் பெற்றிருந்த வெற்றிகளையும் பெரும்பாகம் அழித்து விட்டார்கள். குற்றமற்ற ஆண்களையும், பெண்களையும், குழந்தைகளையும் கொன்று குவித்தார்கள். இதுதான் அவர்கள் மதத்தை பரப்புவதற்கு முக்கிய வழியாயிருந்தது. அவர்கள் சென்ற நாட்டிற்கெல்லாம் நெருப்பையும், கத்தியையுந்தான் கொண்டு சென்றார்கள். முதலில் இவர்களுடைய வலையில் பிடிபட்ட ஜாதியாரோ வெறி மயக்கத்திலிருந்தார்கள். அவர்களுக்குத் தங்களுடைய உயிருள்ள ஜாதியின் ஒழுங்கு அழிந்துகொண்டே போகிறதென்ற எண்ணமே தோன்றவில்லை. அந்த மயக்கம் கலைந்தபொழுது, தங்கள் முன்னோர்களின் எல்லா நல்ல செயல்களும் நாசமாகிவிட்டதை உணர்ந்தார்கள். ஜெர்மன் மக்களிடையே ''ஒரு கடவுள் கொள்கை'' கத்தியின் பலத்தாலேயே பரப்பப்பட்டது. அக்காலத்தில் பழைய மதத்தோடு கூட ஜெர்மன் மக்களின் மனிதத்தன்மையும் நசுக்கப்படவேண்டுவது அவசியம் என்று கருதப்பட்டது. அவர்களுடைய எழுத்தும் பயனற்றது என்று கூறப்பட்டது. அவர்களுடைய இலக்கியங்கள் தேடித்தேடி நெருப்பிலிடப்பட்டன. அவர்களுடைய கோவில்களை அழித்ததோடு மட்டுமல்லாமல் ஓக் மரங்களையும் வணங்கிக் கெட்டுவிடுவார்களோ என்ற பயத்தால் லக்ஷக்கணக்கான பெரிய ஓக் மரங்களையும்வெட்டிவிட்டார்கள். ''ஒரு கடவுள் வாதி''களின் இவ்வித யுத்த வர்ணனை ஆசியாவில்மட்டுமல்ல, அமெரிக்காவின் நாகரிகத்தை அழிப்பதற்குக் காரணமாயிருந்தது. தனது பெயரால் நூற்றுக்கணக்கான வருடங்களாக இவ்விதப் பயங்கரமான கொடுமைகள் செய்யப்படுவதையும், இரத்த ஆறு ஓடச் செய்வதையும் பார்த்துக்கொண்டிருந்தும், இவைகளைத்தடுப்பதற்காக அந்தக் கடவுள் வராவிட்டால் அவர் இல்லை என்பதற்கு இதைவிட வேறு காரணம் வேண்டுமா?

## II

இவ்விதம் உலகில் எந்த எண்ணத்திற்கும் இரண்டு கட்சிகள் இருக்கின்றன. இந்த நிலைமையில் யாருடைய அபிப்பிராயத்தையும் பற்றிக்கொண்டு நடப்பது நன்மையல்ல. நீங்கள் உங்களறிவைச் சுதந்திரமுள்ளதாக வைத்துக்கொள்ள வேண்டும். சுயேச்சையான சிந்தனையில் தோன்றும் முடிவையே பின்பற்றி நடக்கவேண்டும். கடவுளின் உற்பத்தி பற்றி நாம் கூறினோம். இப்போது அதன் அடிப்படையைப்பற்றி ரசமற்ற கேலி செய்ய விரும்பவில்லை. ஆனால் கடவுளை ஒப்புக்கொள்பவர்கள் உலகத்தின் எஜமானரான கடவுளைப்போல் இங்கும் அதை ஆளுகிறவன் அதாவது ஒரு அரசன் இருக்கவேண்டுமென்றும் ஒப்புக்கொள்கிறார்களென்பதை நாம் உறுதியாகச் சொல்லிவிட விரும்புகிறோம்.

# கருத்துக் கோவை



அநேக நூற்றாண்டுகளாக இந்த அரசர்கள், கடவுளின் பிரதிநிதிகள் என்ற தோரணையில் தான் ஆட்சிசெய்து வந்திருக்கிறார்கள். பொது உடைமைக் கொள்கை, உலகத்தின் எல்லாச் சக்திகளையும் கற்பனைக்கடவுளின் கையிலிருக்கிறதென்று நினைக்காமல் இயற்கையிலும், மனித சமுதாயத்தினிடமும் இருப்பதாகக் கருதுகிறது. கடவுள் நினைவு, நமது எல்லா வேலைகளிலும் துன்பத்தைஉண்டாக்குகிறது.

கடவுள் நினைவுதான், நமக்கு நாமே எஜமானர்களல்ல என்பதைக் கற்றுத்தருகிறது. எத்தனையோ மதங்கள், கடவுளின் வேலையில் தலையிடக்கூடாதென்பதற்காகக் கர்ப்பத்தடையை எதிர்க்கின்றன. மக்களெண்ணிக்கையைக் குறைக்கவேண்டிய அவசியம் நேர்ந்தாலும், அதைப்பற்றி அவற்றிற்குக் கவலை இல்லை. சென்ற வருஷம் நான் காஷ்மீரநாட்டின் "வாலிஸ்தான்" பகுதிக்குச் சென்றிருந்தேன். அது ஒரு வறண்ட மலைப் பிரதேசம். அங்கு விருப்பப்படி தண்ணீர்க் கால்வாய்களோ, பயிர் நிலங்களோ உண்டாக்க முடியாது. நாங்கள் சென்ற பொழுது வழியில் ஒருகிராமத்தில் தங்கினோம். கிராம மக்களின் ஏழ்மை வர்ணிக்க முடியாதது. 50 வருடங்களுக்குமுன்னால் அங்கு 5 வீடுகள் தானிருந்தனவென்றும், இப்போது 20 வீடுகள் இருக்கின்றனவென்றும் தெரிந்துகொண்டோம். எங்கள் ஜெர்மானிய நண்பர் அவர்களிடம் "உங்களுடைய கிராமத்தில் வெள்ளாண்மை செய்வது முடியாததாயும் வாழ்க்கை நடத்துவது மிகவும் கஷ்டமாயிருக்கும்போது நீங்கள் ஏன் இவ்வளவு குழந்தைகளை பெறுகிறீர்கள்?" என்று கேட்டார். "யார் குழந்தைகளைக்கொடுக்கிறாரோ, அவர் அவற்றைக் காப்பாற்றமாட்டாரா?" என்று பதில் கிடைத்தது. "ஆம் அவர் காப்பாற்றாவிட்டால் காலரா, அம்மை, பசி முதலியன நிச்சயம் காப்பாற்றிவிடும்" என்று எங்கள் ஜெர்மானிய நண்பர் கூறினார். இல்காஸா நகரில் ஒரு முசல்மான் கனவான், "எங்கள் மதத்தின் விதிப்படி தாய் தந்தையர்களுக்குப் போதுமான குழந்தை கிடைத்துவிட்டால் அவர்கள் 'ஹஜ்' யாத்திரை போகவேண்டிய அவசியமில்லை" என்று தனது நம்பிக்கையைத் தெரிவித்தார். இந்துக்களுங்கூட "குழந்தை இல்லாதவனுக்கு நற்கதியில்லை" என்று சொல்லுகிருர்கள்.

இவ்விதம் நீங்கள் எவ்வளவு சிந்தித்தாலும், கடவுள் நினைவு நமது எல்லாவித முன்னேற்றத்திற்கும் தடை என்ற முடிவிற்குத்தான் வரமுடியும். மனோ அடிமைத் தனத்தின் பலமான விலங்கு கடவுள் நினைவு. சுரண்டுபவர்களின் சக்தி வாய்ந்த ஆயுதம் கடவுள் நினைவு. அதன் உதவிகொண்டு அவர்கள் "ஏழை—பணக்காரன் என்பது அவரால் செய்யப்பட்டது. அவர் செய்வதெல்லாம் சரியாகவே செய்கிறார். அவருடைய விருப்பப்படி உன்னை விட்டுவிடு. இந்தச் சில வருட வாழ்க்கையைப் பற்றி என்ன கவலை? உனக்காக இறந்தபின்பு அவர் எத்தனையோ இன்பங்களை வைத்திருக்கிறார். இயந்திரங்களைப் போன்று எல்லா உயிர்களையும் அவர் நடத்துகிறார். மனிதர்கள் அவர் கைப்பொம்மைகள்" என்றெல்லாம் சொல்கிறார்கள். இந்த நினைவுகள் நமக்கு நாமே எஜமானர்களாகச் செய்யுமா? கடவுளில்லாவிட்டால் இந்த உலகத்தை யார் படைத்தார்களென்று நீங்கள் கேட்கலாம். ஒவ்வொரு பொருளுக்கும் படைப்பவர்கள் அவசியமா? அப்படி அவசியமானல் கடவுளைப் படைத்த

வர்கள் யார்? அவர் தானே தோன்றினா ரென்றால், இதே விஷயத்தை இயற்கை பற்றியும் ஏன் ஒப்புக்கொள்ளக் கூடாது ?

கடவுள் முதலாளிக் கொள்கைக்காரர் களுக்குப் பெரிய உபயோககரமான ஆயுதம் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். கடவுள் நினைவு ஏற்கனவே தோன்றியிருக்காவிட்டால் இப்போது அவர்கள் அதை தோற்றுவித்திருப்பார்கள். இதே காரணத்தால்தான் களைத்துப்போன அறிவுடைய—சுரண்டுகிறவர்களை வளர்க்கும எத்தனையோ விஞ்ஞானிகள் மதத்தையும் கடவுளையும் ஆதரித்து பேசுகிறார்கள். நமது தாய் நாட்டைப் பொறுத்தவரை, இந்த மத உணர்ச்சி மறையாமலிருக்குமளவும் அமைதி, சுதந்திரம் இவற்றைக் கனவில் கூட காண முடியாது.

[''பொதுவுடமைதான் என்ன?'' என்ற நூலி லிருந்து.]

## பேராசிரியர் சி. இ. எம். ஜோட்

தன்னால் புரிந்துகொள்ள முடியாத அல்லது கட்டுப்படுத்த முடியாத இடி, மின்னல், பூகம்பம், வெள்ளம் போன்ற இயற்கைச் சக்திகளின் முன்பாகத் தான் திறமையற்றிருப்பதை ஆதிமனிதன் கவனித் தான். அவற்றை நிகழுமாறு செய்யவல்ல ஏதோ ஒரு பொருள் இல்லாது தாமாகவே அவை உண்டாகக்கூடும் என்பதை அவனால் எண்ணக்கூட முடியவில்லை. தவிரவும், ஏதோ ஒரு பொருள் என்றால் அது உயிருடன் விளங்கும் யாரோ ஓர் ஆளாகவே இருக்க வேண்டும் என்றும் அவன் நினைத்தான். இடி யுடன் கூடிய புயல்காற்று, பூகம்பம் ஆகிய வற்றை தோற்றுவிப்பதற்கு ஏதோ ஒரு வகை ஆளே இருக்கவேண்டும் எனக் கருதினான் அவன். பயங்கரமான நிகழ்ச்சிகளை உண் டாக்கும் ஓர் ஆளைப்பற்றிய சிந்தனையின் விளைவாகவே 'கடவுள்' என்னும் கருத்து உரு வாகத் தொடங்கியது. ஆனால் நடப்பவை அனைத்திற்கும் ஒரே கடவுளே காரணமாக இருக்கமுடியும் என ஆதி மனிதன் நினைக்க வில்லை; உலகில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒவ்வொரு தெய்வமாகப் பல தெய்வங்கள் உள்ளன என்றே அவன் எண்ணினான்.

எடுத்துக்காட்டாக, நமக்குத் தெரிந்திருப் பவைகளில் மிகப்பழமையான தொரு நாகரிகம் இருந்துவந்த எகிப்துநாட்டில் ஏறக்குறைய நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே திங்களுக்கு ஒரு தெய்வம், கதிரவனுக்கு ஒரு கடவுள், இருளுக்கு ஒரு இறைவன், படிப்பிற்கு ஒரு பகவான் எனப் பற்பல கடவுளர் இருந்தனர். பசு தேவதை (ஐஸிஸ்), பூனைத்தேவதை (பாஸ்ட்) என்று இத்தெய்வங்களில் பல பிராணிகளா கவே இருந்தன. மனிதர்களைப் போன்றே இத்தெய்வங்களும் சிலரை நேசித்தன; சிலரை வெறுத்தன; சண்டையிட்டுப் போராடின. அவைகளுக்குப் பிரியமானவர் என்றும் சிலர் இருந்தனர். பெரும்பாலும் உலகத்தில் நடை பெறும் எந்த நிகழ்ச்சியும் அவைகளால்தான் உண்டாவதாகக் கருதப்பட்டது. கோபத் துடனும், எதிலும் அக்கறையில்லாமலும் அவைகள் இருக்கக்கூடுமாதலால், அவைகளை மகிழ்ச்சியுடன் கூடியதாக வைத்துக்கொள் வதில் மக்கள் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டியிருந்தது. தெய்வங்களை வேண்டிக் கொள்வதனாலும் போற்றிப்புகழ்வதனாலுமே மனிதன் தன் வாழ்க்கையில் ஏற்படும் இடர் களிலிருந்தும் ஆபத்துக்களிலிருந்தும் தப்பிக் கொண்டு உயிர்வாழ முடியும் என்ற கருத்தை மனிதனின் பண்டைய வரலாறு முழுவதிலும் காணலாம். எடுத்துக்காட்டாக, ரே என்னும் ஞாயிற்றுக் கடவுளை வெளியே தோன்றும்படி தாழ்மையுடன் கெஞ்சி வேண்டிக்கொள்ளும் தலைமைப் பூசாரியின் பிரார்த்தனைகளால் அக்கடவுள் கீழுலகத்தினின்று கொண்டுவரப் பட்டதால்தான் பொழுது விடிந்து காலை வரும் என எகிப்தியர்கள் எண்ணினார்கள்.

அர்ச்சகர்களின் ஆதிக்கம்:— இம்மாதிரி யான நம்பிக்கைகள் அர்ச்சகர்களுக்கு மிகுந்த ஆதிக்கம் அளித்தன. மனிதர்களுக்கும் தெய்வங்களுக்குமிடையே செல்லும் தூதர் களாகவே அவர்கள் விளங்கினர். தெய்வங் களின் விருப்பமும் அவற்றின் உள்ளக்கிடக்

கையும் அவர்களுக்கே தெரியும்; அது என்ன என்பதை அவர்களே மக்களுக்கு எடுத்துரைத்தனர். இவ்வாறு குறிப்பிட்டு ஒரு காரியத்தை மக்கள் செய்யவேண்டுமென அவர்கள் விரும்பினால், தெய்வங்களின் விருப்பம் அதுதான் என்றும், எனவே அதைச் செய்தே ஆகவேண்டும் என்றும், அப்படிச் செய்யாவிட்டால் பெரும் விபத்து ஏதாவது ஏற்படும் என்றும் கூறி அந்த வேலையை மக்கள் செய்யும்படி அவர்கள் செய்தனர். இதனால் அர்ச்சகர்கள் மிகுந்த ஆதிக்கம் பெற்றனர்.

தெய்வங்கள்பால் உள்ள அச்சத்தை அடிப்படையாகக் கொண்ட இவ்வாதிக்கத்தின் விளைவாகப் பல கொடுமையான பலிகள் தோன்றின; அவற்றுள் ஒன்று நரபலி. ஏன் எனில், தெய்வங்களைத் திருப்திப்படுத்துவதற்காக உயிர்ப்பலி கொடுக்கவேண்டும் என்றும், அங்ஙனம் கொடுக்காவிட்டால் போரில் தோல்வி அடையும்படி செய்தோ, பயிர்களை அழித்தோ, வேறு ஏதாவது வகையிலோ அவை நமது மகிழ்ச்சியின்மையை வெளிப்படுத்தும் என்றும் சொல்பவர்களாகவே அர்ச்சகர்கள் இருந்தனர். எகிப்தை எடுத்துக் கொண்டால் அந்த நாட்டின் சுபிட்சம் நைல் ஆற்றையே பெருமளவிற்குச் சார்ந்திருக்கிறது. எகிப்தில் உள்ள நிலம் வறட்சி மிக்கது. நைல் ஆற்றில் நீர் பாய்ந்தால்ஒழிய, பயிர் எதுவும் அதில் விளையாது. ஒவ்வோர் ஆண்டும் நைல் ஆறு கரைபுரண்டு சுற்றிலும் பல மைல் தொலைவு வரை பெருக்கெடுப்பதால் பெரும் வெள்ளம் ஏற்படுகிறது, இவ்வெள்ளத்தில் நிலம் வளம் பெறுகிறது; பயிர்கள் செழித்து வளர்கின்றன. இந்த நைல் ஆற்றுக்கென ஒரு தேவதை உண்டு. தக்க பலியும் நெருப்பில் இடப்பட்ட காணிக்கைகளும் நைல் தேவதைக்கு அளிக்கப்பட்டாலன்றி ஆறு கரைபுரண்டு ஓட மறுத்துவிடும் என்று அர்ச்சகர்கள் கூறினர். எருது போன்ற பிராணிகளே பெரும்பாலும் பலி கொடுக்கப்பட்டன. ஆனால் சில சமயம் மனிதர்களும் பலியிடப்பட்டனர். பண்டைய மக்கள் பலருக்கு இம்மாதிரியான நம்பிக்கைகள் இருந்திருக்கின்றன. மெக்ஸிகோவில் வாழ்ந்த ஆஸ்டெக்ஸ் என்னும் மக்கள் தொகுதியினர், ஞாயிற்றுக் கடவுளின் உணவிற்கென உண்டாக்கப்பட்டவர்களே மனிதர்கள் என்றும், சூரியனுக்கு உணவு குறையாமல் இருப்பதற்காக மனிதர்கள் ஒருவரோடொருவர் சண்டையிட்டு ஒருவரையொருவர் கொல்லவேண்டும் என்றும் நினைத்தனர். எனவே, அவ்வப்போது மனித இறைச்சியைச் சூரியனுக்கு அளித்தாலன்றிச் சூரிய வெளிச்சம் மங்கிவிடுமென அவர்கள் கருதினார்கள்.

லாப ஆசையால் தெய்வங்களிடம் அன்பு: பழங்காலத்து மக்களிடம் பழக்கவழக்கங்களும், சடங்கு முறைகளும் கொடுமை நிறைந்து விளங்கின என்பதும், அவை அர்ச்சகர்களுக்கு மிகுந்த ஆதிகத்தை அளித்தன என்பதும் மாத்திரம் அல்ல. மதத்தைக் குறித்து மக்களுக்கு மிகத்தாழ்வான கருத்தே இருந்தது என்பதையும் அவை குறிப்பிட்டன. நான் முன் சொன்னபடி பண்டைக் காலத்தில் சமயங்கள் அச்சம், லாப ஆசையினால் விளையும் அன்பு ஆகியவற்றின் கலப்பேயாகும். தெய்வங்களை மகிழ்ச்சி நிறைந்ததாய் வைத்துக் கொள்ளாவிட்டால் அவை நமக்குத் தீங்கு விளைவிக்கும் என்பதனால்தான் அவைகளிடம் நாம் அஞ்சுகிறோம்; போதிய அளவிற்கு அவைகளிடம் அன்பாக இருந்தால், அல்லது இருப்பதாகப் பாசாங்கு செய்தால் அவைகள் நமக்கு நன்மை செய்யும் என்றும் நாம் நம்புகிறோம். அதாவது, தெய்வங்களிடமிருந்து கிடைக்கக்கூடிய நன்மைகளுக்காகவே அவைகளை நாம் வணங்குகிறோம்; புகழ்கிறோம்; வேண்டிக்கொள்கிறோம்; எவ்வளவு சக்தி வாய்ந்தவை, எவ்வளவு நல்லவை என்றெல்லாம் போற்றுகிறோம். அவைகளை திருப்திபடுத்துவதற்காகபலிகொடுக்கிறோம்; கோவில்களுக்கெனக் காணிக்கைப் பொருள்களை அர்ச்சகர்களிடம் தருகிறோம். தெய்வங்கள் எவ்வளவுக்கெவ்வளவு கோபம் மிகுந்தனவாய் இருக்கின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக காணிக்கை பொருள்களைக் கொடுக்கிறோம். ஆகவே, காணிக்கைகளால் லாபமடையும் அர்ச்சகர்கள் தெய்வங்கள் சினம் மிகுந்தவை என்றே கூறுவதில் வியப்பு ஒன்றுமில்லை.

['நாகரீகத்தின் கதை' என்ற நூலிலிருந்து.]

எனவே கடவுள் என்பது

# கற்பனை

அறிவுலகமேதை அய்யா அவர்களின் 91-வது பிறந்த நாளிலே
எங்களின் பொன்னான வாழ்த்துக்கள்!
வாழ்க பெரியார்!

தந்தி: "ரைஸ்"
போன்: (அலுவலகம்) 72
இல்லம்: 478
ஆலை: 909

சி. எஸ். டி. நெ. 20/1-7-57
M. P. & R. D. L. No. 2167/66-67
M. F. D. L. No. 2586
சர்க்கரை எல். நெ. 13
R. E. No. 43

எம். ஜி. அங்கப்ப செட்டியார்

ஸ்ரீ ஜெயலட்சுமி அரிசி ஆலை

தபால் பெட்டி எண்: 54
சத்தி ரோடு, — ஈரோடு-1. (S.Ry.)

கிளைகள்

அங்கப்பா அரிசி & ஆயில் மில்ஸ்
90, பெருந்துறை ரோடு,
ஈரோடு-2.

M. G. அங்கப்ப செட்டியார்
நெல் மண்டி,
மன்னார்குடி, தஞ்சாவூர் ஜில்லா.

வாழ்க பெரியார்

T. K. கோவிந்தசாமி

லீக்கோ & யூரியாவிற்கு மொத்த விற்பனையாளர்
கரி & தென்னங்கீற்று மொத்த, சில்லரை வியாபாரம்
ஏசண்ட்: நட்சத்திர மார்க் ஷாவாலா உரங்கள்
6, ப்ழனிசாமி முதலியார் தெரு,
திருப்பத்தூர் (வ. ஆ.)

தந்தை பெரியார்

தமது வாழ்நாளில் பாதியை 45 ஆண்டு
சமுதாய வளாச்சிக்காகவே உழைத்தது போல்
அய்யா அவர்கள் நமக்குப் பகுத்தறிவை ஊட்டவும்
தனித்தமிழ்நாடு பெறுவதற்கான வழிவகை வகுத்துத் தருவதற்கு
தந்தை அவர்கள் நம்மிடையே பல்லாண்டு வாழவேண்டுமென்றும்
அவரது அறிவுரையினால் நம் அறிவு பெருகியதுபோல்
விவசாயிகள் நெய்வேலி யூரியாவை உபயோகித்து

உணவு உற்பத்தியைப் பெருக்கி
நாட்டை வளமாக்க வேண்டுமென

மனமார, உளமார
வேண்டுகிறேன்

T. K. கோவிந்தசாமி

Grams:
Rose Arunachalan
Shevapet Salem

Phone No.
4047

Rly Station:
Salem Market

# R. S. ARUNACHALAM CHETTY & SONS,

Handloom Cloth Merchants,
**54, Komarasamy Chetty Street,**
Post Box No 209
SHEVAPET, SALEM-2

# ரெ. சு. அருணாசலம் செட்டி & சன்ஸ்

கைத்தறி ஜவுளி வியாபாரம்,
தபால்பெட்டி எண் : 209,
செவ்வாய்பேட்டை, சேலம்-2.

## வியாபாரிகளுக்கு ஓர் நற்செய்தி

நாங்கள் 28 வருடங்களாக ஆடவர்களுக்கு 60s, 80s, 100s, நூல் கட்டு வேட்டிகளும், மேல் துப்பட்டாக்களும், டைமண்டு வேட்டிகளும், லினன் லுங்கிகளும், மகளிர்களுக்கு 6,7,8 கெஜம் நூல் சீலைகளும், நார்பட்டு சீலைகளும், அசல் பட்டு சீலைகளும், ரவிக்கைகளும், கைத்தறியில் தயாரித்து, மொத்த வியாபாரிகளுக்கும், சில்லரை வியாபாரிகளுக்கும் விற்பனை செய்து வருகின்றோம்.

வியாபாரிகளின் நல்வரவை எதிர்பார்க்கின்றோம்.

வணக்கம்

சிறந்த வெண்மையான சலவைக்கு

# எஸ். ஆர். பார் சோப்

எங்கள் கம்பெனியில் தயாராகும் இதர தயாரிப்புகள் :
∴ ரத்தினம் ஸ்பெஷல் பார் சோப் ∴ எஸ். ஆர். ஸ்பெஷல் கேக்
∴ 275 பார் சோப் ∴ R. S. பார் சோப்

உபயோகித்து தும்பைமலர் போன்ற வெண்மையான
உடைகளை அணியுங்கள்

# R. R. பார்சோப்

எப்போதும் எங்கள் டிரேட்மார்க்
"சூரியனை"
கவனித்து வாங்கவும்

Regd No. 226023

Phone : No. 6115

## எஸ். ஆர். சோப் பாக்டரி,

(275) 4, அவணியாபுரம் ரோடு, மதுரை12.
எல்லா ஊர்களுக்கும் முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

நிர்வாகி.
S. ரத்தினம்

## எஸ். பி. சுப்பையா

எஸ். பி. நியூஸ் மார்ட்
பஸ் நிலையம் அருகில்—T. வாடிப்பட்டி
(மதுரை மாவட்டம்)

விடுதலை தினத்தந்தி
தினமணி இந்தியன் எக்ஸ்பிரஸ்
மாலைமுரசு ஹிந்து
ஆகிய தினசரிகளும்,

ஆனந்தவிகடன், கல்கி, குமுதம்,
கல்கண்டு, கலைமகள், கண்ணன்
பேசும்படம், மஞ்சரி
ஆகிய வார, மாத இதழ்களும்
கிடைக்கும்.

## ஜான்சி மெடிக்கல்ஸ்

லாலா பஜார், T. வாடிப்பட்டி
(மதுரை மாவட்டம்)

எங்களிடம் எல்லாவிதமான
இங்கிலீஷ் மருந்துகளும்
கிடைக்கும்.

இந்துஸ்தான் லிவர்ஸ் ஸ்டாக்கிஸ்ட்

ஏஜண்ட்ஸ் :—

N. V. S. பட்டணம் பொடி,
திண்டுக்கல், அங்கு விலாஸ்
வாசனைப் புகையிலை,
குடியாத்தம் ராஜா பீடி.

**K. நடராஜ நாடார் & சன்.**

தந்தை பெரியார் அவர்களின்
91-வது பிறந்தநாளன்று



தமிழக அரசின்
உறுதுணையாய்
இருக்கும்

எங்கள் மனங்கனிந்த
வணக்கத்தையும்,
வாழ்த்தையும்
காணிக்கையாகப்
படைக்கிறோம்.

## வாடிப்பட்டி ஸ்ரீ லாலா டாக்கீஸ்

உரிமையாளர்கள் :-
P. பெருமாள், B.A., பொன் சுப்பையா, P. திருமலைசாமி
(மதுரை மாவட்டம்:)



பகுத்தறிவு குடும்பத்தின்

# தந்தையும், தலைமகனும்



பல்கலை கழக மாணவர்கள் நடத்திய அண்ணா 60 ம் பிறந்த நாளில் அய்யாவும், அமைச்சர்களும்.



## அமெரிக்காவிலிருந்து அண்ணன் எழுதிய அஞ்சல்

பேரன்புடைய பெரியார் அவர்கட்கு, வணக்கம்.

என் உடல் நிலை நல்லவிதமாக முன்னேறி வருகிறது. வலியும் அதற்குக் காரணமாக இருந்துவந்த நோய்க் குறியும் இப்போது துளியும் இல்லை. பசியின்மையும் நீங்கியும் இருக்கிறது. டாக்டர் மில்லரின் யோசனையின்படி இந்தத் திங்கள் முழுவதும் இங்கே இருந்துவிட்டு நவம்பர் முதல் வாரம் புறப்பட எண்ணியிருக்கிறேன். இங்கே ராணி, பரிமளம், செழியன், ராஜாராம், டாக்டர் சதாசிவம் ஆகியோர் உடனிருந்து கனிவுடன் என்னைக் கவனித்துக் கொள்கிறார்கள். சென்னை மருத்துவ மனையிலும், விமான தளத்திலும் தாங்கள் கனிவுடனும் கலக்கத்துடன் இருந்த தோற்றம் இப்போதும் என் முன் தோன்றியபடி இருக்கிறது. ஆகவேதான் கவலைப்பட வேண்டியதில்லை முற்றிலும் நீங்கிவிட்டது என்பதை விளக்கமாகத் தெரிவிக்கிறேன். தங்கள் அன்புக்கு என் நன்றி. தங்கள் பிறந்தநாள் மலர்க்கட்டுரையொன்றில், மனச்சோர்வுடன் 'துறவியாகி விடுவேனோ என்னவோ' என்று எழுதியிருந்ததைக் கண்டு மிகவும் கவலை கொண்டேன். தங்கள் பணி, மகத்தான விழிப்புணர்ச்சியைச் சமுதாயத்தில் தோற்றுவித்திருக்கிறது. புதியதோர் பாதை மக்களுக்குக் கிடைத்திருக்கிறது. நான் அறிந்தவரையில், இத்தகைய மகத்தான வெற்றி வேறு எந்த சீர்திருத்தவாதிக்கும் கிடைத்ததில்லை. அதுவும் நமது நாட்டில். ஆகவே சலிப்போ, கவலையோ துளியும் தாங்கள் கொள்ளத் தேவையில்லை. என் வணக்கத்தைத் திருமதி மணியம்மையார் அவர்களுக்குத் தெரிவிக்கவும். அன்பு வணக்கங்கள்.

தங்கள் அன்புள்ள

அண்ணாதுரை.

நியூயார்க்
10/10/68





சிகிச்சைக்குப்பின் தமிழகம்திரும்பி தமிழர்தம் நெஞ்சம்
குளிரவைத்தார் அண்ணா.

## எதையும் தாங்கும் இதயம் உறங்குகிறது





# தனயனுக்கு தந்தையின் இறுதி வணக்கம்





## "அண்ணா கட்டம்"







# தமிழ் எழுத்து சீர்திருத்தம்

## தந்தை பெரியார்

தமிழ்மொழி எளிதில் கற்கப்படும் மொழியாகவும், தட்டெழுத்து (Type-writing) பணிகளுக்கு எளிதாகவும் ஆகவேண்டுமானால் தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கை சுருக்கப்படவேண்டும் என்று தந்தை பெரியார் அவர்கள் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு தந்த விளக்கம் இது.

தமிழ் வளர்ச்சிக்கு உண்மையாகவே பாடுபடுபவர்களின் கடமை என்ன ? சிந்தியுங்கள்.

"விடுதலை ஏட்டில் ஏன்' 'லை'க்குப் பதில் "லை" என்று இப்படிப் போடுகிறீர்கள் ?" என்பது ஒரு வழக்கமான கேள்வி. அதற்கும் விடை இதில் கிடைக்கும்.

ஆசிரியர்

தமிழ் மிகுதியும் நம் முற்போக்குக்கு ஏற்றபடி செம்மைப்படுத்தப்படவேண்டும். மக்கள் கற்க மேலும் இலகுவாக்கப்பட வேண்டும். பயனுள்ள பரந்த மொழியாக்கப்படவேண்டும். "இன்றைய தமிழ் மிகவும் பழைய மொழி, வெகு காலமாகச் சீர்திருத்தம் செய்யப்படாதது, மற்ற மொழிகளைப்போல் திருத்தப்படாதது" என்பதான இவைகள் ஒரு மொழிக்குக் குறைவாகுமே தவிர பெருமையாகாது என்பேன். ஏன் ? பழமை எல்லாம் அநேகமாக மாற்றமாகி இருக்கிறது, திருத்தப்பட்டிருக்கிறது. மாற்றுவதும் திருத்துவதும் யாருக்கும் எதற்கும் இழிவாகவோ, குற்றமாகவோ ஆகிவிடாது. மேன்மையடையவும், காலத்தோடு கலந்து செல்லவும், எதையும் மாற்றவும், திருத்தவும் வேண்டும். பிடிவாதமாய் பாட்டிக் காலத்திய, பண்டைக் காலத்திய பெருமைகளைப் பேசிக்கொண்டிருந்தால், கழிபட்டுப் போவோம், பின் தங்கிப் போவோம். மொழி என்பது உலகப்போட்டிப் போராட்டத்திற்கு ஒரு போர்க்கருவியாகும். போர்க்கருவிகள் காலத்திற்கேற்ப மாற்றப்பட வேண்டும். அவ்வப்போது கண்டுபிடித்துக் கொள்ள வேண்டும். நம் பண்டிதர்கள் இந்த இடத்திலும் நம் மொழிக்கு மிக்க அநீதி விளைவித்துவிட்டார்கள். தமிழ் சிவனும், சுப்ரமணியனும் பேசிய மொழி, உண்டாக்கிய மொழி என்று நம் பண்டிதர்கள் கூறுகிறார்

கள். அதே சிவனும், சுப்ரமணியனும் உபயோகித்த போர்க்கருவிகள் இன்று நம் மக்களுக்குப் பயன்படுமா? அவைகளை நாம் இன்று பயன்படுத்துவோமா? அல்லது அவர்களே இன்று போரிட நேர்ந்தால் அவைகளைப் பயன்படுத்துவார்களா? சிந்தித்துப் பாருங்கள். கடவுள் உண்டாக்கினார் என்பது நமக்குத் தோன்றிய இயற்கைத் தத்துவம் ஆகும். இயற்கையின் தத்துவம் நமது அறிவு வளர்ச்சிக்கேற்ப மாறுதல்களுக்கும். செப்பனிடுவதற்கும் வசதியளிக்கக் கூடியதேயாகும். சிவன் கோலும், மழுவும், கத்தியும், வேலும், ஆலமும் கொண்டுதான் சண்டைபிடித்து இருக்கிறாராம். விஷ்ணு வந்த பிறகே வில் வந்திருக்கிறது. அதன் பிறகே துப்பாக்கியும், அதிலிருந்து பீரங்கியும், மிஷின் பீரங்கியும் ஏற்பட்டு இன்று அணுக்குண்டு வரை போர்க்கருவிகள் முன்னேற்றமாகியிருக்கின்றன. இன்று நாமோ, நம் கடவுள்களோ போரிட நேர்ந்தால் வில்லும் வேலுமா உபயோகிப்போம்? ஆகவே போர்க்கருவிகள் மாற்றமடைந்திருப்பது போல் நமது மொழியும் மாற்றமடைய வேண்டாமா? போர்க்கருவிகளில் மாற்றத்தை அனுமதித்த கடவுள்கள் மொழி மாற்றத்தை மட்டுமா அனுமதிக்க மாட்டார்கள்? ஆகவே மாற்றுங்கள்.

## எழுத்து மாற்றம்

ஆகவே பிறர் சுலபமாக தமிழ் மொழியைக் கற்றுக்கொள்வதற்காகவும், சுலபமாக அச்சுக்கோக்கவும், டைப் அடிக்கவும் தமிழ் எழுத்துக்களில் சில சீர்திருத்தங்கள் செய்யப்படுவது நலம் என்று நினைக்கிறேன்.

தமிழில் எழுத்துக்கள் அதிகம். ஞாபகத்தில் இருத்தவேண்டிய தனி உருவ எழுத்துக்கள் அதிகம். மொத்த எழுத்துக்கள் 216 வேண்டியிருக்கிறது என்றால், இதில் 135 எழுத்து உருவங்கள் தனித்தனி ஞாபகத்தில் வைக்கவேண்டி இருக்கிறது.

தமிழ் எழுத்துக்கள், ஆங்கிலம் முதலிய சில அந்நிய மொழி எழுத்துக்களைவிட, எழுத்துக்கூட்டுவதற்கு ஒரு கட்டுப்பாட்டுக்கு அடங்கிய நேர்முறையைக் கொண்டதானாலும் எழுத்துக்களைக் கற்க வேண்டியது கஷ்டமாகிறது. ஆங்கிலத்தில் 26 எழுத்துக்கள் உள்ளன. அவைகளில் உயிர் எழுத்துக்கள் 5 அல்லது 6. மெய் எழுத்துக்கள் 20 என்னலாம். எல்லாம் தனி எழுத்துக்களே. உயிர்மெய் எழுத்துக்கள் அதாவது உயிரும் மெய்யும் கூடிய எழுத்துக்கள் கிடையாது. வெகு சுலபமாக எழுத்துக்களைக் கற்றுக்கொள்ளலாம். ஆனால் இலக்கணமுறை, உச்சரிப்புமுறை ஒரு பொது வரையறைக்குக் கட்டுப்பட்டதல்ல. தமிழ் அப்படியல்ல. எழுத்துக் கூட்டுதலும், உச்சரிப்பும், அதன் இலக்கணமும் பெரிதும் இயற்கையையே அடிப்படையாகக் கொண்டதாகும். அப்படிப்பட்ட மொழியை நாம் ஏன் நவீன முயற்சிக்கு ஏற்றவண்ணம் செப்பனிடக் கூடாது?

**சாதாரணமாக தமிழ் உயிர் எழுத்துக்களில் ஐ, ஔ ஆகிய இரண்டு எழுத்துக்களைக் குறைத்துவிடலாம்.**

இந்த இரண்டும் தேவையில்லாத எழுத்துக்கள். மேலும் இவை கூட்டெழுத்துக்களே ஒழிய, தனி எழுத்துக்கள் அல்ல. இவை இல்லாமல் எந்தத் தமிழ்ச்சொல்லையும் எழுதலாம், உச்சரிக்கலாம். இவைகளை எடுத்துவிட்டால் சொற்களின் உச்சரிப்பிலோ, பொருளிலோ, இலக்கணத்திலோ எவ்விதக் குறையும் குற்றமும் ஏற்பட்டுவிடும் என்று தோன்றவில்லை. சுமார் 40 வருடங்களுக்கு முன்னால் இருந்தே நான் இதைக் கவனித்து வந்திருக்கிறேன். இந்தப்படி எழுத்துக் கோத்து அச்சடிக்கப்பட்டுள்ள ஒரு குறள் புத்தகத்தையும் நான் 40 வருடத்திற்கு முன்பே பார்த்திருக்கிறேன். இப்படிச் செய்வதில் மொத்தத்தில் 38 எழுத்துக்கள் (அதாவது உயிரெழுத்து ஐ, ஔ ஆகிய 2ம், அவை ஏறும் மெய்யெழுத்துக்களில் $2\times18=36$ம் ஆக $36+2=38$) ஞாபகத்திற்கும் பழக்கத்திற்கும் தேவை இல்லாத எழுத்துக்கள் ஆகிவிடும். (ஐ—அய்; ஔ—அவ் எழுதலாம்) இவை தவிர உயிர் மெய் எழுத்துக்களில் தனிமாற்றம் பெற்றிருக்கிற ணா, றா, னா ஆகிய மூன்று எழுத்துக்களுக்கும் தனி உருவம் தேவை இல்லாமல் ணா, றா, னா போல் ஆக்கி விடலாம்.

மற்றும் மெய் எழுத்துக்களில் இகரம், ஈகாரம், உகரம், ஊகாரம் ஆகிய நான்கு குறில், நெடில் எழுத்துக்கள் கொண்ட $4\times18=72$ தனி உருவ எழுத்துக்களை

நீக்கிவிட்டு, தனி சிறப்புக் குறிப்பை (அதாவது ககரத்திற்கு ஆகார நெடில் உருவம் காட்ட ஒரு 'ா' (கால்) போட்டு விடுவதுபோல், ககரத்துக்கு எகரம், ஏகாரம் காட்ட ஒற்றைச்சுழிக்கொம்பு, இரட்டைச் சுழிக்கொம்பு 'ெ, ே' போடுவதுபோல் மற்ற, இகர ஈகாரத்துக்கும், உகர ஊகாரத்துக்கும் சில குறிப்புகளை உண்டாக்கி, உயிர் 10, மெய் 18 குறில், நெடில் குறிகள் 9, ஆயுதம் 1 ஆகிய 38 தமிழ் எழுத்துக்களாகச் சுருக்கிவிடலாம்.

இதைப்பற்றி மற்றொரு சொற்பெருக்கில் தெளிவாக்க இருக்கிறேன். இந்த மாறுதல்கள் செய்வதால் நாம் மொழிக்கோ, பொருளுக்கோ, இலக்கணத்துக்கோ எவ்வித குறைபாடோ, கேடோ செய்தவர்களாக ஆகமாட்டோம். துருக்கியில் கமால் பாஷா அவர்கள் எழுத்துக்களின் அடிப்படையையே மாற்றிவிட்டார். அதாவது இருந்த எழுத்துக்களையே ஒழித்துவிட்டு வேறு மொழி (ஆங்கில) எழுத்துக்களை எடுத்துக் கொண்டார். அதனால் கற்க மிக வசதியும், இலகுவும் ஏற்பட்டுவிட்டது. அய்ரோப்பாவில் நான் சுற்றுப்பிரயாணம் செய்த ரஷ்யா முதல், போர்த்துக்கல் வரை சுமார் 10, 15 நாடுகளிலும் எத்தனையோ மொழிகள் இருந்தும், அந்த மொழிகளுக்குப் பெரிதும் ஒரே மாதிரி 26 முதல் 32 எழுத்துக்கள் தான் பயன்படுத்தப்படுகின்றன. சில புதிய தனி 'ஒலி' கொண்ட மொழிகள் இருக்குமானால் அவற்றிற்கு 2 அல்லது 3, புதிய உருவ எழுத்துக்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அமெரிக்காவில் சமீபகாலத்தில் எழுத்துக்கூட்டும் முறையை மாற்றிக் கொண்டதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே மேல்நாடுகளில் எழுத்துக்கள், எழுத்துக்கூட்டும் முறைகள் இவைகளில் மாற்றம் செய்வதால், இலக்கணத்தில், உச்சரிப்பில், பொருளில் மாற்றம் ஏற்படுவதாயிருந்தாலும்கூட துணிவாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நான் சொல்லும் மாற்றங்களுக்கு அப்படிப்பட்ட குற்றங்குறைகள் இல்லையென்றே கருதுகிறேன்.

நமது தமிழ்ப்பண்டிதர்கள் இம்மாற்றங்களுக்கு ஒப்புக்கொள்ளவேண்டுமே! அதுவன்றோ பெரிய கஷ்டம். மேல் நாடுகளில் பண்டிதர்கள் என்றால் புத்துலகச் சிற்பிகளாயிருப்பார்கள். நம் நாட்டிலோ பண்டிதர்கள் என்றால் பழமைக்கு இழுத்துக்கொண்டு போகும் பாட்டிக்கதை வீரர்களாக இருக்கிறார்கள். பண்டு என்ற சொல்லிலிருந்து அதாவது பண்டையர்கள் என்பதுதான் பண்டிதர் என்ற சொல்லாகத் திரிந்தது என்று மூலம் கண்டு பிடிக்கத்தக்கவர்களாக இருக்கிறார்கள். எழுத்து, மொழி சீர்திருத்தத்தில் எனக்குத் தெரிய எந்தப் பண்டிதரும் பாடுபட்டிருப்பதாகக் காண முடியவில்லை. காலஞ்சென்ற மாணிக்க நாய்க்கர் அவர்கள் அக்காலத்தில் சிறிது பாடுபட்டார். ஆனால் அவர் சமயத்தை (ஓங்காரத்தை) தலையாக வைத்துக்கொண்டு பாடுபட்டார். ஆதலால் அக்காலத்தில் அவரிடம் எனக்குப் பற்றிருந்தும் எனக்கு ஓங்காரத்தில் இருந்த வெறுப்பு அவரது முயற்சியையும் அறிவுத் திறனையும் அநுபவிக்க முடியாமற்படி செய்துவிட்டது. அவர் இப்போது இருந்தால் எவ்வளவோ செய்திருப்பார்.

அடுத்தபடியாக மெய்யெழுத்துக்களில் 'ந, ங, ஞ' ஆகிய மூன்று எழுத்துக்களையும் எடுத்துவிடலாம். 'ன்+த=ந' 'ன்+க=ங' 'ன்+ச=ஞ' என்று ஆக்கிவிடலாம். எனவே, மெய்எழுத்தில் ந, ங, ஞ ஆகிய மூன்றையும் குறைக்கலாம். இவை தனித்தனியாகத் தேவையில்லை என்றே தோன்றுகிறது. உயிரெழுத்துக்களில் அய்யும், அவ்வும் எப்படி கூட்டெழுத்துக்களோ, அப்படி உயிர்மெய்யிலுள்ள கூட்டெழுத்துக்கள் தான் இந்த ந, ங, ஞ என்ற மூன்றும். பந்து என்ற வார்த்தையையும், பங்கு என்ற வார்த்தையையும் 'பஞ்சு' என்ற வார்த்தையையும் எடுத்துக்கொள்வோம். ந, வையும். ங, வையும், ஞ, வையும் எடுத்துவிட்டால் 'பன்து' 'பன்கு' 'பன்சு' என்று எழுதவேண்டியிருக்கும். இந்தச் சொற்களின் உச்சரிப்பை முதலில் சொல்லிக்கொடுத்துவிடலாம், அல்லது சாதாரணமாக உச்சரிப்பு பழக்கத்திலேயே இருந்துவரும். பொதுவாகவே 'த' வுக்கு முன்வந்தால் இப்படி உச்சரிக்கவேண்டும். 'க'வுக்கு முன்வந்தால் இப்படி உச்சரிக்க வேண்டும் என்று சொல்லிக்கொடுத்து விட்டால் பிறகு உச்சரிப்பதில் கஷ்டமிருக்காது. ஆங்கிலத்தில் இம்மாதிரி பல உச்சரிப்புகள் இருக்கின்றன. உதாரணமாக, Put (பி-யு-டி) புட் என்றும் But (பி-யு-டி) பட் என்றும் தான் உச்சரிப்பார்கள். இந்த வார்த்தைகள் முதலில் அறிமுகமாகாதிருந்தால், ஒரே மாதிரிதான்

உச்சரிக்கவேண்டியிருக்கும். ஒரு எழுத்துக்குப் பல சப்தங்கள் இருப்பதும் தமிழுக்குப் புதிதல்ல. 'த' என்னும் எழுத்து, தடி என்ற சொல்லில் ஒரு விதமாகவும், பதம் என்ற சொல்லில் வேறுவிதமாகவும் ஒலிக்கவில்லையா ?

அதேபோல் 'ன' என்ற எழுத்துக்கே 'ந' சப்தமும், 'ங' சப்தமும், 'ஞ' சப்தமும் இருந்தால் ஒன்றும் கெட்டுவிடாது. இந்தச் சீர்திருத்தங்களைச் செய்தால் தமிழ் தனி உருவ எழுத்துக்கள் வெகு சொற்பமாகிவிடும். உயிர் எழுத்துக்கள்-10. நெட்டெழுத்துக்கள் எல்லாவற்றிற்கும் 'ா' (காலே) போட்டுவிடுவதால் அய்ந்து உருவ எழுத்துக்கள்தான் இருக்கும். அதாவது (ஆங்கில வவ்வல்கள் போல) அ, இ, உ, எ, ஒ. நெட்டெழுத்துக்கள் அா, இா, உா, எா, ஒா என்றே எழுதலாம். மெய்யெழுத்துக்கள் 18ல் '3' எழுத்துக்கள் (ந், ங், ஞ்) எடுக்கப்பட்டால் 15 எழுத்துக்களையும், மேலே புள்ளி வைக்காமல் பக்கத்தில் ஒரே ஒரு கோடு இழுப்பதன் மூலம் காட்டலாம். அதாவது, க|, ச|, ட|, ண|, த|,.........ன|, என்றபடி எழுதினால் க், ச்.........என்று அர்த்தப் படுத்திப் படிக்கலாம். ஆக சிறப்புக் குறிகளில்

| | | |
|---|---|---|
| இந்தக்கோடு | | 1 |
| ஆ | ா | 1 |
| இ | ि | 1 |
| ஈ | ீ | 1 |
| உ | ு | 1 |
| ஊ | ூ | 1 |
| எ | ெ | 1 |
| ஏ | ே | 1 |
| குறிகள் | | 8 |

ஆக 8-சிறப்புக்குறிகளில், இகர, இாகாரத்திற்கும், உகர ஊகாரத்திற்கும், 4-குறிகள் புதிதாக தோற்றுவிக்கப்பட வேண்டும். ஓகரத்திற்கும் ஓகாரத்திற்கும் எகர, ஏகார ஆகாரக் குறிப்புகளே பயன்பட்டு விடுவதால் அவற்றிற்காகத் தனிக்குறிப்புவேண்டியதில்லை. அல்லது ெ, ே, என்ற இந்தக் கொம்புகளை வேறுவகையில் மாற்றிப் போட்டுக்கொள்ளலாம். கடைசியாக ஆய்தம் 1 இருக்கலாம்.

இப்போது,

| | |
|---|---|
| உயிர் | 5 |
| மெய் | 15 |
| சிறப்புக்குறி | 8 |
| ஆய்தம் | 1 |
| | 29 |

29 உருவ எழுத்துக்களிலேயே கூட தமிழ் எழுத்துக்களுக்கு எண்ணிக்கையும் (தமிழ் மொழியை) அடக்கிவிடலாம். அல்லது சிலர் கருதுவதுபோல் 12 உயிரெழுத்துக்களில் ஐ, ஔ, தவிர மற்ற பத்தில் 'அ'வை அப்படியேயும் ஆவுக்குப் பதிலாக 'ா'வையும், 'எ' 'ஏ'வுக்கு பதிலாக, 'ெ', 'ே' என்ற குறிப்புகளையும் வைத்துக்கொண்டு, இ, ஈ, உ, ஊ, ஒ, ஓ, என்ற ஆறு எழுத்துக்களுக்கு, ஆறு புது எழுத்துக்களை உற்பத்தி செய்துகொண்டு, இவற்றையே உயிர் மெய்யாக்க மெய்யோடு சேர்த்துப் படிப்பதானால் அப்போது,

| | |
|---|---|
| உயிர் | 10 |
| மெய் | 15 |
| ஆய்தம் | 1 |
| மெய் குறிப்பு | 1 |
| | 27 |

ஆக 27 எழுத்துக்களாகும். இந்த 27 எழுத்துக்களைக் கொண்டே நமது சகல சொற்களையும் அதிக சுலபமாக எழுதிவிடலாம். பிறமொழிச் சொற்களை நம் மொழியால் எழுதுவதற்குத் தேவைப்பட்டால் ஒன்றிரண்டு வேறு எழுத்துக்களையும் உண்டாக்கிக் கொள்ளலாம். அறிஞர்களும் பண்டிதர்களும் தீர்க்கமாய் சிந்தித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். எப்படியும் தமிழ்மொழி எழுத்துக்கள் குறைக்கப் பட்டாகவேண்டும். அச்சுக்கோப்பதற்கும் டைப் அடிப்பதற்கும் ஆங்கிலத்தைப்போல் லகுவாக்கப்படவேண்டும் என்பதும் கற்கும் பிள்ளைகளுக்கும் 3 மாதத்தில் படிக்கத் துவங்கலாம் என்பதும்தான் நமது ஆசை.


## மொழி - எழுத்து

[பெரியாரவர்கள் " மொழி " என்னும் பொருள் குறித்தும், " எழுத்து " என்னும் பொருள் குறித்தும், கும்பகோணம், அரசியலார் கல்லூரியிலும், சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும் ஆற்றிய விரிவுரைகளின் தொகுப்பு.

பக்கம் 27—36




வணக்கத்திற்குரிய

**தந்தை பெரியாரின்**
**91வது ஆண்டில்**

எங்கள் நன்றி, அன்புகலந்த
வாழ்த்துக்கள் !

**எங்கள் ''தங்கவேல் பீடி'' யை புகைக்கும் அன்பர்கள் எப்போதும் போல் புகைத்து, ஆதரவு கொடுக்குமாறு வேண்டிக்கொள்கிறோம்,**

உரிமையாளர் :

**K. K. சின்னராசு,**
**தங்கவேல் பீடி கம்பெனி,**
**சோலையார்பேட்டை.**



தமிழக ஊராட்சிகளின் – ஊராட்சி ஒன்றியங்களின்
சேவைக்காக 17 ஆண்டுகளாய் வெளிவரும்
ஒரே வார இதழ்

# "பஞ்சாயத்துச் செய்தி"

**ஆண்டு சந்தா ரூ. 10/–**

**விவரங்கட்கு :**

**நிர்வாகி**

**"பஞ்சாயத்துச் செய்தி"**
**திருச்சி-2.**

தொலைபேசி எண் 4186

# "பகுத்தறிவுத் தோட்டா"

(திங்கள் வெளியீடு)

தந்தைபெரியார் அவர்களின் தன்மான-பகுத்தறிவுக் கருத்துக்களை 'பகுத்தறிவு தோட்டாக்களாக' திங்கள்தோறும் அச்சிட்டு வெளியிட்டு வரும்

## ஒரே நிறுவனம்

## பகுத்தறிவுக் களஞ்சியம்

## இரும்புலிக்குறிச்சி

வழி : உடையார்பாளையம்; திருச்சி மாவட்டம்

குறிப்பு : எமது களஞ்சியத்தின் துண்டு வெளியீடு தேவைப்படுவோர் 45 காசு அஞ்சல் முத்திரையுடன் நிர்வாகி முகவரிக்கு எழுதவும்.


# வாழ்க பெரியார்

தூத்துக்குடி நமது இயக்க ஆதரவாளரான ஒரு அன்பர் தன்மான, இயக்கத் தந்தை பெரியார் அவர்களின் 91வது ஆண்டு பிறந்த தின விழா "விடுதலை" சிறப்பு மலருக்கு ரூ. 25/- அன்பளிப்பாகக் கொடுத்துள்ளார்கள்.

நன்றி

| | |
|---|---|
| P.S. சண்முகம் | பெ. பால் |
| நகர தி. க. | தலைவர். |
| செயற்குழு | நகர திராவிடர் கழகம் |
| உறுப்பினர் | தூத்துக்குடி |


# D. A. கோவிந்தன்,

ஜவுளிக்கடை, கடைவீதி

தருமபுரி.

எங்களிடம் ஷர்ட்டிங், கோட்டிங், வாயில், சேலைகள், சில்க் துணிகள் முதலிய எல்லா ஜவுளி ரகங்களும் விலை மலிவாகக் கிடைக்கும்.

## D. A. கோவிந்தன்

தர்மபுரி நகராட்சி உறுப்பினர்
உரிமையாளர்.

# காலக்குரல்!

**கவிஞர். பூங்குன்றன்**

காலக்குரல் கேட்குது
கதவைத் திறந்திடு - இதய
மதகைத் திறந்திடு !

நிலவுமேட்டில் மனிதகைகள் கோர்த்து நிற்கையில்
நெட்டைசாமி குட்டைசாமி கதையும் ஏனடா ?
கலப்பட மதச்சரக்கின் கடையும் வீணடா !
கடல் அலையாம் பெரியாருரை காலக்குரலடா !

கோடிகோடி சாயம்பூசி கோயில் கட்டினும்
குழவிக்கல்லின் மகிமைஇனி கொழிப்ப தேதடா ?
தாடிவைத்த ஒருகிழவன் தர்க்கப் போரினால்
தலைநொறுங்கிப் பழங்குரங்கு தகர்ந்து போச்சடா !

[காலக்குரல் கேட்குது...]

கோடியாகம் சண்டியாகம் செய்த போதிலும்
குடுமிகையில் ஆட்சியினி போவ தேதடா ?
கோடையிடி நம்பெரியார் கொளுத்தும் பேச்சிலே - நம்
குடிகெடுத்த நரியின்வாலும் அறுந்து போச்சடா !

தகுதிஎன்றும் திறமைஎன்றும் தமுக் கடித்தவன் - சவம்
தாங்கிச்செல்ல நாதியில்லாத் தர்மம் பாரடா !
வெகுண்டெழுந்த இனத்தலைவன் கொடுத்த தோளினால் - எங்கும்
விளங்குகின்ற பதவிஎல்லாம் தமிழர்க் காச்சடா !

[காலக்குரல் கேட்குது...]

போராட்ட உலைக்களத்தில் புழுத்த நெஞ்சடா - புரட்சிப்
புதியபாட்டை எழுதவந்த புதுமைப் போத்தடா ! - அந்த
ஈரோட்டுத் தளபதியின் இதய துடிப்பிலே - எதிர்
காலமென்னும் மூச்சுக்குழல் இணைந்து போச்சடா !

வெற்றியற்ற வேறுமுகம் கண்ட தில்லையே - நம்
வைக்கம்வீரர் வைத்தகுறி பிழைத்த தில்லையே !
குற்றமற்ற இரத்தமுள்ளோர் குதித்து வாருங்கள் - நம்
குறையறுத்த இறைவனடி சேர வாருங்கள் !

[காலக்குரல் கேட்குது...]

91-வது பிறந்தநாள் வாழ்த்து

பெரியார் நீடுழி வாழ்க!

போன் எண் : 220
" " 220 A

A. O. சோமசுந்தரம் செட்டியார்

இரும்பு & பெயிண்ட் வியாபாரம்

H. O. அய்யங்கடைத்தெரு } தஞ்சாவூர்.
B. O. கீழவாசல்
B. O. மதுரைரோடு, திருச்சி - 8.

போன்: 128

H. P. சைக்கிள் மார்ட்

பஸ் ஸ்டாண்ட் ரோடு,

தருமபுரி.

எங்களிடம் எல்லாவிதமான சைக்கிள் களும், ஸ்பேர் பார்ட்ஸ்களும், சைக்கிள் டயர், ட்யூப் சாமான் களும் கம்பெனி விலைக்கு கிடைக்கும்.

★

உசேனி பீரான். N. S.
உரிமையாளர்.

வாழ்க பெரியார்!

தொலைபேசி: 4976

எவர்சில்வர் பாத்திரங்களுக்கு
சிறந்த இடம்

S. வயணப்பெருமாள் & சன்

346, பெரியகடை வீதி,
திருச்சி-8.

எங்களிடம் எல்லாவிதமான எவர்சில்வர் பாத்திரங்களும் மொத்தமாகவும், சில்லரை யாகவும் கிடைக்கும்.

# கடந்த ஆண்டில் கழக டைரி

## [17-9-'68 முதல் 17-9-'69 வரை]

### அமைச்சர்கள் நேரில் வாழ்த்து

17-9-68

தந்தை பெரியார் தம் 90வது பிறந்தநாள் விழா—காலையில் திருச்சி "பெரியார் மாளிகை"யில் பொதுப்பணி அமைச்சர் கலைஞர் திரு. கருணாநிதி, கல்வி, தொழில் அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் தந்தை பெரியார் அவர்களைக் கண்டு வாழ்த்துக்களைக் கூறினர்.

பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் பள்ளிகள் சார்பாக "நிறுவனர் நாள் விழா" சிறப்புடன் கொண்டாடப் பட்டது. அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து, தவத்திரு குன்றக்குடி அடிகளார், விடுதலை ஆசிரியர் திரு. வீரமணியும் கலந்து கொண்டனர்.

### திருச்சி அரசு அலுவலர் பிரமுகர்கள் விருந்து

22-9-68

திருச்சியில் மாவட்ட அரசாங்க அதிகாரிகள் சார்பில் தந்தை பெரியார் அவர்களின் 90வது பிறந்தநாளை முன்னிட்டு பகல் விருந்தும், பாராட்டும் நடைபெற்றன.

திருச்சி மாவட்டத்திலுள்ள டாக்டர்கள், வழக்கறிஞர்கள், நீதிபதிகள், மாஜிஸ்ரேட்டுகள் மற்றும் அதிகாரிகள் பலர் பங்கு கொண்டனர்.

தந்தை பெரியார் அவர்கள் தமது நன்றியுரையில் அதிகாரிகள் மக்கள் நலனை கருத்தில் கொண்டு நேர்மையுடன் நடக்க வேண்டியதன் அவசியத்தை விளக்கினார்.

### 'காந்தி ஜெயந்தி' புரட்டு விளக்கம்

4-10-68

விடுதலை இதழில் "காந்தி ஜெயந்தி புரட்டு" என்ற மகுடமிட்டு பெரியார் அவர்கள் காந்தியார் இட்ட மூன்று கட்டளைகளான—

1. கோவில்களை மூடுங்கள்
2. காங்கிரஸைக் கலையுங்கள்
3. காங்கிரஸ் அரசாங்கம் மதச்சார்பற்ற அரசாங்கமாகும், மத சம்பந்தம் இருக்கக் கூடாது

என்றவற்றை நிறைவேற்றாதவர்கள் காந்தி ஜெயந்தி கொண்டாடுவதை கண்டித்து சிறப்புக் கருத்து மொழி வெளியிட்டார்.

### 'வேன்' (நகரும் குடில்) பரிசளிப்பு

6-10-68

கரூரில் தந்தை பெரியார் அவர்களுக்கு புதிய வேன் — நகரும் குடில் — அன்பளிப்பு நடந்தது.

தமிழக மக்கள் சார்பில் பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. கருணாநிதி புதிய நகரும் குடிலை வழங்கினார்.

உணவமைச்சர் திரு. மதியழகன் தந்தை பெரியார் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி பொற்கிழி அளித்தார்.

12-10-68

தந்தை பெரியார் அவர்களும் அவருடன் திருமதி மணியம்மையாரும் விடுதலை ஆசிரியர்

திரு. வீரமணியும் 12-ம் தேதிகாலை உ. பி. தலைநகரமான லக்னோ போய்ச்சேர்ந்தனர் உ. பி. மாநில தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் மாநாட்டு வரவேற்புக் குழு தந்தை பெரியார் அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்று உபசரித்தது.

## வடநாட்டில் வரலாறு காணா வரவேற்பு

13-10-68

ஞாயிறு மாலை தந்தை பெரியார் அவர்கள் சிறப்பு உரையாற்ற மாநாட்டு மண்டபத்துக்குள் நுழையும்போது, பிரதிநிதிகள் அனைவரும் "ராமசாமி நாய்க்கர்க்கி ஜிந்தாபாத்" (இராமசாமி நாய்க்கர் நீடூழி வாழ்க) என்று முழக்கம் எழுப்பி வரவேற்புத் தந்தனர்.

மாநாட்டில் சாதி இழிவு ஒழிய டெல்லி ஆட்சியிலிருந்து நாட்டைப் பிரிக்க வேண்டும் என்றார்.

## கடல்கடந்தும் அய்யா பிறந்தநாள்

13-10-68

மலேசியாவின் தலைநகரமான கோலாலம்பூரில் தந்தை பெரியார் அவர்கள் 90-வது பிறந்தநாள் விழா தசா மண்டபத்தில் நடந்தது. மலேசியப் பிரதமரின் அரசியல் செயலாளர் "யாப்சின்குவி" விழாவில் கலந்துகொண்டு தந்தை பெரியார் அவர்களின் சமத்துவம், சாதி ஒழிப்பு, சமுதாய சீர்திருத்தம் ஆகிய பணிகளை எடுத்துக்காட்டி தந்தை பெரியார் அவர்களை சிறப்பித்துப் பாராட்டினார்.

## ஆந்திராவிலும் கொள்கை முழக்கம்

18-10-68

ஆந்திர பிரதேச திராவிட முன்னேற்றக் கழக சார்பில் செகந்திராபாத் கண்டோன்மென்ட் திருமங்கி பஜார், மசான்காளி கோவிலுக்கு எதிரில் திரு. காசிநாதன் தலைமையில் பொதுக்கூட்டம்:

தந்தை பெரியசர் அறிவுரையாற்றினார். மக்கள் இழிவு ஒழிய தமிழகம் போல இந்தியா முழுவதிலும் பகுத்தறிவாளர் ஆட்சி வர வேண்டும் என்று முக்கியமாக வலியுறுத்தினார்.

## சிகிச்சைக்குப் பின்னர் அண்ணா

6-11-68

அறிஞர் அண்ணா அவர்கள் அமெரிக்காவில் சிகிச்சை பெற்று 6-11-68 காலையில் விமானத்தில் சென்னை வந்து சேந்தார்.

விமான நிலையத்தில் மக்கள் கடல்போல் திரண்டு வாழ்த்தொலிகள் முழக்கி வரவேற்றனர்.

## அண்ணாவைச் சந்தித்தார் அய்யா

11-11-68

தந்தைப் பெரியார் அவர்கள் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களை அவரது நுங்கம்பாக்கம் இல்லத்தில் சந்தித்து உடல் நலம் விசாரித்தார்.

## தமிழகம் மகிழ்ச்சி வெள்ளத்தில்

12-11-68

அறிஞர் அண்ணா முதலமைச்சர் வேலை பொறுப்புகளை மீண்டும் ஏற்றுக் கவனிக்கத் தொடங்கினார்.

16-11-68

தந்தை பெரியார் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றிய 13-14ம் தேதி லக்னோவில் நடந்த ஆதிகுடிகள் பிற்படுத்தப்பட்டோர் மாநாடு நல்ல பலனை அளித்து வருவதாக உத்திரப்பிரதேச முஸ்லிம் மஜ்லீஸ்—தலைவர் டாக்டர் ஏ. கே. பரீதி லக்னோ கூட்டத்தில் அறிவித்தார்.

1-12-68

அமெரிக்காவில் சிகிச்சை பெற்றுத் திரும்பிய தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாடு பெயர் வெற்றி விழாவில் சிறப்புரையாற்றினார்.

14-12-68

தந்தை பெரியார் அவர்கள் உடல்நிலை

பேரிசாதனைக்காக சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் அனுமதி.

## காமராசர் வெற்றிக்கு வரவேற்பு

9-1-69

நாகர்கோவில் நாடாளுமன்றத் தொகுதியில் திரு. காமராஜர் அவர்கள் லட்சத்துக்கு மேல் கூடுதல் ஓட்டுகள் பெற்று வெற்றி பெற்றார். தந்தை பெரியார் இந்த வெற்றியை வரவேற்று சிறப்புக் கருத்து தெரிவித்தார்.

11-1-69

பெரியார் அவர்கள் "காமராஜர் வெற்றி" என்ற மகுடத்தில் சிறப்புத் தலையங்கம் எழுதி பாராட்டினார்.

## மீண்டும் அண்ணா உடல்நலக் குறைவு

22-1-69

அறிஞர் அண்ணா அவர்கள் மீண்டும் அடையாறு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அமெரிக்காவில் அறுவை கிசிச்சை செய்த டாக்டர் மில்லர் சென்னை வந்து அண்ணா அவர்களின் உடல்நிலையைப் பரிசோதனை செய்து கவலை கொள்வதற்கு எதுவும் இல்லை என்று கருத்துத் தெரிவித்தார்.

## மருத்துமனையில் அண்ணாவை அய்யா பார்த்தார்

25-1-69

சென்னை அடையாறு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா அவர்களை 25-1-69 காலை தந்தை பெரியார் அவர்களும் மணியம்மையார் அவர்களும் சென்று பார்த்து உடல்நலம் விசாரித்தனர்.

அறிஞர் அண்ணா அவர்கள் பெரியாருடன் சுமார் 10 நிமிடங்கள் மகிழ்ச்சியுடன் உரையாற்றினார்.

அண்ணா அவர்களுக்கு காலை 11-00 மணிக்கு நோய்க்கூறு ஆராய்ச்சிக்கான அறுவை சிகிச்சையை அமெரிக்க மருத்துவர்கள் செய்தனர்.

## அண்ணா உடல்நலம் பாதிப்பு

29-1-69

அண்ணா அவர்களின் உடல்நிலைமையில் சற்று பரபரப்பு—சட்டசபைக் கூட்டம் ஒத்திவைப்பு.

இரவு கவலைக்கிடமான நிலமை, மறுநாள் பிற்பகல் 1-மணி முதல் அபாயம் நீங்கியதாக அறிவிப்பு.

பிரதமர் திருமதி இந்திரா கவலை தெரிவித்து உடல்நிலை குறித்து விசாரித்தார்.

31-1-69

அண்ணா உடல் கவலைக்கிடமான நிலை நீடிப்பதாக அறிவிப்பு—திடீர் மாரடைப்புக்கு சிகிச்சை.

1-2-69

அண்ணா உடல்நலம் தேறி வருவதாக டாக்டர்கள் அறிவிப்பு.

அடையாற்றில் தங்கிய தந்தை பெரியாரவர்கள் தம்மை சந்தித்த மக்களுக்கு ஆறுதல் தெரிவித்தல்.

2-2-69

அண்ணா உடல்நிலை அபாயம். மயக்கம் நீடிப்பு, தெளிவிக்க டாக்டர்கள் போராட்டம்.

## நடக்கக்கூடாதது நடந்தது அண்ணா மறைந்தார்

இரவு 12-22 மணிக்கு அண்ணா மறைவு.

தமிழ்நாடு துயரக்கடலில் தவிப்பு.

"நடக்கக்கூடாதது நடந்து விட்டது. எதிர்காலம் இருட்டாகவே இருக்கிறது. நாலு கோடி மக்களையும் பொறுத்த பெரிய பரிகாரம் செய்ய முடியாத துக்க சம்பவமாகும்" என்று தந்தை பெரியாரின் துக்கச் செய்தி.

அண்ணா அவர்கள் சடலத்துக்கு தந்தை பெரியார் அவர்கள் மாலை அணிவித்து இறுதி வணக்கம்.

## துயரவெள்ளம்!
## சோகக்கடல்!!

3-2-69

"அண்ணா முடிவு" என்ற தலைப்பில் அய்யா அவர்கள் விடுதலையில் தலையங்கம்.

10—10—68-ல் அமெரிக்காவிலிருந்து அண்ணா அவர்கள் கைப்பட அய்யா அவர்களுக்கு எழுதிய நேர்முகக் கடிதம்—பிளாக் செய்து விடுதலையில் வெளியீடு.

4-2-69

அண்ணாவின் சடலம் ராணுவ மரியாதையுடன் பவனி—

தனயனுக்கு மாலை சூட்டி அஞ்சலி செலுத்தி பவனியில் தொடர்ந்து சென்றார் தந்தை பெரியார் அவர்கள்.

கடற்கரையில் அண்ணா சடலம் நல்லடக்கம்.

## வானொலியில் அய்யா

5-2-69

"அண்ணா முடிவெய்திவிட்டார்கள். அண்ணா வாழ்க! அண்ணாவிடம் அன்பு காட்டியது போல அமைச்சர்களிடம் அன்பு காட்டுங்கள் என்று தமிழகப் பெருமக்களுக்கு தந்தை பெரியாரவர்கள் வானொலி மூலம் விடுத்த உருக்கமான வேண்டுகோள்.

"அண்ணாவின் இறுதி நிகழ்ச்சி" என்ற மகுடமிட்டு தந்தை பெரியார் விடுதலையில் தலையங்கம் எழுதி தி. மு. க.வில் ஒற்றுமை, கண்ணியம், கட்டுப்பாட்டின் முக்கியத்தை வலியுறுத்தினார்.

## கடற்கரையில் சர்வகட்சி இரங்கற்கூட்டம்

8-2-69

அண்ணா மறைவுக்கு சென்னை மாநகரில் சென்னை ஷெரீப் திரு. நகாதா முயற்சியில் கடற்கரையில் பல கட்சி இரங்கல்கூட்டம்.

கவர்னர் உஜ்ஜல்சிங் தலைமை இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, தந்தை பெரியார், திருவாளர்கள்: சி. இராஜகோபாச்சாரியார், மத்திய அமைச்சர்கள் தினேஷ்சிங், ராம்சுபாக்சிங், தற்காலிக முதலமைச்சர் நெடுஞ்செழியன், அமைச்சர் கருணாநிதி, தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சி. சுப்ரமணியம் மற்றும் பலர் இரங்கல் உரையாற்றினர்.

9-2-69

சட்டமன்ற தி. மு. க. கட்சித் தலைவராக கலைஞர் கருணாநிதி ஒருமுகமாகத் தேர்வு.

## புது அமைச்சரவை அய்யாவிடம் ஆசிபெற்றது

10-2-69

பதவியேற்கும் கலைஞர் மு. கருணாநிதியை முதலமைச்சராகக் கொண்ட அமைச்சரவை தந்தை பெரியார் அவர்களின் ஆசியைப் பெற முதலில் அவரைச் சந்தித்தனர்.

கேரளத்திலும் — சுயமரியாதைப்படி நடந்த திருமணம் செல்லும்படி சட்டம் செய்வது குறித்து கேரள திருமண சட்டத்திருத்தத்தின் போது கவனிக்கப்படும் என்று கேரள சட்டமன்றத்தில் சட்டத்துறை அமைச்சர் திருமதி கௌரி தாமஸ் அறிவிப்பு

9-3-69

சீரங்கத்தில் திராவிடர் கழகச் சமுதாய சீர்திருத்த மாநாடு மிகவும் சிறப்புடன் நடைபெற்றது.

சமுதாயப் புரட்சி, கிளர்ச்சிபற்றி கழகத் தோழர்களுக்கு அய்யா அறிவுரை வழங்கினார்.

11-3-69

புதுவை மாநிலத்தை தி. மு. கழகம் கைப்பற்றியது—சட்டமன்றத் தேர்தலில்.

## புதுவை அமைச்சரவைக்கு பெரியார் ஆசி

30-3-69

பாண்டிச்சேரி நகர் திராவிடர் கழக சார்பில் புதுவை மாநில தி. மு. க. கூட்டணி அமைச்சர்களுக்கு பாராட்டுக் கூட்டம்.

புதுவை தி. மு. க. அமைச்சரவையைப்

பாராட்டி தந்தை பெரியார் சிறப்பு அறிவுரை வழங்கினார்.

புதுவை மாநில முதல்வர் திரு. எம். ஓ. எச். பருக் மரக்காயர் அவர்கள் தமது அமைச் சரவையின் சார்பில் தந்தை பெரியார் அவர் களுக்கு கைத்தறி ஆடையை அணிவித்து பாராட்டுக்கு நன்றி தெரிவித்தார்.

## தமிழர் தலைமை நீதிபதி நியமனம்

1-4-69

தமிழ்நாடு உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியாக திரு. கே. வீராசாமி அவர்கள் பதவி ஏற்பு. தமிழ்நாட்டைச்சார்ந்த தமிழர் ஒருவர் தமிழ்நாடு உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டது இதுவே முதல் நிகழ்ச்சியாகும் என "விடு தலை" பாராட்டியது.

## சென்னை மாவட்ட தி. க. சமுதாய சீர்திருத்த மாநாடு

20-4-69

சென்னை மாவட்ட திராவிடர் கழகத் தின் சார்பில் சென்னையில் சிறப்பாக சமு தாய சீர்திருத்த மாநாடு நடைபெற்றது. கழக முக்கியப் பேச்சாளர்களும் தந்தை பெரியார் அவர்களும் கலந்து கொண்ட இம் மாநாட்டில் புரட்சித் தீர்மானங்களை நிறை வேற்றினர்.

1-5-69

சென்னை திருவல்லிக்கேணி கடற்கரை யில் தி. க. பொதுக்கூட்டம்.

20-4-69-ல் சென்னை திராவிடர் கழக சமுதாய சீர்திருத்த மாநாட்டில் நிறைவேற் றிய தீர்மானங்களை விளக்கி தந்தை பெரி யார் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

16-5-69

சென்னை பெரிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த அமைச்சர் திரு ஏ. கோவிந்தசாமியை தந்தை பெரியார் அவர் கள் சென்று கண்டு ஆறுதலும் தைரியமும் கூறினார்.

## அமைச்சர் ஏ. ஜி. மறைவு

18 5-69

தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. கோவிந்தசாமி மறைவு. அய்யா அவர் கள் மலர்மாலை அணிவித்து இறுதி மரி யாதை செலுத்தினார்.

## தர்மபுரி சிலை திறப்பு விழா

24-5-69

தர்மபுரியில் தந்தை பெரியார் அவர களின் முழு உருவச்சிலை திறப்பு விழா சிறப்பு டன் வரலாறு காணா வண்ணம் நடைபெற் றது. நிதி அமைச்சர் திரு. மதியழகன் தலை மையில் முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி திறந்து வைத்தார்.

## மன்னார்குடி மாநாடு

25-5-69

மன்னார்குடியில் வட்ட சமுதாய சீர் திருத்த மாநாடு. கழகத் தோழர்களும் அய்யா அவர்களும் கலந்து கொண்டனர்.

## பெரியார் தொண்டுக்கு சங்கர்ஸ் வீக்லி பாராட்டு

1-6-69

புதுடில்லி ஆங்கில வார ஏடு சங்கர்ஸ் வீக்லி "இவ்வாரத்திற்குரிய மனிதர்" என்ற பகுதியில் தந்தை பெரியார் அவர்களைப்பற்றி சிறப்புக் கருத்துரை.

"சாதி ஒழிப்பில் காந்தியாரைவிட மீறிய வர் தந்தை பெரியார் அவர்கள்" எனப் பாராட்டு.

1-6-69

மறைந்த அமைச்சர் திரு. ஏ. கோவிந்த சாமி அவர்கள் நினைவுநாள். தந்தை பெரி யார் அவர்கள் தலைமை. தமிழக முதலமைச் சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் திரு. கோவிந்தசாமி அவர்கள் உருவப்படத்தை திறந்து வைத்தார்.

## மருத்துவமனையில் அய்யா

2-6-69

தந்தை பெரியார் அவர்கள் மருத்துவ சோதனைக்காக 2-6-69 காலை சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சேர்ந்தார். நீர் இறங்குவதில் ஏற்பட்ட கோளாறுக்கு சிகிச்சைக்கும் உடல் பரிசோதனைக்கும் மருத்துவ மனையில் தங்கல்.

16-6-69

"இலண்டனில் அண்ணா ஆட்சி" என்ற தலைப்பில் திருமண சீர்திருத்தம்பற்றி விடுதலையில்—அய்யா அவர்களின் சிறப்புத் தலையங்கம்.

25-6-69

தந்தை பெரியாவர்கள் 25-ம் தேதி வேலூர் கிறிஸ்தவ மிஷன் மருத்துவ மனையில் உடல் பரிசோதனைக்காக அனுமதிக்கப் பட்டார்.

அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் பட், டாக்டர் ஜான்சன் மற்றும் அய்யா அவர்களை கவனித்து பரிசோதனைகளை நடத்தினர்.

1-7-69

திருச்சி மாவட்டத்தில் கலப்புத் திருமணத் தம்பதிகளுக்கு தங்கப் பதக்கங்கள் பரிசளிப்பு விழா, தந்தை பெரியார் அவர்கள் தலைமையில் சிறப்புடன் நடைபெற்றது. தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி பதக்கங்களை தம்பதிகளுக்கு வழங்கினார்.

## கட்சியின் பொதுச்செயலாளர் தேர்வு

15-7-69

"தி. மு. க.வுக்கு சோதனை காலம்" என்ற தலைப்பில் விடுதலையில் அய்யா அவர்கள் தலையங்கம் எழுதி தி. மு. கழகத்தினருக்கு அறிவுரை கூறினார். பிளவு, போட்டி தவிர்க்கப்படவேண்டும் என அதில் குறிப்பிட்டார்கள்.

17-7-96

"வகுப்புவாதம் டில்லிக்கு எட்டிவிட்டது" என்ற தலைப்பில் ஜனாதிபதி தேர்தல் பற்றி தந்தை பெரியார் விடுதலையில் தலையங்கம்.

24-7-69

எனது நிலைமை என்ற தலைப்பில் கலைஞர் கருணாநிதி ஆட்சியை ஆதரிப்பதன் காரணத்தை விளக்கி "விடுதலை"யில் அய்யா அவர்கள் தலையங்கம்.

26,27-7-69

சனி, ஞாயிறு தென்னாற்காடு மாவட்ட திராவிடர் கழகம், பகுத்தறிவு மாநாடுகள் சிறப்புடன் நடைபெற்றன. கழகப்பேச்சாளர்கள் புதுவை அமைச்சர்கள் தந்தை பெரியார் கலந்து சிறப்பித்தனர்.

25-7-69

தி. மு. கழகத்தின் சட்டத்திட்டங்கள் திருத்தப்பட்டு, கட்சிக்குத் தலைவர் ஒருவர், பொதுச் செயலாளர் அவரை கலந்து முடிவு எடுக்க வேண்டுமெனவும், மாநில மாநாட்டிற்கு கட்சித் தலைவர் தலைமை வகிப்பார் எனவும் மாற்றப்பட்டது.

## தி. மு. க. கட்டுப்பாடு காத்தது

26-7-69

கட்சியின் தலைவராக கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், பொதுச்செயலாளராக நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் பொருளாளராக திரு. எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கட்சியில் ஒற்றுமை காக்கப்பட்டது.

30-7-69

வேலூர் கிறிஸ்துவ மெஷின் ஆஸ்பத்திரியில் அய்யா மீண்டும் அனுமதி.

31-7-69

அய்யாவுக்கு மூத்திரப் பையில் அறுவை சிகிச்சை மிகவும் வெற்றிகரமாக டாக்டர் பட் அவர்களாலும் டாக்டர் சிரில் அவர்களாலும் நடத்தப்பெற்றது.

முதலமைச்சர், மற்ற அமைச்சர் பெருமக்கள், அதிகாரிகள், இயக்க முக்கியஸ்தர்கள், அய்யாவிடம் பேரன்பு பூண்டவர்கள் பலரும் வேலூர் மருத்துவமனைக்கு வந்து அய்யா உடல்நலம் விசாரித்தவண்ணமிருந்தனர்.

தமிழகமே அய்யாவின் நலம் குறித்து மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்தது.

## மருத்துவ மனையில் புதிய அமைச்சர்களுக்கு ஆசி

திரும்ப புதிதாக அமைச்சரவையில் இடம் பெற்ற நாவலர் இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன், வேழவேந்தன் ஆகியோருக்கு அய்யா ஆசி வழங்கினார்.

Phone No. 23 P. Box No. 6

## சின்ன மணலி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் லிமிடெட்,

NO. S. 1158

எடப்பாடி அஞ்சல் சேலம் மாவட்டம்

காட்டன், லினன் நூல்களைக்கொண்டு துண்டுகள், வேஷ்டிகள், சர்டிங் ரகங்கள், கர்சிப், நேப்கின்ஸ் ரகங்கள் தயாரிப்பதில் முதன்மை பெற்ற ஸ்தாபனம் என்று பெருமையோடு கூறிக்கொள்கிறோம்.

டிரேட் மார்க்

"சிமாகோ"

லேபில்கள் ஒட்டப்பட்ட ரகங்களையே கேட்டு வாங்குங்கள்.

ஏனென்றால்

அது நம்பிக்கையானது! உறுதியானது! விலை மலிவானது!

கைதேர்ந்த நெசவாளர்களால் தயாரிக்கப்பட்டது.

எல்லா "கோ-ஆப்டெக்ஸ்" விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

தலைவர் திரு. K. S. சுவாமிநாதன்
உப தலைவர் திரு. M. சுந்தரம்
காரியதரிசி திரு. C.C. கண்ணன்

நிர்வாகஸ்தர்கள்: திரு. A. வேலாயுதம்
திரு. S.D. கைலாசம்
திரு. P. மைலப்பன்
திரு. V.A. ஆறுமுகம்

## தந்தை பெரியார் தம் 91-வது பிறந்த நாளில் எங்களது நல்வாழ்த்துக்கள்

ஃ

போன்: 342

# அபிராமி & கோ.

[டிஸ்டிரிபியூட்டர்ஸ், இம்பீரியல் டுபாகோ கம்பெனி ஆப் இந்தியா]

வடக்கு ரத வீதி, திருச்செங்கோடு.

பல்லாண்டு வாழ்க பெரியார்
சமதர்மம் வளர்க!



# கு. ச. த. சங்கர சகாசிவர்

லெனின் ஸ்டோர்ஸ் &
செய்தித்தாள் விற்பனையாளர்

குளத்தூர் அஞ்சல்
(வழி) விளாத்திகுளம்
திருநெல்வேலி மாவட்டம்

---

ஷாவாலஸ் கம்பெனியின் நட்திர மார்க் இராசயன உரங்கள், மாடு, கோழித் தீவனங்கள்

எம். எப். காம்ப்ளக்ஸ் உரங்கள், மேயர் கம்பெனியின் பயிர் பாதுகாப்பிற்குரிய பாலிடால் E 605, பாலிடால் பவுடர், மெடா ஸிஸ்டாக்ஸ், மெடாஸிட் 50 மற்றும் எண்டிரின் B. H. C., D. D. T. முதலிய மருந்துகள் மொத்தமாகவும், சில்லரையாக வும் கிடைக்கும்.

# நாதன் கம்பெனி

73, பென்னாகரம் ரோடு, தருமபுரி-2.

வினியோகஸ்தர்கள்:

இரசாயன உரங்கள், கால்நடைத் தீவனங்கள், பயிர் பாதுகாப்பு பூச்சிக் கொல்லி மருந்துகள்.

---

வாழ்க பெரியார் வெல்க பகுத்தறிவு

பகுத்தறிவு மேதை, தந்தை
பெரியார் அவர்களுக்கு
91-வது பிறந்தநாள்
வாழ்த்துக்கள்

பவுன் வெள்ளி நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்

# S. N. சாமிநாதன்

புதுவை தி. க. தலைவர்

அழகிரி விலாஸ் நகைக்கடை புதுவை-1.

---

ஷாப் சாமான்களுக்கும், கல்லூரி &
பள்ளிக்கூட நோட்டுகளுக்கும்
சிறந்த இடம்

ஃ

# T. K. சீனிவாசன்

ஜெனரல் மர்ச்சண்ட்
அய்யங்கடைத் தெரு,
தஞ்சாவூர்.

# தென்னிந்தியாவில் அரசியல், சமுதாயப் போராட்டம்

**கி. வீரமணி**

தென்னகத்தில் மிக நீண்ட நெடுங்காலத்திற்குப் பிறகு இந்த இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய உரிமை இயக்கம்தான் பார்ப்பனரல்லாதார் இயக்கம்.

நூற்றுக்கு மூன்று பேர்களான பார்ப்பனர்கள் கல்வியிலும், உத்தியோகங்களிலும், சமூக அந்தஸ்திலும் எவ்வளவு மேலோங்கியவர்களாக இருந்தார்கள் என்பதற்கு வெளிப்படையான ஒரு எடுத்துக்காட்டு:

உரிமை முழக்கம் எழுப்பிய மிகப் பெரும்பான்மையோரான மக்கள் தங்களைப் ''பார்ப்பனரல்லாதரர்'' (Non—Brahmin) என்றும், தங்கள் இயக்கத்தைப் ''பார்ப்பனரல்லாதார் இயக்கம்'' (Non—Brahmin Movement) என்றும், எதிர்மறையில் அழைக்கும்படிச் செய்ததாகும்!

சாதிப் பிரிவுகளினால் ஏற்பட்ட மிகப் பெரிய லாபம் மேல் சாதிக்காரர்களான பார்ப்பனர்களுக்குத்தான் பலவகைகளிலும் சலுகைகள் போல் உண்டு. (Previleges) கீழ்சாதி மக்கள் அச்சாதி 'தர்மம்' காரணமாகவே வெறும் உடல் உழைப்புக்காரர்களாகவும் தற்குறிகளாகவும், மேல் சாதியினருக்குக் குற்றேவல் புரியும் அடிமைகளாகவும் ஆக்கப்பட்டனர். இதை எதிர்த்துக் கிளர்ந்தெழுந்த இயக்கம் திடீரென ஒரு எரிமலை வெடித்தது



போன்றதல்ல. படிப்படியாக முயன்று மிகப் பெரும் பாறைகளைத் தகர்த்தெறிவது போன்றதொரு பணியாகும்.

அத்தகைய உரிமைப்போர் நடத்திய காலம் தமிழகத்தின் வரலாற்றில் மிக முக்கிய கட்டமாகும். அதனை அறிவதற்கு நமது நாட்டில் இன்று உரிமையை அனுபவித்துச் சுவைக்கும் "கீழ் சாதி" மக்கள் கூட பலர் தயாராக இல்லாத நிலையில் அமெரிக்காவில் பிறந்து வளர்ந்த அமெரிக்க மாணவர் ஒருவர் இவ்வியக்கத்தின் அடிநாள் வரலாற்றை ஆராய்ச்சி செய்து சிறப்பானதொரு நூலை வெளியிட்டிருப்பது இன்றைய தமிழக இளைஞர் சமுதாயத்திற்கு திடீரெனக் கிடைத்த புதையல் ஆகும்!

இன்றைய இளைஞர் உலகிற்கு அன்றைய உரிமைப் போராட்டத்தின் பல்வேறு கால கட்டங்களை—சரித்திர உண்மைகளை—எதிர் நீச்சல் பணிகளை—தெரிந்து கொள்ள முறையான வரலாற்றுநூல் ஏதும் அற்ற நிலையில் திரு. "இர்ஷிக்" எழுதியுள்ள "தென்னிந்தியாவில் அரசியல், சமுதாயப் போராட்டம்" என்ற ஒரு நூல் அரிய கரு வூலம் ஆகும்.

நூலும்—நூலாசிரியரும்: திரு. யூஜினி எஃப். இர்ஷிக் அவர்கள் அமெரிக்காவில் உள்ள கலிஃபோர்னியா பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத் துறையில் பணியாற்றுபவர் ஆவார். தென்னிந்திய அரசியல் சமுதாயப் போராட்டத்தைப் பற்றிய ஆராய்ச்சி நடத்தி தனது ஆராய்ச்சிக் குறிப்புரையை சமர்ப்பித்தவர். இவர் பல காலம் சென்னையில் தங்கியிருந்தவர் என்பதும், இவைகளை அறிய பகுத்தறிவுப் புலவரான வித்துவான் இரா. மணியன் B.O.L., B.T. அவர்களிடம் தமிழ் பயின்று பல தமிழ்த் தலைவர்களையும், நீதி கட்சி பெரியோர்களையும் சந்தித்து பல தமிழ் நூல்களைப் படித்து குறிப்புகளை சேகரித்தவர் என்பதும் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

இங்குள்ள பார்ப்பனர்கள் நமது இயக்கத்தைப் பற்றி எவ்வளவுதான் அலட்சியப் படுத்தினாலும் இருட்டடித்துப் பார்த்தாலும், தவறான செய்திகளை வெளியிட்டாலும் அவற்றை எல்லாம் தாண்டி "முகிலைக் கிழித்துக் கிளம்பும் முழுமதிபோல" இவ்வியக்கம் உலகத்தின் மறுகோடியில் உள்ள மக்களின் முழு கவனத்தையும் ஈர்க்கும் வண்ணம் பிரபலமாகிவிட்டது இன்று!

ஹார்ட்கிரேவ் ஜூனியர் (Hard Grave Junior) என்ற அமெரிக்கர் "திராவிட இயக்கம்" என்பது பற்றி ஆராய்ச்சி செய்து, அத் தலைப்பிலே நூல் வெளியிட்டுள்ளதும், திருமதி "பார்னட்" என்ற நீக்ரோ அம்மையார், (இவரது ஆராய்ச்சி இன்னும் நூலாக வெளிவரவில்லை.) திருவாளர் யூஜினி எஃப் இர்ஷிக் நீதி கட்சியைப் பற்றி ஆராய்ச்சி செய்வதும், 'தமிழ் நாட்டில் வட்டார இயக்கங்கள்' என்ற தலைப்பில் திரு விசுவநாதன் என்ற மலேசியப் பேராசிரியர் ஆஸ்திரேலியாப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி செய்வதும், தமிழ்நாட்டில் பார்ப்பனரல்லாதார் இயக்கமான—தென்னிந்திய நல உரிமைச் சங்கமாகிய "ஜஸ்டிஸ்" கட்சி—சுயமரியாதை இயக்கம்—திராவிடர் கழகம்—திராவிட முன்னேற்றக் கழகம்—ஆகிய பல பெயர்களில் அமைந்த அமைப்புகள் பார்ப்பனரல்லாதார் தங்களுடைய நியாயமான உரிமைகளைப் பெற எத்தகைய நெருப்பாற்றில் நீந்திக் கொண்டிருக்கின்றார்கள்; அப்போராட்டம் முழு வெற்றியை இன்னும் அடையாவிட்டாலும் வெற்றி முகத்தையாவது காட்ட ஆரம்பித்து விட்டது என்பதைப் பறைசாற்றுவதாக அமைந்துள்ளது.

ஏறத்தாழ எட்டு ஆண்டுகளாக இவ்வாராய்ச்சியில் ஈடுபட்டுள்ள திரு "இர்ஷிக்" அவர்கள், இதற்கான ஆதாரங்களையும் பல தகவல்களையும் சேகரிப்பதற்கு இங்கிலாந்தில் உள்ள பிரபல நூல் நிலையங்களான பிரிட்டிஷ் மியூசியம், இந்தியா ஆபீஸ் லைப்ரரி (Library) ஆகியவற்றை முழுதும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்; பல வரலாற்று ஆசிரியர்கள், மறைந்த நீதி கட்சித் தலைவர்களின் உறவினர்கள், தந்தை பெரியார் போன்ற இவ்வியக்கச் சிற்பிகள் கர்த்தாக்கள் இவர்களைப் பேட்டி கண்டதோடு, தமிழகத்து பழைய நூல்கள், 'குடியரசு' ரிவோல்ட் போன்ற ஏடுகளையும் "தமிழர் தலைவர்" "நமது குறிக்கோள்" போன்ற பல

பகுத்தறிவு வெளியீடுகளையும் செவ்வனவே பயன்படுத்தியுள்ளார்.

இதுவரை வெளிநாட்டிலிருந்து வரும் ஆராய்ச்சியாளர்களில் எவரும் இங்குள்ள பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் போரட்டத்தைப்பற்றி இவ்வளவு தீவிரமான ஆர்வத்துடன் ஆராய்ந்ததுமில்லை; தெளிவாக எழுதியதுமில்லை என்று சொல்லத்தக்க வண்ணம் மிகச்சிறப்புடன் எழுதியுள்ளார்.

412 பக்கங் கொண்ட இந்நூலின் விலை 9.75 அமெரிக்க டாலர். இதை பெர்க்லி, லாஸ் ஏஞ்சல்ஸில் உள்ள "கலிஃபோர்னியா யுனிவர்சிட்டி பிரஸ்" வெளியிட்டிருக்கிறது.

இவ்வாண்டில் (1969) தான் இந்நூல் வெளியாகி இருக்கிறது. இதற்கு நூலாசிரியர் திரு இர்ஷிக் முன்னுரையை 1968ம் ஆண்டு மார்ச் மாதம்தான் சென்னையிலிருந்து எழுதி அனுப்பி இருக்கிறார். இவர் அமெரிக்கா திரும்பி விட்டார்.

அமெரிக்க டாலரில் 9.75 என்றால் நமது ரூபாய் நாணயத்திற்கு சுமார் 70க்குச் சமமாகும்.

சென்னையில் பிரபல ஆங்கில தினசரிகளான "மெயில்" "இந்து" மற்றும் ரிக்கார்டு ஆபீஸில் உள்ள அரசாங்க ரகசிய சுற்றறிக்கைகள் இவைகளை எல்லாம் துருவித் துருவி ஆராய்ந்து தகவல்களை தேனீ தேனைத் திரட்டுவது போல மிக அற்புதமாக சுவைக்கும்படித் திரட்டியுள்ளார்!

தமிழ் நாட்டிலும், தென்னாட்டிலும் முகிழ்த்துக் கிளம்பிய ஒரு இயக்கத்தினைப் பற்றி இவ்வளவு கடல் போன்ற தகவல்களை இந்நாட்டில் பிறந்த படித்தவர்கள், நீதி கட்சியில் பெரிய மனிதர்களாகி, உலகப் புகழ் பெற்றவர்கள் எல்லாம் கூட எழுதத் துணியாத இன எழுச்சி வரலாற்றைப் பற்றி அவர் எழுதியுள்ள அத்தனை செய்திகளும் நமது இளைஞர்களுக்கு மனப்பாடம் ஆக வேண்டியவைகளாகும்.

'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய மூத்தக்குடி' என்று வாய்ப்பறை கொட்டியே பழக்கப்பட்ட வக்கணையாளர்கள் மலிந்துள்ள நமது சமுதாயத்தில் இந்த வரலாற்றை முறையாகத் தொகுத்தளிப்பதற்கு ஒருவர்—திரு இர்ஷிக் கிடைத்தாரே என்று எண்ணி எண்ணி இறும்பூதெய்த வேண்டும்!

சர். பி. தியாகராயர், டாக்டர் நாயர், பனகல் அரசர், தந்தை பெரியார், பொப்பிளி அரசர். சர். ஏ.டி. பன்னீர்செல்வம், சர். கே.பி. ரெட்டிநாயுடுகாரு போன்ற நமது வழிகாட்டித் தலைவர்கள் எவ்வளவு எதிர்ப்புப் புயல்களையும், கிண்டல்கணைகளையும், அவதூறு சேற்றையும் தாங்கி இவ்வியக்கத்தை இன்று பிர்மாண்ட சக்தியாக ஆக்கினர் என்பது பல இடங்களைப் படிக்கும்போது மயிர்க்கூச்செறிகிறது.

வெள்ளைக்காரர்களைப் பார்ப்பனர் எப்படி தன் வயப்படுத்தினர்? தேசியம் எப்படி அவர்களுக்குத் திரையாகப் பயன்பட்டது? என்பதை எல்லாம் திறம்படத் தகுந்த ஆதாரங்களுடன் விளக்குகிறார் — நூலாசிரியர் திரு இர்ஷிக் அவர்கள்.

இத்தகைய இயக்கத் தலைமை தோன்றுவதற்கு முன்னர் தமிழர் சமுதாயம் எப்படிபட்ட நாதியற்ற சமுதாயமாய், ஆமைகளாய், ஊமைகளாய் அடங்கி ஒடுங்கிக் கிடப்பதற்கென்றே "ஆண்டவனால் படைக்கப்பட்ட" சமுதாயமாக இருந்தது என்பதை பல தெளிவுள்ள புள்ளி விவரங்களை அள்ளித் தந்து பேச வைக்கிறார். அந்நாள் ஆரிய ஆதிக்கக் கொடுமையினைப் புரிய வைக்க அதைவிட சிறந்த முறை வேறு இல்லை என்றே சொல்லலாம்.

உத்தியோக மண்டல முழுவதும் பார்ப்பனரின் தனி உடமையாக, ஏகபோகச் சொத்தாக இருந்த நிலையில் அவர்கள் ஆதிக்கத்தை எதிர்த்து எப்படி போர்ச்சங்கு ஊதப்பட்டது? உரிமைக்குரல் எழுந்தது என்பதை விளக்கும் வகையில் அனுபந்தங்களில்

வரலாற்றுப் புகழ் பெற்ற பார்ப்பனரல்லாதாரின் முதல் அறிக்கை "The Non—Brahmin Manifesto." (இது 1916 டிசம்பர் 20ந் தேதிய 'இந்து' பத்திரிகையில் வெளியாகி இருக்கிறது.)

காலம் I

1912-ல் குறிப்பிடத்தக்க அரசாங்க உத்தியோகங்களில் உள்ள நிலை

| வரிசை எண் | இனம் | எண்ணிக்கை | சதவிகிதம் | நியமன சதவிகிதம் |
|---|---|---|---|---|
| | டிப்டி கலெக்டர்கள் :— | | | |
| 1 | பார்ப்பனர்கள் | 77 | 3·2% | 55% |
| 2 | பார்ப்பனரல்லாதவர்கள் | 30 | 85·6% | 21·5% |
| 3 | முஸ்லிம்கள் | 15 | 6·6% | 10·5% |
| 4 | இந்தியக் கிருஸ்தவர்கள் | 7 | 2·7% | 5% |
| | யூரேப்பியர்களும்-யூரேசியர்களும் | 11 | .1% | 8% |
| | சப்-ஜட்ஜ்கள் :— | | | |
| 1 | பார்ப்பனர்கள் | 15 | | 83·7% |
| 2 | பாப்பனரல்லாதார் | 3 | | 16·7% |
| 3 | முஸ்லிம்கள் | — | — | — |
| 4 | இந்திய கிருஸ்தவர்கள் | — | — | — |
| 5 | யூரேப்பியர்களும்—யூரேசியர்களும் | — | — | — |
| | மாவட்ட முன்சீப்கள் | | | |
| 1 | பார்ப்பனர்கள் | 93 | — | 72·6% |
| 2 | பார்ப்பனரல்லாதவர்கள் | 25 | — | 19·5% |
| 3 | முஸ்லிம்கள் | 2 | | 1·6% |
| 4 | இந்தியக் கிருஸ்தவர்கள் | 5 | — | 3·9% |
| 5 | யூரேப்பியர்களும்—யூரேசியர்களும் | 3 | | 2·4% |

அரசாங்க உத்தியோகங்கள் பற்றிய ராயல் கமிஷனின் அறிக்கை வால்யூம் II-ல் உள்ள அனுபந்தத்திலும் 1914—பக்கங்கள் 103—104

(2) 1921ம் ஆண்டு செப்டம்பர் 16ம் நாள் (MRO-Public ordinary service GO613) வெளியிடப்பட்ட முதல் கம்யூனல் ஜி. ஓ உத்தரவு

(3) 1922 ஆகஸ்டு 15ந்தேதி வெளியிட்ட (M R O—Public ordinary service GO 658) இரண்டாவது கம்யூனல் ஜி. ஓ. உத்தரவு

(4) 1924ல் பிப்ரவரி 6ம் நாள் (M R O—Public ordinary service GO 761) போடப்பட்ட உத்தரவில் ஏற்பட்ட உத்தியோகஸ்தர்கள் தேர்வு போர்டு (Staff selection Board) நியமனம் பற்றிய தகவல்கள் ஆகிய இவைகளைத் தந்துள்ளார்.

### ஆரியமாயைப் பற்றிய படலம்

இவ்வளவு ஆதிக்கவாதிகளாக உள்ள பார்ப்பனர்கள் உண்மையில் சிறந்த அறிவாளிகளா? புத்திசாலிகளா? உண்மையான கெட்டிக்காரர்களா? என்றால் இல்லை என்பதை அந்தக் காலத்தில் உள்ள பல வெள்ளைக்கார ஐ. சி. எஸ். அதிகாரிகள் கலைக்டர்கள் எவ்வளவு தெளிவாக உணர்ந்திருந்தனர் என்பதை ஒரு குறிப்பின் மூலம் "இர்ஷிக்" எடுத்து மேற்கோள் காட்டியுள்ளார். தகுதியும் திறமையும் தங்களுக்கே சொந்தம் என்று பார்ப்பனர் தம்பட்டம் அடிப்பது இமாலயப் புரட்டு என்பதை தெளிவாக்குவதாக அது இருக்கிறது.

சுவையான அப்பகுதிகள் இதோ :—

"பஞ்ச நிவாரண கமிஷனின் உறுப்பினரான ஜேம்ஸ் கைடு என்பவருக்கு 1879ம் ஆண்டு ஜூலை மாதம் 8ந் தேதி தஞ்சை மாவட்டக் கலைக்டராக இருந்த எ. துவேரே என்பவர் எழுதிய கடிதத்தில் பார்ப்பனர் பற்றி பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

காலம் 2

சில குறிப்பிட்ட அரசு உத்தியோகங்கள்—1917ல்

| வரிசை எண் | உத்தியோகம் | பார்ப்பனர் | பார்ப்பனரல்லாதார் | இந்தியக் கிருஸ்தவர்கள் | முஸ்லிம்கள் | சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|
| | ரெவின்யூவும்—நீதித்துறையும் | | | | | |
| 1 | தாசில்தார்கள் (ஹீசூர்களும்-சிரஸ்தார்களும் சேர்ந்து) | 135 | 69 | 14 | 12 | 41.3 |
| 2 | உதவி தாசில்தார்கள் | 214 | 65 | 21 | 10 | 30.9 |
| 3 | ஆங்கில தலைமை எழுத்தாளர்கள் (குமாஸ்தாக்கள்) | 16 | 5 | 2 | 1 | 33.3 |
| 4 | மாவட்ட நீதிமன்றத்தில் சிரஸ்தார்கள் | 13 | 6 | 1 | 2 | 40.9 |
| 5 | சப் கோர்ட்களில் சிரஸ்தார்கள் | 15 | 4 | 1 | — | 25 |
| 6 | ரெவின்யூ துறையிலும், நீதி துறையிலும், பார்ப்பனரல்லாதார்—இந்திய கிருஸ்தவர்கள்—முஸ்லீம்களின் மொத்த சராசரி | | | | | |

ஆதாரம்: MRO (Home (miscellaneous) ordinary service Go 1123 October 25, 1917)



காலம் 3

சென்னைப் பல்கலைக் கழகத்தில் பட்டதாரிகள் 1870—1918 வரை

| ஆண்டு | பார்ப்பனர்கள் | பார்ப்பனர் அல்லாத இந்துக்கள் | இந்திய கிருஸ்தவர்கள் | முஸ்லீம்கள் | யூரோப்பியர்களும் யூரேசியர்களும் | மொத்த பட்டதாரிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | 1,315,600 | 36,521,000 | 1,167.600 | 2,824 | 41,000 | |
| | சதவிகித எண்ணிக்கை | சதவிகித எண்ணிக்கை | சதவிகித எண்ணிக்கை | சதவிகித எண்ணிக்கை | சதவிகித எண்ணிக்கை | |
| 1870—71 | 110—67% | 36—22% | 10—6% | ...... | 8—5% | 164 |
| 1880—81 | 492—64% | 171—22% | 47—6% | 2—0·25% | 58—7·5% | 770 |
| 1890—91 | 1461—67% | 445—20.5% | 168—8% | 20—1% | 78—3.5% | 2169 |
| 1901—1911 | 4074—71% | 1035—18% | 306—5.3% | 69—1% | 228—4% | 5709 |
| 1918+ | 10269—67% | 3213—21% | 1343—8.8% | 186—1·2% | 208—1% | 15216 |

ஆதாரம்: MRO, public ordinary, Servia Go 22, Jan. 1919

"பார்ப்பனரின் அறிவுத்தரம்—மற்ற கீழ்த்திசை நாட்டினரது அறிவைப் போன்று கூர்மையானது. ஆனால் அது உயர்தரமானது என்று நம்புவதற்கு, முன்போ அல்லது இப்போதோ எவ்வித காரணமும் இருப்பதாக எனக்குப் புலப்பட வில்லை!

அவர்கள் (பார்ப்பனர்கள்) வெறும் சொற் சிலம்பம் ஆடும் வித்தைக்காரர்களே தவிர விஞ்ஞான ரீதியான மனப்பாங்கு பெற்றவர்களல்ல!

அவர்களுக்கு விஷய ஞான சக்தி, விஷயங்களை முறையாகப் புரிந்து கொள்ளும் சக்தி மிகவும் குறைவு.

சுய சிந்தனையுடன் எதையும் சொல்லும் அறிவுச் சக்தியும் அவர்களுக்கு அறவே யில்லை. தங்கள் சுயநலத்தை ஒட்டிய உடனடி தேவைகளைத் தவிர வேறு எது பற்றியுமே இந்த உலகத்தில் கவலைப் படாதவர்கள் அவர்கள்.

ஆயினும் துரதிர்ஷ்ட வசமாக வெளி நாட்டினரோடு தொடர்பு கொள்ளும் இக் கால பார்ப்பன அதிகாரிகள், பழைய கால பார்ப்பனர்களைவிட தரத்தில் மிகவும் குறைவானவர்களாகவே உள்ளனர்.

படித்த வகுப்பினர் என்று தம்மைப் பற்றிக் கூறிக்கொள்ளும் இவர்கள் முன் னேற்றத்திற்கு எதுவும் செய்யவில்லை— அவர்களால் செய்யவும் முடியாது. இங் கிலீஷ்காரர்களுக்கு இவ்வளவு விரோத மானவர்கள் வேறு எந்த இனத்திலும் கிடையாது.

இத்தகைய மனிதர்களை நமது எஜமானர்களாக பெரும் அளவிற்கு ஆக்கிக் கொண்டதும், இதே பாதையில் மேலும் நாம் நடைபோடுவதும் நமது நிர்வாகத்திற்கே ஏற்பட்ட பெரும் துரதிர்ஷ்டமாகும்!"

அய்யா பிறப்பதற்கு மூன்று மாதங் களுக்கு முன் தஞ்சை கலெக்டராக இருந்த ஒரு வெள்ளைக்கார அய். சி. எஸ். இரகசிய மாக மற்றொரு நண்பர்க்கு எழுதிய கடிதத் தில் இது காணப்படுகிறது!

தந்தை பெரியார் பிறந்து 90 ஆண்டுகள் முடிகின்ற இக்கால கட்டத்தில் திரு துவேரே யின் இரகசியக் கண்டுபிடிப்பு சந்தைக் கடை யில் பேசப்படும் மிகச் சாதாரண ஒருபேச்சாகி விட்டது. அய்யாவின் அரிய சாதனைகளில் இது தலையானது—தன்னிகரற்றது!

## தமிழ் நாட்டில் தேசியத்திற்கும் தமிழ் உணர்வுக்கும் மோதல்

தேசியம் என்ற பெயரால் காங்கிரசும் காந்தியும் எவ்வளவு வருணாசிரமக் காவலர்' களாக விளங்கினார்கள் என்பதையும், அதனால்தான் தந்தை பெரியார் அவர்கள் காங்கிரசிலிருந்து வெளியேறி, சுயமரியாதை இயக்கங்கண்டு, பிறகு ஜஸ்டிஸ் கட்சித் தலைவராகி, ஜஸ்டிஸ் கட்சியை சுயமரியாதை இயக்கத்துடன் இணைத்து திராவிடர் கழக மாக்கியதையும் பிறகு அதிலிருந்து திராவிட முன்னேற்றக்கழகம் அண்ணாவின் தலைமை யில் அமைந்ததாகிய எல்லாவற்றை யும் சுவைபட உண்மைகளை—மாற்றாமல்— மறைக்காமல் சொல்வது ஆராய்ச்சியாளர் களுள் 'ஆயிரத்தில் ஒருவர்' இவர்'! என்று வியந்து கூறத்தக்க வண்ணம் இருக்கிறது.

## இயக்கத்தின் இலக்கணம்

பத்து அத்தியாயங்களாக எழுதப்பட்டு உள்ள இந்நூலில் சென்னை இராஜதானியின் சமூக அரசியல் பின்னணியில் (துவங்கி 1925—29)தேசீய அரசியலுக்கும் தமிழ் அரசியலுக்கும் உள்ள போராட்டம் வரை சித்தரித்துள்ளார்.

நமது இயக்கத்தின் வரலாறு, வழி காட்டி இலக்கியம் எல்லாம் இது என்றே சொல்ல லாம். தமிழ் நாட்டின் நூலகங்கள்—வீட்டு நூலகங்கள் அனைத்திலும் இருக்க வேண் டிய நூலாகும்.

இங்கிலீஷ் படித்துப் புரிய சக்தி படைத்த தமிழர்கள் அனைவரும் ஒரு முறை படிக்க வேண்டும். இந்நூலின் உண்மைகள் பற்றி பல முறை சிந்திக்க வேண்டும்!







# இந்தியில் பெரியாரின் "இராமாயணப் பாத்திரங்கள்!"

## வடநாட்டில் 10 ஆண்டுகளில் பரவல்.

"ராவணனும் அவனது இலங்கையும்" என்ற தலைப்பில் உ. பி. மாநிலத் தலைநகரான லக்னோவில் "சாந்திரிக் பிரசாத் ஜிக்கியாஸ்" என்பவரால் ஒரு நூல் 80 பக்கங்களில் 1957ல் எழுதப்பட்டு 62, 65, 66, 68 ஆண்டுவரை அய்ந்து மதிப்புகளில் பல ஆயிரக்கணக்கான பிரதிகள் அச்சிடப்பட்டுப் பரப்பப்படுகிறது.

இந்து சமாஜ வளர்ச்சி டிரஸ்ட் ஆதரவில் வெளியிடப்பட்ட இந்த நூலை வெளியிட்டிருப்பவர்:

"பகூஜன் கல்யாண் பிரகாஷ்" (360/193—மாதாடின் ரோட், லக்னோ—3) என்பவர்

தந்தை பெரியாரின் உருவத்தை அட்டையில் போட்டுள்ள இந்நூல் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு முதற்பகுதியில் இராமலீலாவில் காணும் ராவணன், இராமாயணத்தில் காணும் ராவணன், வால்மீகி

காணும் ராவணன், ஆரிய சமாஜகண்ணோட்டத்தில் ராவணன், திராவிடர் கழக பிரதான தலைவர்பெரியார் கண்ட ராவணன், திராவிட ராவணனின் விசித்திரப் பண்புகள், ஆரிய திராவிட கலாச்சாரங்களுக்கிடையே உள்ள வேறுபாடு, இராவணனின் இலங்கை எங்கே? இராவணனின் மகத்துவமும் பாண்டித்துவமும் என்ற தலைப்பில் பல அத்தியாயங்கள் உள்ளன.

இரண்டாம் பகுதியில் சீதை இராவணனின் மகளா? என்பது பற்றியும், இராவணன் இரக்கமென்னும் ஒரு பொருளில்லா அரக்கனா? அல்லது அமைதியை விரும்பும் அறிவாளியா என்பது பற்றியும் ஆராயப்படுகிறது.

### "சச்சி இராமாயணம்"

என்ற பெயரில் தந்தை பெரியார் அவர்களது "இராமயணபாத்திரங்கள்!" என்ற நூலானது தந்தை பெரியாரிடம் அனுமதி பெற்று இந்தியில் மொழி பெயாக்கப்பட்டு "லலய சிங் யாதவா" என்பவரால் வெளியிடப்பட்டுள்ளது. ஒரு ரூபாய் விலையில் ஆயிரக்கணக்கானபிரதிகளை "அத்தியட்சகா அசோக் புஸ்தகாலயா" (ஜின்ஜிகாக். P. O.. கான்பூர் Dt. U.P.) என்ற வெளியீட்டு நிறுவனம் வெளியிட்டு தந்தை பெரியார் அவர்களின் புரட்சிக் குரலை வட இந்தியா முழுவதும் எதிரொலிக்கச் செய்துள்ளது.

LONG LIVE PERIYAR!

To cherish the great and make them one's own is the rarest of all rare virtues.

—(KURAL)

Rational

TANJORE

**RATIONAL TAILORING HOUSE**

1148, East Main Street. TANJORE.

போன்: 331

உயர்ந்த ரக உணவு வகைகளுக்கும், உளங்கனிந்த உபசரிப்புகளுக்கும்

சிறந்த இடம்

**ராயல் சென்ட்ரல் பிரியாணி ஓட்டல்**

prop: **K. K. B.**

பஸ் ஸ்டாண்டு, : : கும்பகோணம்.

# அய்யா வாழ்விலே...!

புலவர் கோ. இமயவரம்பன்

## நாத்திகத் தந்தையும் நாக்கில் புற்றும்

தந்தை பெரியார் அவர்கள் என்றைக்குமே தமது உடல் நலம்பற்றி கவலைப்படுபவர் அல்ல. அயராது பணிபுரிவதே லட்சியமாகக் கொண்டவர் என்பது யாவரும் அறிந்த ஒன்றே. அவர் ஓய்வென்பதை தமக்குப் பெரிய ஒரு நோயாக கருதுபவர்.

அண்மையில் வேலூர் மருத்துவமனையில் தங்கி சிகிச்சைப் பெற்று வந்தபோது ஒரு நாள் தந்தை பெரியார் அவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் டாக்டர் பட் அவர்கள் "இப்போது எப்படி இருக்கின்றீர்கள்? நோய் தொந்தரவு ஏதாவது உள்ளதா" என்று கேட்டபோது அய்யா அவர்கள் டக்கென்று "அய்யா எனக்கு இப்போது நோய்த் தொல்லை ஒன்றும் இல்லை. தங்களுடைய திறமையான மருத்துவத்தால் பெரிதும் குணம் அடைந்து விட்டேன். ஆனால் இப்படி கட்டிலிலேயே நாள் பூராவும் உட்கார்ந்து இருப்பதும் படுத்திருப்பதும் தான் எனக்குப் பெரிய தொந்தரவான நோயாக இருக்கின்றது" என்று சிரித்துக் கொண்டே சொன்னார்கள்.

இப்படிப்பட்ட தன்மை வாய்ந்த தொண்டுக்கு இலக்கணமான தந்தை பெரியார் அவர்களுக்கு சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு நாக்கில் கொப்புளங்கள் கிளம்பின. தந்தை பெரியார் அவர்கள் அதனைப் பற்றிக் கவலைப் படாமல் அலட்சியமாகவே இருந்து விட்டதும் அல்லாமல் வழக்கம் போல கூட்டங்களுக்கும் போய் வந்து கொண்டிருந்தார்கள். நாள் ஆக ஆக கொப்புளங்கள் புண்ணாகி சீழ் பிடித்து வாய் நாற்றம் எடுக்க ஆரம்பித்து விட்டது.

தந்தை பெரியார் அவர்களின் தமையனார் சித்த வைத்தியர் ஆனதினால் அவர் "அது சதா அலைச்சல் காரணமாக, உஷ்ணத்தினால் வந்த கொப்புளங்கள்" என்று கூறி ஒரு தயிலத்தைக் காட்டி இதனைத் தேய்த்து மூழ்கினால் குணமாகிவிடும் என்று கூறினார்.

தந்தை பெரியார் அவர்கள் என்றைக்குமே நாட்டு வைத்தியத்தில் நம்பிக்கை வைத்தவர் அல்லர். எனவே தமக்கு வேண்டிய டாக்டர் ஒருவரிடம் கொண்டு போய் காட்டினார்கள். டாக்டரும் புண்ணைப் பார்த்துவிட்டு "தாங்கள் தூக்கத்தில் எப்படியோ நாக்கைக் கடித்துக் கொண்டு விட்டீர்கள். அதனால்தான் இப்படிப் புண் ஏற்பட்டுவிட்டது. தினம் இரண்டு முறை பொட்டாஷியம் 'பர்மாங்கனேட்டை தண்ணீரில் கரைத்து வாயைக் கொப்பளித்து விட்டு கிளிசிரினை நாக்கில் தடவிக் கொண்டுவாருங்கள் புண் குணமாகி விடும்" என்று கூறினார். அப்படியே இரண்டொரு நாட்கள் செய்தும் பார்த்தார்; பயனில்லை.

அதற்குள்ளாக புண்ணின் உபாதையும், நாற்றமும் அதிகரித்து விட்டது, சாப்பிட முடியவில்லை. பால், கஞ்சி முதலிய திரவ உணவுகளும் சாப்பிட முடியவில்லை. அது கண்டு அன்னை மணியம்மையார் அவர்கள் தந்தை பெரியார் அவர்களை மிகவும் வற்புறுத்தி சென்னைக்குக் கூட்டி வந்தார்கள். தந்தை பெரியார் அவர்களுக்கு மிகவும் பழக்கமான டாக்டர் சுந்தரவதனம் அவர்

களிடம் கொண்டு போய் காட்டினார்கள்.

டாக்டர் சுந்தரவதனம் அவர்கள் தந்தை பெரியார் அவர்களின் நாக்கில் உள்ள புண்ணைப் பார்த்துவிட்டு மிகவும் வருத்தத்துடன் "அட சனியன்! அது எப்படி உங்களுக்கு வந்தது? இவ்வளவு நாள் என்ன பண்ணினீர்கள்? கொஞ்ச நாளுக்கு முன்ன தாகவே வந்திருக்கக் கூடாதா?" என்று கூறிவிட்டு ஒரு பிரபல டாக்டருக்குக் கடிதம் கொடுத்து, உடனடியாகப் போய் பாருங்கள் என்று கூறி அனுப்பினார்.

கடிதத்தை எடுத்துக்கொண்டு அந்த டாக்டரிடம் போனார்கள். அவரும் அய்யா வின் நாக்கினைப் பார்த்துவிட்டு "அய்யா இவ்வளவு பெரியவர்கள், விஷயம் தெரிந்த வர்கள் எல்லாம் இப்படி அலட்சியமாக இருக்கலாமா? நாளை காலை வந்து விடுங்கள் உங்கள் நாக்குக்கு ரேடியம் சிகிச்சை செய்ய வேண்டியிருக்கின்றது" என்று கூறினார்.

அப்போதுதான் தந்தை பெரியார் அவர்களுக்கு தமது நாக்கில் வந்துள்ளது புற்று நோய் என்று தெரிந்தது. தினந்தோறும் ரேடியம் சிகிச்சை அளிக்கப்பட்டது. ரேடியம் சிகிச்சையின் விளைவாக தந்தை பெரியார் அவர்களின் நாக்கு, முகம் எல்லாம் வீங்கிவிட்டது. நாக்கிலிருந்து சதா தண்ணீர் வடிந்துக் கொண்டே இருந்தது.

தந்தை பெரியார் அவர்கள் தமக்கு வந்துள்ள புற்று நோய் கண்டு மிகவும் மனக் கவலை அடைந்தார்கள். இதனால் தமது உயிருக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று பயந்தல்ல.

"அவன் நாத்திகன்; கடவுளையும், மதத்தையும், சாஸ்திரங்களையும், முன்னோர்களின் நடப்புகளையும் திட்டினான். இதன் காரணமாகத்தான் இவன் நாக்கில் புற்று நோய் வந்துவிட்டது, கடவுள் நிந்தனை சும்மா விடுமா!" என்று ஒன்றும் அறியாத பாமர மக்களிடம் பார்ப்பனர்களும் மதவாதிகளும் தவறான எண்ணத்தைக் கிளப்பிவிட்டு விடுவார்களே; இதன் காரணமாக தனக்குப் பிறகு இந்த பகுத்தறிவினை அடிப்படையாகக் கொண்ட கொள்கையினை எடுத்துச் சொல்ல யாரும் முன் வரமாட்டார்களே, அப்படி யாராவது முன் வந்தாலும் அவர்களுக்கு ஆதரவு கொடுக்காததோடு சுலபமாக "கடவுளை, மதத்தை, சாத்திரத்தைத் திட்டின இராமசாமி நாயக்கனே நாக்கில் புற்று நோய் வந்து புழுத்து அழிந்தான். இவன் எம்மாத்திரம்?" என்று மக்களிடம் விஷமத்தனமாக பிரச்சாரம் செய்து விடுவார்களே என்ற காரணத்திற்காகவே மனக் கவலை அடைந்தார். அய்யா அவர்கள் மனக் கவலையுற்று எந்த அளவுக்குப் போய் விட்டார்கள் என்றால் யாருக்கும் சொல்லிக் கொள்ளாமல் இந்த நாட்டை விட்டே வேற்று நாடுகளுக்கும் போய்விடலாமா என்று யோசித்ததும் உண்டு. தந்தை பெரியார் அவர்கள் பகுத்தறிவு வாதியானபடியால் தற்கொலை செய்து கொள்ளவில்லை.

ஒரு நாள் டாக்டரிடம் அன்னை மணியம்மையார் அவர்கள் "இப்படியாக முகம், நாக்கு எல்லாம் வீங்கியிருக்கின்றதே! நாக்கில் சதா தண்ணீர் வடிந்து கொண்டு இருக்கின்றதே என்று கேட்டார்கள். அதற்கு அந்த டாக்டர் சிரித்துக்கொண்டே சொன்னார், "இந்தப் பெரியவருக்கு வந்துள்ள புற்று நோய்க்கு நாங்கள் கொடுத்துள்ள மருந்தும் ரேடியம் சிகிச்சையும் இப்போது தான் நன்கு பலன் அளிக்கத் தொடங்குகிறது. ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். இன்னும் சில நாட்களில் குணமாகி விடும்" என்று கூறினார்.

டாக்டரின் கட்டளைப்படியே மேலும் தொடர்ந்து சில நாள் ரேடியம் சிகிச்சை நடைபெற்றது. பிறகு நாக்குப் புண்ணும் வீக்கமும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையலாயிற்று. தந்தை பெரியார் அவர்கள் பூரண குணம் பெற்று வீடு திரும்பும்போது டாக்டர் அவர்களிடம் "அய்யா உங்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். இந்த நோயிலிருந்து என்னை மீட்டிராவிட்டால், 'இவன் நாத்திகன்; ஆகவே நாக்கில் புற்று வந்து ஒழிந்தான் என்று பொது மக்களிடம் ஆத்திகர்கள் கூறி அவர்களுக்கு என்மீது தவறான எண்ணம் ஏற்படும்படி செய்து இருப்பார்கள். அப்படிப்பட்ட நிலை ஏற்படாமல் செய்ததும் அல்லாமல் என்னை மேற்கொண்டு எனது கொள்கைக்குப் பாடு

பட வசதியை ஏற்படுத்திக் கொடுத்தமைக்கு மீண்டும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறி, விடைபெற்று வீடு திரும்பினார்கள்.

## மாட்டுக்கறியும் மத முத்திரையும்

ஈரோட்டில் ஓர் முஸ்லீம் கசாப்பு வியாபாரி இருந்தான். அவன் நிறைய பிள்ளை குட்டிக்காரன். அவனுக்குத் தன் குடும்பத்தைக் காப்பாற்ற வருவாய் போதவில்லை. இந்த நிலையில் வியாபாரத்திற்குப் போட்டிருந்த முதலை, கொஞ்சம் கொஞ்சமாக செலவிற்குப் பயன்படுத்திக் கொண்டான். இதனால் அவன் கசாப்புக் கடைக்கு ஆடுகளை வாங்கி அறுத்து வியாபாரம செய்ய முடியாதவனாக ஆகி விட்டான். கடையையே முடிவிட்டான்.

கடையை மூடிவிட்டாலும் பெரிய குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டுமே! வயிற்றுச் சோற்றுக்கு வகை வேண்டுமே! இந்த நிலையில் மற்ற கசாப்புக் கடைக்காரர்கள் இவன் மீது பரிதாபப்பட்டு தங்களிடம் கறியைக் கடனாகப் பெற்று எடுத்துக் கொண்டு போய்த் தெருக்களில் விற்றுவிட்டு வந்து மாலையில் பணத்தைக் கொடுத்துவிட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் கறி கொடுக்க முன் வந்தனர்.

இப்படியாக ஓரிரு மாதங்கள் அந்த கசாப்பு வியாபாரி கசாப்புக்கடை வியாபாரிகளிடம் கறியை கடனுக்கு வாங்கி தட்டில் வைத்துக் கொண்டு தலைச் சுமையாகத் தெருக்களில் வியாபாரம் செய்யலானான். இதன் மூலம் கிடைத்த சொற்ப இலாபமும் இவனது குடும்பத்தைக் காப்பாற்றப் போதுமானதாக இல்லை. மிக்க மனச் சோர்வுற்று இந்த தட்டு வியாபாரத்தையும் சில நாட்களில் நிறுத்தி விட்டான், தினந்தோறும் வீதிகளில் கசாப்பு! கசாப்பு! என்று கூறி விற்பனைசெய்த அவனது குரல் சில நாட்களாக ஒலிக்கப்படவும் இல்லை.

திடீரென்று ஒரு நாள் வீதிகளில் தோன்றி கசாப்பு! கசாப்பு! என்று கூவி விற்பனை செய்தான். மற்றைய கசாப்புக் கடைக்கார வியாபாரிகள் ஒரு பவுண்டு கறி 2 அணா என்று விற்கும்போது இவன் மட்டும் ஒரு பவுண்டு கறி $1\frac{1}{2}$ அணா என்று விற்கலானான். இது மக்களுக்கு மிக்க ஆச்சரியத்தை விளைவித்தது. இத்தனை நாட்களாக எங்கோ சென்றுவிட்டு இப்போது வந்துள்ள நீ, எப்படி இவ்வளவு குறைந்த விலையில் விற்கின்றாய்? எப்படி உன்னால் விற்க முடிகின்றது? என்று மக்கள் கேட்கத் தொடங்கினார்கள்.

அதற்கு அவன் இத்தனை நாட்களாக நான் வியாபாரிகளிடம் கடனுக்கு கறியை வாங்கிக் கொண்டு வந்து உங்களிடம் விற்றேன். இதனால்தான் குறைந்த விலையில் என்னால் கொடுக்க முடியவில்லை. இன்றோ நான் சொந்தமாக நல்ல ஆடுகளை கிராமங்களுக்குச் சென்று வாங்கி வந்து வெட்டி விற்கின்றேன். எனக்கு அதிக லாபம் தேவையில்லை. சொற்ப லாபம் கிடைத்தாலே போதும். இதற்காக முதலுக்குப் பணம் வேண்டியே தான் நான் ஒரு வாரத்துக்கு முன் என் உறவினர் ஊருக்குச் சென்றிருந்தேன். அவரும் ஏதோ பெரிய மனது வைத்து உதவினார், அதைக் கொண்டு தான் இப்படி வியாபாரம் செய்து வருகின்றேன். தெரு வாசிகளாகிய உங்கள் ஆதரவு எனக்குக் கிடைக்கும் பட்சத்தில் என் குடும்பமும் பிழைத்துக் கொள்ளும் என்று சாதுரியமாகப் பேசலானான்.

கசாப்புக் கடைக்காரர்களை விட இவன் குறைந்த விலைக்குக் கறி விற்பனை செய்வது கண்டு மக்கள் இவனிடமே வாங்க முற்பட்டனர். தினந்தோறும் அந்தத் தட்டு வியாபாரியின் வருகைக்காக காத்திருந்து போட்டி போட்டுக் கொண்டு வாங்கலானார்கள். பலர் கறிதான் மலிவு விலையில் கிடைக்கின்றதே என்று வாங்கி மஞ்சள் உப்பு முதலிய மசாலை பொருள்களைத் தடவி உப்புக் கண்டமாக காயவைத்து எடுத்து வைத்துக் கொண்டு எண்ணெயில் பொரித்து உண்ணலாயினர்.

இப்படிக் குறைந்த விலைக்கு இவன் விற்பனை செய்வது மற்ற வியாபாரிகளுக்கு விளங்கிக் கொள்ள முடியாத புதிராகவே இருந்தது.

ஆனால், தந்தை பெரியார் அவர்கள்

அந்த சாயபு விற்பது நிச்சயமாக ஆட்டுக் கறியல்ல, அது அசல் மாட்டுக்கறி! அதனால் தான் இப்படி விலையைக் குறைத்துக் கொடுக்கிறான். மாட்டுக்கறியானது எப்படியிருக்குமென்பதும் எனக்கு நன்றாகத் தெரியும். இவன் விற்கும் கறியின் சதைப்பற்றைப் பார்த்தாலே இது மாட்டுக்கறிதான் என்பது நன்றாக விளங்குகின்றது என்று கூறினார்கள். அய்யா அவர்கள் அப்படிக் கூறியதைக் கண்ட அய்யாவின் உறவினர்களே இந்த ஊரிலே கசாப்புக் கடை வியாபாரிகள் இவன் இவ்வளவு கம்மி விலையில் விற்கின்றானே இதனால் தங்கள் வியாபாரம் பாதிக்கின்றதே என்ற பொறாமையும் வயிற்றெரிச்சலும் காரணமாக அவன் விற்பது மாட்டுக்கறி! மாட்டுக்கறி! என்று கதை கட்டிவிட்டு விட்டார்கள். அந்தப் புரளியை நம்பிக் கொண்டு நீங்களும் கூறுகின்றீர்களே என்று சமாதானம் கூறலானார்கள்! தந்தை பெரியார் அவர்களே மாட்டுக்கறி சாப்பிடுவது கூடாது என்று கூறுபவர் அல்ல. மனிதன் ஆடு சாப்பிடுகின்றான், புழு, பூச்சிகள் அழுகிய பொருள்கள் ஆகியவற்றைச் சாப்பிடும் மீன், கோழி முதலியவைகளையும் சாப்பிடுகின்றான். ஏன் மலத்தைத் தின்னும் பன்றியைக் கூட சாப்பிடுகின்றான்.

ஆனால் பசும் புல்லைத் தின்னும் மாட்டை மட்டும் சாப்பிட மறுக்கின்றான். அது மதத்துக்கு, சாதி ஆசாரத்திற்கு விரோதம் என்று கூறுகின்றான். மாட்டுக்கறி போன்ற மலிவானதும், சத்துள்ளதுமான உணவை மதம், ஆசாரம் என்று கூறிப்புறக்கணிப்பதானது முட்டாள் தனமான காரியமாகும் என்ற எண்ணங்கொண்டவராவார்கள் அத்தோடு மக்களுக்கு எடுத்துக் கூறுவதோடு மட்டும் அல்லாமல் சாப்பிட்டும் பழக்கப்பட்டவர் ஆவார்.

எப்படியும் இந்தக் கசாப்பு வியாபாரியின் குட்டை உடைத்து விடுவதன் மூலம் வீண் பெருமை அடித்துக் கொள்ளும் மக்களின் சாதி, மத, ஆசாரங்களைத் தகர்த்தெறிய வேண்டும் என்று தந்தை பெரியார் அவர்கள் முடிவு செய்தார்கள்.

தந்தைபெரியார் அவர்களின் மாமனாரும் அச்சமயம் ஈரோட்டிற்கு வந்திருந்தார். அவர் போலீசில் ஏட்டு வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர். அவரும் தந்தை பெரியார் அவர்களைப் போலவே அந்த வியாபாரிவிற்கும் கறி ஆட்டுக்கறி அல்ல, மாட்டுக்கறிதான் என்று எண்ணினார். தந்தை பெரியார் அவர்களைப் போலவே எப்படியும் உண்மையைச் சுண்டுப் பிடித்து அம்பலப் படுத்த வேண்டும் என்று முடிவு செய்தார்.

அந்த முஸ்லீம் வியாபாரி காலையில் எங்கிருந்து வருகிறான் என்பதையும், விற்றுவிட்டு மாலையில் எந்த வழியாகப் போகிறான் என்பதையும் கூர்ந்து கவனித்து வந்தார். ஒரு நாள், அந்த வியாபாரிக்குத் தெரியாமல் அவன் வழக்கமாக வரும் பாதையில் ஒரு புதரில் மறைந்து இருந்து கவனித்தார். கசாப்பு வியாபாரி அடர்ந்த புதர்களுக்கு இடையே ஒரு கொழுத்த பசுவின் கன்றை அறுத்து தோல் உரித்து எலும்பில்லாமல் கறிகளை வெட்டிப்போட்டுக் கொண்டு புறப்பட்டான். அந்த தருணத்தில் மறைந்திருந்த தந்தை பெரியார் அவர்களின் மாமனார் அவன் முன் தோன்றி இவன் உரித்து ஒதுக்கி வைத்த தோலையும் கன்றுக் குட்டியின் கால்களையும் தட்டில் வைத்து அவனை ஊருக்குள் வரச்செய்தார்.

கறி வியாபாரி வழக்கமாக வரும் நேரத்தில வரவில்லையே என்று எதிர்நோக்கி காத்துக்கொண்டிருந்த மக்கள் மத்தியில் தட்டை இறக்கச் செய்தார். கன்றுக்குட்டியின் கால்களையும், தோலையும் பார்த்த ஆண்களும், பெண்களும் அப்படியே சிறிது நேரம் மலைத்துப் போய் மரமாய் நின்றனர். "இப்படி மோசடி செய்த அவனை விடாதே! பிடித்துக் கட்டுங்கள்!' என்று கூச்சலிட்டனர். 'அடப்பாவி! எங்களை இத்தனை நாளாக ஏமாற்றினாயே!' என்று பெண்கள் 'ஓ!' என்று புலம்பினார்கள். கூட்டமும் பெரிதாகக் கூடிவிட்டது. வியாபாரி, எங்கு தன்னை மக்கள் அடித்து நொறுக்கிவிடுவார்களோ என்று பயந்து திருதிருவென்று விழித்தான். 'அய்யா! நான் பிள்ளைக்குட்டிக்காரன்: என்னை விட்டு விடுங்கள்! என்று கெஞ்சினான். அதற்குள் தந்தை பெரியார் அவர்களும் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். வியாபாரியை மக்கள் துன்புறுத்துவதிலிருந்து மீட்டு

போலீசார் கூட்டிக்கொண்டு போய்விட்டார்கள்.

தந்தை பெரியார் அவர்களைப் பார்த்த பெண்கள், 'அய்யா! நீங்கள் அப்போதே அது ஆட்டுக்கறியல்ல மாட்டுக்கறி என்று சொன்னீர்களே; நாங்கள்தான் நம்பாமல் மகா மோசம் போய்விட்டோமே!' என்று புலம்பினார்கள். தந்தை பெரியார் அவர்கள், சிரித்துக்கொண்டு, நடந்தது நடந்துவிட்டது. ஒன்றரை மாதமாகத் தின்றதில் உங்கள் குடல் என்ன கருத்துப்போய்விட்டது? தெரியாமல் தின்றபோது கெட்டுப்போகாத மதமும் ஆசாரமும் மாட்டுக் கறிதான் என்று தெரிந்துகொண்ட பிறகும் ஒன்றும் கெட்டுவிடாது. ஏன் இப்படி ஆத்திரமும் ஆயாசமும் படுகின்றீர்கள். மாட்டுக்கறி சத்துள்ள உணவு என எண்ணி இதையே பழக்கத்தில் கொண்டால் போயிற்று. நம்மைவிட பெரிய அறிவாளிகளான வெள்ளைக்காரர்கள் எல்லாம் சாப்பிடும்போது நாம் மட்டும் சாப்பிட்டால் கெட்டுவிட மாட்டோம் என்று கூறிக் கேலி செய்தார்கள். அனைவரும் வெட்கத்தால் தலை குனிந்தார்கள்.

பெண்கள் வீட்டுக்குள் ஓடி பத்திரமாக அடுக்குப் பானைகளில் வைத்திருந்த உப்புக் கண்டங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு வந்து தெருவில் கொட்டினார்கள். வயிற்றுக்குப் போதிய உணவு கிடைக்காமல் காய்ந்து மெலிந்து எச்சிலைக்காக ஏங்கி அங்கும் இங்கும் அலைந்த திரிந்துக் கொண்டிருந்த வீதி நாய்களுக்கெல்லாம் அன்று ஒரே கொண்டாட்டம். அவைகள் மிகவும் சுவைத்துச் சாப்பிட்டு வயிறு புடைக்கலாயின.

இப்படிக் கறி சாப்பிட்டதனால் தங்கள் மதாசாரம் சாதி ஆசாரம் எல்லாம் கெட்டுவிட்டது என்றும், மீண்டும் அவற்றைப் பெற உடனடியாக ஓர் பிரயாச் சித்தம் செய்து கொள்ள வேண்டுமென்றும் எல்லோரும் கூடிப் பேசினார்கள். பிறகு தங்கள் மத குருவை ஒரு நாள் வரவழைதது ஏராளமான பொருள்கள் செலவு செய்து ஓமம் வளர்த்து ஆண்களும் பெண்களும் குழந்தைக் குட்டிகள் உட்பட இரும்பாலான மத முத்திரையான பழுக்கக் காய்ச்சிய இரும்பிலான சங்குச்சக்கர முததிரையினைத் தங்கள் தங்கள் கைகளில் பதித்து சூடு போட்டுக்கொண்டார்கள். இப்படிச் செய்து கொண்ட பிராயச் சித்த சடங்கின் மூலம் தாங்கள் இழந்துவிட்டதாகக் கருதிய மதாசாரமும், சாதி ஆசாரமும் திரும்பவும் பெற்றுவிட்டதாகக் கருதி பெருமிதப் பட்டுக் கொண்டார்கள்.

தந்தை பெரியார் அவர்கள் இவர்களின் அறியாமையைக் கண்டு முறுவல் பூத்தார்கள்

பனியன்கள் நிறைந்த
இடம்
விலைகளுக்குக் குறைந்த
இடம்
ஜவுளிகளுக்குச் சிறந்த
இடம்

விலை மலிவு
பொருள் தெளிவு
தரம் உயர்வு
விலை குறைவு
விலை ஒரு
நிலை

அனைத்திற்கும்

V. S. TEX

79, நேரு வீதி, பாண்டிச்சேரி-1.

# இவை எல்லாம் எவன் செயல்?

## (1968 செப்டம்பர் 17 முதல் 1969 செப்டம்பர் 16 வரை)

**கல்கத்தா 24-9-68**

கிரகணத் தோஷத்தைப் போக்கிக் கொள்ள கங்கையாற்றில் மூழ்கியவர்களுள் ஆறு பேர்கள் தங்கள் உயிரையே போக்கிக் கொண்டார்கள். கங்கையில் பிணமாயினர்.

**குருதாசப்பூர் 27-9-68**

இராமலீலா பண்டிகையை வீட்டுக் கூரையின் மேல் அமர்ந்து இரசித்து வேடிக்கைப் பார்த்துக் கொண்டிந்த 'பெண் பக்தை'கள் கூட்டம் கூரை இடிந்து சாய்ந்து முப்பது பேர் படுகாயமுற்றனர். மூன்று பேர் துடிதுடிக்க தலத்திலேயே மாண்டனர்.

**புதுடில்லி 1-10-68**

இராமலீலா பண்டிகையில் இராவணன்—கும்பகர்ணன் பொம்மைகளை கொளுத்திய பெருந்தீ, விழா பந்தலையே சாம்பலாக்கி 25 பேரைபடுகாயப்படுத்திற்று. ஊர்வல அடிதடியில் நால்வர் மாண்டனர்.

**ஜம்மு (காஷ்மீர்)**

மலைவாச வைஷ்ணதேவி கோயிலுக்குச் சென்ற பக்தர்களில் நெரிசலால் இரு குழந்தைகளும், மலையிலிருந்து இடறி வீழந்ததால் இருவரும், செல்லும் இடை வழியில் நால்வரும் பரிதாபமாய் மாண்டனர்.

**திருச்சி 30-10-68**

திருச்சி வெண்கல சுந்தரராசப் பெருமாள் கோயில் கோபுரத்தின் ஒரு பகுதி இடிந்து வீழ்ந்து, கீழே மராமத்து வேலைகளில் ஈடுபட்டிருந்த இருவரின் உயிரைக் கொடுமையாகப் பறித்தது.

**திருவண்ணாமலை 1-12-68**

அண்ணாமலை தீப உற்சவத்தில் பல நூறு பக்தர்களால் இழுக்கப்பட்டதேர் பேய்க் கோபுர பக்கம வந்த கட்டத்தில் வடம் அறுபடவே முப்பது பேர் மூர்க்கமாக காயமுற்றனர்.

**திருவண்ணாமலை 9-12-68**

அண்ணாமலை தீபங்கண்டு புண்ணியந் தேடி திரும்பிய பக்தர்கள் பஸ் ஒன்று கீழ்ப் பெண்ணாத்தூர் அருகில் மரம்ஒன்றில் மோதி சண்டையிட்டு படுசேதமுற்றது! அந்தோ! பக்தர்கள் பதினெழுவர் படுகாயமுற்றனர்.

**கல்கத்தா 16-1-69**

"கங்கா சாகர் மேளா" என்ற மத விழாவிற்கு மோட்சத் திருவிளக்கைக் காணச் சென்ற பக்தர்கள் படகு ஒன்று கங்கையாற்றில் பயணம் செய்தபோது கவிழ்ந்து 14 பேர் நீரில் மூழ்கி மாண்டனர்.

**கோட்டயம் 16-1.69**

அய்யப்பனைக் கண்டு அரும் வரம் வாங்கச் சென்ற 60 சபரிமலைப் பக்தர்களைக் கொண்ட பஸ் ஒன்று அந்தோ! பவாப்பள்ளி என்னும் ஊரிலே குப்புறக்

கவிழ்ந்தது. பலத்த காயமுற்றோர் மருத்துவமனை சேர்ந்தனர்.

கல்கத்தா 28-1-69

'கல்விக் கடவுள்' சரஸ்வதி விழாக் கண்டு பக்திப் போதை ஏறி மீண்ட மக்கள். இரயில் கேட் மூடப்பட்டிருந்தும் பாதையைக் கடந்ததால், விரைவு ரயில் ஏறி மூவர் நசுங்கிச் சிதைந்தனர்.

சேலம் 13-2-69

வெங்கிடாசலபதியைத் தரிசிக்க 55 பக்தர்களைக் கொண்ட பஸ் ஒன்று திண்டுக்கல்லிலிருந்து திருப்பதிநோக்கிப்பறந்தது. அரூர்க்கு 9 கல் தொலைவுள்ள ஓர் நீரற்ற ஆற்றில் கவிழ்ந்தது 50 பேருக்குக் காயம்—இரு பெண்கள் உள்பட அய்வர் மரணப் படுக்கை!

ஹூப்ளி 9-3-69

சாயநீர் அடித்துக்கொண்டு சல்லாபம் செய்யும் ஹோளிப்பண்டிகையில் ஒரே அமளி-அமர்க்களம்! ஊர்வலத்தில் அடிதடி! ஒருவர் உயிருடன் எரிப்பு! வீடுகள் தீக்கு இரை! எங்கும் சூறையாடல்கள்! தடுக்க வந்த போலீசார் 14 பேர்க்குக் காயம்! துப்பாக்கிச் சூட்டில் இருவர் மரணம்!

பாலக்காடு 15-3-69

ஆண்டவன் (விசுவேளா விழா) விழாவை அமர்க்களப்படுத்த வாணவெடிகள் தயாரித்துக் கொண்டிருந்த தொழிற்சாலையில் கலவை வெடித்து காட்டுத்தீப் பற்றி தொழிலாளர் எண்மரைப்பலிகொண்டது.

தாம்சா 15-4-69

இங்கு நிகழ்ந்த நிலநடுக்கத்தால் ஆந்திரா, ஒரிசா மாநிலங்கள் மிகவும் பாதிக்கப்பட்டதுடன், ஆந்திராவில் உள்ள தாம்சா ராமர் கோயில் சின்னாபின்னமாக நாசத்திற்குள்ளாகியது.

சிவகாசி 12-5-59

பத்திரகாளியம்மன் தேர் இழுப்பு விழாவின் போது 35 வயது கொண்ட தங்கவேலு என்ற பக்தன் தேர்ச் சக்கரத்தில் அந்தோ தன் உயிரைப் பறிகொடுத்தான்.

ஜம்மு-கட்ரா 15-7-69

தேவியின் அருட்கடாட்சத்தை கைகொண்டுவர நண்பர் மூவர் ஜம்முவிற்கு 48 கி. மீ. தொலைவில் உள்ள காட்ரா தேவன்மாயி கோயிலுக்கு வந்தனர். தேவியின் அருளைத் தீவிரமாகப் பெற ஒருவனை இருவர் பிடித்து கோரக் கொலை செய்து உயிர்ப்பலி கொடுத்து வீடு திரும்பினர். விவரம் அறிந்து போலீசார் அவர்களைக் கைது செய்தனர்.

மணக்கடல் 18-7-69

பழனியாண்டவனின் பஞ்சாமிர்தம் உண்டு தரிசித்து மீண்டு கொண்டிருந்த யாத்திரிகர்கள் பஸ் ஒன்று படுகிடுபள்ளத்தில் வீழ்ந்து நீர் குடித்தது! பக்தர்கள் முப்பது பேர்க்கு பேண்டேஜ் போடப்பட்டது.

பூரி 18-7-69

பூரி ஜெகன்னாதர் தேர்விழாவின் போது கூடிய பக்தர்கள் நெரிசலால் நூற்றுக்கு மேற்பட்டோர் மூர்ச்சையாயினர், 20 பேர் காயமுற்றனர்.

பூரி 19-7-69

பூரி விழாவில் மரக்கட்டைப்பொம்மைகள் வைக்கப்பட்ட தேர் புறப்படும் போதே செகந்நாதக் கோயிலின் அருகிலிருந்த தேநீர் கடையை மோதி அழித்து, பின் கம்பத்தைச் சாய்த்து, சக்கரங்கள் சுக்காகி இரவு முச்சந்தியிலேயே கிடந்தது.

கொழும்பு 19-7-69

கட்டாரகாவு எனும் ஊரில் உள்ள ஒரு கோயிலின் உரிமைபற்றிஇந்துக்களும் பவுத்தர்களும் சண்டையிட்டு இறுதியில் கோர்ட்டுக்கு சென்றனர். பவுத்தர்களுக்கே சொந்தமென்று மாஜிஸ்டிரேட் தீர்ப்பளிக்க, இந்து சாமியார் இலங்கை சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். அதனால் பெரும் கலகம் ஏற்பட்டு அமர்க்களப்படவே போலீசார் கோயிலை இறுக மூடி முத்திரை (சீல்) வைத்து விட்டனர்'

திருத்தணி 1-8-69

'தீராத வினைகளை எல்லாம் தீர்த்து வைக்கும் முருகன்' என்று துதிபாடப்படுகின்ற திருத்தணி முருகன் கோயில் திருவிழாவிற்காக போடப்பட்டிருந்த பெரும்பந்தல் வெந்தீயில் கருகிச் சாம்பலாயிற்று. திருப்பணி கட்டளை முக்கிய இடமும் கருகிப்போயிற்று. மக்கள் முயன்றும் தீயை அணைத்தபாடில்லை.

மதுராந்தகம் 4-8-69

மதுராந்தகம் ஏரிகாத்த பெருமாள் கோயிலின் மிகப்பிரமாண்டமான தேர் தீக்கு இரையாகி 'பஸ்மம்' ஆகிவிட்டது' தன் கடனைத் தீர்க்க அல்லும் பகலும் ஆண்டவனை வழிப்பட்ட தனபால் என்ற பக்தன் கடவுளால் காரியம் ஆகவில்லை என்ற கோபத்தினால் பொசுக்கியதாகக் கூறப்படுகிறது. ஏரிகாத்த பெருமாள் தன் தேரைக்காக்கமுடியாதஅளவிற்குதீகொழுந்து விட்டு எரிந்தது.

பூந்தோட்டம் 27-8-69

நாகூர் கந்தூரி விழாவிற்குச் சென்று மீண்டு வந்த பக்தர்கள் பஸ் ஒன்று கடலூர் செல்வராஜ் பூந்தோட்டத்தருகில் சாலை மரத்தொன்றோடு மோதி பெரும் விபத்துக்குள்ளாகவே 7 பெண்கள் உட்பட 15 'பக்த

கோடிகள்' படுகாயமுற்று கடலூரார் மருந்தகத்தில் சேர்க்கப்பட்டனர். பஸ் ஓட்டி கைது செய்யப்பட்டார்.

சிதம்பரம் கோவில் வாகனங்களின் வெள்ளி, தங்க முலாம் கவசங்கள் திருட்டு
சிதம்பரம் 8-10-68

சிதம்பரம் நடராசர் வாகனகிடங்கின் மேல் சன்னல் கம்பிகளை முறித்து உள் இறங்கி, யானை, காளை, கைலாசமலை முதலிய வாகனங்களின் வெள்ளி, தங்க முலாம் கொண்ட கவசங்களை யாரோ பெயர்த்துத் திருடிச் சென்றுவிட்டனர். ஆள் அகப்படவில்லை. அவற்றின் மதிப்பு ரூ.4000.

சென்னை 6-11-68

விழுப்புரம் அடுத்த பனையபுரத்தில் உள்ள கோயிலுக்குள் இரவில் புகுந்து கதவை உடைத்து உள்ளிருந்த வெள்ளிச் சிலையாகிய சிவகாமி, வள்ளியையும் மற்றுமுள்ள உலோகச் சிலைகளையும் அலங்காரம் செய்யும் நகைகளையும் திருடிச் சென்றிவிட்டனர் என்று தர்மகர்த்தா போலீசில் புகார் கூறினார். திருடியவர் தெரியவில்லை,

சென்னையில் சிலையின் கிரீடம் திருட்டு
சென்னை 17-11-68

சென்னைக்கருகில் உள்ள கோடம்பாக்கத்திலுள்ள கோயிலின் சிலைக்கணியும் கிரீடம் கடந்த வெள்ளிக்கிழமை களவாடப்பட்டது. அது ராயபுரத்தில் ஒருவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது.

சிலை ராமர் சட்டையைப் பறிகொடுத்தார்
சென்னை 1-12-68

கடந்த வெள்ளிக்கிழமை கீழ்பாக்கத்திலுள்ள ஒரு கோயிலில் ராமர் சிலைக்கணியும் வெள்ளிக் கவச சட்டை திருட்டுப் போய்விட்டது அது சம்பந்தமாக மூத்தியாலுபேட்டை போலீசார் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

நடராசர் சிலை களவு
அய்யம்பேட்டை 17-12-68

பெருமாக்கநல்லூர் கிராமத்திலுள்ள பிரமபுரி ஈசுவரர் கோயிலில் இருந்த 4½ அடி உயரமுள்ள உலோகச் சிலை களவு போய் விட்டது. அதன் மதிப்பு ரூ. 1 லட்சம் போலீசார் புலன் ஆய்ந்து வருகின்றனர்.

தஞ்சையில் சிலை அம்மன்-அய்யன்கள் களவு போலீசு அருளால் கண்டுபிடிப்பு 26-12-68

தஞ்சை வட்டாரத்தில் ஒரு வாரத்தில் 3 கோயில்களில் உற்சவச் சிலைகள் காணாமற் போயின, போலீசார் கண்டுபிடித்தனர். அய்யம்பேட்டை கோயில், ஜம்புகாம்பாள்புரம் கோயில், வடவாறுகரை மாரியம்மன் கோயில் ஆகியவற்றிலுள்ள நடராசர் மற்றும் பல சிலைகள் களவாடப்பட்டன.

உடைந்த சிலைகள்
ஸ்ரீவைகுண்டம் 30-1-69

திருச்செந்தூர் முருகன் கோவிலின் உட்பிரகாரத்தில் வைக்கப்பட்டிருந்த 108 லிங்க கற்சிலைகளில் நகர்முக லிங்கச் சிலையும் சண்டிகேசுவரர் சிலையும் உடைக்கப்பட்டிருந்தன. இது சம்பந்தமாய் ஒருவர் கைது செய்யப்பட்டார்!

திருப்பதி 5-4-69
ஏழுமலையான் உண்டியல் பணத்தைப் பறிகொடுத்தார்,.

திருப்பதிவெங்கடாசலபதியின் உண்டியல் பணத்தை எண்ணிடும் போது ரூ: 301 களவாடிய குற்றத்திற்காக பொருளாளர் ஸ்ரீராமகிருஷ்ண ராஜுக்கு 6 மாதம் கடுங்காவல் தண்டனை கொடுக்கப்பட்டது. உதவி பொருளாளர் சங்கர நாராயண ரெட்டிக்கு நூறு ரூபாய் நோட்டு 3 திருடியதற்கு வழக்கு உள்ளது.

கான்பூர் 27-4-69

ராமர்—சீதை சிலைகளின் நகைகள்— பணம் கடத்தல் மடாதிபதி கோரக்கொலை! கான்பூர்க்கு 15 மைல் தூரத்தில் பிதூர் என்னும் இடத்தில் உள்ள வால்மீகி ஆசிரமத்தின் மடாதிபதி (மகந்த) 70 வயதுடைய சாந்த்நிர்வர்தாஸ் என்பவரை இரவில் தூங்கும் போது கழுத்தை நெறித்து கொன்றுவிட்டு அவர் பூசை செய்யும் சிலைகள் நகைபணம் முதலியவற்றைக் கொள்ளை கொண்டு போயினர். போலீசு புலன் விசாரித்துக் கொண்டிருக்கிறது.

இராமநாதபுரம் (ஸ்ரீவில்லிபுத்தூர்) 24-5-69

ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம் மச்சாபுரம் கிராமத்தில் உள்ள சுப்பிரமணிய சாமி கோயிலின் கதவை இரவு பூசை செய்துவிட்டுப் பூசாரி பூட்டிக் கொண்டு போன பிறகு அப்பூட்டை உடைத்து யாரோ உட்புகுந்து வெண்கலச் சிலைகளைக் களவாடிவிட்டனர். அதற்காக அந்த கோயில் பூசாரி கைதியானார்.

காரைக்குடி 29-7-69
நகைகள் அபேஸ்!

குன்றக்குடியில் உள்ள சுப்பிரமணிய சாமிக்குப் பூசை செய்யும் போது குன்றக்குடி அடிகளார் அணிந்து கொள்ளும் தங்க கவுரி சங்கம், வைர மோதிரம் முதலிய ரூ 7000 மதிப்புள்ள நகைகள் களவுபோகவே போலீஸ் நாய் வரவழைக்கப்பட்டு அதன் உதவியால் அக்கோயில் பணியாளன் பரமசிவன் என்பவன் கைது செய்யப்பட்டு நகைகள் மீட்கப்பட்டன. வழக்கு விசாரணையில் உள்ளது.

ராணிப்பேட்டை 5-8-69

ராமர்கோவில் அம்மன் தாலிகள், பாத்திரங்கள் களவு: வாலாஜாப்பேட்டை, ராஜாஜி குளக்கரையிலுள்ள சவுராஷ்டிரர் வகுப்பினர்க்குச் சொந்தமான ராம ஆஞ்சநேய கோவிலின் கர்ப்பகிருகத்தின் கதவை உடைத்து அம்மனுடைய தங்கத்தாலிகளையும் வெள்ளி வைரமுடி, வெள்ளிக்கவசம் மற்றும் பூசா பாத்திரங்களையும் திருடர்கள் திருடிச்சென்று விட்டனர். அவற்றின் மதிப்பு ரூ. 1000.

# கம்ப சித்திரம்!

## திருவாரூர் கே. தங்கராசு

கடுந்தவ முனியாம் விசுவாமித்திரனும் கரிய இராமனும் அவன் தம்பியும்—மிதிலைமா நகரின் நெடுமதில்களைக் கடந்து உள்ளே செல்கின்றனர்!

ஆங்கே!

எழில் மாடங்கள் தோறும் இளைய மங்கையர் பலர் தத்தம் காதலரோடு குலவக் காண்கின்றனர்!

சாளரங்கள் தோறும் கமலமுகக் காரிகைகள் பலர் தோன்றக் காண்கின்றனர்!

ஊசல்களில் அமர்ந்து ஆடும் உருவ அழகியர்களையும் அவர்தம் உடன் ஆடும் காளையர்களையும் கண்குளிரக் காண்கின்றனர்!

வாசமலர் பந்து பிடித்தாடும் வாலைக் குமரியர் பலரையும் காண்கின்றனர்!

காணட்டும். பாவம்! அயோத்தியை விட்ட பிறகு இத்தகு காட்சிகளை இப்போது தானே இவர்கள் காண ஆரம்பித்துள்ளனர்!

இடைக்காலத்திலே கானிலே கடு நோன்பு இயற்றியல்லவா காலத்தையோட்டி வந்துள்ளனர்; எனவே குறைவரக் காணட்டும்!

பற்றெல்லாம் துறந்துவிட்ட விசுவாமித்திரப் பெருமுனியும், பால வயதைக் கடவாத இராம இலக்குவர்களும்—பலகணிகள் வழியாக பங்கயமுகத்தழகியர்களையும்—செங்கனி இதழ்ச் சிற்றிடையார்களையும் ஆசை தீரக் கண்டு களிக்கின்றார்கள்.

கம்பர் கூறுகின்றார்! நாமும் நம்புவோம்! ஆனால், அடுத்து கம்பர் செய்கின்ற ஆராய்ச்சியைத்தான் நாம் அப்படியே ஏற்க இயலாது தவிக்கின்றோம்!

என்ன ஆராய்ச்சி அஃது! என்கின்றீர்களா? இப்படியாக கவினுறு காட்சிகள் பலவற்றையும் மிதிலையின் மாட்சி விளக்கும் மாளிகைகள், வீதிகள், மன்றங்கள். அங்காடிகள், நாடக கூடங்கள் ஆய பிறவற்றினையும் பார்த்தவாறே வந்த இராம, இலக்குவ, விசுவாமித்திரர்கள் ஓர் பெரும் தெருவிலே நுழையும்போது

அவண்!

வண்டுகள் மொய்த்தவண்ணம் வாடிய மாலைகள் பல ஆங்காங்கு வீழ்ந்து கிடக்கின்றனவாம்!

இந்த நறுமண மாலைகளை அவர்கள் பார்த்தனரோ என்னவோ? கம்பர் பார்க்கின்றார்!

பார்த்ததும் அவரது எண்ணங்கள் எங்கெங்கோ போகின்றன!

மாலைகள் கிடக்கின்ற நிலை!

வண்டுகளின் செயல்!

இவைகள் அவரது இயல்பான கற்பனைகளைக் கிளறிவிட, ஆராய்கின்றார்; பின்னர் பாடுகின்றார்!

“ தண்டுத லின்றி யொன்றித்
தலைத்தலை சிறந்தகாதல்
உண்டபின் கலவிப்போரில்
ஒசிந்த மென்மகளிரே போல்
பண்டரு கிளவியர் தம்
புலவியிற் பிரிந்தகோதை
வண்டொடு கிடந்து தேன்சொரி
மணிநெடுந் தெருவிற்சென்றார்.

[கம்ப இராமாயணம் பாலகாண்டம்
570ம் பாடல்]

சிறிதும் விட்டுக்கொடாது கலவிப் போரில் ஈடுபட்டு இருவருமே காமசுகத்தை உண்ட பின்னர்—

அந்த இன்பப் போராட்டத்தில் களைத்துப்போன மென் மகளிர் எப்படி உடல் சோர்ந்து ஓய்ந்துபோய்க் கிடப்பார்களோ—

அவ்வண்ணமே, அவர்களால் அப்பெரும் போரின்போது கழற்றி வீசி யெறியப்பட்ட மாலைகளானது வீதி நெடுக வண்டுகள் மொய்க்க தேனைச் சிந்தியபடியே கிடந்தனவாம்!

வண்டாடும் மாலைகள் வழிநெடுக கிடந்தன என்பதைக் கண்ட கம்பன், புதைபொருள் ஆராய்ச்சி விற்பன்னரும் தோற்கும்படி அஃது ஒன்றுமட்டுமே கொண்டு எத்தனை பெரிய ஆராய்ச்சியினைச் செய்து எத்தனை அரிய முடிவினைக் கண்டு நிலைநாட்டியுள்ளான்!

இஃது ஒன்றினுக்கு மட்டுமே கம்பனை உச்சிமீது வைத்துக் கொண்டாடலாமே!

ஆம்! அதனால்தான் இப்போது பலரும் அவனை ஏற்றிப் போற்றுகின்றார்போலும்!

யார் போற்றுகின்றார்கள்?




குமரன் சோப் ஒர்க்ஸ், ஈரோடு.

தந்தி: SOAP    போன்: 118    P. B. No. 44

KUMARAN SOAP WORKS, ERODE.

சேல்ஸ் டிப்போ :—கோயம்புத்தூர்—கரூர்.

